உ

கடவுள் துணை.

# மூந்நூற்றிரட்டு.

---

கும்பகோணம்

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி

ஸ்ரீமடம் சர்வாதிகாரி

வெளியிட்டது.

---

1941.

T. 18666

## வாழ்த்து.

வாழ்க அந்தணர் வானவர் ஆன்இனம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

கடவுள் துணை.

# முன்னுரை.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் நாளது விஷு வருஷத்திய சாதுர்மாஸ்ய சமயத்தில் நாகபட்டினம் முகாமில் கொடுத்த ஆக்ஞையின்படி இந்நூல் வெளியிடப்படுகிறது. அந்த ஆக்ஞை வருமாறு :—"நமது நாட்டின் மகரிஷிகளும், ஞானிகளும், மஹா கவிகளும் உலகத்திற்கு அளித்திருக்கும்அரிய பெரியநூல்களின் பொருள்களை நம்மவர் அனுபவித்து மேன்மையடையக்கூடாத நிலைமையில் இக்காலக் கல்வி முறை அமைந்துள்ளது. நமக்கும் நம்முடைய ஸந்ததிகளுக்கும் இந்த வழியில் இன்னும் விசேஷ நஷ்டமேற்படாமல் இருக்கவேண்டுமானால் அவர்களுக்குத் தமிழிலும் ஸமஸ்கிருதத்திலும் ஒரு சிறிது அளவாவது பழக்கம் ஏற்படுமாறுசெய்யவேண்டும். அதற்கு ஒவ்வோர் ஊரிலும் ஆறுமாதகாலத்தில் பூர்த்தியாகும்படியான பாடதிட்டத்துடன் தினம் அரைமணி கற்பிக்கக் கூடிய இராத்திரியில்நடைபெறும் பள்ளிக்கூடங்கள் அமையவேண்டும். கம்பராமாயணம், பெரியபுராணம், குறள் ஆகிய நூல்களிலிருந்து சுமார் 150பாடல்களையாவது பதவுரை, பொழிப்புரைகளுடன் நன்முக மனப்பாடம் பண்ணுமாறு பழக்கப்படவேண்டும். 10 வயதுமுதல் 60 வயதுவரையில் உள்ள ஆண்களும், 12 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளும் இந்தப் பள்ளிக்கூடங்களில் சேரலாம். மேலே சொன்ன மூன்று நூல்களையும் விலைக்கு வாங்கிப் படிப்பதானால் பொருட்செலவு அதிகமாகும். ஆதலால், அவற்றிலிருந்து சிற்சிலபகுதிகளைத் தொகுத்துப் பதவுரை, பொழிப்புரைகளுடன் ஒரு நூலை வெளியிடவேண்டும். கிராமங்களில் சிறிது முறையாகத் தமிழ் படித்தவர்கள் இருந்தால் அவர்கள் கற்பிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் சாமானியமாகப்படித்தவர்களில் இருவர் முன்னே கற்பிக்க வேண்டிய பாடல்களை நன்முகப் படித்தறிந்துகொண்டு பிறகு மற்றவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். அவ்வாறு படிப்பவர்களுக்கு இந்நூலை வழங்க வேண்டும். இம்முறையில் படிப்பவர் இந்நூலைப் படிப்பதுடன் வருஷாதி நூல் ஒன்றையும் விலைக்கு வாங்கி வைத்துக்கொண்டு படித்து விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும்".

இந்த நூலைக் கற்பிக்கையில் முதலில் கம்பராமாயணம், பெரிய புராணம் இவற்றிலுள்ள கதைப்பகுதிகளைப் படிப்பித்துப் பிறகு குறட் பகுதியைக் கற்பிக்கலாம். அல்லது நாள் ஒன்றுக்கு ஒரு குறள், இரண்டு கதைப் பாடல்கள் வீதமாகப் பகுத்துக்கொண்டும் கற்பிக்கலாம்.

ஸ்ரீ மடத்தின் ஆக்ஞையின்படி இந்நூலைத் தொகுத்து எழுதி அச்சியற்றுதலாகிய எல்லாவற்றையும் பொறுப்புடன் செய்தவர் ஊற்றுக்காடு சாமிநாதையர் குமாரர் ஸ்ரீ. வேங்கடராமையர் ஆவர். அவர் செய்த உதவி பெரிதும் கொண்டாடத்தக்கது.

ஸ்ரீ சங்கராசார்யர் ஸ்ரீ மடம்,
கும்பகோணம்,
16-11-41.

**ஸ்ரீ மடம் சர்வாதிகாரி.**

## ஸ்ரீசங்கரர் மஹிமை.

சம்புவே சங்கர ராஜனுஞ் சங்கரர்
சம்பு தனிலதிகந் தாரணியீர்—சம்புதன்பால்
சென்றே ரருள்பெறுவர் தேசிகநற் சங்கரரோ
சென்றருள்வர் கோள்வீர் சிரம்.

# பொருளடக்கம்.


| எண். | பொருள். | பக்கம். |
|---|---|---|
| 1. | திருக்குறள் | 1—14 |
| 2. | கம்பராமாயணம் | |
| | (1) ஆதி | 15—17 |
| | (2) ஸ்ரீ ராமஜனனம் | 18—36 |
| | (3) குகனும் பாதனும் | 37—62 |
| | (4) ஸ்ரீ ராம பட்டாபிஷேகம் | 63—74 |
| 3. | பெரிய புராணம் | |
| | (1) கடவுள் வணக்கம் | 75—76 |
| | (2) மனுச்சோழன் | 76—97 |
| | (3) உருத்திரபசுபதியார் | 98–102 |
| | (4) காரைக்காலம்மையார் | 103–130 |

## விநாயக வணக்கம்.

1. வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு. —ஔவையார்.

## சரஸ்வதி துதி.

2. ஆய கலைக ளறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கு மென்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர். —கம்பர்.

## தக்ஷிணாமூர்த்தி துதி.

3. கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை
யிருந்தபடி யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாம
னினைந்துபவத் தொடக்கை வெல்வாம்.
—பரஞ்சோதி முனிவர்.

## ராமப்ரும்ம வணக்கம்.

4. அலங்கலிற் றோன்றும் பொய்ம்மை யரவெனப் பூத மைந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபா டுற்ற வீக்கம்
கலங்குவ தெவரைக் கண்டா லவரென்பர் கைவி லேந்தி
இலங்கையிற் பொருதா ரன்றே மறைகளுக் கிறுதி யாவார்.
—கம்பர்.

---

1. *மலராள்-இலக்குமி. துப்பு-பவழம்.*

2. *கலைகள் அறுபத்துநான்கு-அறுபத்துநான்கு கலைஞானங்கள்.*

3. *வல்லார்கள் நால்வர்-ஸநகர், ஸநந்தனர், ஸநத்குமாரர், ஸநத்ஸுஜாதர். சொல்லாமல் சொல்லல்-மோனமுத்திரைக்கையினால் மாணக்கர்களுக்கு ஞான ஒளி நிறையச்செய்தல். நினையாமல் நினைத்தல்-பிரபஞ்சத்தை நோக்காமல் சிவத்தையே நோக்குதல்.*

4. *கருத்துரை :—பஞ்சபூதங்களும் தம்முட்கலந்து பஞ்சீகரணப்பட்டு வேறாகத்தோன்றுகின்ற ஸ்தூலப் பிரபஞ்சம்,—எந்தப் பரமாத்மாவின் சொரூபத்தை உணர்ந்தால் பழுதையிற் பாம்பெனத்தோன்றுகின்ற மயக்கம் போல,—இல்லையாகுமோ அந்தப் பரமாத்மாவே வேதாந்தத்தில் விளங்கு பவரும் கையில் வில்லையேந்தி இலங்கையிற் போர்செய்தவருமாவர்.*

உ

கடவுள் துணை.

# முந்நூற்றிரட்டு.

## 1. திருக்குறள்.

[ திருக்குறள், திருவள்ளுவரால் இயற்றப்பட்டது; அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருஷார்த்தங்களையும் முப்பால்களில் விளக்கிக் கூறுவது; ஆயிரத்துமுந்நூற்றுமுப்பது குறட்பாக்களையுடையது; மனிதவாழ்க்கையில் கைக்கொண்டொழுக வேண்டிய பலவகை நீதிகளையும் சுருங்கச்சொல்லி விளங்கவைப்பது.

திருவள்ளுவர், கி. பி. முதல்நூற்றாண்டில் மயிலாப்பூரிலே தோன்றி இல்லறம் நடத்தியவர்; தமது ஒப்பற்ற திருக்குறளை மதுரைத் தமிழ்ச்சங்கத்திலே அரங்கேற்றி உலகம்போற்றும் உயர்புகழ்பெற்றவர். ]

1. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

பதவுரை :—எழுத்தெல்லாம்-எழுத்துக்களெல்லாம், அகரமுதல-அகரமாகிய முதலையுடையன; (அதுபோல) உலகு-உலகமானது, ஆதிபகவன் முதற்று—ஆதிபகவானாகிய முதலையுடைத்து.

கருத்து :—எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாகவுடையன; அது போல, உலகம் கடவுளை முதலாகவுடையது. (1)

2. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்.

பத :—வாலறிவன்-மெய்யறிவினையுடையவனது, நற்றாள்-நல்லஅடிகளை, தொழாரெனின்-வணங்காராயின், கற்றதனால்-(எல்லா நூல்களையுங் கற்றவர்க்கு) அக்கல்வியறிவினால், ஆய-உண்டாகிய, பயன்-பிரயோசனம், என்-யாது?

கருத்து :—மெய்யறிவினையுடைய கடவுளை வணங்காராகில் கற்றதனால் பயனில்லை. (2)

3. சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்ினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு.

பத:—சிறப்பு-மோக்ஷத்தையும், ஈனும்-கொடுக்கும், செல்வமும்-(சுவர்க்க முதலாகிய) செல்வத்தையும், ஈனும்-கொடுக்கும், (ஆதலால்) உயிர்க்கு-(மனிதர்) உயிர்க்கு, அறத்தினூங்கு-தருமத்தின்மேற்பட்ட, ஆக்கம்-பெருக்கத்தைத் தருவது, எவன்-யாது?

கருத்து:—மக்களுயிர்க்குத் தருமத்தின் மேற்பட்டதில்லை. (3)

4. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

பத:—(ஒருவனுக்கு) அறத்தினூங்கு - தருமம் (செய்தலின்) மேற்பட்ட, ஆக்கமும் - பெருக்கத்தைத் (தருவதும்), இல்லை—; அதனை - அத்தருமத்தை, மறத்தலினூங்கு-(மயக்கத்தால்) மறந்துவிடுதலின்மேற்பட்ட, கேடு-கேட்டைத்தருவதும், இல்லை-இல்லையாம்.

கருத்து:—தருமத்தின் மேற்பட்ட செல்வமுமில்லை. அத்தருமத்தை மறத்தலின் மேற்பட்ட கேடுமில்லை. (4)

5. அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கும்
இழுக்கா வியன்ற தறம்.

பத:—அழுக்காறு-(பிறருயர்ச்சியில்) பொறாமையும், அவா-(ஐம்புலன்கள் மேற்செல்லுகின்ற) ஆசையும், வெகுளி-(அவை காரணமாகப் பிறர்மேலுண்டாகின்ற) கோபமும், இன்னாச்சொல்-(அதுபற்றிவருகின்ற) கடுஞ்சொல்லும், நான்கும்-ஆகிய இந்நான்கினையும், இழுக்கா-கடிந்து, இயன்றது-(ஒழிவில்லாமல்) நடந்தது, அறம்-தருமமாகும்.

கருத்து:—பொறாமை ஆசை கோபம் கடுஞ்சொல் என்னும் இந்நான்குங்கடிந்து நடந்ததே தருமம். (5)

6. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

பத:—அறத்தாறு-தருமத்தின்பயன், இதுவென-இதுவென்று (ஆகம அளவையால்) அறிவிக்க, வேண்டா-வேண்டியதில்லை; சிவிகை-தண்டிகையை, பொறுத்தானோடு-சுமப்பவனோடு, ஊர்ந்தானிடை-செலுத்துவோனிடத்து(க்காட்சியளவையினாலேயே) அறியப்படும். ஆகமம்—சாஸ்திரம். அளவை-பிரமாணம். காட்சி-பிரத்யட்சம்.

கருத்து:—தருமத்தின் பயன் சிவிகை தூக்குபவனிடத்திலும் ஏறுபவனிடத்திலும் பிரத்யட்சமாகக் காணப்படும். (6)

7. இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை.

பத :—இல்வாழ்வானென்பான்-இல்லறத்தோடு கூடிவாழ்பவனென்று சொல்லப்படுவோன், இயல்புடைய-(அறத்) தன்மையுடைய, மூவர்க்கும்-(மற்றை) மூவர்க்கும், நல்லாற்றில்-(அவரது) நல் (லொழுக்க) வழிகளில், நின்ற-நிலைபெற்ற, துணை-துணையாவான்.

கருத்து :—இல்லறத்தில் வாழ்பவன் பிரமசாரி வானப்பிரஸ்தன் சந்நியாசி யென்னும் மூவர்க்குந் துணையாவான். (7)

8. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை.

பத :—தென்புலத்தார்-பிதிரரும், தெய்வம்-தேவரும், விருந்து-அதிதியரும், ஒக்கல்-சுற்றத்தாரும், தான்-தானும், என்று-என்றுசொல்லப்பட்ட, ஐம்புலத்து-ஐந்திடத்துஞ்செய்யப்படுகின்ற, ஆறு (அற) வழியை, ஓம்பல்-வழுவாமற்செய்தல், தலை-(இல்வாழ்வானுக்குச்) சிறப்புடைய அறமாம்.

கருத்து :—பிதிரர்க்கும் தெய்வத்திற்கும் விருந்திற்கும் இனத்திற்கும் தனக்கும் தருமஞ்செய்தல் தலைமையான தருமமாம். (8)

9. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

பத :—கற்பென்னுந்திண்மை-கற்பென்னுங் கலங்கா நிலைமை, உண்டாகப்பெறின்-(அவளிடத்தே) உண்டாயிருக்கப் பெற்றால், (ஒருவன் பெறுதற்குரிய பொருள்களுள்) பெண்ணின்-மனையாளினும், பெருந்தக்க-உயர்வாகிய பொருள்கள், யா-எவை, உள-இருக்கின்றன ?

கருத்து :—ஒருவன் பெறும் பேறுகளுள் கற்புடைய மனைவியைப் பார்க்கிலும் உயர்ந்த பொருள்கள் எவையிருக்கின்றன ? (9)

10. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

பத :—தெய்வம்-(பிற) தெய்வத்தை, தொழாள்-வணங்காளாகி, கொழுநன்-(தனது தெய்வமாகிய) கணவனை, தொழுது-வணங்காநின்று, எழுவாள்-(நித்திரைவிட்) டெழுந்திருப்பவள், பெய்யெனா-பெய்யென்றுசொல்ல, மழை-மழையானது, பெய்யும்—.

கருத்து :—பிறதெய்வத்தை வணங்காளாகிக் கணவனைத் தொழுதெழுபவள் பெய்யென்று சொல்ல மழைபெய்யும். (10)

11. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

பத :—பெறுமவற்றுள் (ஒருவன்) பெறும் பேறுகளுள், அறிவறிந்த-அறியவேண்டுமவைகளை அறிதற்குரிய, மக்கட்பேறல்ல-புதல்வரைப் பெறுதலையல்லது, பிற-மற்றைப்பேறுகளை, யாம்—, அறிவதில்லை-மதிப்பதில்லை.

கருத்து :—ஒருவன் பெறும் பேறுகளுக்குள் அறியவேண்டியவைகளை யறிந்த மக்கட்பேற்றை யல்லது பிறபேற்றை யாம் மதிப்பதில்லை. (11)

12. தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

பத :—தந்தை-தகப்பனானவன், மகற்கு-புதல்வனுக்கு, ஆற்றும்-செய்யத் தகும், நன்றி-நன்மையாவது, அவையத்து-(கற்றவரது) சபையினிடத்து, முந்தியிருப்ப-(அவரினும்) மேற்பட்டிருக்க, செயல்-(கல்வியையுடையவ) னாக்குதலாம்.

கருத்து :—பிதா பிள்ளைக்குச் செய்யும் உதவியானது சபையில் கல்வியில் வல்லவனென முற்பட்டிருக்கச் செயல். (12)

13. மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

பத :—தந்தைக்கு-(தன்னைக் கல்வியுடையவனாக்கிய) தகப்பனுக்கு, மகன்—, ஆற்றும்-செய்யும், உதவி-எதிர்நன்றியானது, (தன்னறிவையும் ஒழுக்கத்தையும் கண்டவர்) இவன்-இவனது, தந்தை-தகப்பன், (இவனைப்பெறுதற்கு) என்-என்னதவத்தை, நோற்றான்கொல்-செய்தானோ, என்னும்-என்கிற, சொல்-சொல்லை (உண்டாக்குதலாம்).

கருத்து :—பிள்ளை பிதாவுக்குச்செய்யும் உதவியானது இவன் பிதா இவனைப்பெறுதற் கென்னதவஞ் செய்தானோ வென்று பிறர் சொல்லுஞ் சொல்லை யுண்டாக்குதல். (13)

14. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு.

பத :—அன்பிலார்—(பிறர்க்குப் பயன்படாமையால்), எல்லாம்-எல்லாப் பொருள்களாலும், தமக்கு-தமக்கே, உரியர்—; அன்புடையார்—, (அவைகளாலே மாத்திரமல்லாமல்) என்பும்-(தம்)முடம்பாலும், பிறர்க்கு—, உரியர்-உரியவராவர்.

கருத்து :—அன்பில்லாதவர் எல்லாப் பொருளாலுந் தமக்கேஉரியவராவர். அன்புடையவர் பிறர்க்கு எலும்பையுங் கொடுக்க உரியவராவர். (14)

15. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம்.

பத :—என்பிலதனை-எலும்பில்லாத உடம்பை, வெயில்போல-வெயிலானது சுடுதல்போல, அன்பிலதனை-அன்பில்லாத உயிரை, அறம்-அறக்கடவுள், காயும்-சுடுவான்.

கருத்து :—என்பில்லாப் புழுக்களைச் சூரியன் சுடுதல்போல அன்பில்லாத உயிர்களை அறக் கடவுள் சுடும். (15)

16. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

பத :—(உண்ணப்படும்பொருள்) சாவா மருந்தெனினும்-அமிர்தமாயினும், விருந்து-(தன்னை நோக்கிவந்த) விருந்தினர், புறத்ததா-(தன்வீட்டின்) புறத்திருக்க, தானுண்டல்-தானே யதனை யுண்ணுதல், வேண்டற்பாற்றன்று-விரும்பப்படு முறைமையை யுடையதன்றாம்.

கருத்து :—தன்னை நோக்கி வந்த விருந்தினரைப் புறத்துவைத்துத் தான் தேவாமிர்தமாயினும் உண்ணுதல் கூடாது. (16)

17. இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

பத :—இன்சொல் (பிறர்சொல்லிய) இனியசொற்களானவை, இனிதீன்றல்-(தனக்கு) இன்பந்தருதலை, காண்பான்-அனுபவித்தறிகின்றவன், (அதுநிற்க) வன்சொல்-கடுஞ்சொற்களை, வழங்குவது-(பிறரிடத்தே)சொல்லுவது, எவன்-என்னபயனைக் குறித்து ?

கருத்து :—இன்சொல் இன்பந் தருதலைக் காண்பவன் வன்சொற் சொல்லுவது என்ன கருதி? (17)

18. இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

பத :—இனிய-(அறத்தையுண்டாக்கும்) இன்சொற்களும்,உளவாக-(தன்னிடத்தே) உண்டாயிருக்க, (அவற்றைச்சொல்லாமல்) இன்னாத-(பாவத்தையுண்டாக்கும்) கடுஞ்சொற்களை, கூறல்-(ஒருவன்) சொல்லுதல், கனி-(இனிய) கனிகளும், இருப்ப-(தன்னிடத்தே) உண்டாயிருக்க, (அவற்றைத்தின்னாமல்) காய்-(இனிமையில்லாத) காய்களை, கவர்ந்தற்று-தின்பதனேடொக்கும்.

கருத்து :—ஒருவன் இன்சொலிருக்க வன்சொற் சொல்லுதல் இனிய கனியிருக்க அதைத் தின்னாது இன்னாத காயைத் தின்றாற்போலும். (18)

19\. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

பத :—நன்றி-(ஒருவன்முன்செய்த) நன்மையை, மறப்பது—, நன்றன்று-(ஒருவனுக்கு) அறனாகமாட்டாது; நன்றல்லது-(அவன்செய்த) தீமையை, அன்றே-செய்தபொழுதே, மறப்பது—, நன்று-அறமாம்.

கருத்து :—பிறர்செய்த நன்றியைமறப்பது தருமமாகாது. பிறர் செய்த தீமையை மறப்பது தருமமாகும். (19)

20\. எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

பத :—எந்நன்றி-எப்படிப்பட்ட பெரிய அறங்களை, கொன்றார்க்கும்-கெடுத்தவர்க்கும், உய்வு-பாவத்தினீங்கும்வழி, உண்டாம்—; செய்ந்நன்றி-(ஒருவன்) செய்தஉபகாரத்தை, கொன்றமகற்கு-கெடுத்தமனிதனுக்கு, உய்வு-அப்பாவத்தினீங்கும்வழி, இல்லை-இல்லையாம்.

கருத்து :—எவ்வகைத்தருமங்களை அழித்தவர்களுக்கும் ஈடேறும் வழி உண்டாம். செய்ந்நன்றியைக் கெடுத்தவர்களுக்கு ஈடேறும் வழியில்லை. (20)

21\. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

பத :—சமன்செய்து-(முன்னே தன்னைச்) சமனாகச்செய்து, சீர்தூக்கும்-(பின்னே தன்னிடத்து வைக்கப்பட்ட பாரத்தை) அளவுசெய்வதாகிய, கோல் போல்-துலாம்போல், அமைந்து-(இலக்கணங்களாலே) நிறைந்து, ஒருபால்-ஒருபக்கத்திலே, கோடாமை-சாயாமையானது, சான்றோர்க்கு-(அறிவால்) நிறைந்தோருக்கு, அணி-அழகாம்.

கருத்து :—நடுவுநிலைமையைவிட்டு ஒருவர் பக்கமும் சாயாமையே பெரியோர்க்கு அழகாம். (21)

22\. அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்.

பத :—(ஒருவனை) அடக்கம்-அடக்கமாகிய அறமானது, அமரருள்-(பின்) தேவருலகத்தில், உய்க்கும்-கொண்டுபோய்விடும்; அடங்காமை-அடங்காமையாகிய பாவமானது, ஆரிருள்-பொறுத்தற்கரியநரகத்தில், உய்த்துவிடும்-செலுத்திவிடும்.

கருத்து :—ஒருவனை அடக்கமானது தேவருலகத்திற் செலுத்தும். அடங்காமையானது நரகத்திற்செலுத்தும். (22)

23. ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின்
எழுமையு மேமாப் புடைத்து.

பத:—(ஒருவன்) ஒருமையுள்-ஒருபிறப்பின் கண்ணே, ஆமைபோல்—, ஐந்து-ஐம்பொறிகளையும், அடக்கலாற்றின்-அடக்க வல்லவனாகில், (அவ் வல்லமை அவனுக்கு) எழுமையும்-எழுபிறப்பின்கண்ணும், ஏமாப்புடைத்து-காவலாதலை யுடையதாம்.

கருத்து :—ஒருவன் ஐம்பொறிகளையும் அடக்க வல்லவனாயின் அவனுக்கு அவ்வடக்கம் எழுபிறப்பிலுந் துணையாம். (23)

24. யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

பத:—யா-(காக்கவேண்டுமவை)யாவையும், காவாராயினும்-காக்கமாட்டாராயினும், நா-நாவொன்றையும், காக்க-காக்கக்கடவர்; காவாக்கால்-(அதனைக்) காக்கமாட்டாராயின், சொல்லிழுக்குப்பட்டு-சொற்குற்றத்திலே அகப்பட்டு, சோகாப்பர்-(தாமே) துன்பப்படுவர்.

கருத்து :—நாவைக்காவாதவர் சொற்குற்றத்தினையடைந்து துன்புறுவர். (24)

25. தீயினாற் சுட்டபு ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு.

பத:—(ஒருவனை யொருவன்) தீயினால் சுட்ட—,புண்-புண்ணானது, (உடம்பினிடத்தே யிருந்தாலும்) உள்-மனதினிடத்தே, ஆறும்-(அப்போதே) ஆறும்; (அப்படியல்லாமல்) நாவினால்-(தீயசொற்களையுடைய) நாவினாலே, சுட்ட—, வடு-வடுவானது, (அதனிடத்தும் எப்போதும்) ஆறாது.

கருத்து :—ஒருவனுரைத்த கடுஞ்சொல் அதனைக்கொண்டவன் மனத்தே என்றும் மாறாதிருக்கும். (25)

26. ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம்
உயிரினு மோம்பப் படும்.

பத:—ஒழுக்கம்-ஆசாரமானது, விழுப்பம்-சிறப்பை, தரலான்-(எல்லாருக்கும்) கொடுத்தலால், ஒழுக்கம்-அவ்வாசாரமானது, உயிரினும்-உயிரைப் பார்க்கினும், ஓம்பப்படும்-காப்பாற்றப்படும்.

கருத்து :—ஆசாரமானது உயிரினும் சிறந்ததாம். (26)

27. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

பத :—ஓத்து-(கற்ற) வேதத்தை, மறப்பினும்-மறந்தானாயினும், கொள லாகும்-(வருணங்கெடாமையினாலே பின்னும்)ஓதிக்கொள்ளலாம்; பார்ப்பான்-பிராமணனது, பிறப்பு-உயர்ந்தவருணமானது, ஒழுக்கங்குன்ற-ஆசாரங் குறைய, கெடும்-கெட்டுவிடும்.

கருத்து :—ஒருவனது ஆசாரங் குறைந்தால் அவன் குலம் கெடும். (27)

28. நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்கம்
என்று மிடும்பை தரும்.

பத :—(ஒருவனுக்கு) நல்லொழுக்கம்-நல்ல ஆசாரமானது, நன்றிக்கு-அறத்துக்கு, வித்தாகும்-காரணமாகும்; தீயொழுக்கம்-தீயஆசாரமானது, என்றும்-இருமைகளிலும், இடும்பை-துன்பத்தை, தரும்-கொடுக்கும்.

கருத்து :—நல்லொழுக்கம் தருமத்திற்கும் தீயொழுக்கம் துன்பத்திற்கும் காரணமாம். (28)

29. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை.

பத :—அகழ்வாரை-தன்னை வெட்டுவோரை, தாங்கும்-(வீழாமற்) சுமப்பதாகிய, நிலம்போல-நிலத்தைப்போல, தம்மை இகழ்வார்-தம்மை நிந்திப்பவரை, பொறுத்தல்—, தலை-முதலான அறமாம்.

கருத்து :—தம்மைப் பழிப்பதைப் பொறுத்துக் கொள்ளுதலே தலைமையான தருமமாம். (29)

30. ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

பத :—ஒறுத்தார்க்கு-(தமக்குத் தீங்கு செய்தவனை) வருத்தினவர்க்கு, (உண்டாவது) ஒருநாளை இன்பம்-அவ்வொருநாளை யின்பமே; பொறுத்தார்க்கு-(அதனைப்) பொறுத்தவர்க்கு, பொன்றுந்துணையும்-(உலக)மழியுமளவும், புகழ்-கீர்த்தி உண்டாம்.

கருத்து :—தமக்குத் தீமை செய்தவனைத் தண்டித்தவர்க் கொருநாளை இன்பமும் அதனைப்பொறுத்தவர்க்கு உலகமழியுமளவும் புகழுமுண்டாம். (30)

31. அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

பத :—அழுக்காறென வொருபாவி-பொறாமை யென்று சொல்லப்பட்ட ஒப்பில்லாத பாவியானவன், (தன்னையுடையவனை) திருச்செற்று-(இம்மையிலே அவனது) செல்வத்தைக் கெடுத்து, தீயுழிஉய்த்து விடும்-(மறுமையிலே) நரகத்தினிடத்துச் செலுத்தி விடுவான்.

கருத்து :—பொறாமையானது தன்னை யுடையவனைக் கெடுத்து நரகத்திலே தள்ளும். (31)

32. இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

பத:—புலம்வென்ற-ஐம்புலன்களையும் வென்ற, புன்மையில்-குற்றமில்லாத, காட்சியவர்-அறிவையுடையவர், இலமென்று- வறியேமென்று நினைத்து, வெஃகுதல்செய்யார்-(அது தீர்தற்பொருட்டுப் பிறர்பொருளை) விரும்புதல் செய்யார்.

கருத்து:—ஐம்புலன்களையும் வென்ற அறிவுடையவர் வறியோமென்று பிறர்பொருளை விரும்பார். (32)

33. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறு மாக்கந் தரும்.

பத:—புறங்கூறி-பிறனைக்காணாத விடத்தே இகழ்ந்துபேசி, பொய்த்து-கண்டவிடத்தே அவனைப்புகழ்ந்து, உயிர்வாழ்தலின்-(ஒருவன்) உயிர்வாழ்தலினும், சாதல்-(அதுசெய்யாமல்) உயிர்விடுதல், (அவனுக்கு) அறங்கூறும்-தருமநூல்களினாலே சொல்லப்பட்ட, ஆக்கம்-பயனை, தரும்-கொடுக்கும்.

கருத்து:—ஒருவன் பிறனை முன்புகழ்ந்தும் பின் இகழ்ந்தும்பேசி உயிர் வாழ்தலினும் இறத்தலே நலம். (33)

34. பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்.

பத:—பயனில்சொல்-பயனில்லாத சொற்களை, பாராட்டுவானை-(பலதரமும்) சொல்லுவோனை, மகனெனல்-மனிதனென்று சொல்லாதே; மக்கட் பதடி எனல்-மனிதருக்குள்ளே பதரென்று சொல்லக்கடவாய்.

கருத்து:—பயன்படாச் சொற்களைச் சொல்லுகின்றவன் மக்களுக்குள்ளே பதராவான். (34)

35. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

பத:—(ஒருவன்) பிறன்-பிறனுக்கு, கேடு-கேட்டைத்தரும் வினையை, மறந்தும்—, சூழற்க-எண்ணாதிருக்கக்கடவன்; சூழின்-எண்ணுவானாயின், சூழ்ந்தவன்-அவ்வெண்ணினவனுக்கு, கேடு-கேட்டைத்தரும்வினையை, அறம்-அறக்கடவுள், சூழும்-எண்ணுவான்.

கருத்து:—ஒருவன் மறந்தும் பிறனுக்குக் கேட்டை நினையாதிருக்கக் கடவன்; நினைப்பானாகில் அவனுக்குத் தருமக் கடவுள் கேட்டைத்தரும் வினையை நினைக்கும். (35)

2

36. ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

பத :—ஒத்ததறிவான்-உலகநடையை அறிந்துசெய்பவன், உயிர்வாழ்வான்-உயிரோடுகூடிவாழ்பவனுவான் ; மற்றையான்-அதனை அறிந்து செய்யாதவன், (உயிருடையவனுயிருந்தாலும்) செத்தாருள்-இறந்தவர்களுக்குள், வைக்கப்படும்-(ஒருவனுக) வைத்து எண்ணப்படுவான்.

கருத்து :—உலகநடையை யறியாதான் இறந்தவர்களுக்குள் வைத்து எண்ணப்படுவான். (36)

37. ஒப்புரவி னுல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து.

பத :—ஒப்புரவினுல்-உபகாரஞ்செய்தலினுலே, வருங்கேடெனின்-(ஒருவனுக்குப்பொருட்) சேடு வருமென்பவ ருண்டாயின், அஃது-அக்கேடானது; ஒருவன்—, விற்று-(தன்னை) விற்ருயினும், கோட்டக்கதுடைத்து-வாங்குந்தகுதியை யுடையதாகும்.

கருத்து :—உதவிசெய்தலாற் பொருட்கேடு வருமென்ருலும் அக்கேட்டினை யொருவன் தன்னை விற்ருயினுங் கொள்ளக்கடவன். (37)

38. நல்லா றெனினுங் கொளறீது மேலுலகம்
இல்லெனினு மீதலே நன்று.

பத :—கொளல்-(பிறர்கொடுத்தலைவாங்கிக்) கொள்ளுதல், நல்லாறெனினும்-(மேலுலகத்துக்கு) நல்லவழியென்பவர் உண்டாயினும், (அது) தீது-குற்றமாம் ; (கொடுத்தவர்க்கு) மேலுலகம்-அந்தமேலுலகத்தையடைதல், இல்லெனினும்-இல்லையென்பவர்உண்டாயினும், ஈதலே-கொடுத்தலே, நன்று-நல்லது.

கருத்து :—யாசித்தல் மேலுலகமடைதற்கு நல்வழி யென்ருலும் அது செய்யலாகாது: முத்தியில்லை யென்ருலும் பிறருக்குக் கொடுத்தலே நல்லது. (38)

39. அற்ரு ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்ருன் பொருள்வைப் புழி.

பத:—அற்ருர்-வறியவரது, அழிபசி-மிகுந்தபசியை, தீர்த்தல்-(அறனேக்கித்) தீர்க்கக்கடவன் ; (ஏனெனில்) அஃது-அவ்வறம், பொருள் பெற்ருனெருவன்-பொருளைப்பெற்றவொருவன், வைப்புழி-(அப்பொருளைத் தனக்கு உதவ) வைக்குமிடம் ஆதலால்.

கருத்து :—பொருள் பெற்றவன் அப்பொருளை வைக்குமிடம் வறியவர் பசியைத் தீர்த்தலேயாம். (39)

40. ஒன்ரு வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்ருது நிற்பதொன் றில்.

பத :—ஒன்ரு-தனக்கு இணையில்லையாக, உயர்ந்த-ஓங்கிய, புகழல்லால்-கீர்த்தியல்லாமல், உலகத்து-உலகத்திலே, பொன்ருது-அழியாமல், நிற்பது-நிலைபெறுவது, ஒன்று-வேருென்று, இல்-இல்லை.

கருத்து :—உலகத்தில் அழியாது நிற்பது புகழ் ஒன்றே ஆகும். (40)

41. தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் ருேன்ருமை நன்று.

பத :—தோன்றின்-(மனிதராய்ப்) பிறந்தால், புகழொடு-புகழுக்கு ஏதுவாகியகுணத்தோடு, தோன்றுக-பிறக்கக்கடவர்; அஃதிலார்-அக்குணமில்லாதவர், தோன்றலின்-(மனிதராய்ப்) பிறத்தலினும், தோன்ருமை-பிறவாமையானது, நன்று-நல்லது.

கருத்து :—ஒருவர் புகழின்றிப் பிறத்தலினும் பிறவாமையே நல்லது. (41)

42. அருளிலார்க் கவ்வுலக மில்லைப் பொருளிலார்க்
கிவ்வுலக மில்லா தியாங்கு.

பத :—பொருளிலார்க்கு—, இவ்வுலகம்-இவ்வுலகத்தின் இன்பம், இல்லாதியாங்கு-இல்லையானாற்போல், அருளிலார்க்கு-(உயிர்களின்மேல்) அருளில்லாதார்க்கு, அவ்வுலகம்-முத்தியுலகத்தின் இன்பம், இல்லை—.

கருத்து :—பொருளில்லாதவர்க்கு இவ்வுலக இன்பமில்லையானாற்போல் அருளில்லாதவர்க்கு முத்தியின்பமில்லை. (42)

43. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்.

பத :—கொல்லான்-(ஒருயிரையுங்)கொல்லாதவனுமாய், புலாலை மறுத்தானை-புலாலையுமுண்ணுதவனை, எல்லாவுயிரும்-சகலபிராணிகளும், கைகூப்பி-கைகுவித்து, தொழும்-வணங்கும்.

கருத்து :—ஊன் உண்ணுதவனை எல்லா உயிரும் வணங்கும். (43)

44. உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.

பத :—தவத்திற்கு-தவத்தினுக்கு, உரு-வடிவமானது, உற்றநோய்-(உண்டிசுருக்குதல் முதலானவைகளால் தம்முயிர்க்கு) வரும் துன்பங்களை, நோன்றல்-பொறுத்தலும், உயிர்க்கு-(பிற) உயிர்க்கு, உறுகண்செய்யாமை-துன்பஞ்செய்யாமையும் ஆகிய, அற்றே-அவ்வளவினதேயாம்.

கருத்து :—தவத்தின்வடிவாவது விரதமேற்கொண்டு பிறவுயிர்க்குத் துன்பம் செய்யாமையேயாம். (44)

45. வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

பத :—வேண்டிய-(முயன்றால்) பெறவேண்டியபயன்களை, வேண்டியாங்கு-வேண்டியபடியே, எய்தலால்-(மறுமையிலேதாம்) பெறலாமாதலால் செய்தவம்-செய்யத்தகுவதாகிய தவமானது, ஈண்டு-இம்மையில், முயலப்படும்-(அறிவுடையோராலே) முயன்று செய்யப்படும்.

கருத்து :—மறுமையில் வேண்டியபயன்களை அடைவதற்கு இம்மையிலே தவமானது அறிவுடையோரால் செய்யப்படும். (45)

46. வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்.

பத :—தான்—, அறி-அறிந்த, குற்றம்-குற்றத்திலே, தன்னெஞ்சம்-தனதுமனம், படின்-தாழுமாயின்,(ஒருவனுக்கு) வானுயர்-வான்போலுயர்ந்த, தோற்றம்-தவவேடமானது, எவன்-என்னபயனை, செய்யும்—.

கருத்து :—குற்றமென்றறிந்த விஷயத்தில் செல்லும் மனமுடையவனது தவவேடமானது யாதுபயனைச்செய்யும்? (46)

47. தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

பத :—(வல்லமையில்லாத நிலைமையான்) தவம்-தவவேடத்திலே, மறைந்து-மறைந்துநின்று, அல்லவை-தவமல்லாதவைகளை, செய்தல்-செய்வது, வேட்டுவன்-வேடன், புதல்-புதலிலே, மறைந்து-ஒளிந்துநின்று, புள்-பறவைகளை, சிமிழ்த்தற்று-பிடித்தாற்போலும்.

கருத்து :—ஒருவன் தவவேடத்தில் மறைந்து நின்று பாவகாரியங்களைச் செய்தல் வேடன் புதலில் மறைந்து நின்று பறவைகளைப் பிடிப்பது போலாம். (47)

48. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்.

பத :—(குற்றங்களை) உள்ளத்தால்—(தமது) நெஞ்சினாலே, உள்ளலும்-நினைத்தலும், தீதே-(துறந்தார்க்குப்) பாவமேயாகும்; (ஆதலால்) பிறன்-பிறனது, பொருளை—, கள்ளத்தால்-அவனறியாத வகையினாலே, கள்வேம்-வஞ்சித்துக்கொள்வோம், எனல்-என்று நினையாதிருக்கக்கடவார்.

கருத்து :—குற்றங்களை எண்ணுதலும் தீதாயிருத்தலால் அறிவுடையோன் பிறன்பொருளைத் திருட எண்ணாதிருக்கக்கடவன். (48)

49. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

பத :—(ஒருவன்) தன்னெஞ்சு-தனதுநெஞ்சிலே, அறிவது-அறியப்படுவதொன்றை, பொய்யற்க-(பிறர் அறிந்திலரென்று) பொய்யாதொழியக் கடவன் ; பொய்த்தபின்-பொய்த்தானாயின், தன்னெஞ்சே-(அதனை அறிந்த) தனதுநெஞ்சே,(அப்பாவத்துக்குச்சாக்ஷியாய்நின்று)தன்னை—, சுடும்-தபிக்கும் ; அப்பாவத்தின் பயனாகிய துன்பத்தை அடைவிக்கும்.

கருத்து :—ஒருவன் மனம் அறியப் பொய்பேசினால் அம்மனமே அவனை வருத்தும். (49)

50. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்.

பத :—தன்னை-(ஒருவன்) தன்னை, தான்காக்கின்-தான் (துன்பம் அடையாமல்) காக்க நினைத்தானாகில், சினம்-(தன்மனத்திலே) கோபம் (வாராமல்), காக்க-காக்கக்கடவன் ; காவாக்கால்-காவானாயின், சினம்-அக்கோபமானது, தன்னையே—, கொல்லும்—கெடுக்குங் கடுந்துன்பங்களை அடைவிக்கும்.

கருத்து :—ஒருவன் தன்னைத்தான் காக்கவேண்டின் கோபத்துக் கிடந் தராதிருக்கக் கடவன். (50)

51. இன்னா செய்தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

பத :—(தமக்கு) இன்னா-துன்பந்தருபவைகளை, செய்தாரை-செய்தவர்களை, ஒறுத்தல்-(துறந்தோர்) தண்டித்தலாவது, அவர்நாண-அவர் (தாமே) நாணும்படி, (அவருக்கு) நன்னயம்-இனிமையான மகிழ்ச்சிகளை, செய்து—, விடல்-(அவ்விரண்டையும்) மறத்தலாம்.

கருத்து :—துன்பஞ் செய்தார்க்கு இன்பஞ் செய்தால் அதுவே அவர்க்குத் தண்டனையாம். (51)

52. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

பத :—பற்றற்றான்-(எல்லாப்பொருள்களையும் பற்றிநின்றே) பற்றில்லாத கடவுள் (அருளிய), பற்றினை-முத்திவழியை, பற்றுக-(இதுவே நல்ல வழியென்று) மனத்திற் கொள்ளக்கடவர் ; பற்று-(விடாதுவந்த) பற்று, விடற்கு-விடுதற்கு, அப்பற்றை-அதற்குரிய உபாயத்தை, பற்றுக-(அம்மனத்தினாலே) செய்யக்கடவர்.

கருத்து :—யான் எனது என்னும் இருவகைப்பற்றும் ஒழியும் பொருட்டு முத்தியடையும் வழியைப்பற்றித் தியான சமாதிகளைச் செய்யக்கடவர். (52)

53. பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்
மருளானு மாணாப் பிறப்பு.

பத :—பொருளல்லவற்றை-மெய்ப்பொருள்களல்லாதவைகளை, பொரு ளென்று-மெய்ப்பொருள்களென்று, உணரும்-அறிகின்ற, மருளான்-விபரீத ஞானத்தினுலே, மாணாப்பிறப்பு-மாட்சிமைப்படாத பிறவி (இன்பமில்லாத பிறவி), ஆம்-உண்டாகும்.

கருத்து :—பொருளல்லாதவைகளைப் பொருளென்று எண்ணுவதால் பிறப்பு உண்டாகின்றது. (53)

54. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு.

பத :—பிறப்பென்னும்-பிறவிக்கு முதற்காரணமான, பேதைமை-அஞ் ஞானமானது, நீங்க-கெட்டொழிய, சிறப்பென்னும்-மோக்ஷத்திற்கு நிமித்த காரணமான, செம்பொருள்-செவ்வியபொருளை, காண்பது-காண்பதே, அறிவு-(ஒருவனுக்கு) மெய்யுணர்வாம்.

கருத்து :—பிறவிக்குக் காரணமான அஞ்ஞானங்கெட உண்மைப் பொருளை உணர்வதே அறிவாகும். (54)

55. அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

பத :—எல்லாவுயிர்க்கும்—, எஞ்ஞான்றும்-எக்காலத்திலும், தவா-கெடாது வருகின்ற, பிறப்பு-பிறவியை, ஈனும்-விளைப்பதாகிய, வித்து-விதை, அவா-ஆசையாகும், என்ப-என்று நூலோர் சொல்லுவர்.

கருத்து :—ஆசையானது கெடாதுவரும் பிறப்புக்கு விதையாகும். (55)

56. ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்.

பத :—ஆரா இயற்கை-(ஒருபோதும்) நிரம்பாத இயல்பினையுடைய, அவா-ஆசையை, நீப்பின்-(ஒருவன்) விடுவானாயின், (அவனுக்கு அப்படி விடு வது) அந்நிலையே-அப்பொழுதே, பேரா இயற்கை-எப்போதும் ஒரு நிலைமை யனுகும் ஜீவனமுக்த நிலைமையை, தரும்-கொடுக்கும்.

கருத்து :—ஒருவன் ஆசையை விடுவானாயின் அஃது அவனுக்குச் சீவன் முக்த நிலைமையைக் கொடுக்கும். (56)

# 2. கம்பராமாயணம்.

## (1) துதி.

கம்பர், சோழவளநாட்டிலே திருவழுந்தூரிலே உவச்சர்குலத்திலே ஆதித்தர் என்பவருக்குப் புதல்வராகப் பிறந்தவர்; திருவெண்ணெய்நல்லூர்ச் சடையப்பவள்ளலால் ஆதரிக்கப்பட்டவர்; கவிச்சக்கரவர்த்தி என்ற சிறப்புப்பெயர் பெற்றவர். 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்', 'கல்வியிற் பெரியவன் கம்பன்' என்பன இவரைப்பற்றிய பழமொழிகள். இவர் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவர்; ராமபக்தி மிக்கவர்; விஸ்தாரமாகக் கவி பாடுவதில் வல்லவர்.

### கடவுள் வணக்கம்.

1. உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரெவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே.

பதவுரை:—உலகம் யாவையும்-எல்லா உலகங்களையும், தாம்-தாமே, உள ஆக்கலும்-படைத்தலும், நிலைபெறுத்தலும்-காத்தலும், நீக்கலும்-அழித்தலும், (ஆகிய மூன்றையும்) நீங்கலா-நீங்காத, அலகு இலா விளையாட்டு-முடிவில்லாத் விளையாட்டுக்களை, உடையார்-உடையவர், எவர்-எவரோ (அவரே), தலைவர்-(இவ்வுலகங்களுக்கெல்லாம்) தலைவரான கடவுளாவர்; அன்னவர்க்கே-அப்படிப்பட்ட கடவுளுக்கே, நாங்கள் சரண்-நாங்கள் அடைக்கலம்.

பொழிப்புரை:—எல்லா உலகங்களையும் தாமே படைத்தலும் காத்தலும் அழித்தலும் ஆகிய மூன்றையும் நீங்காத முடிவில்லாத விளையாட்டுக்களை உடையவர் எவரோ அவரே இவ்வுலகங்களுக்கெல்லாம் தலைவரான கடவுளாவர்; அப்படிப்பட்ட கடவுளுக்கே நாங்கள் அடைக்கலம். (1)

### அனுமான் துதி.

2. அஞ்சிலே யொன்று பெற்றா னஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்றா றாக வாரியற் காக வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற வணங்கைக்கண் டயலா ரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தா னவனெம்மை யளித்துக் காப்
[பான்.

பத :—அஞ்சிலே ஒன்றுபெற்றான்-பஞ்சபூதங்களுள் ஒன்றாகிய வாயு தேவனால் பெறப்பட்டு, அஞ்சிலேஒன்று ஆறு ஆக-பஞ்சபூதங்களுள் ஒன்றாகிய ஆகாயத்தின் வழியாக, அஞ்சிலே ஒன்றைதாவி-பஞ்சபூதங்களுள் ஒன்றாகிய அப்பு-சமுத்திரத்தைக்கடந்து, ஆரியற்கு ஆக ஏகி-இராமபிரான்பொருட்டு (இலங்கைக்கு)ப்போய், அஞ்சிலே ஒன்றுபெற்ற அணங்கைக் கண்டு-பஞ்ச பூதங்களுள் ஒன்றாகிய பூமிதேவி பெற்ற தெய்வப்பெண்ணாகிய சீதாபிராட்டியைக்கண்டு (வணங்கிச் செய்திசொல்லி), அயலார் ஊரில்-சத்துருக்களான அரக்கருடைய ஊராகிய இலங்கையிலே, அஞ்சிலே ஒன்றைவைத்தான்-பஞ்ச பூதங்களுள் ஒன்றாகிய நெருப்பை வைத்துச் (சென்றவனான), அவன்-அந்த மேன்மைபொருந்திய அனுமான், எம்மை-எங்களை, அளித்து-கருணைசெய்து, காப்பான்-பாதுகாப்பான்.

பொழி :—பஞ்சபூதங்களுள் ஒன்றாகிய வாயுதேவனால் பெறப்பட்டுப் பஞ்சபூதங்களுள் ஒன்றாகிய ஆகாயத்தின்வழியாகப் பஞ்சபூதங்களுள் ஒன்றாகிய சமுத்திரத்தைக்கடந்து, இராமபிரான்பொருட்டு இலங்கைக்குப்போய்ப் பஞ்சபூதங்களுள் ஒன்றாகிய பூமிதேவி பெற்ற தெய்வப்பெண்ணாகிய சீதா பிராட்டியைக்கண்டு வணங்கிச் செய்திசொல்லிச் சத்துருக்களான அரக்கருடைய ஊராகிய இலங்கையிலே பஞ்சபூதங்களுள் ஒன்றாகிய நெருப்பை வைத்துச் சென்றவனான அந்த மேன்மைபொருந்திய அனுமான் எங்களைக் கருணைசெய்து பாதுகாப்பான். (2)

## ராம நாம மகிமை.

3. நன்மையுஞ் செல்வமு நாளு நல்குமே
தின்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே
சென்மமு மரணமு மின்றித் தீருமே
இம்மையே ராமவென் றிரண்டெ ழுத்தினால்.

பத :—ராம என்ற இரண்டு எழுத்தினால்-ராம என்கிற இரண்டு எழுத்துக்களை உச்சரிப்பதனால் (அதற்குஉரியவனான ஸ்ரீராமன்), இம்மையே-இந்தப் பிறவியிலேயே, நாளும்-எப்போதும், நன்மையும்-(எல்லா) நன்மைகளையும், செல்வமும்-(அவற்றிற்குக் காரணமான) செல்வத்தையும், நல்கும்-கொடுத் தருள்வான்; (அன்றியும் அவ்வாறு உச்சரிப்பவர்க்கு) தின்மையும்-தீயசெயலும், பாவமும்-(அதன் பயனான) தீவினையும், சிதைந்து தேயும்-அழிந்துகெடும்; சென்மமும் மரணமும்-பிறப்பும் இறப்பும், இன்றி தீரும்-இனிமேல் உண்டாகாமல் தீர்ந்துவிடும்.

பொழி :—ராம என்கிற இரண்டு எழுத்துக்களை உச்சரிப்பதனால், அதற்கு உரியவனான ஸ்ரீராமன் இந்தப்பிறவியிலேயே எப்போதும் எல்லா நன்மை களையும் அவற்றிற்குக் காரணமான செல்வத்தையும் கொடுத்தருள்வான்; அன்றியும், அவ்வாறு உச்சரிப்பவர்க்குத் தீயசெயலும் அதன்பயனான தீவினை யும் அழிந்துகெடும்; பிறப்பும் இறப்பும் இனிமேல் உண்டாகாமல் தீர்ந்து விடும். (3)

## நூற்பயன்.

4. நாடிய பொருள்கை கூடு ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் றோள்வலி கூறு வோர்க்கே.

பத:—நீடிய அரக்கர்சேனை-மிகுதியான இராட்சசசேனை, நீறுபட்டு அழிய-சாம்பராய் அழிந்துபோக, வாகைசூடிய-வெற்றிமாலையை அணிந்த, சிலை-(கோதண்டம் என்னும்) வில்லையேந்திய, இராமன்-இராமபிரானது, தோள்வலி-புயவலிமையை, கூறுவோர்க்கு-பாராட்டிப் பேசுவோர்க்கு, நாடிய-(அவர்) வேண்டிய, பொருள்-(கல்வி, செல்வம் முதலிய எல்லாப்) பொருள்களும், கை கூடும்-கைவசமாகும்; ஞானமும்-மனத்தெளிவும், புகழும்-கீர்த்தியும், உண்டாம்-சித்திக்கும்; வீடு இயல்-மோக்ஷத்தை அடைதற்கு ஏற்ற, வழியது-வழியை, ஆக்கும்-உண்டாக்குகின்ற, வேரி அம் கமலை-நறுமணமுள்ள தாமரையில்வாழ்பவளான இலக்குமியும், நோக்கும்-கடாட்சிப்பாள்.

பொழி:—மிகுதியான இராட்சசசேனை சாம்பராய் அழிந்துபோக வெற்றிமாலையை அணிந்த கோதண்டம் என்னும் வில்லையேந்திய இராமபிரானது புயவலிமையைப் பாராட்டிப்பேசுவோர்க்கு அவர் வேண்டிய கல்வி, செல்வம் முதலிய எல்லாப்பொருள்களும் கைவசமாகும்; மனத்தெளிவும் கீர்த்தியும் சித்திக்கும்; மோக்ஷத்தை அடைதற்கு ஏற்றவழியை உண்டாக்குகின்ற நறுமணமுள்ள தாமரையில் வாழ்பவளான இலக்குமியும் கடாட்சிப்பாள். (4)

## (2) ஸ்ரீராமஜனனம்.

### (திருவவதாரப் படலம்.)

[ஸ்ரீவைகுண்டநாதராகிய விஷ்ணுமூர்த்தி, இராவணாதியரால் தங்களுக்கு உண்டாகும் துன்பங்களைப் போக்கியருளுமாறு வேண்டிய தேவர்களுக்கு இரங்கித் துஷ்டநிக்கிரகமும் சிஷ்டபரிபாலனமும் செய்ய அயோத்தியில் தசரத சக்கரவர்த்திக்குப் புத்திரர்களாக அவதரிக்கத் திருவுளம்பற்றினார்; தேவர்களை வானரம் முதலிய விலங்குகளாகப் பிறக்குமாறு கட்டளையிட்டார். தேவர்கள் தங்களுடைய துன்பங்கள் நீங்கும் என்று மகிழ்ந்தார்கள். இந்நிலையில், அயோத்தி மன்னனாகிய தசரதசக்கரவர்த்தி, தனக்குப் புத்திரப்பேறில்லாக் குறையைக் குலகுருவாகிய வசிஷ்டமுனிவரிடம் தெரிவித்துக் கொள்ளலானான். அவர், முன்னம் நிகழ்ந்த செய்திகளைத் தமது ஞானக்கண்ணால் உணர்ந்து கலைக்கோட்டுமுனிவர்வந்து யாகம் பூர்த்தியானால் புத்திரர்கள் தோன்றுவார்கள் என்றனர். தசரதன் அழைக்கக் கலைக்கோட்டுமுனிவர் தமது பத்தினியுடன் அயோத்திக்கு வரலானார். மன்னர் மன்னனாகிய தசரதன், வசிஷ்டமுனிவர் முதலானவர்களுடன் எதிர்சென்று அந்த முனிவரை அரண்மனைக்கு அழைத்துவந்து உயரிய ஆசனத்தில் அமர்வித்து முறைப்படி உபசாரங்களைச் செய்தான்.]

1. சான்றவர் சான்றவ தரும மாதவம்
போன்றொளிர் புனிதநின் னருளிற் பூத்தவென்
ஆன்றதொல் குலமினி யரசின் வைகுமால்
யான்றவ முடைமையு மிழப்பின் றாமரோ.

பத:—சான்றவர் சான்றவ-(கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம் என்றவற்றால்) நிறைந்த மேலோர்க்கும் மேலோனே, தருமம் மாதவம்போன்று ஒளிர் புனித-தருமத்தையும் சிறந்த தவத்தினையும் போன்று விளங்குகின்ற பரிசுத்தனே, நின் அருளின் பூத்த-உனது கருணையைப்பெற்றதனாற் பொலிவடைந்த, என் ஆன்ற தொல் குலம்-எனது பெருமைவாய்ந்த பழமையான வமிசமானது, இனி-இனிமேல், அரசின் வைகும்-(தொடர்ச்சிஅற்றுப் போகாமல்) அரசாட்சியில் நிலைபெறும்; யான் தவம் உடைமையும்-யான் முற்பிறப்பிற் செய்த நல்ல தவத்தை உடையவனான தன்மையும், இழப்பு இன்று ஆம்-பயனில்லாததாகஆகாது (பயனுடையதாகவே ஆகும்).

பொழி:—கல்வி கேள்வி அறிவு ஒழுக்கம் என்றவற்றால் நிறைந்த மேலோர்க்கும் மேலோனே, தருமத்தையும் சிறந்த தவத்தையும்போன்று விளங்குகின்ற பரிசுத்தனே, உனது கருணையைப்பெற்றதனாற் பொலிவடைந்த

எனது பெருமைவாய்ந்த பழமையான வமிசமானது இனிமேல் தொடர்ச்சி அற்றுப்போகாமல் அரசாட்சியில் நிலைபெறும்; யான் முற்பிறப்பிற்செய்த நல்லதவத்தை உடையவனுன தன்மையும் பயனில்லாததாக ஆகாது, பயனுடையதாகவே ஆகும். (1)

2. என்னலும் முனிவா னினிதி னோக்குறு
மன்னவர் மன்னகேள் வசிட்ட னென்னுமோர்
நன்னெடுந் தவன்றுணை நவையில் செய்கைநீ
நின்னையில் வுலகினி னிருபர் நேர்வரோ.

பத:—என்னலும்-என்று (தசரதன்) சொன்ன அளவிலே, முனிவரன்-கலைக்கோட்டுமுனிவன்—, இனிதின் நோக்குறு-(தசரதனைக்) குளிரப் பார்த்து, மன்னவர்மன்ன-அரசர்க்கரசனே, கேள்-கேட்பாயாக: நீ—, வசிஷ்டன் என்னும ஓர் நல் நெடும்தவன் துணை-வசிஷ்டன் என்று சிறப்பித்துச் சொல்லுகின்ற நல்ல பெருந்தவமுடைய ஒப்பற்ற முனிவனை உதவியாகப் பெற்றிருக்கிறுய்; (அன்றியும்), நவையில் செய்கை-குற்றமற்ற செய்கையை யுடையாய்; (ஆதலால்), நின்னை-உன்னை, இ உலகினில் நிருபர்-இவ்வுலகத்தி லுள்ள அரசர், நேர்வரோ-ஒப்பாவரோ? (ஒவ்வார்.)

பொழி:—என்று தசரதன் சொன்ன அளவிலே கலைக்கோட்டுமுனிவன் தசரதனைக் குளிரப்பார்த்து அரசர்க்கரசனே, கேட்பாயாக: நீ வசிஷ்டன் என்று சிறப்பித்துச்சொல்லுகின்ற நல்ல பெருந்தவமுடைய ஒப்பற்ற முனிவனை உதவியாகப் பெற்றிருக்கிறுய்; அன்றியும், குற்றமற்ற செய்கையை யுடையாய்; ஆதலால், உன்னை இவ்வுலகத்திலுள்ள அரசர் ஒப்பாவரோ? ஒவ்வார். (2)

3. என்றன பற்பல வினிமை கூறிநற்
குன்றுறழ் வரிசிலைக் குவவுத் தோளினுய்
நன்றிகொ ளரிமக நடத்த வெண்ணியோ
இன்றெனை யழைத்ததிங் கியம்பு வாயென்றுன்.

பத:—என்றன பற்பல இனிமை கூறி-என்று சொல்லப்பட்டனவும் மற்றும் பலவகைப்பட்டனவுமாகிய இனியசொற்களைச் சொல்லி, (பின்பு), 'நல் குன்று உறழ் வரி சிலை குவவு தோளினுய்-அழகிய பெரிய மலையை யொத்தனவும் கட்டமைந்த வில்லையேந்தினவுமான திரட்சிபொருந்திய தோள்களையுடைய தசரதனே, இன்று எனை இங்கு அழைத்தது-இப்பொழுது என்னை இவ்விடத்தில் (நீ) வரவழைத்தது, நன்றி கொள் அரிமகம் நடத்த எண்ணியோ-(தன்னிடத்தே பல) நன்மைகளைக்கொண்ட அசுவமேத யாகத்தை (என்னைக்கொண்டு) நடப்பித்தற்குக் கருதியோ? இயம்புவாய் சொல்லுவாயாக', என்றுன்-என்று வினுவினுன்.

பொழி :—என்று சொல்லப்பட்டனவும் மற்றும் பலவகைப்பட்டனவும் ஆகிய இனிய சொற்களைச்சொல்லிப் பின்பு, 'அழகிய பெரியமலையை ஒத்தன வும் கட்டமைந்த வில்லையேந்தினவுமான திரட்சிபொருந்திய தோள்களை யுடைய தசரதனே, இப்பொழுது என்னை நீ இவ்விடத்தில் வரவழைத்தது தன்னிடத்தே பல நன்மைகளைக்கொண்ட அசுவமேதயாகத்தை என்னைக் கொண்டு நடப்பித்தற்குக் கருதியோ? சொல்லுவாயாக' என்று வினவினன். (3)

4. உலப்பில்பல் லாண்டெலா முறுக ணின்றியே
தலப்பொறை யாற்றினென் றனயர் வந்திலர்
அலப்புநீ ருடுத்தபா ரளிக்கு மைந்தரை
நலப்புகழ் பெறவினி நல்க வேண்டுமால்.

பத :—உலப்பு இல் பல் ஆண்டு எலாம்-முடிவில்லாத அநேகவருஷ காலம், உறுகண் இன்றி-யாதொரு துன்பமும் உண்டாகாமல், தலம் பொறை ஆற்றினென்-பூமிபாரத்தைத் தாங்கினேன்; தனயர் வந்திலர்-(என்காலத் துக்குப்பிறகு பூமிபாரத்தைத் தாங்கும்படி) புத்திரர் பிறந்தாரில்லை; (ஆதலால்), இனி—, அலப்பு நீர் உடுத்த பார் அளிக்கும் மைந்தரை-அலை வீசு கின்ற நீர் நிறைந்த கடலாற் சூழப்பட்ட நிலவுலகத்தைக் காக்குந்தன்மை யுள்ள புதல்வரை, நலம் புகழ்பெற-சிறந்த கீர்த்தியை (நான்) அடையும்படி, நல்கவேண்டும்-அருள்புரிதல்வேண்டும்.

பொழி :—முடிவில்லாத அனேகவருஷகாலம் யாதொரு துன்பமும் உண்டாகாமல் பூமிபாரத்தைத் தாங்கினேன்; என்காலத்திற்குப்பிறகு பூமி பாரத்தைத்தாங்கும்படி புத்திரர் பிறந்தாரில்லை; ஆதலால், இனி, அலை வீசு கின்ற நீர் நிறைந்த கடலாற்சூழப்பட்ட நிலவுலகத்தைக் காக்கும் தன்மை யுள்ளபுதல்வரை, நான் சிறந்தகீர்த்தியை அடையும்படி எனக்கு அருள்புரிதல் வேண்டும். (4)

5. என்றலு மரசநீ யிரங்க லிவ்வுல
கொன்றுமோ வுலகமீ ரேழு மோம்பிடும்
வன்றிறன் மைந்தரை யளிக்கு மாமகம்
இன்றுநீ யியற்றுதற் கெழுக வீண்டென்றான்.

பத :—என்றலும்-என்று (சக்கரவர்த்தி) சொன்னவளவில், (கலைக் கோட்டு முனிவன் தசரதனை நோக்கி), 'அரச-அரசனே, நீ—, இரங்கல்-மனவருத்தப்படாதே; இ உலகு ஒன்றுமோ-இந்தப்பூலோகமொன்றை மாத்திரமோ, உலகம் ஈர் ஏழும்-பதினான்குஉலகங்களையும், ஓம்பிடும்-காப்பதற்குஉரிய, வல் திறல் மைந்தரை-மிக்கவல்லமையையுடைய குமாரர் களை, அளிக்கும்-கொடுக்கவல்ல, மா மகம்-பெரிய யாகத்தை, இன்று-இப்பொழுது, ஈண்டு-இவ்விடத்தில், இயற்றுதற்கு-செய்தற்கு, நீ—, எழுக-முயல்வாயாக' என்றான்-என்று சொன்னான்.

பொழி:—என்று சக்கரவர்த்தி சொன்ன அளவில், கலைக்கோட்டு முனிவன் தசரதனை நோக்கி, "அரசனே, நீ மனவருத்தப்படாதே; இந்தப் பூலோகம் ஒன்றைமாத்திரமோ? பதினான்கு உலகங்களையும் காப்பதற்கு உரிய மிக்க வல்லமையையுடைய குமாரர்களைக் கொடுக்கவல்ல பெரிய யாகத்தை இப்பொழுது இவ்விடத்தில் செய்வதற்கு நீ முயல்வாயாக" என்று சொன்னான். (5)

6. ஆயதற் குரியன கலப்பை யாவையும்
ஏயெனக் கொணர்ந்தனர் நிருபர்க் கேந்தலுந்
தூயநற் புனல்படீஇச் சுருதி நூன்முறை
சாய்வறத் திருத்திய சாலை புக்கனன்.

பத:—ஆயதற்கு உரியன-அவ்யாகத்துக்குரியனவாகிய, கலப்பை யாவையும்-கருவிகளெல்லாவற்றையும், ஏயென-விரைவாக, கொணர்ந்தனர்-(அரசன்கட்டளையால் ஏவலாளர்கள்) கொண்டுவந்தார்கள்; நிருபர்க்கு ஏந்தலும்-அரசர்க்கரசனாகிய தசரதசக்கரவர்த்தியும், தூய நல் புனல் படீஇ-பரிசுத்தியையுடைய நல்ல (சரயூநதியின்) தீர்த்தத்திலே நீராடி, சுருதி நூல் முறை-வேதசாஸ்திரங்களில் கூறிய முறைப்படியே, சாய்வு அற திருத்திய-குற்றமில்லாதபடி திருத்தமாக அமைக்கப்பட்டுள்ள, சாலை-யாகசாலையில், புக்கனன்-போய்ச்சேர்ந்தான்.

பொழி:—அந்த யாகத்துக்கு உரியனவாகிய கருவிகள் எல்லாவற்றையும் விரைவாக அரசன் கட்டளையால் ஏவலாளர்கள் கொண்டுவந்தார்கள்; அரசர்க்கரசனாகிய தசரத சக்கரவர்த்தியும் பரிசுத்தியையுடைய நல்ல சரயூநதியின் தீர்த்தத்திலே நீராடி வேதசாஸ்திரங்களில் கூறிய முறைப்படியே குற்றமில்லாதபடி திருத்தமாக அமைக்கப்பட்டுள்ள யாகசாலையில் போய்ச்சேர்ந்தான். (6)

7. முழங்கழன் மும்மையு முடுகி யாகுதி
வழங்கியே யீரறு திங்கள் வாய்த்தபின்
றழங்கின துந்துமி தாவில் வானகம்
விழுங்கினர் விண்ணவர் வெளியின் றென்னவே.

பத:—(கலைக்கோட்டுமுனிவன்) முழங்கு அழல் மும்மையும்-ஆரவாரித்து எழுகின்ற ஆகவனீயம், காருகபத்தியம், தக்ஷிணாக்கினி என்ற மூன்று வகை அக்கினியையும், முடுகி-விரைவாக வளர்த்து, ஆகுதி வழங்கி-ஆகுதிகளை ஓமஞ்செய்ய, ஈர் அறு திங்கள் வாய்த்தபின்-(இங்ஙனம்) பன்னிரண்டுமாதங்கள் சென்றபின்பு, துந்துமி-தேவவாத்தியங்கள், தழங்கின-ஒலித்தன; விண்ணவர்-தேவர்கள், வெளி இன்று என்ன-வெற்றிடம் சிறிதுமில்லையென்னும்படி, தா இல் வானகம்-கெடுதலில்லாத ஆகாயத்தை, விழுங்கினர்-மறைத்துக் கொண்டு நெருங்கினார்கள்.

பொழி :—கலைக்கோட்டுமுனிவன் ஆரவாரித்து எழுகின்ற ஆகவனீயம், காருகபத்தியம், தக்ஷிணுக்கினி என்ற மூன்றுவகை அக்கினியையும் விரைவாக வளர்த்து ஆகுதிகளை ஓமஞ்செய்யப் பன்னிரண்டுமாதங்கள் சென்ற பின்பு தேவவாத்தியங்கள் ஒலித்தன; தேவர்கள் வெற்றிடம் சிறிதும் இல்லை என்னும்படி கெடுதலில்லாத ஆகாயத்தை மறைத்துக்கொண்டு நெருங்கினுர்கள். (7)

8. முகமல ரொளிர்தர மொய்த்து வானுளோர்
அகவிரை நறுமலர் தூவி யார்த்தெழத்
தகவுடை முனியுமத் தழலி ணுப்பணே
மகவரு ளாகுதி வழங்கி ணனரோ.

பத :—வான்உளோர்-மேலுலகத்துள்ளதேவர்கள், முகம் மலர் ஒளிர்தர-(திருமாலின்அவதாரகாலம் சமீபித்ததென்ற மகிழ்ச்சியால் தமது) தாமரைமலர் போன்றமுகம் விளக்கம்பெற, மொய்த்து-நெருங்கி, விரை அகம் நறுமலர் தூவி-வாசனையைத் தன்னிடத்தேயுடைய நல்லகற்பகமலர்களைப் பொழிந்து, ஆர்த்து எழ-பேரொலிசெய்து துள்ள—,தகவு உடை முனியும்-தகுந்த நற்குணங்களையுடைய கலைக்கோட்டுமுனிவனும், அ தழலின் நாப்பணே-அந்த அக்கினியினிடையிலே, மகவு அருள் ஆகுதி-புத்திரரைக் கொடுத்தற்குரிய ஆகுதிகளை, வழங்கினுன்-ஓமஞ்செய்தான்.

பொழி :—மேலுலகத்துள்ள தேவர்கள் திருமாலின் அவதாரகாலம் சமீபித்ததென்ற மகிழ்ச்சியால் தங்களது தாமரைபோன்ற முகம் விளக்கம் பெற நெருங்கி வாசனையைத் தன்னிடத்தேகொண்ட நல்ல கற்பகமலர்களைப் பொழிந்து பேரொலிசெய்து துள்ளத் தகுந்த நற்குணங்களையுடைய கலைக்கோட்டுமுனிவனும் அந்த அக்கினியினிடையிலே புத்திரரைக் கொடுத்தற்கு உரிய ஆகுதிகளை ஓமஞ்செய்தான். (8)

9. ஆயிடைக் கனலினின் றம்பொற் றட்டமீத்
தூயநற் சுதைநிகர் பிண்ட மொன்றுசூழ்
தீயெரிப் பங்கியுஞ் சிவந்த கண்ணுமாய்
ஏயெனப் பூதமொன் றெழுந்த தேந்தியே.

பத :—ஆ இடை-அந்தச்சமயத்தில், சூழ் தீ எரி பங்கியும்-சூழ்ந்தெரிகிற அக்கினிபோலச் சிவந்துவிளங்குந் தலைமயிரையும்,·சிவந்த கண்ணும் ஆய்-செந்நிறமுடைய கண்களையு முடையதாக, பூதம் ஒன்று-ஒருபூதமானது, அம் பொன் தட்டம் மீ-அழகிய பொன்மயமான தட்டின்மேலே, தூய நல் சுதை நிகர் பிண்டம் ஒன்று-பரிசுத்தமான இனிய அமிர்தத்தையொத்த ஒரு பிண்டத்தை, ஏந்தி-தாங்கிக்கொண்டு, கனலில் நின்று-ஓமாக்கினியிலிருந்து, ஏயென-விரைவாக, எழுந்தது-மேலே வந்தது.

பொழி:—அந்தச்சமயத்தில் சூழ்ந்து எரிகிற அக்கினிபோலச் சிவந்து விளங்கும் தலைமயிரையும் செந்நிறமுடைய கண்களையும் உடையதாக ஒரு பூதமானது, அழகிய பொன்மயமான தட்டின்மேலே பரிசுத்தமான இனிய அமிர்தத்தை ஒத்த ஒரு பிண்டத்தைத் தாங்கிக்கொண்டு ஓமாக்கினியிலிருந்து விரைவாக மேலே வந்தது. (9)

10. வைத்தது தரைமிசை மறித்து மவ்வழித்
தைத்தது பூதமத் தவனும் வேந்தனை
உய்த்தநல் லமிர்தினை யுரிய மாதர்கட்
கத்தகு மரபினு லளித்தி யாலென்றான்.

பத:—பூதம்-அந்தப் பூதமானது, தரைமிசை வைத்தது-(தான் கொணர்ந்த அமுதத்தட்டினைப்) பூமியிலே வைத்துவிட்டு, மறித்தும்-மீண்டும், அ வழி தைத்தது-அவ்வோமாக்கினியினிடத்திலேதானே பாய்ந்து சென்றது; (உடனே), அ தவனும்-தவத்தையுடைய அந்தக் கலைக்கோட்டுமுனிவனும், வேந்தனை-தசரதனை நோக்கி, 'உய்த்த நல் அமிர்தினை-(பூதத்தாற்) கொணர்ந்து கொடுக்கப்பட்ட நல்ல அமிர்தம்போலினிய உணவை, உரிய மாதர்கட்கு-(உனக்கு) உரிய மனைவிமார்கட்கு, அ தகு மரபினால்-தகுதியான அம்முறைப்படியே, அளித்தி-கொடுப்பாயாக,' என்றான்-என்று கூறினான்.

பொழி:—அந்தப்பூதமானது தான் கொணர்ந்த அமுதத்தட்டினைப் பூமியிலே வைத்துவிட்டு மீண்டும் அந்த ஓமாக்கினியினிடத்திலே தானே பாய்ந்துசென்றது; உடனே தவத்தையுடைய அந்தக் கலைக்கோட்டுமுனிவனும் தசரதனை நோக்கி, "பூதத்தாற் கொணர்ந்து கொடுக்கப்பட்ட நல்ல அமிர்தம்போல் இனிய உணவை, உனக்கு உரிய மனைவிமார்களுக்குத் தகுதியான அம்முறைப்படியே கொடுப்பாயாக" என்று கூறினான். (10)

11. மாமுனி யருள்வழி மன்னர் மன்னவன்
றாமமென் சுரிகுழற் றொண்டைத் தூயவாய்க்
காமரொண் கௌசலை கரத்தி னோர்பகிர்
தாமுற வளித்தனன் சங்க மார்த்தெழ.

பத:—மா முனி அருள் வழி-சிறந்த கலைக்கோட்டுமுனிவன் கட்டளையிட்டருளியபடியே, மன்னர் மன்னவன்-அரசர்க்கரசனாகிய தசரத சக்கரவர்த்தி, தூமம் மென் சுரி குழல் தொண்டை தூய வாய் காமர் ஒண் கௌசலை-புகைபோற்கரிய மெல்லிய கடைகுழன்ற கூந்தலையும் கொவ்வைப்பழம்போற் சிவந்த தூய்மையான வாயையுமுடைய அழகிய ஒளி பொருந்திய கௌசல்யாதேவியின், கரத்தின்-கையில், ஓர் பகிர்-ஒருபாகத்தை சங்கம் தாம் உற ஆர்த்து எழ-சங்கவாத்தியங்கள் மிகுதியாக வொலிக்க, அளித்தனன்-கொடுத்தான்.

பொழி :—சிறந்த கலைக்கோட்டுமுனிவன் கட்டளையிட்டருளியபடியே அரசர்க்கரசனாகிய தசரத சக்கரவர்த்தி, புகைபோற்கரிய மெல்லிய கடைகுழன்ற கூந்தலையும் கொவ்வைப்பழம்போற் சிவந்த தூய்மையான வாயையுமுடைய அழகிய ஒளிபொருந்திய கௌசல்யாதேவியின் கையில் ஒரு பாகத்தைச் சங்கவாத்தியங்கள் மிகுதியாக ஒலிக்கக் கொடுத்தான். (11)

12. கைகயன் றனையைதன் கரத்து மம்முறைச்
செய்கையி னளித்தனன் றேவ ரார்த்தெழப்
பொய்கையு நதிகளும் பொழிலு மோதிமம்
வைகுறு கோசல மன்னர் மன்னனே.

பத :—(பின்பு), பொய்கையும் நதிகளும் பொழிலும்-குளங்களிலும் ஆறுகளிலும் சோலைகளிலும், ஓதிமம் வைகுறு-அன்னப்பறவைகள் தங்கப்பெற்ற, கோசலம்-(உத்தர) கோசலநாட்டையாளுகின்ற, மன்னர் மன்னன்-தசரதசக்கரவர்த்தி—, கைகயன் தனையைதன் கரத்தும்-கேகயதேசத்தரசனதுமகளாகிய கைகேயியின்கையிலும், அ முறை செய்கையின்-அந்த முறைமையாகிய செய்கையின்படியே—கௌசலைக்குக் கொடுத்தபடியே கையிலுள்ளதில் ஒருபாகத்தை, தேவர் ஆர்த்து எழ-தேவர்கள் (மகிழ்ச்சியால்) ஆரவாரஞ்செய்யும்படி, அளித்தனன்—.

பொழி :—பின்பு, குளங்களிலும் ஆறுகளிலும் சோலைகளிலும் அன்னப்பறவைகள் தங்கப்பெற்ற உத்தரகோசலநாட்டை ஆளுகின்ற அரசர்க்கரசனாகிய தசரத சக்கரவர்த்தி, கேகயதேசத்தரசனது மகளாகிய கைகேயியின் கையிலும் அந்த முறைமையாகிய செய்கையின்படியே—கௌசலைக்குக் கொடுத்தபடியே கையிலுள்ளதில் ஒருபாகத்தைத் தேவர்கள் மகிழ்ச்சியால் ஆரவாரஞ்செய்யும்படி அளித்தனன். (12)

13. நமித்திரர் நடுக்குறு நலங்கொண் மொய்ம்புடை
நிமித்திரு மரபுளான் முன்னர் நீர்மையின்
சுமித்திரைக் களித்தனன் சுரர்க்கு வேந்தினிச்
சமித்தமென் பகையெனத் தமரொ டார்ப்பவே.

பத :—நமித்திரர் நடுக்கு உறு நலம் கொள் மொய்ம்பு உடை-பகைவர்கள் (அச்சத்தால்) நடுக்கமடைதற்குக்காரணமான நன்மையைக்கொண்ட வலிமையையுடைய, நிமி திரு மரபு உளான்-நிமியென்னுஞ்சக்கரவர்த்தியின் சிறந்தவமிசத்திலேபிறந்துள்ளவனான தசரதன்—, சுரர்க்கு வேந்து இனி என் பகை சமித்தது என தமரொடு ஆர்ப்ப-தேவர்கட்கரசனான இந்திரன் இனிமேல் எனதுபகை யொழிந்த தென்று (மகிழ்ச்சிகொண்டு) தன்னினத்தவருடனே ஆரவாரிக்கும்படி, முன்னர் நீர்மையின்-முன் (இரண்டு பட்டமகிஷியர்க்கும்) கொடுத்தமுறைப்படியே கையிலிருந்த சுதையை, சுமித்திரைக்கு-சுமித்திராதேவிக்கு, அளித்தனன்—.

பொழி :—பகைவர்கள் அச்சத்தால் நடுக்கமடைதற்குக்காரணமான நன்மையைக்கொண்ட வலிமையையுடைய நிமி என்னும் சக்கரவர்த்தியின் சிறந்த வமிசத்திலே பிறந்துள்ளவனான தசரதன், தேவர்களுக்கு அரசனான இந்திரன் 'இனியேல் எனது பகை ஒழிந்தது' என்று மகிழ்ச்சிகொண்டு தன்னினத்தவருடனே ஆரவாரிக்கும்படி முன் இரண்டு தேவிமார்க்கும் கொடுத்தபடியே கையிலிருந்த சுதையைச் சுமித்திராதேவிக்கு அளித்தான். (13)

14. பின்னுமப் பெருந்தகை பிதிர்ந்து வீழ்ந்தது
தன்னையுஞ் சுமித்திரை தனக்கு நல்கினான்
ஒன்னலர்க் கிடமும்வே றுலகி னோங்கிய
மன்னுயிர் தமக்குநீள் வலமுந் துள்ளவே.

பத :—பின்னும்—, அ பெரு தகை-பெருமைவாய்ந்த அந்தச்சக்கரவர்த்தி, ஒன்னலர்க்கு-பகைவர்க்கு, இடமும்-இடப்பாகமும், வேறு உலகின் ஓங்கிய மன் உயிர் தமக்கு-(அவர்களினும்) வேறாகிப் பகைவர்களாக இராமல் உலகமெங்குஞ் சிறந்துள்ள நிலைபெற்ற பிராணிகட்கு, நீள்வலமும்-சிறந்த வலப்பாகமும், துள்ள-துடிக்கும்படி, பிதிர்ந்து வீழ்ந்தது தன்னையும்-(பகுத்துக் கொடுக்கும்போது தட்டிலே) சிந்திவீழ்ந்தவற்றையும், சுமித்திரை தனக்கு-சுமித்திராதேவிக்கு, நல்கினான்-கொடுத்தான்.

பொழி :—பின்னும் பெருமைவாய்ந்த அந்தச்சக்கரவர்த்தி, பகைவர்க்கு இடப்பாகமும், அவர்களினும் வேறாகிப் பகைவர்களாக இராமல் உலகமெங்குஞ் சிறந்துள்ள நிலைபெற்ற பிராணிகட்குச் சிறந்த வலப்பாகமும் துடிக்கும்படி பகுத்துக்கொடுக்கும்போது தட்டிலே சிந்திவீழ்ந்தவற்றையும் சுமித்திராதேவிக்குக் கொடுத்தான். (14)

15. வாம்பரி வேள்வியு மகாரை நல்குவ
தாம்புரை யாவுதி பிறவு மந்தணன்
ஓம்பிட முடிந்தபி னுலகு காவலன்
ஏம்பலோ டெழுந்தன னியாரு மேத்தவே.

பத :—வாம் பரி வேள்வியும்-தாவுகின்ற குதிரையைக்கொண்டு செய்கின்ற அசுவமேதத்தையும், மகாரை நல்குவது ஆம் புரை ஆவுதி பிறவும்-புத்திரரைத்தருவதற்கு இடமாகிய—புத்திரகாமயாகத்துக்கு உரிய ஓமங்கள் பிறவற்றையும், அந்தணன்-கலைக்கோட்டுமுனிவன், ஓம்பிட-நன்குசெய்ய, முடிந்த பின்-அந்தயாகங்கள் முடிந்தபின்பு, உலகு காவலன்-உலகமுழுவதையும் காத்தலில்வல்ல தசரதசக்கரவர்த்தி, யாரும் ஏத்த-யாவரும் துதிக்க, ஏம்பலோடு-மகிழ்ச்சியுடனே, எழுந்தனன்-(யாகசாலையை விட்டுப்) புறப்பட்டனன்.

பொழி :—தாவுகின்ற குதிரையைக்கொண்டு செய்கின்ற அசுவமேதத்தையும், புத்திரரைத்தருவதற்கு இடமாகிய—புத்திரகாமயாகத்திற்குஉரிய ஓமங்கள் பிறவற்றையும் கலைக்கோட்டுமுனிவன் நன்கு செய்ய அந்த யாகங்கள் முடிந்தபின்பு உலகமுழுவதையும் காத்தலில்வல்ல தசரத சக்கரவர்த்தி யாவரும் துதிக்க மகிழ்ச்சியுடனே யாகசாலையைவிட்டுப் புறப்பட்டான். (15)

16. முருடரு பல்லிய முழங்கி யார்த்தன
இருடரு முலகமு மிடரி னீங்கின
தெருடரு வேள்வியின் கடன்க டீர்ந்துழி
அருடரு மவையின்வந் தரச னெய்தினன்.

பத :—தெருள் தரு-(வேதங்களால்) தெரிவிக்கப்பட்டுள்ள, வேள்வியின் கடன்கள்-யாகத்திற்குஉரிய கடமைகள், தீர்ந்த உழி-நிறைவேறின பொழுது, முருடு அரு பல்இயம் முழங்கி ஆர்த்தன-மத்தளமும் அருமையான வேறுபலவாத்தியங்களும் மிகவும் பேரொலி செய்தன ; இருள் தரும் உலகமும்-(அரக்கர் கொடுமையால்) துன்பமடைந்துகிடக்கிற உலகத்தார் யாவரும், இடரின் நீங்கின-(தமது) துன்பம் நீங்கப்பெற்றனர் ; அரசன்-தசரதசக்கரவர்த்தி, அருள் தரும் அவையின் வந்து எய்தினன்-(யாவர்க்கும்) கருணைசெய்தற்கு இடமான சபாமண்டபத்தை வந்தடைந்தான்.

பொழி :—வேதங்களால் தெரிவிக்கப்பட்டுள்ள யாகத்திற்கு உரிய கடமைகள் நிறைவேறினபொழுது மத்தளமும் அருமையான வேறு பல வாத்தியங்களும் மிகவும் பேரொலி செய்தன ; அரக்கர் கொடுமையால் துன்பமடைந்து கிடக்கிற உலகத்தார் யாவரும் தமது துன்பம் நீங்கப்பெற்றனர் ; தசரத சக்கரவர்த்தி, யாவர்க்கும் கருணை செய்தற்கு இடமான சபாமண்டபத்தை வந்தடைந்தான். (16)

17. செய்ம்முறை கடன்முறை திறம்ப லின்றியே
மெய்ம்முறை கடவுளுக் கீந்து விண்ணுளோர்க்
கம்முறை யளித்துநீ டந்த ணாளர்க்குங்
கைம்முறை யளித்தனன் கனக மாரியே.

பத :—(சக்கரவர்த்தி), செய் முறை-செய்யவேண்டியகடமைகளை, கடன் முறை திறம்பல் இன்றி-அக்கடமைகளைக்கூறும் நூலுக்கு மாறுபாடில்லாமல், மெய் முறை கடவுளுக்கு ஈந்து-உண்மையான (தனது) குலதெய்வமாகிய திருமாலுக்கு அளித்து, விண்உளோர்க்கு அ முறை அளித்து-மற்றைத்தேவர்கட்கும் அந்நூலிற் கூறியபடியே கொடுக்கவேண்டிய ஹவிர்ப்பாகத்தைக் கொடுத்து யாகம்முடிந்தவுடன், நீடு அந்தணாளர்க்கும்-பெருமைபொருந்திய பிராமணர்கட்கும், கை-கைகளால், முறை-முறைப்படி, கனகம் மாரி-பொன்மழையை, வழங்கினன்-பொழிந்தான்.

பொழி:—சக்கரவர்த்தி செய்யவேண்டிய கடமைகளை, அக்கடமைகளைக் கூறும் நூலுக்கு மாறுபாடில்லாமல் உண்மையான தனது குலதெய்வமாகிய திருமாலுக்கு அளித்து, மற்றைத்தேவர்களுக்கும் அந்நூலிற் கூறியபடியே கொடுக்கவேண்டிய ஹவிர்ப்பாகத்தைக்கொடுத்து யாகம் முடிந்தவுடன் பெருமைபொருந்திய பிராமணர்களுக்கும் கைகளால் முறைப்படி பொன்னை மழைபொழிவதுபோலத் தக்ஷிணையாகக் கொடுத்தான். (17)

18. வேந்தர்கட் கரசொடு வெறுக்கை தேர்பரி
வாய்ந்தநற் றுகிலொடு வரிசைக் கேற்பன
ஈந்தனன் பல்லியந் துவைப்ப வேகிநீர்
தோய்ந்தனன் சரயுநற் றுறைக்க ணெய்தியே.

பத:—(தசரதன்) வேந்தர்கட்கு-அரசர்கட்கு, அரசொடு-அரசாட்சியுடனே, வெறுக்கை-செல்வமும், தேர்-இரதங்களும், பரி-குதிரைகளும், வாய்ந்த நல் துகிலொடு-அழகு அமைந்த சிறந்த ஆடைகளும் (என்கின்ற இவற்றுள்), வரிசைக்கு ஏற்பன-(அவரவர்) தகுதிக்குத் தக்கவற்றை, ஈந்தனன்-கொடுத்து, பல் இயம் துவைப்ப-பலவகை வாச்சியங்களும் ஒலிப்ப, ஏகி-சென்று, சரயு நல் துறைக்கண் எய்தி-சரயூநதியினது நல்லதுறையிலே சேர்ந்து, நீர் தோய்ந்தனன்-நீராடினான், அவபிருதஸ்நானம் செய்தான்.

பொழி:—தசரதன், அரசர்களுக்கு அரசாட்சியுடனே செல்வமும் இரதங்களும் குதிரைகளும் அழகுஅமைந்த சிறந்த ஆடைகளும் என்கின்ற இவற்றுள் அவரவர் தகுதிக்குத் தக்கவற்றைக்கொடுத்துப் பலவகை வாத்தியங்களும் ஒலிப்பச்சென்று சரயூநதியினது நல்ல துறையிலேசேர்ந்து அவபிருதஸ்நானம் செய்தான். (18)

19. முரசினங் கறங்கிட முத்த வெண்குடை
விரசிமே னிழற்றிட வேந்தர் சூழ்தர
அரசவை யடைந்துழி யயனு நாணுற
உரைசெறி முனிவன்றாள் வணங்கி யோங்கினான்.

பத:—(சக்கரவர்த்தி), முரசு இனம் கறங்கிட-பேரிகைகளின்தொகுதி ஒலிக்கவும், முத்தம் வெண்குடை மேல் விரசி நிழற்றிட-முத்துக்களாலாகிய வெள்ளைக்குடை மேலேநெருங்கி நிழலைச்செய்யவும், வேந்தர் சூழ்தர-அரசர் பலரும் (தன்னைச்) சூழ்ந்து வரவும், அரசு அவை அடைந்த உழி-இராச சபையிற் சேர்ந்தபொழுது, அயனும் நாணுற உரைசெறி முனிவன் தாள் வணங்கி-பிரமதேவனும் வெட்கமடையும்படி (வேத) வாக்கியங்கள் நிறைந்த வசிட்டமுனிவனுடைய திருவடிகளை வணங்கி, ஓங்கினான்-ஆசிபெற்றுச் சிறந்தான்.

பொழி :—சக்கரவர்த்தி பேரிகைகளின் தொகுதி ஒலிக்கவும், முத்துக்க ளாலாகிய வெண்குடை மேலே நெருங்கி நிழலைச்செய்யவும் வேந்தர் பலரும் தன்னைச் சூழ்ந்துவரவும் இராசசபையிற் சேர்ந்தபொழுது பிரமதேவனும் வெட்கமடையும்படி வேதவாக்கியங்கள் நிறைந்த வசிஷ்டமுனிவனுடைய திருவடிகளை வணங்கி ஆசிபெற்றுச் சிறந்தான். (19)

20. அரியநற் றவமுடை வசிட்ட னாணையால்
இரலைநற் சிருங்கமா விறைவன் றடொழா
உரியபற் பலவுரை பயிற்றி யுய்ந்தனன்
பெரியநற் றவவினிப் பெறுவ தியாதென்றான்.

பத :—(பின்பு தசரதன்), அரிய நல் தவம் உடை வசிட்டன் ஆணையால்-அரிய சிறந்த தவத்தையுடைய வசிட்டமுனிவனது கட்டளையின்படி, இரலை நல் சிருங்கம் மா இறைவன் தாள் தொழா-கலைமானின் அழகிய கொம்பை(த் தலையிலே)யுடைய சிறந்தமுனிவனுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி, உரிய பல்பல உரை பயிற்றி-(சொல்லுதற்கு) உரிய மிகப்பலவான இனியசொற்களைச் சொல்லி, 'பெரிய நல்தவ-சிறந்த நல்ல தவத்தையுடைய வனே, உய்ந்தனன்-(அடியனேன் உனது கருணையினால்) ஈடேறினேன்; இனி பெறுவது யாது-(இதைக்காட்டிலும் யான்) இனிமேல் பெறத்தக்கபேறு யாதுஉளது ?' என்றான்-என்றுகூறினான்.

பொழி :—பின்பு தசரதன் அரிய சிறந்த தவத்தையுடைய வசிஷ்ட முனிவனது கட்டளையின்படி கலைமானின் அழகிய கொம்பைத் தலையிலே உடைய முனிவனுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கிச் சொல்லுவதற்கு உரிய மிகப்பலவான இனிய சொற்களைச் சொல்லி, "சிறந்த நல்ல தவத்தை யுடையவனே, அடியேன் உனது கருணையினால் ஈடேறினேன்; இதைக் காட்டிலும் யான் இனிமேல் பெறத்தக்க பேறு யாது உளது?" என்று கூறி னான். (20)

[கலைக்கோட்டுமுனிவர் தசரதனை வாழ்த்திப் பத்தினியோடும் தம்முடன் வந்த முனிவர்களோடும் சென்றார்; தசரதன் சுகமாக இருந்தான்; பன்னிரண்டு மாதங்கள் சென்றன; தேவிமார்களுக்குப் பிரசவகாலம் வந்தது.]

21. ஆயிடைப் பருவம்வந் தடைந்த வெல்லையின்
மாயிரு புவிமகண் மகிழ்வி னோங்கிட
வேய்புனர் பூசமும் விண்ணு ளோர்புகழ்
தூயகர்க் கடகமு மெழுந்து துள்ளவே.

22. சித்தரு மியக்கருந் தெரிவை மார்களும்
வித்தக முனிவரும் விண்ணு ளோர்களும்
நித்தரு முறைமுறை நெருங்கி யார்ப்புறத்
தத்துற லொழிந்துநீ டறும மோங்கவே.

23. ஒருபக லுலகெலா முதரத் துட்பொதிந்
தருமறைக் குணர்வரு மவனை யஞ்சனக்
கருமுகிற் கொழுந்தெழில் காட்டுஞ் சோதியைத்
திருவுறப் பயந்தன டிறங்கொள் கோசலை.

பத:—ஆ இடை-அவ்விடத்து (தேவிமார்களுக்கு), பருவம் வந்து அடைந்த எல்லையில்-பிரசவகாலம் வந்தடைந்தபொழுது, மா இரு புவி மகள் மகிழ்வின் ஓங்கிட-மிகப்பெரிய பூமிதேவி மகிழ்ச்சியாற் பூரிக்கவும், வேய்புனர் பூசமும் விண்ணுளோர் புகழ் தூய கர்க்கடகமும் எழுந்து துள்ள-வேயென்று சொல்லப்படும் புனர்வசுநட்சத்திரமும் தேவர்கள்புகழ்கின்ற பரிசுத்தமான கர்க்கடலக்கினமும் குதித்துத்துள்ளவும்,—சித்தரும் இயக்கரும் தெரிவைமார்களும் வித்தகம் முனிவரும் விண்ணுளோர்களும் நித்தரும் முறைமுறைநெருங்கி ஆர்ப்புஉற-சித்தர்களும் இயக்கர்களும் (அவர்களுடைய) மனைவிமார்களும் தத்துவஞானிகளான முனிவர்களும் தேவர்களும் நித்திய சூரிகளும் வரிசைவரிசையாய்நெருங்கி மகிழ்ச்சியினு லாரவாரிக்கவும், நீள் தருமம் தத்துறல் ஒழிந்து ஓங்க-சிறந்ததருமதேவதை மனத்தடுமாற்றம்நீங்கி மகிழ்ச்சிமிகவும்,—திறம் கொள்கோசலை-நற்குணங்கள்நிறைந்த கௌசல்யா தேவி, ஒருபகல் உலகு எலாம் உதரத்துள்பொதிந்து அருமறைக்கு உணர்வு அரும் அவனை-ஒருகாலத்தில், பிரளயத்தில் எல்லாவுலகங்களையும் (தனது) திருவயிற்றினுள்ளே மறைத்துவைத்து அருமையான வேதங்களாலும் அறிதற்கு அருமையானவனும், அஞ்சனம் கரு முகில் கொழுந்து எழில் காட்டும் சோதியை-மை கரியமேகம் என்னும் இவற்றின் அழகை (த் தன்னிடத்து) க்காட்டுகின்ற தேஜோரூபியுமான திருமாலை, திரு உற-யாவர்க்கும் எல்லாச் செல்வங்களும் மிகும்படி, பயந்தனள்-பெற்றாள்.

பொழி:—தேவிமார்களுக்குப் பிரசவகாலம் வந்தடைந்தபொழுது மிகப்பெரிய பூமிதேவி மகிழ்ச்சியாற் பூரிக்கவும்; வேய் என்று சொல்லப்படும் புனர்வசுநட்சத்திரமும் தேவர்கள் புகழ்கின்ற பரிசுத்தமான கர்க்கடகலக்கினமும் குதித்துத்துள்ளவும்; சித்தர்களும் இயக்கர்களும் அவர்களுடைய மனைவிமார்களும் தத்துவ ஞானிகளான முனிவர்களும் தேவர்களும் நித்திய சூரிகளும் வரிசை வரிசையாய் நெருங்கி மகிழ்ச்சியினால் ஆரவாரிக்கவும்; சிறந்த தருமதேவதை மனத்தடுமாற்றம் நீங்கி மகிழ்ச்சிமிகவும் நற்குணங்கள் நிறைந்த கௌசல்யாதேவி, பிரளயத்தில் எல்லாவுலகங்களையும் தனது திருவயிற்றினுள்ளே மறைத்துவைத்தவனும், அருமையான வேதங்களாலும் அறிதற்கு அருமையானவனும், மை கரியமேகம் என்னும் இவற்றின் அழகைத் தன்னிடத்துக்காட்டுகின்ற சோதிரூபியுமான திருமாலை யாவர்க்கும் எல்லாச் செல்வங்களும் மிகும்படி பெற்றாள். (21-23)

24. ஆசையும் விசும்புநின் றமர ரார்த்தெழ
வாசவன் முதலினோர் வணங்கி வாழ்த்துறப்
பூசமு மீனமும் பொலிய நல்கினாள்
மாசறு கேகயன் மாது மைந்தனை.

பத :—ஆசையும்-எல்லாத்திக்குக்களிலும், விசும்பும்-ஆகாயத்திலும், நின்று-வந்து நின்று, அமரர்-தேவர்கள், ஆர்த்து எழ-ஆரவாரித்துப் பொங்கவும், வாசவன் முதலினோர்-இந்திரன் முதலான தேவர்கள், வணங்கி-தொழுது, வாழ்த்துற-வாழ்த்தவும், பூசமும் மீனமும் பொலிய-புஷ்யநட்சத்திரமும் மீனலக்கினமும் விளங்கவும், மாசு அறு கேகயன் மாது-குற்றமில்லாத கேகயராசன் மகளான கைகேயி, மைந்தனை நல்கினாள்-புத்திரனைப்பெற்றாள்.

பொழி :—எல்லாத்திக்குக்களிலும் ஆகாயத்திலும் வந்து நின்று தேவர்கள் ஆரவாரித்துப் பொங்கவும், இந்திரன் முதலான தேவர்கள் தொழுது வாழ்த்தவும், புஷ்யநக்ஷத்திரமும் மீனலக்கினமும் விளங்கவும் குற்றமில்லாத கேகயராசன் மகளான கைகேயி புத்திரனைப் பெற்றாள். (24)

25. தளையவிழ் தருவுடைச் சயில கோபனுங்
கிளையுமந் தரமிசைக் கெழுமி யார்த்தெழ
அளைபுகு மரவினோ டலவன் வாழ்வுற
இளையவற் பயந்தன ளிளைய மென்கொடி.

பத :—தளை அவிழ் தரு உடை-(அரும்புகள்) முறுக்குவிரிந்துமலர்கின்ற (கற்பக) விருட்சங்களையுடைய, சயிலகோபனும்-மலைகளைக்கோபித்துச் சிறகறுத்த இந்திரனும், கிளையும்-(அவனது) சுற்றமான மற்றைத் தேவர்களும், அந்தரம் மிசை கெழுமி-ஆகாயத்திலே நெருங்கி, ஆர்த்து எழ-ஆரவாரிக்கவும், அளை புகும் அரவினோடு-புற்றிலே நுழையும் இயல்புள்ள பாம்புடனே—ஆயிலியநட்சத்திரத்துடனே, அலவன்-நண்டும்—கர்க்கடகலக்கினமும், வாழ்வு உற-வாழ்வையடையவும், இளைய மென்கொடி-இளையவளான மென்மை வாய்ந்த பூங்கொடிபோன்ற சுமித்திரை, இளையவன் பயந்தனள்-இளைய குமாரனைப்பெற்றாள்.

பொழி :—அரும்புகள் முறுக்குவிரிந்து மலர்கின்ற கற்பகவிருட்சங்களையுடைய மலைகளைக் கோபித்துச் சிறகறுத்த இந்திரனும் அவனது சுற்றமான மற்றைத்தேவர்களும் ஆகாயத்திலே நெருங்கி ஆரவாரிக்கவும், புற்றிலே நுழையும் இயல்புள்ள பாம்புடனே—ஆயிலியநக்ஷத்திரத்துடனே நண்டும்—கர்க்கடக லக்கினமும் வாழ்வையடையவும் இளையவளான மென்மைவாய்ந்த பூங்கொடிபோன்ற சுமித்திரை இளையகுமாரனைப் பெற்றாள். (25)

26. படங்கிளர் பலதலைப் பாந்த ளேந்துபார்
நடங்கிளர் தரமறை நவில நாடகம்
மடங்கலு மகமுமே வாழ்வி னோங்கிட
விடங்கிளர் விழியினாள் மீட்டு மீன்றனள்.

பத :—படம் கிளர்-படம் விளங்குகின்ற, பல தலை-பல தலைகளையுடைய, பாந்தள்-ஆதிசேஷன், எந்து-தாங்குகின்ற, பார்-பூமிதேவி, நடம் கிளர்தர-ஆனந்தக் கூத்தாடவும், மறை-வேதங்கள், நாடகம் நவில-நடனஞ் செய்யவும், மடங்கலும்-சிங்கராசியும், மகமும்-மகநட்சத்திரமும், வாழ்வின் ஓங்கிட-(உயர்ந்து) வாழ்வுபெறவும், விடம் கிளர் விழியினாள்-விஷம்போல விளங்குகின்ற கண்களையுடைய அச்சுமித்திரை, மீட்டும் ஈன்றனள்-மறுபடியும் (ஒரு புத்திரனைப்) பெற்றாள்.

பொழி :—படம்விளங்குகின்ற பலதலைகளையுடைய ஆதிசேஷன் தாங்குகின்ற பூமிதேவி ஆனந்தக்கூத்தாடவும், வேதங்கள் நடனஞ்செய்யவும் சிங்கராசியும் மகநட்சத்திரமும் உயர்ந்து வாழ்வுபெறவும் விஷம்போல விளங்குகின்ற கண்களை உடைய அந்தச்சுமித்திரை மறுபடியும் ஒரு புத்திரனைப் பெற்றாள். (26)

27. ஆடின ரரம்பைய ரமுத வேழிசை
பாடினர் கின்னரர் துவைத்த பல்லியம்
வீடின ரரக்கரென் றுவக்கும் விம்மலால்
ஓடின ருலவின ரும்பர் முற்றுமே.

பத :—(அப்போது) அரக்கர் வீடினர் என்று உவக்கும் விம்மலால்-'அரக்கர்கள் அழிந்தார்கள்' என்று மகிழ்கிற பூரிப்பினால், அரம்பையர்-தேவமாதர்கள்,ஆடினர்-(வானத்திற்) கூத்தாடினார்கள்; கின்னரர்-கின்னரர்கள் அமுதம் ஏழ் இசை-அமிர்தம்போலினிய சப்தசுரங்களை, பாடினர்-பாடினார்கள்; பல்இயம்-பல வாத்தியங்கள், துவைத்த-ஒலித்தன; உம்பர்-தேவர்கள், முற்றும் ஓடினர் உலவினர்-எங்கும் ஓடியுலாவினார்கள்.

பொழி :—அப்போது 'அரக்கர்கள் அழிந்தார்கள்' என்று மகிழ்கிற பூரிப்பினால் தேவமாதர்கள் வானத்திற் கூத்தாடினார்கள்; கின்னரர்கள் அமிர்தம்போல் இனிய சப்தசுரங்களைப் பாடினார்கள்; பலவாத்தியங்கள் ஒலித்தன; தேவர்கள் எங்கும் ஓடி உலாவினார்கள். (27)

28. ஓடின ரரசன்மாட் டுவகை கூறிநின்
றாடினர் சிலதிய ரந்த ணாளர்கள்
கூடினர் நாளொடு கோளு நின்றமை
நாடின ருலகினி நவையின் றென்றனர்.

பத :—சிலதியர்-(தேவிமாரின்) தோழியர்கள், அரசன்மாட்டு-தசரத னிடத்து ஓடினர்-(உடனே) விரைந்துசென்று, உவகைகூறி-(புத்திரர்பிறந்த) சந்தோஷசமாசாரத்தைச் சொல்லி, நின்று ஆடினர்-ஆனந்தக்கூத்தாடி நின்ருர்கள்; அந்தணாளர்கள் (சோதிடம்கூறும்) பிராமணர்கள், கூடினர்-வந்து, நாளொடு-நட்சத்திரங்களும், கோளும்-கிரகங்களும், நின்றமை-நின்ற நிலைமைகளை, நாடினர்-ஆராய்ந்துபார்த்து, இனி உலகு நவை இன்று என்றனர்-'இனிமேல் உலகம் தீமையில்லாததாம்' என்று சொன்ஞர்கள்.

பொழி :—தேவிமார்களின் தோழியர்கள் தசரதனிடம் விரைந்து சென்று புத்திரர் பிறந்த சந்தோஷ சமாசாரத்தைச் சொல்லி ஆனந்தக் கூத்தாடி நின்ருர்கள். சோதிடம் கூறும் பிராமணர்கள் வந்து நட்சத்திரங் களும் கிரகங்களும் நின்ற நிலைமைகளை ஆராய்ந்துபார்த்து "இனிமேல் உலகம் தீமை இல்லாததாம்" என்று சொன்ஞர்கள். (28)

29. மாமுனி தன்ஞெடு மன்னர் மன்னவன்
ஏமுறப் புனல்படீஇ வித்தொ டின்பொருள்
தாமுற வழங்கிவெண் சங்க மார்ப்புறக்
கோமகார் திருமுகங் குறுகி நோக்கிஞன்.

பத :—(குமாரர்கள்தோன்றிய செய்தியைக் கேட்டவுடனே), மன்னர் மன்னவன்-அரசர்க்கரசஞகிய தசரதன், எம் உற புனல் படீஇ-இன்பம் மிக (ச்சரயூநதியின்) தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து, வித்தொடு இன்பொருள் தாம் உற வழங்கி-விதைகளையும் இனிய பொருளையும் மிகுதியாகத் தானஞ் செய்து, வெண் சங்கம் ஆர்ப்பு உற மா முனிதன் ஒடு குறுகி-வெண்மையான மங்கலச் சங்கங்கள் முழங்கப் பெருமைபொருந்திய வசிட்டமுனிவ ஞுடனே அருகிற்போய், கோமகார் திருமுகம் நோக்கிஞன்-சிறந்த குமாரர்க ளுடைய அழகிய முகங்களைப் பார்த்தான்.

பொழி :—குமாரர்கள் தோன்றிய செய்தியைக் கேட்டவுடனே அரசர்க் கரசஞகிய தசரதன் இன்பம் மிகச் சரயூநதியின் தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து, விதைகளையும் இனிய பொருளையும் மிகுதியாகத் தானஞ்செய்து, வெண்மையான மங்கலச்சங்கங்கள் முழங்கப் பெருமைபொருந்திய வசிஷ்ட முனிவஞுடனே அருகிற்போய்ச் சிறந்த் குமாரர்களுடைய அழகிய முகங் களைப் பார்த்தான். (29)

30. ஆர்த்தனர் முறைமுறை யன்பி ஞுடல்
போர்த்தன புளகம்வேர் பொடித்த நீணிதி
தூர்த்தன ரெதிரெதிர் சொல்லி ஞர்செலாந்
தீர்த்தனென் றறிந்தோ வவர்தஞ் சிந்தையே.

பத :—(சக்கரவர்த்திக்குப் புத்திரர்கள் பிறந்தசெய்தியை உணர்ந்த நகரத்துச்சனங்களெல்லோரும்), முறைமுறை-வரிசைவரிசையாக, அன்பினன்-அன்பின்மிகுதியால், ஆர்த்தனர்-ஆரவாரித்தார்கள்; உடல்-அவர்களுடம்பை, புளகம் போர்த்தன-புளகங்கள் மறைத்தன; வேர் பொடித்த-வியர்வைநீர்த்துளிகள் அரும்பின; எதிர் எதிர்-எதிரிலே (வந்து), சொல்லினர்க்கு எலாம்-(இந்தச்சுபசெய்தியைச்) சொன்னவர்களுக்கெல்லாம், நீள் நிதி தூர்த்தனர்-மிகுந்ததிரவியத்தைச் சொரிந்தார்கள்; (இங்ஙனம் அவர்கள் செய்ததற்குக்காரணம்), அவர்தம் சிந்தை-அவர்களது மனம், தீர்த்தன் என்று அறிந்ததோ-பரிசுத்தனை திருமாலே (குமாரர்களாக அவதரித்தான்) என்று அறிந்துகொண்டமைபோலும்.

பொழி :—சக்கரவர்த்திக்குப் புத்திரர்கள் பிறந்த செய்தியை உணர்ந்த நகரத்துச் சனங்கள் எல்லோரும் வரிசை வரிசையாக அன்பின் மிகுதியால் ஆரவாரித்தார்கள்; அவர்களுடம்பைப் புளகங்கள் போர்த்தன; வியர்வைநீர்த் துளிகள் அரும்பின; எதிரிலேவந்து இந்தச் சுபசெய்தியைச் சொன்னவர்களுக்கெல்லாம் மிகுந்த திரவியத்தைச் சொரிந்தார்கள். இங்ஙனம் அவர்கள் செய்ததற்குக் காரணம் அவர்களது மனம் பரிசுத்தனை திருமாலே குமாரர்களாக அவதரித்தான் என்று அறிந்துகொண்டமைபோலும். (30)

31. இத்தகை மாநக ரீரறு நாளும்
சித்த முறுங்களி யோடு சிறந்தே
தத்தமை யொன்று முணர்ந்தில தாவா
மெய்த்தவ னுமம் விதிப்ப மதித்தான்.

பத :—இ தகை-இவ்வாறு, மா நகர்-சிறந்த அப்பட்டணத்துச்சனங்கள், ஈர் அறு நாளும்-பன்னிரண்டுநாளளவும், சித்தம் உறும் களியோடு-மனத்தில் மிக்க ஆனந்தத்துடனே, சிறந்து-சிறப்புற்று, தத்தமை ஒன்றும் உணர்ந்தில-(பரவசப்பட்டதனால்) தங்கள் தங்களைச் சிறிதும் அறிந்தார்களில்லை; (பதின்மூன்றும்நாளில்), தாவா மெய் தவன்-அழியாத உண்மையான தவத்தையுடைய வசிட்டன், நாமம் விதிப்ப-(அக்குமாரர்களுக்குப்) பேரிடுதற்கு, மதித்தான்-ஆலோசித்தான்.

பொழி :—இவ்வாறு சிறந்த அப்பட்டணத்து ஜனங்கள் பன்னிரண்டு நாளளவும் மனத்தில் மிக்க ஆனந்தத்துடனே சிறப்புற்றுப் பரவசப்பட்டதனால் தங்கள் தங்களைச் சிறிதும் அறிந்தார்களில்லை; பதின்மூன்றும்நாளில் அழியாத உண்மையான தவத்தையுடைய வசிஷ்டன் அந்தக்குமாரர்களுக்குப் பேரிடுதற்கு ஆலோசித்தான். (31)

32. கராமலை யத்தளர் கைக்கரி யெய்த்தே
அராவணை யிற்றுயில் வோயென வந்நாள்
விராவி யளித்தருண் மெய்ப்பொரு ளுக்கே
இராம னெனப்பெய ரீந்தன னன்றே.

பத:—(வசிஷ்டன்) கரா மலைய தளர் கை கரி-முதலைபோர்செய்தலால் தளர்ச்சியடைந்த துதிக்கையையுடைய கஜேந்திரன் என்னும் யானையானது, எய்த்து-(கடவுளின்தன்மையை) அறிந்து, அரா அணையில் துயில்வோய் என-'ஆதிசேடனாகிய சயனத்திற் பள்ளிகொண்டருள்கின்ற ஆதிமூலமே,' என்று அழைக்க, அ நாள்-அப்பொழுதே, விராவி-(அங்கு) வந்து, அளித்தருள்-(அதனைக்) காத்தருளின, மெய் பொருளுக்கு-உண்மைப்பொருளாகிய ஸ்ரீமந் நாராயணனுக்கு, இராமன் என பெயர் ஈந்தனன்-இராமன் என்று பெயர் வைத்தான்.

பொழி:—வசிஷ்டன் முதலை போர் செய்தலால் தளர்ச்சியடைந்த துதிக்கையையுடைய கஜேந்திரன் என்னும் யானையானது கடவுளின் தன்மையை அறிந்து "ஆதிசேஷனாகிய சயனத்திற் பள்ளிகொண்டருள் கின்ற ஆதிமூலமே," என்று அழைக்க, அப்பொழுதே அங்கு வந்து அதனைக் காத்தருளின உண்மைப்பொருளாகிய ஸ்ரீமந்நாராயணனுக்கு இராமன் என்று பெயர் வைத்தான். (32)

33. கரதல முற்றொளிர் நெல்லி கடுப்ப
விரத மறைப்பொருண் மெய்ந்நெறி கண்ட
வரத னுதித்திடு மற்றைய வொளியைப்
பரதனெனப் பெயர் பன்னின னன்றே.

பத:—கரதலம் உற்று ஒளிர் நெல்லி கடுப்ப-கையினிடத்திற்பொருந்தி விளங்குகின்ற நெல்லிப்பழத்தைப்போல, விரதம் மறை பொருள் மெய் நெறி கண்ட-(பலவகை) விரதங்களைக்கூறுகின்ற வேதங்களின் உண்மைப்பொருளை (ஐயந்திரிபற நன்கு) அறிந்த, வரதன்-(தன் தவவலிமையால் வேண்டுவார்க்கு வேண்டிய) வரங்களைக் கொடுக்கவல்ல வசிட்டன், உதித்திடும் மற்றைய ஒளியை-(இராமனுக்குப்) பின் பிறந்த சோதிமயமான குழந்தையை, பரதன் என பெயர் பன்னினன்-பரதன் என்று பெயரிட்டழைத்தான்;

பொழி:—கையினிடத்திற்பொருந்தி விளங்குகின்ற நெல்லிப்பழத்தைப் போலப் பலவகைவிரதங்களைக் கூறுகின்ற வேதங்களின் உண்மைப்பொருளை ஐயந்திரிபற நன்கு அறிந்தவனும், தனது தவவலிமையால் வேண்டுவார்க்கு வேண்டிய வரங்களைக் கொடுக்கவல்லவனுமாகிய வசிஷ்டன் இராமனுக்குப் பின் பிறந்த சோதிமயமான குழந்தையைப் பரதன் என்று பெயரிட்டு அழைத்தான்; (33)

34. உலக்குநர் வஞ்சக ரும்பரு முய்ந்தார்
நிலக்கொடி யுந்துயர் நீத்தன ளிந்த
விலக்கரு மொய்ம்பின் விளங்கொளி நாமம்
இலக்குவ னென்ன விசைத்தன னன்றே.

பத:—(இக்குழந்தை பிறந்ததனால்), வஞ்சகர் உலக்குநர்-வஞ்சகர்களாகிய இராக்கதர்கள் அழிவர்கள்; (அதனால்), உம்பரும் உய்ந்தார்-தேவர்களும் பிழைத்தார்கள்; நிலம் கொடியும் துயர் நீத்தனள்-பூமிதேவியும் துன்பமொழிந்தாள்; விலக்கு அரு மொய்ம்பின் இந்த விளங்கு ஒளி நாமம்-(எவராலும்) விலக்குதற்கு முடியாத வலிமையையுடைய விளங்குகின்ற சோதிமயமான இம் மகவுக்குப் பெயர், இலக்குவன்-லக்ஷ்மணன் என்பதாம், என்ன இசைத்தனன்-என்று கூறினான்;

பொழி:—இக்குழந்தை பிறந்ததனால் வஞ்சகர்களாகிய இராக்கதர்கள் அழிவார்கள்; அதனால் தேவர்களும் பிழைத்தார்கள்; பூமிதேவியும் துன்பம் ஒழிந்தாள்; எவராலும் விலக்குதற்குமுடியாத வலிமையையுடைய விளங்குகின்ற சோதிமயமான இம்மகவுக்குப் பெயர் லக்ஷ்மணன் என்பதாம் என்று சொன்னான்; (34)

35. முத்துருக் கொண்டுசெம் முளரிய லர்ந்தால்
ஒத்திருக் குமெழி லுடையவிவ் வொளியால்
எத்திருக் குங்கெடு மென்பதை யெண்ணிச்
சத்துருக் கன்னெனச் சாத்தின னாமம்.

பத:—'முத்து-முத்துக்கள், உரு கொண்டு-(ஒருகுழந்தை) வடிவத்தையெடுத்துக்கொண்டு, செம் முளரி அலர்ந்தால்-செந்தாமரைமலர்கள் மலரப்பெற்றால், (அதனை), ஒத்திருக்கும்-ஒத்திருக்கின்ற, எழில் உடைய-அழகையுடைய, இ ஒளியால்-இந்தச் சோதிசொரூபத்தால், எ திருக்கும் கெடும்-எல்லாப்பகைகளும் ஒழியும்,' என்பதை—, எண்ணி-ஆலோசித்தறிந்து, சத்துருக்கன் என நாமம் சாத்தினன்-சத்துருக்கினன் என்று பேரிட்டான்.

பொழி:—'முத்துக்கள் ஒரு குழந்தை வடிவத்தை எடுத்துக்கொண்டு செந்தாமரைமலர்கள் மலரப்பெற்றால் அதனை ஒத்திருக்கும் அழகை உடைய இந்தச் சோதிசொரூபத்தால் எல்லாப் பகைகளும் ஒழியும்' என்பதை ஆலோசித்தறிந்து சத்துருக்கினன் என்று பெயரிட்டான். (35)

36. பொய்வழி யின்முனி புகறரு மறையால்
இவ்வழி பெயர்க ளிசைத்துழி யிறைவன்
கைவழி நிதியெனு நதிகலை மறையோர்
மெய்வழி யுவரி நிறைத்தன மென்மேல்.

பத:—பொய் வழி இல் முனி-பொய்யானவழியிற் செல்லாத வசிட்ட முனிவன், புகல்தரு மறையால்-(சிறப்பித்துச்) சொல்லப்படுகிற வேதமந்திரங்களைக் கொண்டு, இ வழி பெயர்கள் இசைத்த உழி-இவ்வாறு பேர்களை யிட்டருளினபோது, இறைவன் கை வழி நிதி எனும் நதி-சக்கரவர்த்தி யினுடைய கைகளினின்று பெருகின திரவியங்களாகிய ஆறுகள், கலைமறை யோர் மெய் வழி உவரி-வேதசாஸ்திரங்களைக்கற்ற பிராமணர்களின் மெய்ப் பொருள் நிறைந்த மனமாகிய கடலை, மெல் மேல் நிறைத்தன-மிகுதியாக நிரப்பின.

பொழி:—பொய்யானவழியிற் செல்லாத வசிஷ்டமுனிவன் சிறப்பித் துச் சொல்லப்படுகின்ற வேதமந்திரங்களைக்கொண்டு இவ்வாறு பெயர்களை யிட்டருளினபோது சக்கரவர்த்தியினுடைய கைகளினின்று பெருகின திரவியங்களாகிய ஆறுகள், வேதசாஸ்திரங்களைக் கற்ற பிராமணர்களின் மெய்ப்பொருள்நிறைந்த மனமாகிய சமுத்திரத்தை மிகுதியாக நிரப்பின. (36)

37. காவியு மொளிர்தரு கமலமு மெனவே
ஓவிய வெழிலுடை யொருவனை யலதோர்
ஆவியு முடலமு மிலதென வருளின்
மேவின னுலகுடை வேந்தர்தம் வேந்தன்.

பத:—காவியும் ஒளிர்தரு கமலமும் எனவே-நீலோற்பல மலர்களும் (அவற்றினிடையே விளங்குகின்ற செந்தாமரைமலர்களுமென்று சொல் லும்படியாக, ஓவியம் எழில் உடை-சித்திரித்ததுபோன்ற அழகையுடைய, ஒருவனை அலது-ஒப்பற்ற ஸ்ரீராமபிரானையல்லாமல், ஓர் ஆவியும் உடலமும் இலது என-(தனக்கு) ஒருயிரும் உடம்பும் வேறில்லையென்னும்படி, உலகு உடை வேந்தர்தம் வேந்தன்-உலக முழுவதையும் தனது ஆளுகையிலுடைய தசரத சக்கரவர்த்தி, அருளின் மேவினன்-கருணையோடு வாழ்ந்துவரலானான்.

பொழி:—நீலோற்பலமலர்களும் அவற்றினிடையே விளங்குகின்ற செந்தாமரைமலர்களும் என்று சொல்லும்படியாகச் சித்திரித்ததுபோன்ற அழகையுடைய ஒப்பற்ற ஸ்ரீராமபிரானை அல்லாமல் தனக்கு ஒருயிரும் உடம்பும் வேறு இல்லை என்னும்படி உலகமுழுவதையும் தனது ஆளுகையி லுடைய தசரதசக்கரவர்த்தி கருணையோடு வாழ்ந்து வரலானான். (37)

[இராஜகுமாரர்களுக்கு உரிய காலங்களில் சௌளம், உப நயனம் முதலியன செய்விக்கப்பட்டன. வசிஷ்டமுனி வரின் உபதேசத்தால் இராமன் முதலிய நான்கு குமாரர் களும் வித்தைகளில் வல்லவர்களானார்கள்.]

## (3) குகனும் பரதனும்.

[ தசரத சக்கரவர்த்தி, தமது மூத்த குமாரனாகிய ஸ்ரீராமனைக் கௌசிகரிடம் ஒப்படைத்துச் சீதாராமனாகக் கண்டதனால் பெருமகிழ்வுற்று, அவனைப் பட்டாபிராமனாகவும் பார்க்க விரும்பினார்; குலகுருவாகிய வசிஷ்டமுனிவர், சுமந்திரர் முதலான மந்திரிமார், குடிமக்கள் ஆகியவர்களிடம் தமது கருத்தை வெளியிட்டார். எல்லாரும் ஒரு மனதாக விரும்பியபடி ஸ்ரீராமனுக்கு முடிசூட்ட நாள் குறிக்கப்பட்டது. நகரம் அலங்கரிக்கப்படுவதைக்கண்டு செய்தியைத் தெரிந்துகொண்ட கூனி என்னும் மந்தரையால் கலைக்கப்பட்ட கைகேயி, தன்னிடம் வந்த சக்கரவர்த்தியிடம் பெற்ற வரங்களில் ஒன்றால் இராமனைப் பதினான்கு வருஷங்கள் வனத்திலே வசிக்குமாறு ஏவினாள். மிக மகிழ்ச்சிகொண்டவனாகிய இராமன் தாயான கௌசலை, சுமித்திரை முதலானவர்களிடம் விடைபெற்று இலக்குவன், சீதை என்ற இருவருடன் புறப்பட்டான்; கங்கையைக் குகன் துணையால் கடந்து, பரத்துவாஜமுனிவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுச் சித்திரகூட பருவதத்தில் வசிக்கலானான். இராமன் வனத்திற்குச் சென்ற செய்தியை உணர்ந்து தசரதன் விண்ணுலகமேக, வசிஷ்டமுனிவரால் கேகயதேசத்திலிருந்த பரதன் வரவழைக்கப்பட்டான். அயோத்தியை அடைந்த பரதன் உண்மையை உணர்ந்து தாங்கொணாத் துன்பத்தை அடைந்து தந்தைக்குச் செய்யவேண்டிய உத்தரக்கிரியைகளை முடித்தான்; ஸ்ரீராமனை அயோத்திக்குஅழைத்து வந்து திருமுடிசூட்ட விரும்பி வனத்திற்குச் செல்லுற்றான்.]

1. பூவிரி பொலன்கழற் பொருவி றானையான்
காவிரி நாடன்ன கழனி நாடொரீஇத்
தாவர சங்கம மென்னுந் தன்மைய
யாவையு மிரங்கிடக் கங்கை யெய்தினான்.

பத:—பூ-அழகு, விரி-மிக்க, பொலன்-பொன்னாலாகிய, கழல்-வீரக்கழலையும், பொரு இல்-ஒப்பில்லாத, தானையான்-சேனையையுமுடைய பரதன், காவிரி நாடு-காவிரிநதிபாயுஞ் சோழநாட்டை, அன்ன-ஒத்த, கழனி-கழனிகளையுடைய, நாடு-(தனது) கோசல தேசத்தை, ஒரீஇ-விட்டுநீங்கி, தாவரம்-அசையாப்பொருள், சங்கமம்-அசையும்பொருள், என்னும்-என்கிற, தன்மைய-தன்மையையுடைய, யாவையும்-எல்லாவுயிர்களும், இரங்கிட-(தனது நிலைமையை நோக்கிப்) பரிதவிக்க, கங்கை-கங்காநதியின்வடகரையை, எய்தினான்-அடைந்தான்.

பொழி :—அழகுமிக்க பொன்னாலாகிய வீரக்கழலையும் ஒப்பில்லாத சேனையையுமுடைய பரதன், காவிரிநதிபாயும் சோழநாட்டைஒத்த கழனிகளையுடைய தனது கோசலதேசத்தைவிட்டு நீங்கி அசையும்பொருள் அசையாப் பொருள் என்கிற தன்மையையுடைய எல்லா உயிர்களும் தனது நிலைமையை நோக்கிப் பரிதவிக்கக் கங்காநதியின் வடகரையை அடைந்தான். (1)

2. அப்படை கங்கையை யடைந்த வாயிடைத்
துப்புடைக் கடலினீர் சுமந்த மேகத்தை
ஒப்புடை யண்ணலோ டுடற்ற வேகொலாம்
இப்படை யெடுத்ததென் றெடுத்த சீற்றத்தான்.

பத :—அ படை-அந்தச்சேனை, கங்கையை-கங்காநதியை, அடைந்த-சேர்ந்த, அ இடை-அச்சமயத்தில் (அதனைக்கண்டு), 'துப்பு உடை-வலிமையையுடைய, கடலின்-கடலினது, நீர்-நீரை, சுமந்த-தரித்துச் சூல் கொண்ட, மேகத்தை-காளமேகத்தை, ஒப்பு உடை-உவமையாகவுடைய, அண்ணலோடு-பெருமைவாய்ந்த ஸ்ரீராமபிரானுடனே, உடற்றவே கொல் ஆம்-போர்செய்தற்காகவேயோ, இ படை-இந்தச்சேனை, எடுத்தது-எழுந்தது,' என்று-என்று எண்ணி, எடுத்த-மிகுதியாகக்கொண்ட, சீற்றத்தான்-கோபத்தையுடையவனாகி ;

பொழி :—அந்தச்சேனை கங்காநதியைச்சேர்ந்த அச்சமயத்தில் அதனைக் கண்டு வலிமையையுடைய கடலினது நீரைத்தரித்துச் சூல்கொண்ட காளமேகத்தை உவமையாகவுடைய பெருமைவாய்ந்த ஸ்ரீராமபிரானுடனே போர்செய்தற்காகவேயோ இந்தச்சேனை எழுந்தது' என்று எண்ணி மிகுதியாகக்கொண்ட கோபத்தையுடையவனாகி ;— (2)

3. குகனெனப் பெயரிய கூற்றி னாற்றலான்
தொகைமுரட் சேனையைத் துகளி னோக்குவான்
நகைமிகக் கண்கடீ நாற நாசியில்
புகையுறக் குனிப்புறும் புருவப் போர்விலான்.

பத :—குகன் என-குகனென்று, பெயரிய-பெயரையுடைய, கூற்றின்-யமன்போலும், ஆற்றலான்-வன்மைவாய்ந்த வேடர் தலைவன், தொகை-தொகுதியாகவுள்ள, முரண்-வலிமையையுடைய, சேனையை-அச்சேனையை, துகளின்-புழுதியால், நோக்குவான்-ஊகித்தறிந்து, நகை-சிரிப்பு, மிக-அதிகப் பட, கண்கள்-கண்களினின்று, தீ-தீப்பொறி, நாற-தோன்ற, நாசியில்-மூக்கினின்று, புகை—, உற-கிளம்ப, குனிப்புறும்-வளைத்த, புருவம்-புருவமாகிய, போர் விலான்-போர்செய்யும் வில்லையுடையவனும் ;

பொழி :—குகன் என்ற பெயரையுடைய யமன்போலும் வன்மை வாய்ந்த வேடர்தலைவன், தொகுதியாகவுள்ள வலிமையையுடைய அச்சேனையைப் புழுதியால் ஊகித்தறிந்து சிரிப்பு அதிகப்படக் கண்களினின்று தீப்பொறிதோன்ற மூக்கினின்று புகைகிளம்ப வளைத்த புருவமாகிய போர் செய்யும் வில்லையுடையவனும் ;— (3)

4. மையுற வுயிரெலா மிறுதி வாங்குவான்
கையுறு கவரயில் பிடித்த காலன்றான்
ஐயைந்நூ றுயிர முருவ மாயின
மெய்யுறு தானையான் வில்லின் கல்வியான்.

பத :—மை-குற்றம், உற-உண்டாக, உயிர் எலாம்-பிராணன்களையெல்லாம், இறுதி-முடிவு உண்டாகும்படி, வாங்குவான்-உடலினின்றும் நீக்குதற்கு, கை-கையிலே, உறு-பொருந்திய, கவர்-(மூன்று தலையாகப்) பிளவுபட்டுள்ள, அயில்-வேற்படையை, பிடித்த—, காலன் தான்-யமன் தானே ஐ-அழகிய, ஐந்நூறு ஆயிரம்-ஐந்துலக்ஷம், உருவம்-வடிவை, ஆயின-எடுத்தாலொத்த, மெய்-உடலை, உறு-பொருந்திய, தானையான்-சேனையையுடையவனும், வில்லின் கல்வியான்-வில்வித்தையில் வல்லவனும்;

பொழி :—குற்றம் உண்டாகப் பிராணன்களையெல்லாம் முடிவு உண்டாகும்படி உடலினின்றும் நீக்குதற்குக் கையிலே பொருந்திய மூன்று தலையாகப் பிளவுபட்டுள்ள வேற்படையைப்பிடித்த யமன் தானே அழகிய ஐந்துலக்ஷம் வடிவை எடுத்தால் ஒத்த உடலைப்பொருந்திய சேனையையுடையவனும், வில்வித்தையில் வல்லவனும் ;— (4)

5. கட்டிய சுரிகையன் கடித்த வாயினன்
வெட்டிய மொழியினன் விழிக்கட் டீயினன்
கொட்டிய துடியினன் குறிக்குங் கொம்பினன்
இட்டிய தமரெனக் கிளர்ந்த தோளினன்.

பத :—கட்டிய-(அரைப்பட்டிகையிற்) கட்டின, சுரிகையன்-உடைவாளையுடையவனும், கடித்த-(பல்லினாற்) கடித்துக்கொண்டுள்ள, வாயினன்-உதட்டையுடையவனும், வெட்டிய-கடிந்துபேசுகிற, மொழியினன்-சொற்களையுடையவனும், விழி கண்-விழிக்கின்ற கண்களினின்று, தீயினன்-தீப்பொறிதோன்றப்பெற்றவனும், கொட்டிய-அடித்த, துடியினன்-உடுக்கையென்னும் பறையையுடையவனும், குறிக்கும்-ஒலிக்கிற, கொம்பினன்-ஊதுகொம்பையுடையவனும், 'அமர்-போர், கிட்டியது-சமீபித்தது'-என-என்று, கிளர்ந்த-பூரித்த, தோளினன்-தோள்களையுடையவனும் ;

பொழி :—அரைப்பட்டிகையிற் கட்டின உடைவாளையுடையவனும், பல்லினுற் கடித்துக்கொண்டுள்ள உதட்டையுடையவனும், கடிந்துபேசுகின்ற சொற்களையுடையவனும், விழிக்கின்ற கண்களினின்று தீப்பொறி தோன்றப்பெற்றவனும், அடித்த உடுக்கையென்னும் பறையையுடையவனும், ஒலிக்கின்ற ஊதுகொம்பையுடையவனும் 'போர் சமீபித்தது' என்று பூரித்த தோள்களையுடையவனும் ;— (5)

6. எலியெலா மிப்படை யரவம் யானென
ஒலியுலாஞ் சேனையை யுவந்து கூயினுன்
வலியுலா முலகினில் வாழும் வள்ளுகிர்ப்
புலியெலா மொருவழிப் புகுந்த போலவே.

பத :—'இ படை எலாம்-இந்தச் சேனைமுழுவதும், எலி-எலிகளாம் ; யான் அரவம்-யான் (இவற்றை அழிக்கும்) பாம்பாவேன்' என-என்று வீரவாதங்கூறி, உலகினில்-உலகத்தில், வாழும்-வாழ்கிற, வலி உலாம்-வலிமைமிக்க, வள் உகிர்-கூரியநகங்களையுடைய, புலி எலாம்-புலிகளெல்லாம், ஒரு வழி-ஓரிடத்தில், புகுந்த போல-வந்து திரண்டனபோல, ஒலி உலாம்-ஆரவாரம்மிக்க, சேனையை-(தனது) சேனையை, உவந்து-மகிழ்ந்து, கூயினுன்-கூவியழைத்தவனுமாகி ;

பொழி :—'இந்தச் சேனைமுழுவதும் எலிகளாம் ; யான் இவற்றை அழிக்கும் பாம்பாவேன்' என்று வீரவாதங்கூறி, உலகத்தில் வாழ்கின்ற வலிமைமிக்க கூரிய நகங்களையுடைய புலிகளெல்லாம் ஓரிடத்தில் வந்து திரண்டனபோலத் தன்பக்கத்தில் வந்து கூடும்படி ஆரவாரம்மிக்க தனது சேனையை மகிழ்ந்து கூவி அழைத்தவனுமாகி;— (6)

7. மருங்கடை தென்கரை வந்து தோன்றினுன்
ஒருங்கடை நெடும்படை யொல்லெ னார்ப்பினே
டருங்கடை யுகந்தனி லசனி மாமழை
கருங்கடல் கிளர்ந்தெனக் கலந்து சூழவே.

பத :—ஒருங்கு-ஒருமிக்க, அடை-கூடிநின்ற, நெடு படை-பெரிய சேனை, ஒல் என்-ஒல்லெனவொலிக்கின்ற, ஆர்ப்பினேடு-ஆரவாரத்துடனே, அரு-(பிராணிகள் பிழைத்தற்கு) அரிய, கடை யுகந்தனில்-கல்பாந்தகாலத்தில், அசனி-இடியையுடைய, மா மழை-பெரிய மேகங்களும், கரு கடல்-பெரிய கடல்களும், கிளர்ந்து என-மிக்கெழுந்தாற்போல, கலந்து-திரண்டு, சூழ-(தன்னைச்) சுற்றிவர, மருங்கு அடை-அருகிலுள்ள, தென் கரை-(கங்கையின்) தென்கரையில், வந்து தோன்றினுன்-வந்துசேர்ந்தான்.

பொழி:—ஒருமிக்கக்கூடிநின்ற பெரியசேனை ஒல்லெனை ஒலிக்கின்ற ஆரவாரத்துடனே பிராணிகள் பிழைத்தற்கு அரிய கல்பாந்தகாலத்தில் இடியையுடைய பெரியமேகங்களும் பெரியகடல்களும் மிக்கெழுந்தாற் போலத் திரண்டு தன்னைச் சுற்றிவர அருகிலுள்ள கங்கையின் தென்கரையில் வந்து தோன்றினான். (7).

8. தோன்றிய புளிஞரை நோக்கிச் சூழ்ச்சியின்
ஊன்றிய சேனையை யும்ப ரேற்றுதற்
கேன்றனெ னென்னுயிர்த் துணைவற் கீகுவான்
ஆன்றபே ரரசுநீ ரமைதிரா மென்றான்.

பத:—(இங்ஙனம் வந்துதோன்றிய குகன்) தோன்றின-(தன்னைச்சுற்றிலும்வந்து) தோன்றிய, புளிஞரை-வேடர்களை, நோக்கி-பார்த்து, 'சூழ்ச்சியின்-(இராமனைவெல்லும்) ஆலோசனையோடு, ஊன்றிய-எதிரில் நிலைத்துநின்ற, சேனையை-(பரதன்) சேனையைக் (கொன்று), உம்பர்-வீரசுவர்க்கத்தில், ஏற்றுதற்கு-ஏறச்செய்தற்கும், ஆன்ற-பெருமையமைந்த, பேர் அரசு-பெரிய இராச்சியத்தை, என்-எனது, உயிர் துணைவற்கு-பிராணசினேகிதனை இராமனுக்கு, ஈகுவான்-கொடுத்தற்கும், ஏன்றனென்-தொடங்கியுள்ளேன்; நீர்-நீங்களும், அமைதிர்ஆம்-சம்மதிப்பீர்களாக' என்றான்-என்றுகூறினான்.

பொழி:—இங்ஙனம் வந்து தோன்றிய குகன் தன்னைச்சுற்றிலும் வந்து தோன்றிய வேடர்களைப்பார்த்து "இராமனை வெல்லும் ஆலோசனையோடு எதிரில் நிலைத்துநின்ற பரதன்சேனையைக் கொன்று வீரசுவர்க்கத்தில் ஏறச்செய்தற்கும், பெருமைவாய்ந்த பெரிய இராச்சியத்தை எனது பிராண சினேகிதனை இராமனுக்குக்கொடுத்தற்கும் தொடங்கியுள்ளேன்; நீங்களும் சம்மதிப்பீர்களாக" என்று கூறினான். (8)

9. துடியெறி நெறிகளுந் துறையுஞ் சுற்றுற
ஒடியெறி யம்பிகள் யாது மோட்டலிர்
கடியெறி கங்கையின் கரைவந் தோர்களைப்
பிடியெறி படவெனப் பெயர்த்துங் கூறுவான்.

பத:—(என்றுகூறிய குகன்) 'துடி-பறைகளை, எறி-அடி; நெறிகளும்-வழிகளையும், துறையும்-நீரிலிறங்குதுறைகளையும், சுற்றுஉற-எல்லாப்பக்கங்களிலும் ஒடி-அழித்துவிடு; எறி-குத்து; அம்பிகள்-தோணிகளுள், யாதும்-ஒன்றையும், ஓட்டலிர்-ஓட்டாதீர்கள்; கடி-நறுமணம், எறி-வீசுகிற, கங்கையின்-கங்கையாற்றின், கரை-கரையில், வந்தோர்களை-வருமவர்களை, பிடி-பற்று; பட-அழியும்படி, எறி-வெட்டு' என-என்றுசொல்லி, பெயர்த்தும்-மீண்டும், கூறுவான்-சொல்பவனானான்.

பொழி :—என்று கூறிய குகன் "பறைகளை அடி; வழிகளையும் நீரிலிறங்கு துறைகளையும் எல்லாப்பக்கங்களிலும் அழித்துவிடு; குத்து; தோணிகளுள் ஒன்றையும் ஓட்டாதீர்கள்; நறுமணம் வீசுகிற கங்கையாற்றின் கரையில் வருமவர்களைப்பற்று; அழியும்படி வெட்டு" என்று சொல்லி மீண்டும் சொல்பவனானன். (9)

10. அஞ்சன வண்ணனென் னாருயிர் நாயக னாளாமே
வஞ்சனை யாலர செய்திய மன்னரும் வந்தாரே
செஞ்சர மென்பன தீயுமிழ் கின்றன செல்லாவோ
உஞ்சிவர் போய்விடி னாய்க்குக னென்றெனை யோதாரோ.

பத :—என்-எனது, ஆர் உயிர்-அருமையான உயிருக்கு, நாயகனை-தலைவனாகிய, அஞ்சனம் வண்ணன்-மைபோலும் (கரிய) நிறத்தையுடைய ஸ்ரீராமன், ஆளாமே-அரசாட்சிசெய்யாமலிருக்கும்படி, வஞ்சனையால்-வஞ்சனையினால், அரசு-இராச்சியத்தை, எய்திய-அடைந்த, மன்னரும்-பரத அரசரும், வந்தாரே-(அருகில்) வந்தனரன்றோ? தீ-நெருப்பை, உமிழ்கின்றன-கக்குகின்றனவாகிய, செம் சரம் என்பன-(எனது) சிவந்த அம்பெனப்படுபவை, செல்லாவோ-(இவர்மேற்) செல்லமாட்டாவோ? இவர்—, உஞ்சு-(எனது அம்புக்குத்) தப்பி, போய்விடின்-பிழைத்துப்போய்விட்டால், நாய்குகன் என்று-நாய்போன்ற குகனென்று, எனை-என்னை, ஓதாரோ-(உலகத்தார் இகழ்ந்து) பேசமாட்டார்களோ?

பொழி :—எனது அருமையான உயிருக்குத் தலைவனாகிய மைபோலும் கரியநிறத்தையுடைய ஸ்ரீராமன் அரசாட்சி செய்யாமலிருக்கும்படி வஞ்சனையினால் இராச்சியத்தை அடைந்த பரதராசரும் அருகில் வந்தனரன்றோ? நெருப்பைக்கக்குகின்றனவாகிய எனது சிவந்த அம்பெனப்படுபவை இவர்மேற் செல்லமாட்டாவோ? இவர் எனது அம்புக்குத் தப்பிப் பிழைத்துப்போய் விட்டால் நாய்போன்ற குகன் என்று என்னை உலகத்தார் இகழ்ந்துபேசமாட்டார்களோ? (10)

11. ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ
ஏழமை வேட னிறந்தில னென்றெனை யேசாரோ.

பத :—இவர்—, ஆழம்-ஆழத்தையும், நெடு-நீட்சியையும், திரை-அலைகளையுமுடைய, ஆறு-இக்கங்கையாற்றை, கடந்து போவாரோ-(எனது உதவியில்லாமல்) தாண்டிப் போகமாட்டுவரோ? வேழம்-யானைகளையுடைய, நெடு படை-பெரிய சேனையை, கண்டு-பார்த்து, விலங்கிடும்-(அஞ்சி) ஒதுங்கிப்போகிற, வில் ஆளோ-வில்வீரனோ (நான்)? தோழமை என்று-'(உனக்கும் எனக்கும்) சினேகம் (இருக்கட்டும்)' என்று, அவர்-அவ்விராமபிரான், சொல்லிய-(என்னை நோக்கிச்) சொல்லிய, சொல்-வார்த்தை, ஒரு

சொல் அன்றே-(நன்குமதிக்கத்தக்க) ஒப்பற்ற வார்த்தையன்றே? (அந் நட்புக்கு ஏற்க யான் நடக்காவிட்டால் உலகத்தார்), 'ஏழமை-எளிய, வேடன்-(இவ்)வேடன், இறந்திலன்-(மானங்கெட வாழ ஒருப்படுவதன்றிச்) செத்தா னில்லை' என்று—, எனை-என்னை, ஏசாரோ-பழிக்கமாட்டாரோ?

பொழி:—இவர் ஆழத்தையும் நீட்சியையும் அலைகளையுமுடைய இக் கங்கையாற்றை எனது உதவியில்லாமல் தாண்டிப்போகமாட்டுவரோ? யானைகளையுடைய பெரிய சேனையைப்பார்த்து அஞ்சி ஒதுங்கிப்போகிற வில்வீரனோ நான்? 'எனக்கும் உனக்கும் சினேகம் இருக்கட்டும்' என்று அவ்விராமபிரான் என்னை நோக்கிச் சொல்லிய வார்த்தை நன்குமதிக்கத்தக்க ஒப்பற்ற வார்த்தையன்றே? அந்நட்புக்குஏற்க யான் நடக்காவிட்டால் உலகத்தார் "எளிய இவ்வேடன் மானங்கெட வாழ ஒருப்படுவதன்றிச் செத்தானில்லை" என்று என்னைப் பழிக்கமாட்டார்களோ? (11)

12. முன்னவ னென்று நினைந்திலன் மொய்புலி யன்னானோர்
பின்னவ னின்றன னென்றில னன்னவை பேசானேல்
என்னிவ னென்னை யிகழ்ந்ததிவ் வெல்லை கடந்தன்றே
மன்னவர் நெஞ்சினில் வேடர் விடுஞ்சரம் வாயாவோ.

பத:—இவன்-இப்பரதன், (இராமபிரானை) முன்னவன் என்று'-(தனது) தமையன்' என்று, நினைந்திலன்-எண்ணினானில்லை; 'மொய்-வலிமைகொண்ட புலி-புலியை, அன்னான்-ஒத்தவனான, ஓர் பின்னவன்-இலக்குமணனாகிய ஒரு தம்பி, நின்றனன்-உடனுள்ளான்,' என்றிலன்-என்று நினைத்தானில்லை; அன்னவை-அவற்றைக்குறித்து, பேசான் ஏல்-எண்ணானாயினும், என்னை-(நடுவில்நின்ற) என்னையும், இகழ்ந்தது-(ஒருபொருளாக மதியாமல்) இகழ்ச்சி யாக நினைத்தது, என்-யாதுகாரணத்தால்? (இவன் வல்லமையெல்லாம்), இ-இந்த, எல்லை-(எனது) எல்லையை, கடந்து அன்றே-கடந்தாலன்றே (நிலை நிற்கும்)? வேடர்—, விடும்-எய்யும், சரம்-அம்புகள், மன்னவர்-அரசருடைய, நெஞ்சினில்-மார்பில், வாயாவோ-தைக்கமாட்டாவோ?

பொழி:—இப்பரதன் இராமனைத் 'தனது தமையன்' என்று எண்ணினா னில்லை; 'வலிமைகொண்ட புலியை ஒத்தவனான இலக்குமணனாகிய ஒருதம்பி உடனுள்ளான்' என்றும் நினைத்தானில்லை; அவற்றைக்குறித்து எண்ணானா யினும் நடுவில்நின்ற என்னையும் ஒருபொருளாகமதியாமல் இகழ்ச்சியாக நினைத்தது யாதுகாரணத்தால்? இவன் வல்லமையெல்லாம் இந்த எனது எல்லையைக் கடந்தாலன்றே நிலைநிற்கும்? வேடர் எய்யும் அம்புகள் அரச ருடைய மார்பில் தைக்கமாட்டாவோ? (12)

13. பாவமு நின்ற பெரும்பழி யும்பகை நண்போடும்
ஏவமு மென்பவை மண்ணுல காள்பவ ரெண்ணாரோ
ஆவது போகவென் னாருயிர்த் தோழமை தந்தான்மேல்
போவது சேனையு மாருயி ருங்கொடு போயன்றே.

பத :—பாவமும்-தீவினையும், நின்ற-நிலைபெற்ற, பெரு-மிக்க, பழியும்-பழிச்சொல்லும், பகை-(இன்னார்) பகைவரென்பதும், நண்போடும்-(இன்னார்) நண்பரென்பதும், ஏவமும்-(இன்னது பிறர்க்குத்) துன்பத்தைவிளைப்பது என்பதும், என்பவை-என்கின்ற இவற்றை, மண் உலகு-நிலவுலகத்தை, ஆள்பவர்-ஆளும்அரசர், எண்ணாரோ-நினைக்கமாட்டாரோ? ஆவது போக-ஆவது ஆகுக; என்-எனக்கு, ஆர்-அரிய, உயிர்-உயிரோடொத்த, தோழமை-சினேகத்தை, தந்தான்மேல்-செய்தருளியவனை ஸ்ரீராமன்மேல், போவது-(இவர் போர்செய்து அழிக்கச்) செல்வது, சேனையும்-(தம்) சேனையையும், ஆர் உயிரும்-(தமது) அருமையான உயிரையும், (என் கை அம்புக்குத் தப்பி) கொடு-உடன்கொண்டு, போய் அன்றே-போனபின்பு அல்லவோ?

பொழி :—தீவினையும் நிலைபெற்ற மிக்க பழிச்சொல்லும் இன்னார் பகைவரென்பதும் இன்னார் நண்பரென்பதும் இன்னது பிறர்க்குத் துன்பத்தைவிளைப்பது என்பதும் என்கின்ற இவற்றை நிலவுலகத்தை ஆளும் அரசர் நினைக்கமாட்டாரோ? ஆவது ஆகுக; எனக்கு அரிய உயிரோடொத்த சினேகத்தைச் செய்தருளியவனை ஸ்ரீராமன்மேல் இவர் போர்செய்து அழிக்கச்செல்வது தம்சேனையையும் தமது அருமையான உயிரையும் என் கை அம்புக்குத்தப்பி உடன்கொண்டுபோனபின்பு அல்லவா? (13)

14. அருந்தவ மென்றுணை யாள விவன்புவி யாள்வானே
மருந்தெனி னன்றுயிர் வண்புகழ் கொண்டுபின் மாயேனே
பொருந்திய கேண்மை யுகந்தவர் தம்மொடு போகாதே
இருந்தது நன்று கழிக்குவெ னென்கட னின்றேடே.

பத :—என்-எனது, துணை-நண்பனை இராமபிரான் (வனத்திற்சென்று), அரு-(செய்தற்கு) அரிய, தவம்-தவத்தை, ஆள-செய்துகொண்டிருக்க, இவன்-இந்தப்பரதன், புவி-பூமியை, ஆள்வானே-அரசாள்வனே? உயிர்-(எனது) உயிர், மருந்துஎனின்-(கிடைத்தற்குஅரிய) தேவாமிருதமோவென்றால், அன்று—; (இராமனுக்கு உதவியாய்ப் பரதனை எதிர்த்து அதனால்), வண்-சிறந்த, புகழ்-கீர்த்தியை, கொண்டு-பெற்று, பின்-பின்பு, மாயேனே-இறக்க மாட்டேனே? (என்னோடு), பொருந்திய-பொருந்தின, கேண்மை-சிநேகத்தை, உகந்தவர் தம்மொடு-விரும்பியருளின இராமபிரானுடன், போகாதே-(நான்) செல்லாமல், இருந்தது-(இங்கு) இருந்தது, நன்று-நல்லதாயிற்று; என்-எனது கடன்-கடமையை, இன்றேடே-இன்றைக்கே, கழிக்குவென்-கழிப்பேன்.

பொழி :—எனது நண்பனை இராமபிரான் வனத்திற்சென்று செய்தற்கு அரிய தவத்தைச் செய்துகொண்டிருக்க இந்தப்பரதன் பூமியை அரசாள்வனே? எனது உயிர் கிடைத்தற்கு அரிய தேவாமிருதமோவென்றால் அன்று; இராமனுக்கு உதவியாய்ப் பரதனை எதிர்த்து அதனால் சிறந்த கீர்த்தியைப்பெற்றுப் பின்பு இறக்கமாட்டேனே? என்னோடு பொருந்தின

சினேகத்தை விரும்பியருளின இராமபிரானுடன் நான் செல்லாமல் இங்கு இருந்தது நல்லதாயிற்று ; எனது கடமையை இன்றைக்கே கழிப்பேன். (14)

15. தும்பியு மாவு மிடைந்த பெரும்படை சூழ்வாரும்
வம்பிய றாரிவர் வாள்வலி கங்கை கடந்தன்றோ
வெம்பிய வேட ருளீர்துறை யோடம் விலக்கீரோ
நம்பிமுன் னேயினி நம்முயிர் மாய்வது நன்றன்றோ.

பத :—தும்பியும்-யானைகளும், மாவும்-குதிரைகளும், மிடைந்த-நெருங்கிய, பெரு-பெரிய, படை-சேனையினால், சூழ்வு-சூழப்படுதல், ஆரும்-பொருந்திய, வம்பு இயல்-வாசனை தங்கிய, தார்-பூமாலையையுடைய, இவர்-இப்பரதரது வாள் வலி-ஆயுதபலம், கங்கை-இக்கங்கையாற்றை, கடந்து அன்றோ-தாண்டிய பின்பு அல்லவோ (பயன்படும்)? வெம்பிய-உக்கிரமான, வேடர் உளீர்-வேடர்களாக உள்ளவர்களே, துறை-நீர்த்துறையிலே, ஓடம்-(இவர்களுக்கு) ஓடம் விடுவதை, விலக்கீர்-ஒழிவீராக; (பரதனும் அவன் சேனையிலுள்ளவரும் நம்மினும் வலியராயினும்) இனி-இனிமேல், நம்பி முன்னே-(அவர்களால்) இராமனழிதற்குமுன்னே, நம் உயிர்-நமது உயிர், மாய்வதும்-(போரில்) அழிந்துபோவதும், நன்று அன்றோ-நல்லதன்றோ ?

பொழி :—யானைகளும் குதிரைகளும் நெருங்கிய பெரிய சேனையினால் சூழப்படுதல் பொருந்திய வாசனைதங்கிய பூமாலையையுடைய இப்பரதரது ஆயுதபலம் இக்கங்கையாற்றைத்தாண்டியபின்பு அல்லவோ பயன்படும்? உக்கிரமான வேடர்களாக உள்ளவர்களே, நீர்த்துறையில் இவர்களுக்கு ஓடம் விடுவதை ஒழிவீராக ; பரதனும் அவன் சேனையிலுள்ளவரும் நம்மினும் வலியராயினும் இனிமேல் அவர்களால் இராமன் அழிதற்குமுன்னே நமது உயிர் போரில் அழிந்துபோவதும் நல்லதன்றோ ? (15)

16. போன படைத்தலை வீரர் தமக்கிரை போதாவிச்
சேனை கிடக்கிடு தேவர் வரிற்சிலை மாமேகஞ்
சோனை படக்குடர் சூறை படச்சுடர் வாளோடுந்
தானை படத்தனி யானை படத்திரள் சாயேனோ.

பத :—போன-(நம்முடன்) வந்த, தலை-சிறந்த, படைவீரர் தமக்கு-சேனை வீரர்களுக்கு, இரை-ஒருவேளைப் போருக்கும், போதா-பற்றாத, இ சேனை-இந்தப்பரதன்சேனை, கிடக்கிடு-இருக்கட்டும் ; தேவர்-தேவர்களே, வரின்-எதிர்த்துவந்தாலும், சிலை-(என்) கைவில்லாகிய, மா மேகம்-காளமேகத்தால், சோனை-இடைவிடாத அம்புமழை, பட-உண்டாக, குடர்-(எதிர்த்தவர்களது) குடல், சூறை பட-அலைபட, சுடர்-விளங்குகின்ற, வாளோடும்-ஆயுதங்களுடனே, தானை-(மற்றைச்) சேனைகள், பட-அழிய, தனி-ஒப்பற்ற, யானை-யானைச்சேனை, பட-அழிய, திரள்-அக்கூட்டத்தை, சாயேனோ-அழிக்காமல் விருப்பேனோ ?

பொழி :—நம்முடன்வந்த சிறந்த சேனைவீரர்களுக்கு ஒருவேளைப் போருக்கும் பற்றாத இந்தப் பரதன்சேனை இருக்கட்டும்; தேவர்களே எதிர்த்து வந்தாலும் என் கைவில்லாகிய காளமேகத்தால் இடைவிடாத அம்புமழை உண்டாக எதிர்த்தவர்களது குடல் அலைபட விளங்குகின்ற ஆயுதங்களுடனே மற்றைச்சேனைகள் அழிய ஒப்பற்ற யானைச்சேனை அழிய அக்கூட்டத்தை அழிக்காமலிருப்பேனோ? (16)

17. நின்ற கொடைக்கையெ னன்ப னுடுக்க நெடுஞ்சீரம்
அன்று கொடுத்தவண் மைந்தர் பலத்தையெ னம்பாலே
கொன்று குவித்த நிணங்கொள் பிணக்குவை கொண்டோடித்
துன்று திரைக்கடல் கங்கை மடுத்திடை தூராதோ.

பத :—அன்று-(பட்டாபிஷேகம் செய்யத்தொடங்கிய) அந்நாளில், நின்ற-(விரதம்முதலியன முடித்து முடிசூட) நின்ற, கொடை-ஈகைக்குணம் நிறைந்த, கை-கையையுடைய, என்-என்னுடைய, அன்பன்-அன்பனான இராமன், உடுக்க-(அரையில்) தரிக்கும்படி, நெடு-பெரிய, சீரம்-மரவுரியை, கொடுத்தவள்-கொடுத்தவளாகிய கைகேயியின், மைந்தர்-புத்திரரான பரதரது, பலத்தை-சேனையை, என் அம்பால்-என்னுடைய பாணங்களால், கொன்று குவித்த—, நிணம் கொள்-கொழுப்புக்கொண்ட, பிணம்-பிணங்களின், குவை-குவியலை, கங்கை-இந்தக்கங்காநதி, கொண்டு-இழுத்துக்கொண்டு, ஓடி-விரைந்துசென்று, துன்று-நெருங்கிய, திரை-அலைகளையுடைய, கடல்-கடலில், மடுத்து-சேர்த்துநிறைத்து, இடை-அதனிடத்தை, தூராதோ-தூர்த்து விடாதோ?

பொழி :—பட்டாபிஷேகம் செய்யத்தொடங்கிய அந்நாளிலே விரதம் முதலியன முடித்து முடிசூடநின்ற ஈகைக்குணம் நிறைந்த கையையுடைய என்னுடைய அன்பனான இராமன் அரையில் தரிக்கும்படி பெரியமரவுரியைக் கொடுத்தவளாகிய கைகேயியின் புத்திரரான பரதரது சேனையை என்னுடைய பாணங்களால் கொன்றுகுவித்த கொழுப்புக்கொண்ட பிணங்களின் குவியலை இந்தக் கங்காநதி இழுத்துக்கொண்டு விரைந்துசென்று நெருங்கிய அலைகளை யுடைய கடலில்சேர்த்து நிறைத்து அதனிடத்தைத் தூர்த்துவிடாதோ? (17)

18. ஆடு கொடிப்படை சாடி யறத்தவ ரேயாள
வேடு கொடுத்தது பாரெனு மிப்புகழ் மேவீரோ
நாடு கொடுத்தவென் னாயக னுக்கிவர் நாமாளுங்
காடு கொடுக்கில ராகி யெடுத்தது காணீரோ.

பத :—'ஆடு-அசைகின்ற, கொடி-துவசங்களையுடைய, படை-(பரதன்) சேனையை, சாடி-மோதியழித்து, அறத்தவரே-தருமசொரூபியான இராம பிரானே, ஆள-அரசாளும்படி, வேடு-வேடர்கூட்டம், பார்-இராச்சியத்தை, கொடுத்தது—', எனும்-என்கின்ற, இ புகழ்-இந்தக்கீர்த்தியை, மேவீரோ-

அடையமாட்டீர்களோ? நாடு-(தன்னுடையதான) இராச்சியத்தை, கொடுத்த-(மனமகிழ்ந்து) கொடுத்துவந்த, என்-எனது, நாயகனுக்கு-தலைவனாகிய ஸ்ரீராமனுக்கு, இவர்-இப்பரதர், நாம்—, ஆளும்-வசிக்கிற, காடு-காட்டையும், கொடுக்கிலர் ஆகி-கொடுக்கச் சம்மதப்படாதவராய், எடுத்தது-(போர்க்குப்) படையெடுத்துவந்ததை, காணீரோ-பார்த்தீர்களா?

பொழி:—'அசைகின்ற துவசங்களையுடைய பரதன் சேனையை மோதி யழித்துத் தருமசொரூபியான இராமபிரானே அரசாளும்படி வேடர்கூட்டம் இராச்சியத்தைக் கொடுத்தது' என்கின்ற இந்தக்கீர்த்தியை அடைய மாட்டீர்களோ? தன்னுடையதான இராச்சியத்தை மனமகிழ்ந்து கொடுத்து வந்த எனது தலைவனாகிய ஸ்ரீராமனுக்கு இந்தப்பரதர் நாம் வசிக்கிற காட்டையும் கொடுக்கச் சம்மதப்படாதவராய்ப் போர்க்குப் படையெடுத்துவந்ததைப் பார்த்தீர்களா? (18)

19. மாமுனி வர்க்குற வாகி வனத்திடை யேவாழுங்
கோமுனி யத்தகு மென்று மனத்திறை கொள்ளாதே
ஏமுனை யுற்றிடி லேழு கடற்படை யென்றாலும்
ஆமுனை யிற்சிறு கூழென விப்பொழு தாகாதோ.

பத:—' மா-சிறந்த, முனிவர்க்கு-முனிவர்களுக்கு, உறவு ஆகி-சுற்றத் தவனாய், வனத்திடையே-காட்டிலே, வாழும்-வசிக்கிற, கோ-(என்) தலைவனை இராமன், முனிய தகும்-(தன்தம்பியான பரதனை நான் எதிர்த்தால் என்னைக்) கோபிக்கக்கூடும்,' என்று—, மனத்து-மனத்தில், இறை-சிறிதும், கொள் ளாதே-எண்ணாமலே, முனை-போர்முனையை, உற்று-அடைந்து, ஏ-அம்புகளை, இடில்-(நான்) எய்தால், (என்னை எதிர்த்து நிற்பது), ஏழு கடல்-ஏழு கடல் போன்ற, படை-பெருஞ்சேனையே, என்றாலும்-ஆனாலும், (அது) இப் பொழுது—, ஆ-பசு, முனையின்-(மேய) முனைந்தால், (அதன்முன்) சிறு கூழ் என-சிறிய இளம்பயிர் (அழிதல்) போல, ஆகாதோ-அழிவடையாதோ?

பொழி:—' சிறந்த முனிவர்களுக்குச் சுற்றத்தவனாய்க் காட்டிலே வசிக்கிற என் தலைவனை இராமன், தன் தம்பியான பரதனை நான் எதிர்த்தால் என்னைக் கோபிக்கக்கூடும்' என்று மனத்தில் சிறிதும் எண்ணாமல் போர் முனையை அடைந்து அம்புகளை நான் எய்தால் என்னை எதிர்த்து நிற்பது ஏழு கடல்போன்ற பெருஞ்சேனையே ஆனாலும் அது இப்பொழுது பசு மேய முனைந்தால் அதன்முன் சிறிய இளம்பயிர் அழிதல்போல அழிவடை யாதோ? (19)

20. என்பன சொல்லி யிரும்பன மேனிய ரேனோர்முன்
வன்பணை வில்லினன் மல்லுயர் தோளினன் வாள்வீரற்
கன்பனு நின்றனை னின்றது கண்டரி யேறன்ன
முன்பனில் வந்து மொழிந்தனன் சூரிய தேர்வல்லான்.

பத:—வல்-வலிய, பணை-பெரிய, வில்லினன்-வில்லையுடையவனும், மல்-மற்போரில், உயர்-சிறந்த, தோளினன்-தோள்களையுடையவனும், வாள்-வாட்போரிற்சிறந்த, வீரற்கு-வீரனான இராமனுக்கு, அன்பனும்-அன்பு பூண்டவனுமாகிய குகனும், இரும்பு-இரும்பை, அன-ஒத்த (மிக வலிய), மேனியர், உடம்பையுடையவரான, ஏனோர் முன்-மற்றை வேடர்களின் முன்னிலையில்-என்பன-என்ற இவ்வார்த்தைகளை, சொல்லி—, நின்றனன்-(கங்கையின் தென் கரையில்) நின்றிட்டான்: நின்றது-(அவன்) நின்றதனை, கண்டு-பார்த்து, மூரிய-வலிமையையுடைய, தேர்வல்லான்-தேரைச்செலுத்துவதில் வல்லவனான சுமந்திரன், அரி ஏறு-ஆண்சிங்கத்தை, அன்ன-ஒத்த, முன்பனில்-வலிமையையுடைய பரதனிடத்தில், வந்து—, மொழிந்தனன்-சில சொல்பவனானான்.

பொழி:—வலிய பெரியவில்லையுடையவனும் மற்போரிற் சிறந்த தோள்களையுடையவனும் வாட்போரிற் சிறந்த வீரனான இராமனுக்கு அன்பு பூண்டவனுமாகிய குகனும், இரும்பை ஒத்த மிக வலிய உடம்பையுடையவரான மற்றை வேடர்களின் முன்னிலையில் என்ற இவ்வார்த்தைகளைச் சொல்லிக் கங்கையின் தென்கரையில் நின்றிட்டான்; அவன் நின்றதனைப்பார்த்து வலிமையையுடைய தேரைச் செலுத்துவதில் வல்லவனான சுமந்திரன் ஆண் சிங்கத்தை ஒத்த வலிமையையுடைய பரதனிடத்தில் வந்து சில சொல்பவனானான். (20)

21. கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற் குயிர்த்துணைவ னுயர்தோளான்
வெங்கரியி னேறனையான் விற்பிடித்த வேலையினான்
கொங்கலரு நறுந்தண்டார்க் குகனென்னுங் குறியுடையான்.

பத:—கங்கை-கங்காநதியின், இரு கரை-இரண்டு கரைகளையும், உடையான்-(தனக்குச்சொந்தமாக) உடையவனும், கணக்கு இறந்த-அளவுகடந்த, நாவாயான்-படகுகளையுடையவனும், உங்கள்-உங்களுடைய, குலம்-குலத்திலே திருவவதரித்த, தனி-ஒப்பற்ற, நாதற்கு-தலைவனான இராமபிரானுக்கு, உயிர் துணைவன்-பிராணசினேகிதனும், உயர்-உயர்ந்த, தோளான்-தோள்களையுடையவனும், (மதத்தால்), வெம்-வெவ்விய, கரியின் ஏறு-ஆண்யானையை, அனையான்-ஒத்தவனும், வில் பிடித்த-வில்லைத்தரித்த, வேலையினான்-(சேனா) சமுத்திரத்தையுடையவனும், கொங்கு-தேன், அலரும்-சொரிகின்ற, நறு-பரிமளம்வீசுகின்ற, தண்-குளிர்ந்த, தார்-மாலையையுடைய, குகன்என்னும்-குகன் என்கிற, குறி-பெயரை, உடையான்-உடையவனும் ஆகிய வேடன்.

பொழி:—கங்காநதியின் இரண்டு கரைகளையும் தனக்குச் சொந்தமாக உடையவனும் அளவுகடந்த படகுகளையுடையவனும் உங்களுடைய குலத்திலே திருவவதரித்த ஒப்பற்ற தலைவனான இராமபிரானுக்குப் பிராண சினேகிதனும் உயர்ந்த தோள்களையுடையவனும் மதத்தால் வெவ்விய

ஆண்யானையை ஒத்தவனும் வில்லைத்தரித்த சேனைசமுத்திரத்தையுடைய வனும் தேன்சொரிகின்ற பரிமளம்வீசுகின்ற குளிர்ந்த மாலையையுடைய குகன் என்கின்ற பெயரையுடையவனும்ஆகிய வேடன்,— (21)

22. கற்காணுந் திண்மையான் கரைகாணுக் காதலான்
அற்காணிற் கண்டனைய வழகமைந்த மேனியான்
மற்காணுந் திருநெடுந்தோண் மழைகாணு மணிநிறத்தாய்
நிற்காணு முள்ளத்தா னெறியெதிர்நின் றனனென்றான்.

பத:—' மல்-வலிமையை, காணும்-(எல்லை) கண்ட, திரு-அழகிய, நெடு-பெரிய, தோள்-புயங்களையும், மழை-நீலமேகத்தை, காணும்-கண்டாலொத்த, மணி-அழகிய, நிறத்தாய்-நிறத்தையுமுடையவனே, கல்-மலையை, காணும்-கண்டாலொத்த, திண்மையான்-வலிமையையுடையவனும், (இராமனிடம்) கரை காணு-எல்லைகாணாத, காதலான்-அன்புடையவனும், காணில்-(வடிவத்தை) நோக்குமிடத்து, அல்-இரவை, கண்டு அனைய-கண்டாற்போன்ற, அழகு—, அமைந்த-பொருந்திய, மேனியான்-உடம்பையுடையவனுமாகிய அவன், நின்-உன்னை, காணும்-பார்க்கவேண்டுமென்னும், உள்ளத்தான்-மனக்கருத்துடையவனாகி, நெறி-வழியின், எதிர்-எதிரே, நின்றனன்-வந்து நின்றுள்ளான் ' என்றான்-என்று சொன்னான்.

பொழி:—" வலிமையை எல்லைகண்ட அழகிய பெரிய புயங்களையும் நீலமேகத்தைக் கண்டாலொத்த அழகிய நிறத்தையுமுடையவனே, மலையைக் கண்டாலொத்த வலிமையையுடையவனும் இராமனிடம் எல்லை காணாத அன்புடையவனும் வடிவத்தை நோக்குமிடத்து இரவைக் கண்டாற்போன்ற அழகுபொருந்திய உடம்பையுடையவனுமாகிய அவன், உன்னைப் பார்க்க வேண்டும் என்னும் மனக்கருத்துடையவனாகி வழியின் எதிரேவந்து நின்றுள்ளான் " என்று சொன்னான். (22)

23. தன்முன்னே யவன்றன்மை தந்தைதுணை முந்துரைத்த
சொன்முன்னே யுவக்கின்ற துரிசிலாத் திருமனத்தான்
மன்முன்னே தழீஇக்கொண்ட மனக்கினிய துணைவனேல்
என்முன்னே யவற்காண்பென் யானேசென் றெனவெழுந்தான்.

பத:—தன்-தனக்கு, முன்னே-எதிரிலே நின்று, அவன் தன்மை-அக்குகன் குணத்தை, தந்தை துணை-(தன்) தந்தையின் நண்பனான சுமந்திரன், முந்து-(கேளாத) முன்பு, உரைத்த-(தானாகவே) சொன்ன, சொல் முன்னே-சொல்லைக்கேட்டலினும் விரைவாக, உவக்கின்ற-மகிழ்கின்ற, துரிசு இலா-களங்கமில்லாத, திரு-சிறந்த, மனத்தான்-மனத்தையுடைய பரதன், 'மன்-(நமது தலைவனான) இராமன், முன்னே-முன்பு, தழீஇக்கொண்ட-சினேகஞ் செய்துகொள்ளப்பெற்ற, மனக்கு இனிய-(அவன்) மனத்துக்கு இனிய,

துணைவனேல்-சினேகிதனுனல், என் முன்னே-என்னை (அந்தக் குகன் வந்து) காண்பதற்கு முன்னமே, யானே-நானே, சென்று-போய், அவன்-அவனை, காண்பென்-பார்ப்பேன்' என-என்று சொல்லி, எழுந்தான்-புறப்பட்டான்.

பொழி :—தனக்கு எதிரிலே நின்று அக் குகன் குணத்தைத் தன் தந்தையின் நண்பனுன சுமந்திரன் கேளாதமுன்பு தானுகவே சொன்ன சொல்லைக் கேட்டலினும் விரைவாக மகிழ்கின்ற களங்கமில்லாத சிறந்த மனத்தையுடைய பரதன், 'நமது தலைவனுன இராமன் முன்பு சினேகஞ்செய்துகொள்ளப்பெற்ற-அவன் மனத்துக்கு இனிய சினேகிதனுனல் என்னை அந்தக் குகன் வந்து காண்பதற்கு முன்னமே நானே போய் அவனைப் பார்ப்பேன்' என்று சொல்லிப் புறப்பட்டான். (23)

24. என்றெழுந்து தம்பியொடு மெழுகின்ற காதலொடுங்
குன்றெழுந்து சென்றதெனக் குளிர்கங்கைக் கரைகுறுகி
நின்றவனை நோக்கினுன் றிருமேனி நிலையுணர்ந்தான்
றுன்றுகரு நறுங்குஞ்சி யெயினர்கோன் றுண்ணென்றுன்.

பத :—என்று-என்று சொல்லி, எழுந்து-புறப்பட்டு, தம்பியொடும்-தம்பியான சத்துருக்கினனேடும், எழுகின்ற-மேன்மேலுண்டாகின்ற, காதலொடும்-அன்போடும், குன்று-மலை, எழுந்து சென்றது என-எழுந்து புறப்பட்டாற்போல, குளிர்-குளிர்ந்த, கங்கை கரை-கங்கையின்கரையை, குறுகி-கிட்டி, நின்றவனை-நின்ற பரதனை, துன்று-நெருங்கிய, கரு-கருமையாகிய, நறு-மணமுள்ள, குஞ்சி-தலைமயிரையுடைய, எயினர்கோன்-வேடுவர் தலைவனுன குகன், நோக்கினுன்-பார்த்து, திருமேனி நிலை-(அந்தப்பரதனுடைய) திருமேனியின் நிலைமையை, உணர்ந்தான்-அறிந்து, துண்ணென்றுன்-திடுக்கிட்டான்.

பொழி :—என்று சொல்லிப் புறப்பட்டுத் தம்பியான சத்துருக்கினனேடும் மேன்மேலுண்டாகின்ற அன்போடும் மலை எழுந்து புறப்பட்டாற்போலக் குளிர்ந்த கங்கையின் கரையைக் கிட்டிநின்ற பரதனை நெருங்கிய கருமையாகிய மணமுள்ள தலைமயிரையுடைய வேடுவர் தலைவனுன குகன் பார்த்து அந்தப் பரதனுடைய திருமேனியின் நிலைமையை அறிந்து திடுக்கிட்டான். (24)

25. வற்கலையி னுடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றுன்
விற்கையினின் றிடைவீழ விம்முற்று நின்றொழிந்தான்.

பத :—வற்கலையின்-மரவுரியாகிய ஆடையை, உடையானை-உடுத்தவனும், மாசு அடைந்த-புழுதிபடிந்த, மெய்யானை-உடம்பையுடையவனும்,

நல்-அழகிய, கலை-கலைகள், இல்-இல்லாத, மதி என்ன-சந்திரன்போல, நகை-ஒளியை, இழந்த—, முகத்தானை-முகத்தையுடையவனும், கல்-(காண்கின்ற) கல்லும், கனிய-குழைந்துருகும்படி, கனிகின்ற-மிகுகின்ற, துயரானை-துன்பத்தையுடையவனுமாகிய பரதனை, கண்உற்றான்-(சேய்மையிற்) பார்த்து, (குகன்) கையினின்று-(தன்) கையிலிருந்து, வில்—, இடை வீழ-(நழுவிக்) கீழே விழும்படி, விம்முற்று-கலங்கி, நின்று ஒழிந்தான்-(செயலற்று) நின்றிட்டான்.

பொழி:—மரவுரியாகிய ஆடையை உடுத்தவனும் புழுதிபடிந்த உடம்பையுடையவனும் அழகிய கலைகள் இல்லாத சந்திரன்போல ஒளியை இழந்த முகத்தையுடையவனும் காண்கின்ற கல்லும் குழைந்து உருகும்படி மிகுகின்ற துன்பத்தையுடையவனுமாகிய பரதனைச் சேய்மையிற் பார்த்துக் குகன் தன் கையிலிருந்து வில் நழுவிக் கீழே விழும்படிக் கலங்கிச் செயலற்று நின்றிட்டான். (25)

26. நம்பியுமென் னாயகனை யொக்கின்றா னயனின்றான்
றம்பியையு மொக்கின்றான் றவவேடந் தலைக்கொண்டான்
றுன்பமொரு முடிவில்லை திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தா ரிழைப்பரோ பிழைப்பென்றான்.

பத:—' நம்பியும்-ஆடவரிற்சிறந்த இப்பரதனும், என்நாயகனை-எனது தலைவனாகிய இராமபிரானை, ஒக்கின்றான்-ஒத்திருக்கிறான்; அயல்-(அவனுடைய) அருகில், நின்றானும்-நின்ற (சத்துருக்கினனும்), தம்பியை-இராமன் தம்பியான இலக்குமணனை, ஒக்கின்றான்-ஒத்திருக்கிறான்; (இந்தப்பரதன்) தவம்-தவத்துக்குரிய, வேடம்-வேஷத்தை, தலைக்கொண்டான்-மேற்கொண்டுள்ளான்; துன்பம்-(இவன்படுகிற) துன்பத்துக்கோ, ஒரு முடிவு-ஓர் எல்லை, இல்லை—; திசைநோக்கி-(இராமன்சென்ற தென்) திசையைநோக்கி, தொழுகின்றான்-வணங்குகின்றான்; எம்பெருமான்-எம்தலைவனாகிய இராமனுடைய, பின்பிறந்தார்-தம்பியர், பிழைப்பு-பிழையை, இழைப்பரோ-செய்வாரோ? [செய்யார்],' என்றான்-என்று குகன் கருதினான்.

பொழி:—' ஆடவரிற் சிறந்த இப்பரதனும் எனது தலைவனாகிய இராமபிரானை ஒத்திருக்கிறான்; அவனுடைய அருகில்நின்ற சத்துருக்கினனும் இராமன் தம்பியான இலக்குமணனை ஒத்திருக்கிறான்; இந்தப் பரதன் தவத்திற்குரிய வேஷத்தை மேற்கொண்டுள்ளான்; இவன் படுகிற துன்பத்துக்கோ ஓர் எல்லை இல்லை; இராமன் சென்ற தென்திசையை நோக்கி வணங்குகின்றான். எம் தலைவனாகிய இராமனுடைய தம்பியர் பிழையைச் செய்வாரோ? செய்யார் என்று குகன் கருதினான். (26)

27. உண்டிடுக்க ணொன்றுடையா னுலையாத வன்புடையான்
கொண்டதவ வேடமே கொண்டிருந்தான் குறிப்பெல்லாங்
கண்டுணர்ந்து பெயர்கின்றேன் காமின்க ணெறியென்னுத்
தண்டுறையோர் நாவாயி லொருதனியே தான்வந்தான்.

பத:—'உண்டு-உளதாகிய, இடுக்கண் ஒன்று-ஒரு துன்பத்தை, உடையான்-உடையவனும், (இராமபிரானிடத்து), உலையாத-நீங்காத, அன்பு-அன்பை, உடையான்-உடையவனும், கொண்ட-(அப்பிரான்) தரித்துக்கொண்டுள்ள, தவவேடமே-தவவேஷத்தையே, கொண்டு இருந்தான்-(தானும்) கொண்டுள்ளவனுமாகிய இப்பரதனது, குறிப்பு எல்லாம்-மனக்கருத்து முழுவதையும், (அருகிற்சென்று) கண்டு-பார்த்து, உணர்ந்து-அறிந்து, பெயர்கின்றேன்-மீண்டுவருகிறேன்; (அதுவரையில்) நெறி-வழியை, காமின்கள்-(நீங்கள்) பாதுகாத்திருங்கள்' என்னு-என்று (தன்சேனைவீரரை நோக்கிச்) சொல்லி, தண்-குளிர்ந்த, துறை-கங்கைத்துறையில், ஓர் நாவாயில்-ஒருதோணியில் (ஏறிக்கொண்டு), ஒரு தனியே-வேறு துணையில்லாமல் தனியனாய், தான் வந்தான்-குகன் வந்தான்.

பொழி:—'உளதாகிய ஒரு துன்பத்தை உடையவனும் இராமபிரானிடத்து நீங்காத அன்பை உடையவனும் அப்பிரான் தரித்துக்கொண்டுள்ள தவவேஷத்தையே தானும் கொண்டுள்ளவனுமாகிய இப்பரதனது மனக்கருத்து முழுவதையும் அருகிற்சென்று பார்த்து அறிந்து மீண்டுவருகிறேன்; அதுவரையில் வழியை நீங்கள் பாதுகாத்திருங்கள்' என்று தன்சேனைவீரரை நோக்கிச் சொல்லிக் குளிர்ந்த கங்கைத் துறையில் ஒரு தோணியில் ஏறிக்கொண்டு வேறு துணையில்லாமல் தனியனாய்க் குகன் வந்தான். (27)

28. வந்தெதிரே தொழுதானை வணங்கினன் மலரிருந்த
அந்தணனுந் தனைவணங்கு மவனுமவ னடிவீழ்ந்தான்
றந்தையினுங் களிகூரத் தழுவினன் றகவுடையோர்
சிந்தையினுஞ் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியான்.

பத:—வந்து-(குகன் தனியனாய்)வந்து, எதிரே-எதிரிலே, தொழுதானை-(இராமனைத் திசைநோக்கித்) தொழுதவண்ணம்நின்ற பரதனை, வணங்கினன்-நமஸ்கரித்தான்; (அவ்வளவில்) தகவு-பெருமையினை, உடையோர்-உடையவர்களது, சிந்தையினும்-மனத்திலும், சென்னியினும்-தலையின்மேலும், வீற்றிருக்கும்-சிறப்பாகத்தங்குகிற, சீர்த்தியான்-பெரும்புகழை யுடையவனாகி, மலர்-(திருமாலின் நாபித்) தாமரைமலரிலே, இருந்த-வீற்றிருக்கிற, அந்தணனும்-பிரமனும், தனை-தன்னை, வணங்கும்-வணங்கத்தக்க, அவனும்-அந்தப் பரதனும், அவன்-அக்குகனுடைய, அடி-பாதங்களில், வீழ்ந்தான்-விழுந்து, தந்தையினும்-(மைந்தனைக்கண்டபொழுது) தந்தைக்குஉள்ள களிப்பைக்காட்டிலும், களி-களிப்பு, கூர-மிக, தழுவினன்-(அவனை) அணைத்துக்கொண்டான்.

பொழி :—குகன் தனியனும்வந்து எதிரிலே இராமனைத் திசைநோக்கித் தொழுதவண்ணம் நின்ற பரதனை நமஸ்கரித்தான். அவ்வளவில் பெருமையினை உடையவர்களது மனத்திலும் தலையின்மேலும் சிறப்பாகத் தங்குகிற பெரும்புகழையுடையவனுகித் திருமாலின் நாபித் தாமரையிலே வீற்றிருக்கிற பிரமனும் தன்னை வணங்கத்தக்க அந்தப் பரதனும் அக்குகனுடைய பாதங்களில் விழுந்து மைந்தனைக் கண்டபொழுது தந்தைக்கு உண்டாகும் களிப்பைக்காட்டிலும் களிப்பு மிக அவனை அணைத்துக்கொண்டான். (28)

29. தழுவின புளினர் வேந்தன் றாமரைச் செங்க ணானை
எழுவினு முயர்ந்த தோளா யெய்திய தென்னை யென்ன
முழுதுல களித்த தந்தை முந்தையோர் முறையி னின்றும்
வழுவின னதனை நீக்க மன்னனைக் கொணர்வா னென்றான்.

பத :—தழுவின-(அங்ஙனம் பரதனால்) அணைக்கப்பட்ட, புளினர் வேந்தன்-வேடர்க்கரசனான குகன், தாமரை செம் கணானை-(செந்) தாமரை மலர்போலும் செவ்விய கண்களையுடைய பரதனை (நோக்கி), ‘எழுவினும்-(திரண்ட) கல்தூணினும், உயர்ந்த-சிறந்த, தோளாய்-தோள்களையுடையவனே, எய்தியது-(இங்கு நீ) வந்தது, என்னை-யாதுகாரணத்தால்?’ என்ன-என்றுகேட்க (அதற்குப் பரதன்), ‘உலகு முழுது-உலகமுழுவதையும், அளித்த-அரசாண்ட, தந்தை-(எங்கள்) தந்தையாகிய தசரதசக்கரவர்த்தி, முந்தையோர்-முன்புள்ள அரசர்களது, முறையினின்றும்-நீதியினின்றும், வழுவினன்-தவறிவிட்டான்: அதனை-அந்த அநீதியை, நீக்க-நீக்கும்பொருட்டு, மன்னனை-அரசனுதற்குரிய இராமபிரானை, கொணர்வான்-அழைத்துக் கொண்டுபோதற்கு வந்தேன்’ என்றான்—.

பொழி :—அங்ஙனம் பரதனால் அணைக்கப்பட்ட வேடர்க்கரசனான குகன் செந்தாமரை மலர்போலும் செவ்விய கண்களையுடைய பரதனை நோக்கி, “திரண்ட கல்தூணிலும் சிறந்த தோள்களையுடையவனே, இங்கு நீ வந்தது யாது காரணத்தால்?” என்று கேட்க, அதற்குப் பரதன் “உலக முழுவதையும் அரசாண்ட எங்கள் தந்தையாகிய தசரத சக்கரவர்த்தி முன்புள்ள அரசர்களது நீதியினின்றும் தவறிவிட்டான்; அந்த அநீதியை நீக்கும் பொருட்டு அரசனுதற்குரிய இராமபிரானை அழைத்துக்கொண்டு போதற்கு வந்தேன்” என்றான். (29)

30. கேட்டனன் கிராதர் வேந்தன் கிளர்ந்தெழு முயிர்ப்ப னாகி
மீட்டுமண் ணதனில் வீழ்ந்தான் விம்மின னுவகை பொங்கத்
தீட்டரு மேனி மைந்தன் சேவடிக் கமலப் பூவிற்
பூட்டிய கையன் பொய்யி லுள்ளத்தன் புகல லுற்றான்.

பத :—பொய் இல்-பொய்யில்லாத, உள்ளத்தன்-எண்ணத்தையுடையவனாகிய, கிராதர் வேந்தன்-வேடர்தலைவனான குகன், கேட்டனன்-(அவ்

வார்த்தையைக்) கேட்டு, கிளர்ந்து எழும்-மிகுதியாகத் தோன்றுகின்ற, உயிர்ப்பன் ஆகி-பெருமூச்சையுடையவனுய், உவகை-களிப்பு, வீங்க-அதிக மாக, விம்மினன்-(உடம்பு) பூரித்தவனுகி, மீட்டும்-மறுபடியும், மண் அதனில்-தரையில், வீழ்ந்தான்—, தீட்டு அரு-(சித்திரத்தில்) எழுதுதற்கும் அருமை யான மிகஅழகிய, மேனி-திருமேனியையுடைய, மைந்தன்-சிறுவனுன பரத னுடைய, சே அடி-சிவந்த திருவடிகளாகிய, கமலம் பூவில்-தாமரைமலர் களில், பூட்டிய-சேர்த்த, கையன்-கைகளையுடையவனுய், புகலல் உற்றுன்-(சில) கூறத்தொடங்கினன்.

பொழி:—பொய்யில்லாத எண்ணத்தையுடையவனுகிய வேடர் தலைவ னுன குகன், அவ்வார்த்தையைக் கேட்டு மிகுதியாகத் தோன்றுகின்ற பெரு மூச்சுடையவனுய்க் களிப்பு அதிகமாக உடம்பு பூரித்தவனுகி மறுபடியும் தரையில் வீழ்ந்தான்; சித்திரத்தில் எழுதுதற்கும் அருமையான மிக அழகிய திருமேனியையுடைய சிறுவனுன பரதனுடைய சிவந்த திருவடிகளாகிய தாமரை மலர்களில் சேர்த்த கைகளையுடையவனுய்ச் சில கூறத் தொடங் கினுன். (30)

31. தாயுரை கொண்டு தாதை யுதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச் சிந்தனை முகத்திற் றேக்கிப்
போயினை யென்ற போழ்து புகழினேய் தன்மை கண்டால்
ஆயிர மிராமர் நின்கே ழாவரோ தெரியி னம்மா.

பத:—"புகழினேய்-கீர்த்தியையுடைய பரதனே, தாய்-(உனது) தாயா கிய கைகேயியின், உரைகொண்டு-வார்த்தையைக்கேட்டு, தாதை-தந்தை யாகிய தசரதன், உதவிய-(உனக்குக்) கொடுத்த, தரணி தன்னை-இராச்சியத்தை, தீவினை என்ன-கொடுந்தொழிலை (விடுவது) போல, நீத்து-விட்டு, சிந்தனை-கவலையை, முகத்தில்—, தேக்கி-நிறைத்து, போயினை-(இங்கு) வந்தாய்" என்ற போழ்து-என்றபொழுது, தன்மை-(உனது) தன்மையை, கண்டால்-பார்த்தால், தெரியின்-ஆலோசிக்குமிடத்து, ஆயிரம் இராமர்-ஆயிரம் இராமர் (உளராஞலும்), நின்-உன்னொருத்தனுக்கு, கேழ்-ஒப்பாக, ஆவரோ-ஆவார்களோ? அம்மா—ஆச்சரியம்!

பொழி:—"கீர்த்தியையுடைய பரதனே, உனது தாயாகிய கைகேயி யின் வார்த்தையைக் கேட்டுத் தந்தையாகிய தசரதன் உனக்குக் கொடுத்த இராச்சியத்தைக் கொடுந் தொழிலை விடுவதுபோல விட்டுக் கவலையை முகத் தில் நிறைத்து இங்கு வந்தாய்" என்றபொழுது உனது தன்மையைப் பார்த் தால் ஆலோசிக்குமிடத்து ஆயிரம் இராமர் உளராயினும் உன் ஒருத்தனுக்கு ஒப்பாக ஆவார்களோ? ஆச்சரியம்! (31)

32. என்புகழ் கின்ற தேழை யெயினனே னிரவி யென்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை யொளிகளைத் தவிர்க்கு மாபோல்
மன்புகழ் பெருமை நுங்கண் மரபினோர் புகழ்க ளெல்லாம்
உன்புக ழாக்கிக் கொண்டா யுயர்குணத் துரவுத் தோளாய்.

பத:—உயர்-உத்தமமான, குணத்து-குணங்களையும், உரவு-வலிமை வாய்ந்த, தோளாய்-தோள்களையுமுடையவனே, ஏழை-அறிவில்லாத, எயினனேன்-வேடனாகிய யான், புகழ்கின்றது-(உன்னைப்) புகழ்வது, என்-எவ்வாறு? இரவி என்பான்-சூரியனென்று சிறப்பித்துக்கூறப்படுபவன், தன்-தனது, புகழ் கற்றை-புகழ்பெற்ற கிரணசமூகத்தால், மற்றை ஒளிகளை-மற்றை(ச் சந்திரன் முதலியோரது) ஒளிகளை, தவிர்க்கும் ஆ போல்-அடக்கும் விதம்போல, மன்-அரசர்கள், புகழ்-கொண்டாடுகின்ற, பெருமை-மகிமையையுடைய, நுங்கள் மரபினோர்-உங்கள் குலத்தாரின், புகழ்கள் எல்லாம்-கீர்த்திகளை யெல்லாம், உன் புகழ்-உனதுகீர்த்திக்குள், ஆக்கிக்கொண்டாய்-அடங்குமாறு செய்துகொண்டாய்.

பொழி:—உத்தமமான குணங்களையும் வலிமைவாய்ந்த தோள்களையு முடையவனே, அறிவில்லாத வேடனாகிய யான் உன்னைப் புகழ்வது எவ்வாறு? சூரியன் என்று சிறப்பித்துக் கூறப்படுபவன் தனது புகழ்பெற்ற கிரண சமூகத்தால் மற்றைச் சந்திரன் முதலியோர்களது ஒளிகளை அடக்கும் விதம்போல, அரசர்கள் கொண்டாடுகின்ற மகிமையையுடைய உங்கள் குலத்தாரின் கீர்த்திகளையெல்லாம் உனது கீர்த்திக்குள் அடங்குமாறு செய்து கொண்டாய். (32)

33. எனவிவை யன்ன மாற்ற மியைவன பலவுங் கூறிப்
புனைகழற் புலவு வேற்கைப் புளிஞர்கோன் பொருவில் காதல்
அனையவற் கமைவிற் செய்தா னாவற் கன்பி லாதார்
நினைவருங் குணங்கொ டன்றோ விராமன்மே னிமிர்ந்த காதல்.

பத:—புனை-அணிந்த, கழல்-வீரக்கழலையும், புலவு-புலால்நாற்றம் நாறுகிற, வேல்-வேலாயுதத்தைத்தரித்த, கை-கையையுமுடைய, புளிஞர் கோன்-வேடர்தலைவனான குகன், என-என்று, இவை அன்ன-இவ்வார்த்தை களைப்போன்ற, இயைவன-பொருத்தமுள்ளனவான, மாற்றம் பலவும்-வார்த்தைகள் பலவற்றையும், கூறி-சொல்லி, அனையவற்கு-அப்பரத னிடத்தில், பொருவு இல்-ஒப்பு இல்லாத, காதல்-அன்பினை, அமைவில்-தகுதி யாக, செய்தான்—; அவற்கு-அப்பரதனிடத்தில், அன்பு இலாதார்-அன்பு வைக்காதவர், ஆர்-யார் (உளர்)? நினைவு அரு-(மனத்தினால்) சிந்தித்தற் கும் முடியாத, குணம் கொடு அன்றோ-நற்குணங்கள் காரணமாகவன்றோ, இராமன்மேல்-இராமபிரானிடத்தும், (முன்பு அக்குகனுக்கு), காதல்-அன்பு, நிமிர்ந்தது-மிக்கது?

பொழி :—அணிந்த வீரக்கழலையும் புலால்நாற்றம் நாறுகிற வேலாயுதத்தைத் தரித்த கையையுமுடைய வேடர் தலைவனான குகன் என்று இவ் வார்த்தைகளைப்போன்ற பொருத்தமுள்ளனவான வார்த்தைகள் பலவற்றையும் சொல்லி அப்பரதனிடத்தில் ஒப்பில்லாத அன்பினைத் தகுதியாகச் செய்தான்; அந்தப்பரதனிடத்தில் அன்பு வைக்காதவர் யார் உளர்? மனத்தினாற் சிந்தித்தற்கும் முடியாத நற்குணங்கள் காரணமாகவன்றோ இராமனிடத்தும் முன்பு அக் குகனுக்கு அன்பு மிக்கது? (33)

34. அவ்வழி யவனை நோக்கி யருடரு வாரி யன்ன
செவ்வழி யுள்ளத் தண்ண றென்றிசைச் செங்கை கூப்பி
எவ்வழி யுறைந்தா னம்மு னென்றலு மெயினர் வேந்தன்
இவ்வழி வீர யானே காட்டுவ லெழுக வென்றான்.

பத :—அருள்-கருணையை, தரு-வெளியிடுகின்ற, வாரி அன்ன-கடல் போன்ற, செவ் வழி-நல்வழியிற்செல்லும், உள்ளத்து-மனத்தையுடைய, அண்ணல்-பெருமைவாய்ந்த பரதன், அ வழி-அப்பொழுது, அவனை நோக்கி-அக்குகனைப் பார்த்து, தென் திசை-தெற்குத்திக்கைநோக்கி, செம் கை-(தன்) செவந்த கைகளை, கூப்பி-குவித்து, 'நம் முன்-நமது தமையனான ஸ்ரீராமன், எ வழி-(இங்கு) எவ்விடத்தில், உறைந்தான்-(முன்பு) தங்கியிருந்தான்?' என்றலும்-என்றுவினாவியவுடனே, எயினர் வேந்தன்-வேடர்தலைவனான குகன், 'வீர-வீரனே, இ வழி-(அவன்தங்கின) இந்த இடத்தை, யானே-நானே, காட்டுவல்-காண்பிப்பேன்: எழுக-(என்னுடன்) புறப்பட்டுவருவாயாக' என்றான்-என்று சொல்லினான்.

பொழி :—கருணையை வெளியிடுகின்ற கடல்போன்ற நல்வழியிற்செல்லும் மனத்தையுடைய பெருமைவாய்ந்த பரதன், அப்பொழுது அக் குகனைப் பார்த்துத் தெற்குத்திக்கை நோக்கித் தன் கைகளைக்குவித்து "நமது தமையனான ஸ்ரீராமன் இங்கு எவ்விடத்தில் முன்பு தங்கியிருந்தான்?" என்று வினாவியவுடனே, வேடர்தலைவனான குகன், "வீரனே, அவன் தங்கின இந்த இடத்தை நானே காண்பிப்பேன்; என்னுடன் புறப்பட்டு வருவாயாக" என்று சொல்லினான். (34)

35. காரெனக் கடிது சென்றான் கல்லிடைப் படுத்த புல்லின்
வார்சிலைத் தடக்கை வள்ளல் வைகிய பள்ளி கண்டான்
பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான் பருவரற் பரவை புக்கான்
வார்மணிப் புனலான் மண்ணை மண்ணுநீ ராட்டுங் கண்ணான்.

பத :—கார் என-மேகம்போல், கடிது-விரைவாக, சென்றான்-(குகனுடன்) சென்றவனான பரதன், (அவனாற் சுட்டிக் காட்டப்பட்ட) வார்-நீண்ட, சிலை-வில்லையேந்திய, தட கை-பெரிய கையையுடைய; வள்ளல்-வரையா

திருளுந்தன்மைவாய்ந்த ஸ்ரீராமபிரான், வைகிய-(முன்பு) தங்கியதும், கல்லிடை-கல்லினிடையே, படுத்த-பரப்பிய, புல்லின்-புல்லினலாகியதுமான, பள்ளி-படுக்கையை, கண்டான்-பார்த்து, (வருத்தம்பொறுக்கமாட்டாமல்) பதைத்து-துடித்து, பார்மிசை-தரையிலே, வீழ்ந்தான்-விழுந்து, வார்-பெருகுகிற, மணி-முத்துப்போன்ற, புனலால்-கண்ணீரினுல், மண்ணை-தரையை, மண்ணும்-கழுவுகிற, நீர்-நீரினுல், ஆட்டும்-ஸ்நானஞ்செய்விக்கிற, கண்ணன்-கண்களையுடையவனுய், பருவரல்-சோகமாகிய, பரவை-கடலில், புக்கான்-மூழ்கினன்.

பொழி:—மேகம்போல விரைவாகக் குகனுடன் சென்றவனை பரதன், அவனுற் சுட்டிக்காட்டப்பட்ட நீண்டவில்லையேந்திய பெரியகையையுடையவரையாதருளுந்தன்மைவாய்ந்த ஸ்ரீராமபிரான், முன்பு தங்கியதும், கல்லினிடையே பரப்பிய புல்லினுலாகியதுமான படுக்கையைப்பார்த்து வருத்தம் பொறுக்கமாட்டாமல் துடித்துத் தரையிலே விழுந்து பெருகுகிற முத்துப்போன்ற கண்ணீரினுல் தரையைக்கழுவுகிற-நீரினுல் ஸ்நானஞ்செய்விக்கிற கண்களையுடையவனுய்ச் சோகமாகிய கடலில் மூழ்கினன். (35)

36. இயன்றதென் பொருட்டி னுலிவ் விடருனக் கென்ற போழ்தும்
அயின்றனை கிழங்குங் காயு மமிர்தென வலிய புல்லில்
துயின்றனை யெனவு மாவி துறந்திலென் சுடருங் காசு
குயின்றுயர் மகுடஞ் சூடுஞ் செல்வமுங் கொள்வென் யானே.

பத:—'என் பொருட்டினுல்-எனது நிமித்தமாக, உனக்கு—, இ இடர்-இத்தன்மைய துன்பமான வனவாசம், இயன்றது-நேர்ந்தது' என்ற-என்று (கைகேயியினுல்) அறிந்த, போழ்தும்-அப்பொழுதும், 'கிழங்கும்-கிழங்குகளையும், காயும்-காய்களையும், அமிர்து என-அமிருதம்போல, அயின்றனை-புசித்தாய், அரிய-(படுத்தற்கு) அருமையான, புல்லில்-புல்லிலே, துயின்றனை-நித்திரைசெய்தாய்' எனவும்-என்று அறிந்த இப்பொழுதும், யான்—, ஆவி துறந்திலென்-உயிர் நீங்கினேனில்லை; (ஆதலால்), சுடரும்-பிரகாசிக்கிற, காசு-இரத்தினங்களை, குயின்று-பதித்து, உயர்-விலையுயர்ந்த, மகுடம்-கிரீடத்தை, சூடும்-தரித்தலாகிய, செல்வமும்-சிறப்பையும், கொள்வென்-(ஏற்றுக்கொள்ள) அமைவேன் போலும்!

பொழி:—'என் நிமித்தமாக உனக்கு இத்தன்மைய துன்பமான வனவாசமானது நேர்ந்தது' என்று கைகேயியினுல் அறிந்த அப்பொழுதும் 'கிழங்குகளையும் காய்களையும் அமிர்தம்போலப் புசித்தாய்; படுத்தற்கு அருமையான புல்லிலே நித்திரைசெய்தாய்' என்று அறிந்த இப்பொழுதும் யான் உயிர்நீங்கினேனில்லை; ஆதலால், பிரகாசிக்கிற இரத்தினங்களைப்பதித்து விலையுயர்ந்த கிரீடத்தைத் தரித்தலாகிய சிறப்பையும் ஏற்றுக்கொள்ள அமைவேன் போலும்! (36)

37. தூண்டர நிவந்த தோளான் பின்னருஞ் சொல்லு வானந்
நீண்டவன் றுயின்ற சூழ லிதுவெனி னிமிர்ந்த நேயம்
பூண்டவன் றொடர்ந்து பின்னே போந்தவன் பொழுது நீத்த
தியாண்டெனவினிதுகேட்டானெயினர்கோனிதனைச்சொன்னான்.

பத:—தூண் தர-தூணையொப்ப, நிவந்த-உயர்ந்துள்ள, தோளான்-தோள்களையுடைய பரதன், பின்னரும்-மீண்டும், சொல்லுவான்-(குகனை நோக்கிக்) கூறுவான்:—'அ நீண்டவன்-பெரியவனாகிய அவ்விராமன், துயின்ற-நித்திரைசெய்த, சூழல்-இடம், இது எனின்-இதுவானால், (அவனிடத்து), நிமிர்ந்த-மிக்க, நேயம்-அன்பை, பூண்டவன்-கொண்டவனாய், (அவனை வனவாசத்திலும்), பின்னே தொடர்ந்து-பின்தொடர்ந்து, போந்தவன்-வந்தவனான இலக்குமணனன், பொழுது-இராப்பொழுதை, நீத்தது-கழித்தது, யாண்டு-எவ்விடத்தில்?' என-என்று, இனிது-இனிமையாக, (அன்போடு இன்சொற்களால்) கேட்டான்-வினவினான்; (அதற்கு), எயினர் கோன்-வேடர்தலைவனான குகன், இதனை-இந்த விடையை, சொன்னான்-கூறலானான்.

பொழி:—தூணையொப்ப உயர்ந்துள்ள தோள்களையுடைய பரதன் மீண்டும் குகனை நோக்கிக் கூறுவான்:—"பெரியவனாகிய அவ்விராமன் நித்திரை செய்த இடம் இதுவானால் அவனிடத்து அன்பைக்கொண்டவனாய் அவனை வனவாசத்திலும் பின்தொடர்ந்து வந்தவனான இலக்குமணனன் இராப்பொழுதைக்கழித்தது எவ்விடத்தில்?" என்று அன்போடு இன்சொற்களால் வினவினான். அதற்கு வேடர் தலைவனான குகன் இந்த விடையைக் கூறலானான். (37)

38. அல்லையாண் டமைந்த மேனி யழகனு மவளுந் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும் வெயிர்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்த தோளாய் கண்கணீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவு நின்றா னிமைப்பில னயன மென்றான்.

பத:—'கல்லை-மலையை, ஆண்டு-ஒத்து, உயர்ந்த-உயர்ந்துள்ள, தோளாய்-தோள்களையுடைய பரதனே, அல்லை-இருளை, ஆண்டு-ஒத்து, அமைந்த-பொருந்திய, கரிய—, மேனி-திருமேனியையுடைய, அழகனும்-அழகுநிறைந்த இராமபிரானும், அவளும்-அவன் மனைவியான சீதாதேவியும், துஞ்ச-நித்திரைசெய்ய, வீரன்-இலக்குமணனன், வில்லை—, ஊன்றிய-தரித்த, கையோடும்-கையுடனும், வெய்து-வெம்மையுடைய, உயிர்ப்போடும்-பெருமூச்சுடனும், கண்கள் நீர் சொரிய—, கங்குல்-இராப்பொழுதின், எல்லை-முடிவெல்லையை, காண்பு அளவும்-காண்கிறவரையிலும்—பொழுதுவிடியுமளவும், நயனம் இமைப்புஇலன்-கண் மூடாதவனாய்ச் சிறிதும் துயில்கொள்ளாமல், நின்றான்-(காவல்செய்து) நின்றான்', என்றான்-என்று கூறினான்.

பொழி :—" மலையை ஒத்து உயர்ந்துள்ள தோள்களையுடைய பரதனே, இருளை ஒத்துப் பொருந்திய கரிய திருமேனியையுடைய அழகு நிறைந்த இராமபிரானும் அவன் மனைவியான சீதாதேவியும் நித்திரை செய்ய, இலக்குமணன் வில்லைத்தரித்த கையுடனும் வெம்மையுடைய பெருமூச்சுடனும் கண்கள் நீர்சொரிய, இராப்பொழுதின் முடிவெல்லையைக் காண்கின்ற வரையிலும்—பொழுதுவிடியுமளவும் கண்மூடாதவனாய்ச் சிறிதும் துயில் கொள்ளாமல் காவல்செய்து நின்றான்" என்று கூறினன். (38)

39. என்பத்தைக் கேட்ட மைந்த னிராமனுக் கிளையா ரென்று
முன்பொத்த தோற்றத் தேமில் யானென்று முடிவி லாத
துன்பத்துக் கேது வானே னவனது துடைக்க நின்றான்
அன்பத்துக் கெல்லை யுண்டோ வழகிதென் னடிமை யென்றான்.

பத:—என்பத்தை-என்று (குகன்) சொன்னதை, கேட்ட—, மைந்தன்-வீரனான பரதன், 'இராமனுக்கு—, இளையார் என்று-தம்பிமாரென்று, முன்பு ஒத்த-முன்னம் (பிறப்பில்) ஒத்துள்ள, தோற்றத்தேமில்-உற்பத்தியையுடைய எங்களுள், யான்—, என்றும்-எப்பொழுதும், முடிவு இலாத-முடிவில்லாத, துன்பத்துக்கு-(இராமனது) துன்பத்துக்கு, ஏது ஆனேன்-காரணமாயினேன்; அவன்-அவ்விலக்குமணன், அது-அத்துன்பத்தை, துடைக்க-நீக்க, நின்றான்-துணைநின்றான்; அன்பத்துக்கு எல்லை உண்டோ-அன்புக்கு ஒருவரையறை உள்ளதோ? என் அடிமை-என் அடிமைத்திறம், அழகிது-அழகாயிருந்தது!' என்றான்-என்று கூறினன்.

பொழி :—என்று குகன் சொன்னதைக் கேட்ட வீரனான பரதன் 'இராமனுக்குத் தம்பிமார் என்று முன்னம் பிறப்பில் ஒத்துள்ள உற்பத்தியையுடைய எங்களுள் யான் எப்பொழுதும் இராமனது முடிவில்லாத துன்பத்துக்குக் காரணமாயினேன்; அவ்விலக்குமணன் அத்துன்பத்தை நீக்கத் துணை நின்றான். அன்புக்கு ஒருவரையறை உள்ளதோ? என் அடிமைத்திறம் அழகாயிருந்தது!' என்று கூறினன். (39)

40. அவ்விடை யண்ண றானு மன்றரும் பொடியின் வைகித்
தெவ்விடை தரநின் றார்க்குஞ் செறிகழற் புளினர் கோமான்
இவ்விடைக் கங்கை யாற்றி னேற்றினை யாயி னெம்மை
வெவ்விடர்க் கடலின் றேற்றி வேந்தன்பால் விடுத்தி யென்றான்.

பத :—(என்று சொன்னபின்), அண்ணல் தானும்-பெருமைபொருந்திய பரதனும், அ இடை-அவ்விடத்திலே, அன்று-அன்றையிரவில், அரு-படுக்க வொண்ணாத அரிய, பொடியின்-புழுதியிலே, வைகி-படுத்திருந்து, (பொழுது விடிந்தபின் குகனை நோக்கி), 'தெவ்-பகைவர்கள், இடைதர-பின்னிடையும் படி, நின்று-நிலை பெற்று, ஆர்க்கும்-ஒலிக்கிற, செறி-நெருங்கிய, கழல்-வீரக் கழலையுடைய, புளினர் கோமான்-வேடர்தலைவனே, இ இடை-இப்பொழுது,

எம்மை-எங்களை, கங்கை ஆற்றின்-கங்காநதியினின்று, ஏற்றினை ஆயின்-கரையேற்றினையானால் (அச்செய்கை), வெம்-கொடிய, இடர்-துயரமாகிய, கடல் நின்று-சாகரத்தினின்று, ஏற்றி-கரையேற்றி, வேந்தன்பால்-இராமபிரானிடம், விடுத்தது-சேர்த்ததாகும்', என்றான்-என்று சொன்னான்.

பொழி:—என்று சொன்னபின் பெருமைபொருந்திய பரதனும் அவ்விடத்திலே அன்றை இரவில் படுக்கவொண்ணாத அரிய புழுதியிலே படுத்திருந்து பொழுதுவிடிந்தபின் குகனை நோக்கிப் "பகைவர்கள் பின்னிடையும்படி நிலைபெற்று ஒலிக்கிற நெருங்கிய வீரக்கழலையுடைய வேடர் தலைவனே, இப்பொழுது எங்களைக் கங்காநதியினின்று கரையேற்றினையானால் அச்செய்கை கொடிய துயரமாகிய சாகரத்தினின்று கரையேற்றி இராமபிரானிடம் சேர்த்ததாகும்" என்று சொன்னான். (40)

41. நன்றெனப் புளிஞர் வேந்த னண்ணினன் றமரை நாவாய்
சென்றினித் தருதி ரென்ன வந்தன சிவன்சேர் வெள்ளிக்
குன்றெனக் குனிக்கு மம்பொற் குவடெனக் குபேரன் மானம்
ஒன்றென நாணிப் பல்வே றுருவுகொண் டனைய வான.

பத:—(அதுகேட்டு), புளிஞர் வேந்தன்-வேடர்க் கரசனாகிய குகன், நன்று என-நல்லதென்று சொல்லி, தமரை-தன் இனத்தாரை, நண்ணினன்-சேர்ந்து (அவர்களை நோக்கி), 'இனி—, சென்று-(நீங்கள்) போய், நாவாய்-ஓடங்களை, தருதிர்-கொண்டுவாருங்கள்' என்ன-என்று சொல்ல—, (உடனே சிவன் சேர்-சிவபிரான் எழுந்தருளியுள்ள, வெள்ளி குன்று என-வெள்ளி மலையான கைலாசமும், குனிக்கும்-(அப்பெருமான் வில்லாக) வளைத்த, அம்-அழகிய, பொன் குவடு என-பொன்மலையான மேருவும், குபேரன் மானம் (என)-குபேரனது புஷ்பகவிமானமும், ஒன்று-ஒன்றொன்றாக உள்ளன, என-என்று சொல்லப்படுதற்கு, நாணி-வெள்கி, பல் வேறு உருவு-பலவகைப்பட்ட வெவ்வேறான வடிவங்களை, கொண்டு அனைய ஆன-கொண்டாற் போன்ற தன்மையுடையனவாகிய ஓடங்கள், வந்தன-வந்துசேர்ந்தன.

பொழி:—அதுகேட்டு வேடர்க்கரசனாகியகுகன் நல்லதென்று சொல்லித் தன் இனத்தாரைச் சேர்ந்து அவர்களை நோக்கி "இனி நீங்கள் போய் ஓடங்களைக் கொண்டுவாருங்கள்" என்று சொல்ல, உடனே சிவபிரான் எழுந்தருளியுள்ள வெள்ளிமலையான கைலாசமும், அப்பெருமான் வில்லாகவளைத்த அழகிய பொன்மலையான மேருவும், குபேரனது புஷ்பக விமானமும் ஒன்றொன்றாக உள்ளன என்று சொல்லப்படுதற்கு வெள்கிப் பலவகைப்பட்ட வெவ்வேறான வடிவங்களைக் கொண்டாற்போன்ற தன்மையுடையனவாகிய ஓடங்கள் வந்துசேர்ந்தன. (41)

42. வந்தன வரம்பி லாவாய் வரிசிலைக் குரிசின் மைந்த
சிந்தனை யாவ தென்று சிருங்கிபே ரியர்கோன் செப்பச்
சுந்தர வரிவி லானுஞ் சுமந்திரன் றன்னை நோக்கி
எந்தையித் தானை தன்னை யேற்றுதி விரைவி னென்றான்.

பத:—சிருங்கிபேரியர்கோன்-சிருங்கிபேரமென்னும் ஊரிலுள்ளார்க்குத் தலைவனாகிய குகன், (பரதனை நோக்கி), "வரி-கட்டமைந்த, சிலை-வில்வில் வல்ல, குரிசில்-ஆடவரிற்சிறந்த தசரதசக்கரவர்த்தியின், மைந்த-குமாரனே, வரம்பு இல்-அளவுகடந்த, நாவாய்-மரக்கலங்கள், வந்தன-வந்துசேர்ந்தன: சிந்தனை-(இனி உன்) கருத்து, யாவது-என்ன ?" என்று செப்ப-என்றுசொல்ல, சுந்தரம்-அழகிய, வரி-கட்டமைந்த, விலானும்-வில்லையுடைய பரதனும், சுமந்திரன்தன்னைநோக்கி-சுமந்திரனைப் பார்த்து, "எந்தை-என் தந்தை போன்றவனே, இ தானைதன்னை-இச்சேனையை, விரைவின்-விரைவில், ஏற்றுதி-(மரக்கலங்களில்) ஏற்றுவாய்" என்றான்-என்று சொன்னான்.

பொழி:—சிருங்கிபேரம் என்னும் ஊரிலுள்ளார்க்குத் தலைவனாகிய குகன் பரதனைநோக்கி "கட்டமைந்த வில்லில்வல்ல ஆடவரிற் சிறந்த தசரத சக்கரவர்த்தியின் குமாரனே, அளவுகடந்த மரக்கலங்கள் வந்துசேர்ந்தன; இனி உன் கருத்து என்ன?" என்று சொல்ல, அழகிய கட்டமைந்த வில்லை யுடைய பரதனும் சுமந்திரனைப்பார்த்து 'என் தந்தைபோன்றவனே, இச் சேனையை விரைவில் மரக்கலங்களில் ஏற்றுவாய்' என்று சொன்னான். (42)

43. குரிசில தேவ லாலக் குரகதத் தேர்வ லானும்
வரிசையின் வழாமை நோக்கி மரபுளி வகையி னேற்றக்
கரிபரி யிரதங் காலாள் கணக்கறு கரையில் வேலை
எரிமணி திரையின் வீசுங் கங்கையா றேறிற் றன்றே.

பத:—குரிசிலது-அரசனாகிய பரதனது, ஏவலால்-கட்டளையால், அ-அந்த, குரகதம்-குதிரைகள்பூட்டிய, தேர்-தேரை, வலானும்-செலுத்தவல்ல பாகனான சுமந்திரனும், வரிசையின்-முறைமையினின்று, வழாமை-தவறாமல், நோக்கி-பார்த்து, மரபுளி-தகுதிக்கேற்ப, வகையின்-இனம்பகுத்து, ஏற்ற-(மரக்கலங்களில்) ஏறச்செய்ய, கரி-யானைகளும், பரி-குதிரைகளும், இரதம்-தேர்களும், காலாள்-காலாள்களுமாகிய, கணக்கு அறு-கணக்கிடமுடியாத, கரை இல்-கரையற்ற, வேலை-(சேனை) சமுத்திரமானது, எரி-விளங்குகின்ற, மணி-இரத்தினங்களை, திரையின்-அலைகளால், வீசும்-எறிகிற, கங்கை ஆறு-கங்காநதியின்மேல் (சென்று), ஏறிற்று-கரையேறிற்று.

பொழி:—அரசனாகிய பரதனது கட்டளையால் அந்தக் குதிரைகள் பூட்டிய தேரைச் செலுத்தவல்ல பாகனான சுமந்திரனும் முறைமையினின்று தவறாமல் பார்த்துத் தகுதிக்கேற்ப இனம்பகுத்து மரக்கலங்களில் ஏறச்செய்ய,

யானைகளும் குதிரைகளும் தேர்களும் காலாள்களுமாகிய கணக்கிடமுடியாத கரையற்ற சேனைசமுத்திரமானது விளங்குகின்ற இரத்தினங்களை அலைகளால் எறிகிற கங்காநதியின் மேற்சென்று கரையேறிற்று. (43)

[ முனிவர்கள் ஆகாயமார்க்கமாக ஆற்றைக்கடந்து சென்றார்கள். பரதன் தாய்மார்களுடன் ஓடத்தில் ஏறலானான். சுமந்திரனும் சத்துருக்கினனும் ஏறினார்கள். குகன் ஓடத்தைச் செலுத்தலுற்றான். அக்கால், பரதனால் குகன் தாய்மார்களுக்கு அறிமுகம் செய்துவைக்கப்படுகிறான். மக்களைச் சமமாகப்பார்க்கும் பெருமைவாய்ந்த கௌசல்யாதேவி குகனைத் தமது ஐந்தாவது மகனாகக்கருதி ஆசிகூறுகின்றார். ஓடம் அக்கரைசேர அனைவரும் பாரத்துவாச முனிவரது ஆச்சிரமத்தை அடைகின்றனர்; அவர் அளித்த விருந்தையுண்டு சித்திரகூடபருவதத்தைச் சேரலாயினர். ]

## (4) ஸ்ரீராம பட்டாபிஷேகம்.

[பரதன் சேனையுடன் வருதலைக் கண்டு சந்தேகங்கொண்டு கோபமுற்ற இலக்குமணன், பரதனது தவக்கோலத்தைக் கண்டு கோபம் மாறினன். சித்திரகூடமலையை அடைந்த பரதன் ஸ்ரீராம பிரானைக் கண்டு வணங்கினன்; அயோத்திக்கு வந்து மணிமுடிசூடி அரசாளுமாறு வேண்டினன். இராமபிரான் தசரதன் விண்ணுலக மெய்தியதை அறிந்து வருந்தி நீர்க்கடன்களை முறைப்படி செய்தான். சீதாபிராட்டியும் தேவிமார்களால் தேற்றப்பட்டார். தன்னை நாட்டிற்கு வந்து முடிசூட்டிக்கொள்ளுமாறு வசிஷ்டர் முதலாயினோர் வேண்டியபிறகும் பல காரணங்களைக் கூறி மறுத்த இராமபிரான் அளித்த பாதுகைகளைப் பெற்றுப் பரதன் நந்திக் கிராமத்தை அடைந்து அங்கேயே தங்கலானன். அப்பால், இராமன், 'இனி இங்கே இருந்தால் நகரமக்கள் அடிக்கடி வரக்கூடும்' என்று கருதித் தண்டகாரணியத்திற்குச் சென்றான்; முனிவர்கள் வேண்டிக்கொள்ள அரக்கர்களை அழிப்பதாக வாக்களித்தான்; விராதனை வீட்டிச் சூர்ப்பணகையை இலக்குவன் அங்கபங்கம் செய்த காரணத்தால் எதிர்த்த கரன் முதலானவர்களை வதைத்துப் பஞ்சவடியில் வசிக்கலானன். தனது பெருமைக்குக் குறைவு நேர்ந்தமையால் கோபங் கொண்ட சூர்ப்பணகையின் தூண்டுதலால் சீதைபால் மோகங் கொண்ட இராவணன் மாரீசனல் இராமலக்ஷ்மணர்களைப் பிரித்துச் சீதையை மண்ணோடு பெயர்த்து எடுத்துக்கொண்டு இலங்கை நோக்கிச் செல்லுகையில், சடாயுவால் தடுக்கப்பட்டான்; கடைசியில் அவரை வீழ்த்தித் தனது நகரத்திற்குச் சென்று சீதாபிராட்டியைச் சிறை வைத்தான். சீதையைப் பிரிந்து சென்ற இராம லக்ஷ்மணர்கள் விரைந்து திரும்பிவந்து பிராட்டியைக் காணுமற் கலங்கி, இறக்குந்தறுவாயில் கிடந்த சடாயுவால் செய்தியை உணர்ந்து அவருக்கு முத்தியளித்துக் கபந்தனைக் கண்டார்கள். சாபவிடுதலை பெற்ற அவன் சபரியைப் பார்க்குமாறு சொல்லி விடைபெற்றான். தவ முதியவளாகிய சபரி இராமனை உபசரித்துச் சுக்கிரீவனது நட்பைப் பெற்றுக்கொள்ளுமாறு கூறி வீடு பெற்றாள். பின்பு, சொல்லின் செல்வனாகிய ஆஞ்சநேயரால் சுக்கிரீவனுக்கும் இராமபிரானுக்கும் நட்பு உண்டாக, அங்கு நிகழ்ந்த மந்திராலோசனையின்படி வாலியும் சுக்கிரீவனும் போர்புரிய இராமபாணத்தால் வாலி முத்தியடைகின்றான். இலக்குமணனால் சுக்கிரீவன் முடிசூட்டப்படுகிறான். பின்னர்க் குறித்தகாலத்தில் சுக்கிரீவன் வராமையால் இராமபிரான்

கோபங்கொள்ளச் சுக்கிரீவனது கட்டளையின்படி வானரர்கள் சீதை யிருக்குமிடத்தைத் தேடலானார்கள். தென்திசைக்குச் சென்ற அனுமான், பிராட்டியை இலங்கையிற் கண்டு ஆழி அளித்துத் திரும்பினான்; சீதை இலங்கையிலிருப்பதைத் தெரிவித்துச் சூடாமணியைக் கொடுக்க இராமன் முதலாயினோர் சேனைகளுடன் புறப்பட்டுத் தென்கடலைச் சேதுகட்டிக் கடந்து இலங்கையை முற்றுகை போடலாயினர்; இக்கரையில் தங்களைச் சரணாக அடைந்த விபீடணன் முதலானவர்களுடைய ஆலோசனையின்படி தேவர் முனிவர்களின் துன்பம் நீங்க இராவணன் முதலான அரக்கர்கள் அழிக்கப்பட்டார்கள். தமது பகையை முடித்து வெற்றிவீரனாக விளங்கும் இராமபிரான் விபீஷணனுக்கு இலங்கா ராஜ்ஜியத்தை முடிசூட்டி உரிமையாக்கினான். தேவர்களாலும் தசரத சக்கரவர்த்தியாலும் சீதாபிராட்டியின் கற்பு மேம்பாடு வெளியிடப்பட்டது. இராமன் தசரதனிடம் கைகேயியையும் பரதனையும் மன்னிக்குமாறு வரம் பெற்றான்; சீதாபிராட்டியுடன் வானர வீரர் சூழப் புஷ்பக விமானத்தில் ஏறி அயோத்தியை நோக்கிப் புறப்பட்டான்; பரத்துவாஜ முனிவர் அளித்த விருந்தை ஏற்று அங்கே தங்கி, அனுமானை அனுப்பிப் பரதனைத் தீக் குளிக்காமல் காத்தான்; குறித்தநாள் கடவாமல் பரதனை அடைந்து மகிழ்ந்தான்; நால்வகைச் சேனைகளும் புடைசூழ அயோத்திமா நகரை அடைந்து தாய்மார்களையும் குருமார்களையும் தங்கள் குல தெய்வத்தையும் வணங்கினான்; விபீஷணன், சுக்கிரீவன் முதலானவர்களுக்கு அரண்மனை முதலியவற்றைக் காட்டித் தக்கபடி உபசரிக்குமாறு பரதனுக்குக் கட்டளையிட்டான். விபீஷணன் முதலானவர்கள் பெருவியப்புடன் கண்டுகளித்துப் பரதன் காட்டிய மாளிகையில் தங்கினார்கள்.]

1. இருந்தன ரனைய மாடத் தியல்பெலா மெண்ணி யெண்ணிப்
பரிந்தன னிரவி மைந்தன் பரதனை வணங்கித் தூயோய்
கருந்தடங் கண்ணி னாற்குக் காப்புநா ணணியு நன்னாள்
தெரிந்திடா திருத்த லென்னோ வென்றலு மண்ணல் செப்பும்

பத:—அந்த மாடத்து—, இயல்பு எலாம்-சிறப்பியல்புகளை எல்லாம், எண்ணி எண்ணி-நினைந்து நினைந்து, இருந்தனர்-விபீஷணன் முதலியோர் இருந்தனர்; (அப்போது) இரவிமைந்தன்-சூரியகுமாரனாகிய சுக்கிரீவன், பரிந்தனன்-அன்புடையவனாகி, பரதனைவணங்கி—, 'தூயோய்-பரிசுத்தியுடையவனே, கரும்தடம் கண்ணினாற்கு-கரியபெரிய கண்களையுடைய ஸ்ரீராமபிரானுக்கு, காப்பு நாண்

அணியும் நல் நாள்—(பட்டாபிஷேகத்தின்பொருட்டு) விரதம்-ரக்ஷாபந்தனம் செய்வதற்கு ஏற்ற நல்லநாளை, தெரிந்திடாதிருத்தல்-ஆராய்ந்திடாதிருப்பது, என்-யாது கருதி?' என்றலும்-என்று வினவியவுடனே, அண்ணல்-பெருமைபொருந்திய பரதன், செப்பும்-சொல்லலுற்றான்.

பொழி:—அந்த மாடத்துச் சிறப்பியல்புகளையெல்லாம் நினைந்துநினைந்து விபீஷணன் முதலியோர் இருந்தனர்; அப்போது சூரியகுமாரனாகிய சுக்கிரீவன் அன்புடையவனாகிப் பரதனை வணங்கிப் 'பரிசுத்தியுடையவனே, கரிய பெரிய கண்களையுடைய ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகத்தின்பொருட்டு விரதம்-ரக்ஷாபந்தனம் செய்வதற்கு ஏற்ற நல்லநாளை ஆராய்ந்திடாமல் இருப்பது யாது கருதி?' என்று வினவியவுடனே பெருமைபொருந்திய பரதன் சொல்லலுற்றான். (1)

2. ஏழ்கட லதனிற் றோய மிருநதி பிறவிற் றோயம்
தாழ்விலா திவண்வந் தெய்தற் கருமைத்தோர் தன்மைத்தென்ன
ஆழியொன் றுடையோன் மைந்த னனுமனைக் கடிதி னோக்கச்
சூழ்புவி யதனை யெல்லாங் கடந்தனன் காலின் றோன்றல்.

பத:—'ஏழ்கடல் அதனில் தோயம்-ஏழுகடல்களின் தீர்த்தங்களையும், பிற நதியில் தோயம்-மற்றுமுள்ள பெரிய நதிகளின் தீர்த்தங்களையும், தாழ்விலாது-குறைவில்லாமல், இவண் வந்து எய்தல்-இங்கே கொண்டுவந்துசேர்வது, ஓர் அருமைத்தன்மைத்து என்ன-ஓர் அருமையான தன்மையையுடையது என்று பரதன் கூற, ஆழி ஒன்று உடையோன் மைந்தன்-ஒற்றையாழித் தேரையுடைய சூரியன் மகனாகிய சுக்கிரீவன், அனுமனை நோக்க—, காலின் தோன்றல்-வாயுபுத்திரனாகிய அனுமான், கடிது-விரைவாக, சூழ்புவி அதனை எல்லாம் கடந்தனன்-(தீர்த்தங்களைக் கொண்டுவரும்பொருட்டுக்) கடல்சூழ்ந்த பூமியையெல்லாம் கடந்துசென்றான்.

பொழி:—"ஏழுகடல்களின் தீர்த்தங்களையும் மற்றுமுள்ள பெரிய நதிகளின் தீர்த்தங்களையும் குறைவில்லாமல் இங்கே கொண்டுவந்து சேர்வது ஓர் அருமையான தன்மையையுடையது" என்று பரதன் கூற, ஒற்றையாழித் தேரையுடைய சூரியன் மகனாகிய சுக்கிரீவன் அனுமானை நோக்க வாயுபுத்திரனாகிய அனுமான் தீர்த்தங்களைக் கொண்டுவரும்பொருட்டுக் கடல்சூழ்ந்த பூமியையெல்லாம் கடந்துசென்றான். (2)

3. கோமுனி யோடு மற்றை மறையவர்க் கொணர்க வென்றா
ஏவினன் றேர்வ லான்சென் றிசைத்தலு முலக மீன்ற
பூமகன் றந்த வந்தப் புனிதமா தவன்வந் தெய்த
யாவரு மெழுந்து போற்றி யிணையடி தொழுது நின்றார்.

பத :—'கோமுனியோடு-முனிவர்களுட் சிறந்த வசிஷ்டனுடனே, மற்றை மறையவர் கொணர்க-பிற அந்தணர்களையும் அழைத்துவருக', என்னு-என்று, (பரதன் சுமந்திரனை) ஏவினன்—, தேர்வலான்-தேரைச் செலுத்துவதில் சமர்த்தனை சுமந்திரன், சென்று இசைத்தலும்-போய்ச் சொன்னவுடனே, உலகம் ஈன்ற பூமகன் தந்த-உலகங்களையெல்லாம் படைத்த தாமரைமலரில் வாழும் பிரமன் பெற்ற, அந்த—, புனிதமாதவன்-பரிசுத்த மான சிறந்த தவத்தையுடைய வசிஷ்டமுனிவன், வந்துஎய்த-வந்துசேர, யாவரும் எழுந்து—, போற்றி-துதித்து, இணை அடி தொழுது நின்றார்-(அவனுடைய) இரண்டு திருவடிகளையும் வணங்கி நின்றனர்.

பொழி :—'முனிவர்களுட் சிறந்த வசிஷ்டனுடனே பிற அந்தணர்களையும் அழைத்துவருக' என்று பரதன் சுமந்திரனை ஏவினன்; தேரைச் செலுத்துவதில் சமர்த்தனை சுமந்திரன் போய்ச் சொன்னவுடனே உலகங்களையெல்லாம்படைத்த தாமரைமலரில்வாழும் பிரமன்பெற்ற அந்தப் பரிசுத்தமான சிறந்த தவத்தையுடைய வசிஷ்டமுனிவன் வந்துசேர யாவரும் எழுந்து துதித்து அவனுடைய இரண்டு திருவடிகளையும் வணங்கி நின்றனர். (3)

4. அரியணை பரத னீய வதன்கணுண் டிருந்த வந்தப்
பெரியவ னவனை நோக்கிப் பெருநிலக் கிழத்தி யோடும்
உரியமா மலரா ளோடு முவந்தினி தூழிக் காலம்
கரியவ னுய்த்தற் கொத்த காப்புநா ளைனா யென்றான்.

பத :—பரதன்—, அரியணை ஈய-(அம்முனிவன் வீற்றிருத்தற்குற்ற) சிங்காதனத்தை அளிக்க, ஆண்டு-அப்போது, அதன் கண் இருந்த அந்தப் பெரியவன்—, அவனை நோக்கி-அப்பரதனைப்பார்த்து, 'பெருநிலம் கிழத்தி யோடும்-பெருமைபெற்ற பூமிதேவியுடனும், உரிய மா மலரா ளோடும்-தனக்குரிய சிறந்த தாமரைமலரில் வீற்றிருக்கின்ற திருமகளுடனும், உவந்து-கூடி மனமகிழ்ந்து, இனிது—, ஊழிக்காலம்-நெடுங்காலம், கரியவன்-இராமன், உய்த்தற்கு ஒத்த-அரசுபுரிதற்குப் பொருந்திய, காப்பு நாள்-முடிசூடுதற்குரிய நாள், நாளை என்றான்-நாளைத்தினமாகும் என்று கூறினான்.

பொழி :—பரதன் அம்முனிவன் வீற்றிருத்தற்குற்ற சிங்காதனத்தை அளிக்க அப்போது அதன்கண் இருந்த அந்தப்பெரியவன், அப்பரதனைப் பார்த்துப் 'பெருமைபெற்ற பூமிதேவியுடனும் தனக்குரிய சிறந்த தாமரை மலரில் வீற்றிருக்கின்ற திருமகளுடனும் கூடி மனமகிழ்ந்து இனிது இராமன் நெடுங்காலம் அரசுபுரிதற்குப்பொருந்திய முடிசூடுதற்குரியநாள் நாளைத்தின மாகும்' என்று கூறினான். (4)

5. நான்முகத் தொருவ னேவ நயனறி மயனென் றோதும்
நூன்முகத் தோங்கு கேள்வி நுணங்கியோன் வணங்கு நெஞ்சன்
கோன்முகத் தளந்து குற்றஞ் செற்றுல கெல்லாங் கொள்ளும்
மான்முகத் தொருவ னன்னாண் மண்டபம் வயங்கக் கண்டான்.

பத:—நான் முகத்து ஒருவன் ஏவ-நான்குமுகங்களையுடைய பிரமன் கட்டளையிட, நயன் அறி-(கட்டடம் அமைக்கும்) முறைமையை அறிந்த, மான் முகத்து ஒருவன்-மான்முகத்தைப்பெற்ற ஒப்பற்றவனை, மயன் என்று ஓதும்-மயன் என்று சொல்லப்படுகின்ற, நூல் முகத்து ஓங்கு கேள்வி நுணங்கியோன்-சிற்பநூல்களிற் சிறந்த கேள்வியையும் நுண்ணறிவையுமுடையவன், வணங்கு நெஞ்சன்-வணக்கங்கொண்ட மனத்தையுடையவனாகி, நல்நாள்-நல்ல நாளிலே, கோல் முகத்து அளந்து-அளவுகோலால் அளந்து, குற்றம் செற்று-குற்றம் நீக்கி, உலகு எலாம் கொள்ளும் மண்டபம்-உலகங்களெல்லாவற்றையும்கொள்ளவல்ல மண்டபத்தை, வயங்க கண்டான்-விளங்குமாறு அமைத்தான்.

பொழி:—நான்குமுகங்களையுடைய பிரமன் கட்டளையிடக் கட்டடம் அமைக்கும் முறைமையை அறிந்த மான்முகத்தைப்பெற்ற ஒப்பற்றவனை மயன் என்று சொல்லப்படுகின்ற சிற்பநூல்களிற் சிறந்த கேள்வியையும் நுண்ணறிவையுமுடையவன், வணக்கங்கொண்ட மனத்தையுடையவனாகி நல்ல நாளிலே அளவுகோலால்அளந்து குற்றம்நீக்கி உலகங்களெல்லாவற்றையும் கொள்ளவல்ல மண்டபத்தை விளங்குமாறு அமைத்தான். (5)

6. சூழ்கட னான்கிற் றோய மெழுவகை யாகச் சொன்ன
ஆழ்திரை யாற்றி னீரோ டமைத்தியின் றென்ன வாமென்
றூழியி னிறுதி செல்லுந் தாதையி னுலவி யன்றே
ஏழ்திரை நீருந் தந்தா னிருந்துயர் மருந்து தந்தான்.

பத:—'சூழ் கடல் நான்கின் தோயம்-உலகைச்சூழ்ந்திருக்கின்ற நான்கு கடலின் நீரையும், எழுவகை ஆக சொன்ன ஆழ்திரை ஆற்றின் நீரோடு-எழுவகையாகச்சொல்லப்பட்ட ஆழ்ந்த அலைகளையுடைய கடலின்நீரையும் (புண்ணிய) நதிகளின் தீர்த்தங்களையும், இன்று அமைத்தி என்ன-இன்று கொண்டுவந்து சேர்ப்பாய்' என்று சுக்கிரீவன்கூற, இரும் துயர் மருந்து தந்தான்-பெருந்துன்பம் (நேர்ந்தகாலத்தில்) மருந்துமலையைக்கொணர்ந்தவனை அனுமான், 'ஆம் என்று-அப்படியே கொணர்வேன்' என்று உடன்பட்டு, ஊழியின் இறுதி செல்லும் தாதையின் உலவி-யுகாந்தகாலத்திற்செல்லும் தனது தந்தையான வாயுதேவன்போல விரைந்துசென்று, ஏழ் திரை நீரும்-ஏழுகடலின்நீரையும், அன்றே-அன்றைக்கே, தந்தான்-கொண்டுவந்து சேர்த்தான்.

பொழி :—" உலகத்தைச்சூழ்ந்திருக்கின்ற நான்குகடலின் நீரையும் ஏழுவகையாகச்சொல்லப்பட்ட ஆழ்ந்த அலைகளையுடைய கடலின் நீரையும் புண்ணியநதிகளின் தீர்த்தங்களையும் இன்று கொண்டுவந்து சேர்ப்பாய்" என்று சுக்கிரீவன் கூற, பெருந்துன்பம் நேர்ந்தகாலத்தில் மருத்துமலையைக் கொணர்ந்தவனான அனுமான், 'அப்படியே கொணர்வேன்' என்று உடன்பட்டு யுகாந்தகாலத்திற்செல்லும் தனது தந்தையான வாயுதேவன்போல விரைந்துசென்று ஏழுகடலின் நீரையும் அன்றைக்கே கொண்டுவந்து சேர்த்தான். (6)

7. எரிமணிக் குடங்கள் பன்னூற் றியானைமேல் வரிசைக் கான்ற
விரிமதிக் குடையி னீழல் வேந்தர்கள் பலரு மேந்திப்
புரைமணிக் காள மார்ப்பப் பல்லியந் துவைப்பப் பொங்கும்
சரயுவிற் புனலுந் தந்தார் சங்கின முரல மன்னோ.

பத :—வேந்தர்கள் பலரும்—, வரிசைக்கு ஆன்ற-தங்கள் தங்களுடைய பெருமைக்குப் பொருந்தியவண்ணம், விரி மதி குடையின் நீழல்-விரிந்த சந்திரன்போன்ற வெண்குடையின் நிழலிலே, பல் நூறு எரி மணி குடங்கள்-பலநூற்றுக்கணக்கான விளங்குகின்ற இரத்தினக்குடங்களை, யானையின்மேல் ஏந்தி-யானையின்மேல் ஏற்றிக்கொண்டு, புரை மணி காளம் ஆர்ப்ப-உள்தொளையுள்ள அழகிய காளம்என்னும் ஊதுகருவி ஆரவாரிக்கவும், பல் இயம் துவைப்ப-பலவகை வாத்தியங்கள் ஒலிக்கவும், சங்கு இனம் முரல-சங்கின் கூட்டங்கள் முழங்கவும், பொங்கும் சரயுவின்-அலைமோதுகின்ற சரயூநதியின், புனலும்-தீர்த்தத்தையும், தந்தார்-கொணர்ந்தனர்.

பொழி :—வேந்தர்கள் பலரும் தங்கள் தங்களுடைய பெருமைக்குப் பொருந்தியவண்ணம் விரிந்த சந்திரன்போன்ற வெண்குடையின் நிழலிலே பல நூற்றுக்கணக்கான விளங்குகின்ற இரத்தினக்குடங்களை யானையின்மேல் ஏற்றிக்கொண்டு உள்தொளையுள்ள அழகிய காளம்என்னும் ஊதுகருவி ஆரவாரிக்கவும் பலவகை வாத்தியங்கள் ஒலிக்கவும் சங்கின்கூட்டங்கள் முழங்கவும் அலைமோதுகின்ற சரயூநதியின் தீர்த்தத்தையும் கொணர்ந்தனர். (7)

8. மாணிக்கப் பலகை தைத்து வயிரத்திண் கால்கள் சேர்த்தி
ஆணிப்பொன் சுற்றி முற்றி யழகுறச் சமைத்த பீடம்
ஏணுற்ற பளிக்கு மாடத் திட்டன ரதனின் மீது
பூணுற்றதிரடோள்வீரன் றிருவொடும்பொலிந்தான்மன்னோ.

பத :—மாணிக்கம் பலகை-மாணிக்கக்கற்கள்வைத்து இழைக்கப்பெற்ற பலகை, தைத்து-பொருத்தப்பெற்றும், வயிரம்-வயிரக்கற்களாலாகிய, திண்-உறுதியான, கால்கள்—, சேர்த்தி-சேர்க்கப்பெற்றும், ஆணி பொன்-மாற்றுயர்ந்த பொன்னால், சுற்றி முற்றி-சுற்றுப்புறம்முழுவதும் அமைத்தும், அழகு

உற சமைத்த பீடம்-அழகுபொருந்தச்செய்த பீடத்தை, ஏண் உற்ற-பெருமை பொருந்திய, பளிக்கு மாடத்து இட்டனர்—, அதனின்மீது-அதன்மேலே, பூண் உற்ற-ஆபரணங்களை அணிந்த, திரள் தோள் வீரன்-திரண்டதோள்களையுடைய வீரனான இராமபிரான், திரு ஒடும்-இலக்குமியின் அமிசமான சீதாபிராட்டியோடும், பொலிந்தான்-விளங்கினான்.

பொழி:—மாணிக்கக்கற்கள்வைத்து இழைக்கப்பெற்ற பலகை பொருத்தப்பெற்றும் வயிரக்கற்களாலாகிய உறுதியான கால்கள் சேர்க்கப்பெற்றும் மாற்றுயர்ந்தபொன்னால் சுற்றுப்புறம்முழுவதும் அமைத்தும் அழகு பொருந்தச்செய்த பீடத்தைப் பெருமைபொருந்திய பளிக்குமண்டபத்து இட்டனர்; அதன்மேலே ஆபரணங்களை அணிந்த திரண்டதோள்களையுடைய வீரனான இராமபிரான் இலக்குமியின் அமிசமான சீதாபிராட்டியோடும் விளங்கினான். (8)

9. மங்கல கீதம் பாட மறையொலி முழங்க வல்வாய்ச்
சங்கினங் குமுறப் பாண்டி றண்ணுமை யொலிப்பத் தாவில்
பொங்குபல் லியங்க ளார்ப்பப் பூமழை பொழிய விண்ணோர்
எங்கணா யகனை வெவ்வே றெதிர்ந்தபி டேகஞ் செய்தார்.

பத:—மங்கல கீதம் பாட-மங்கலப்பாடல்கள் பாடவும், மறை ஒலி முழங்க-வேதஒலி முழங்கவும், வல் வாய் சங்கு இனம் குமுற-வலிய வாயையுடைய சங்குக்கூட்டங்கள் குமுறவும், பாண்டில்-தாளமும், தண்ணுமை-மத்தளமும், ஒலிப்ப-ஒலிக்கவும், தாவில்-குற்றமற்ற, பொங்கு-ஒலிமிகுந்த, பல் இயங்கள் ஒலிப்ப-பிற பலவாத்தியங்கள் கோஷிக்கவும், பூ மழை பொழிய(வும்)—, விண்ணோர்-தேவர்கள், எங்கள் நாயகனை-எங்களுடைய தலைவனான ஸ்ரீ ராமனை, வெவ்வேறு-தனித்தனியே, எதிர்ந்து-முன்வந்து, அபிடேகம் செய்தார்—.

பொழி:—மங்கலப்பாடல்கள் பாடவும் வேதஒலி முழங்கவும் வலிய வாயையுடைய சங்குக்கூட்டங்கள் குமுறவும் தாளமும் மத்தளமும் ஒலிக்கவும் குற்றமற்ற ஒலிமிகுந்த பிற பலவாத்தியங்கள் கோஷிக்கவும் பூமழை பொழியவும் தேவர்கள் எங்களுடைய தலைவனான ஸ்ரீராமனைத் தனித்தனியே முன்வந்து அபிஷேகம் செய்தார்கள். (9)

10. மாதவர் மறைவ லாளர் மந்திரக் கிழவர் மற்றும்
மூதறி வாள ருள்ள சான்றவர் முதனீ ராட்டச்
சோதியான் மகனு மற்றைத் துணைவரு மனுமன் றானும்
தீதிலா விலங்கை வேந்தும் பின்னபி டேகஞ் செய்தார்.

பத:—மாதவர்-சிறந்த தவத்தையுடைய முனிவர்களும், மறைவலாளர்-வேதங்களில் வல்லவர்களான அந்தணர்களும், மந்திரக் கிழவர்-மந்திராலோசனைக்குரிய மந்திரிமார்களும், மற்றும் உள்ள மூது அறிவாளர்-பின்னும் அங்கே

உள்ள பேரறிவாளர்களான, சான்றவர்-பெரியோர்களும், முதல்-முதலில், நீராட்ட-அபிஷேகம்செய்ய, பின்-பின்பு, சோதியான் மகனும்-சூரியகுமாரனை சுக்கிரீவனும், மற்றைத்துணைவரும்-பிற சினேகிதர்களும், அனுமனும்—, தீது இலா-குற்றமற்ற, இலங்கை வேந்தும்-இலங்கை அரசனாகிய விபீஷணனும், அபிடேகம் செய்தார்—.

பொழி :—சிறந்த தவத்தையுடைய முனிவர்களும் வேதங்களில் வல்லவர்களான அந்தணர்களும் மந்திராலோசனைக்குரிய மந்திரிமார்களும் பின்னும் அங்கே உள்ள பேரறிவாளர்களான பெரியோர்களும் முதலில் அபிஷேகம் செய்யப் பின்பு சூரியகுமாரனை சுக்கிரீவனும் பிற சினேகிதர்களும் அனுமானும் குற்றமற்ற இலங்கை அரசனாகிய விபீஷணனும் அபிஷேகம் செய்தார்கள். (10)

11. மரகதச் சயிலஞ் செந்தா மரைமலர்க் காடு பூத்துத்
திரையெறி கங்கை வீசுந் திவலையா னனைந்து செய்ய
இருகுழை தொடரும் வேற்கண் மயிலொடு மிருந்த தேய்ப்பப்
பெருகிய செவ்வி கண்டார் பிறப்பெனும் பிணிக டீர்ந்தார்.

பத :—மரகதம் சயிலம்-மரகதப்பச்சைமலையானது, செந்தாமரை—, மலர் காடு-மலர்த்தொகுதி, பூத்து—, திரை எறி-அலைவீசுகின்ற, கங்கை வீசும்-கங்காநதிதுளிக்கின்ற, திவலையால் நனைந்து—, செய்ய-செவ்விய, இரு குழை தொடரும்-இரண்டு குழைகளிலே தொடர்ந்துசெல்கின்ற, வேல் கண்-வேல் போன்ற கண்களைக்கொண்ட, மயிலோடும்—, இருந்தது ஏய்ப்ப-இருந்ததை ஒப்ப, (வீற்றிருந்த) பெருகிய செவ்வி-(அந்த இராமபிரானுடைய) மிகுந்த அழகை, கண்டார்—, பிறப்பு எனும்-பிறப்பு என்கின்ற, பிணிகள்-நோய்கள், தீர்ந்தார்-நீங்கப்பெற்றவராவர்.

பொழி :—மரகதப் பச்சைமலையானது செந்தாமரைமலர்த்தொகுதி பூத்து அலைவீசுகின்ற கங்காநதி துளிக்கின்ற திவலையால் நனைந்து செவ்விய இரண்டு குழைகளிலே தொடர்ந்துசெல்கின்ற வேல்போன்ற கண்களைக் கொண்ட மயிலோடும் இருந்ததைஒப்ப வீற்றிருந்த அந்த இராமபிரானுடைய மிகுந்த அழகைக்கண்டார் பிறப்பு என்கின்ற நோய்கள் நீங்கப்பெற்றவராவர். (11)

12. தெய்வநீ ராடற் கொத்த செய்வினை வசிட்டன் செய்ய
ஐயமில் சிந்தை யானச் சுமந்திர னமைச்ச ரோடும்
நொய்தினி னியற்ற நோன்பின் மாதவர் நுனித்துக் காட்ட
எய்தின வியன்ற பல்வே றிந்திரற் கியன்ற வென்ன.

பத :—தெய்வம் நீரால்-தெய்வத்தன்மையுள்ள தீர்த்தங்களால், ஆடற்கு ஒத்த-அபிஷேகம்செய்வித்தற்கேற்ற, செய் வினை-சடங்குகளை, வசிட்டன்—,

செய்ய-செய்துமுடிக்குமாறு, நோன்பின்-விரதங்களையுடைய, மாதவர்-முனிவர்கள், நுனித்து-சூட்சுமமாக, காட்ட-(வேண்டிய சாமக்கிரிகளையெல்லாம்) காட்டிக்கொண்டிருக்க, ஐயம் இல் சிந்தையான்-சந்தேகமற்ற மனத்தையுடையவனான, அச்சுமந்திரன்-அந்தச்சுமந்திரன், அமைச்சரோடும்-மந்திரிமாருடனே, நொய்தினின்-விரைவாக, இயற்ற-(அவற்றைச்) சித்தம் செய்ய, இந்திரற்கு-இந்திரனுடைய அபிஷேகத்திற்கு, இயன்ற என்ன-சித்தம்செய்யப்பட்டனபோல, பல் வேறு இயன்ற-பலவேறு பொருள்களும், எய்தின-வந்தடைந்தன.

பொழி:—தெய்வத்தன்மையுள்ள தீர்த்தங்களால் அபிஷேகம் செய்வித்தற்கேற்ற சடங்குகளை வசிஷ்டன் செய்துமுடிக்குமாறு விரதங்களையுடைய முனிவர்கள் சூட்சுமமாக வேண்டிய சாமக்கிரிகளையெல்லாம் காட்டிக்கொண்டிருக்கச் சந்தேகமற்ற மனத்தையுடையவனான அந்தச் சுமந்திரன் மந்திரிமாருடனே விரைவாக அவற்றைச் சித்தம்செய்ய இந்திரனுடைய அபிஷேகத்திற்குச் சித்தம்செய்யப்பட்டனபோலப் பல வேறு பொருள்களும் வந்தடைந்தன. (12)

13. அரியணை யனுமன் றாங்க வங்கத னுடைவாள் பற்றப்
பரதன்வெண் குடைக விக்க விருவருங் கவரி வீச
விரைசெறிகமலத்தாள்சேர்வெண்ணெய்மன்சடையன்றங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி.

பத:—அரி அணை-சிங்காசனத்தை, அனுமன்-அனுமான், தாங்க-தாங்கிக் கொண்டிருக்கவும், அங்கதன்—, உடைவாள்-உடைவாளை, பற்ற-கையிற் கொண்டிருக்கவும், பரதன்—, வெண் குடை-வெண்கொற்றக்குடையை, கவிக்க-பிடிக்கவும், இருவரும்-இலக்குமணன் சத்துருக்கினன் என்ற இரண்டு தம்பிமார்களும், கவரி வீச—வெண்சாமரைவீசவும், விரை செறி-வாசனை பொருந்திய, கமலத்தாள்-தாமரைமலரில் வீற்றிருப்பவளான இலக்குமி, சேர்-சேர்ந்திருக்கப்பெற்ற, வெண்ணெய்மன்-திருவெண்ணெய்நல்லூர்க்குத் தலைவனான, சடையன் தங்கள்-சடையப்பவள்ளலுடைய, மரபுளோர்-வமிசத்து முன்னோர்கள், கொடுக்க-கொண்டுவந்துகொடுக்க, வசிட்டன் வாங்கி—, மௌலி புனைந்தான்-ஸ்ரீராமனுக்கு மகுடத்தைச் சூட்டினான்.

பொழி:—சிங்காதனத்தை அனுமான் தாங்கிக்கொண்டிருக்கவும் அங்கதன் உடைவாளைக் கையிற்கொண்டிருக்கவும் பரதன் வெண்கொற்றக் குடையைப் பிடிக்கவும், இலக்குமணன் சத்துருக்கினன் என்ற இரண்டு தம்பிமார்களும் வெண்சாமரை வீசவும் தாமரைமலரில் வசிப்பவளான இலக்குமி சேர்ந்திருக்கப்பெற்ற திருவெண்ணெய்நல்லூர்க்குத் தலைவனான சடையப்பவள்ளலுடைய வமிசத்து முன்னோர்கள் கொண்டுவந்துகொடுக்க வசிஷ்டமுனிவன் வாங்கி ஸ்ரீராமபிரானுக்கு மகுடத்தைச் சூட்டினான். (13)

14. சித்தமொத் துளனென் றோதுந் திருநகர்த் தெய்வ நன்னூல்
வித்தக னொருவன் சென்னி மிலைச்சிய தெனினு மேன்மை
ஒத்தமூ வுலகத் தோர்க்கு முவகையி னுறுதி யுன்னில்
தத்தமுச் சியின்மேல் வைத்த தொத்ததத் தாம மௌலி.

பத:—திருநகர்-அந்தத் திருநகரிலுள்ள, தெய்வம்-தெய்வத்தன்மை வாய்ந்த, நன்னூல்-வேதசாஸ்திரங்களில்வல்ல, வித்தகன்-பேரறிஞனை, சித்தம் ஒத்து உளன் என்று ஓதும்-மனம்ஒத்தவன் என்று சொல்லத்தக்க வசிஷ்டமுனிவனால், ஒருவன்-ஒப்பற்ற ஸ்ரீராமனது, சென்னி-சென்னியிலே, சூட்டியது எனினும்-மணிமுடிசூட்டப்பட்டது என்றாலும், அ தாமம் மௌலி-அந்த ஒளிபொருந்திய கிரீடமானது, மேன்மை ஒத்த-மேன்மைபொருந்திய, மூவுலகத்தோர்க்கும்—, உவகையின் உறுதி உன்னில்-(அக்கால் உண்டான) மகிழ்ச்சியின்பெருக்கை ஆராய்ந்து பார்ப்போமானால், தத்தமது-தங்கள்தங்களுடைய, உச்சியின்மேல் வைத்தது ஒத்தது-சிரசில் வைத்ததை ஒத்திருந்தது.

பொழி:—அந்தத் திருநகரிலுள்ள தெய்வத்தன்மைவாய்ந்த வேத சாஸ்திரங்களில்வல்ல பேரறிஞனை மனம் ஒத்தவன் என்று சொல்லத்தக்க வசிஷ்டமுனிவனால் ஒப்பற்ற ஸ்ரீராமனது சென்னியிலே மணி முடி சூட்டப்பட்டது என்றாலும் அந்த ஒளிபொருந்திய கிரீடமானது மேன்மைபொருந்திய மூவுலகத்தோர்க்கும் அக்கால் உண்டான மகிழ்ச்சியின்பெருக்கை ஆராய்ந்து பார்ப்போமானால் தங்கள்தங்களுடையசிரசில் வைத்ததை ஒத்திருந்தது. (14)

15. விரதநூன் முனிவன் சொன்ன விதிமுறை வழாமை நோக்கி
வரதனு மிளைஞற் காங்கண் மாமணி மகுடஞ் சூட்டிப்
பரதனைத் தனது செங்கோ னடாவுறப் பணித்து நாளும்
கரைதெரி விலாத போகக் களிப்பினு ளிருந்தான் மன்னோ.

பத:—விரதம் நூல் முனிவன்-விரதங்களை அனுஷ்டிக்கின்ற சாஸ்திர ஆராய்ச்சியில் சிறந்த வசிஷ்டமுனிவன், சொன்ன விதி முறை—, வழாமை-தவறாமல், நோக்கி-பார்த்து, வரதனும்-வேண்டியவர் வேண்டியதைத்தரவல்ல ஸ்ரீராமனும், இளைஞற்கு-தம்பியாகிய பரதனுக்கு, ஆங்கண்-அப்பொழுது, மா மணி மகுடம் சூட்டி-(இளவரசன் என்பதற்கு அடையாளமான) சிறந்த இரத்தினகிரீடத்தைச்சூட்டி, பரதனை-அந்தப்பரதனை, தனது செங்கோலை—, நடாவுறப் பணித்து-நடத்துமாறு கட்டளையிட்டு, நாளும்—, கரை தெரிவு இலாத-எல்லைகாணமுடியாத, போகம் களிப்பினுள்-சுகங்களை அனுபவிப்பதனாலாகிய மகிழ்ச்சியுள், இருந்தான்-ஆழ்ந்திருந்தான்.

பொழி:—விரதங்களை அனுஷ்டிக்கின்ற சாஸ்திர ஆராய்ச்சியில் சிறந்த வசிஷ்டமுனிவன் சொன்ன விதிமுறை தவறாமல் பார்த்து வேண்டியவர்

வேண்டியதைத்தரவல்ல ஸ்ரீராமனும் தம்பியாகிய பரதனுக்கு அப்பொழுது இளவரசன் என்பதற்கு அடையாளமான சிறந்த இரத்தினகிரீடத்தைச் சூட்டி அந்தப் பரதனைத் தனது செங்கோலை நடத்துமாறு கட்டளையிட்டு நாளும் எல்லைகாணமுடியாத சுகங்களை அனுபவிப்பதனாலாகிய மகிழ்ச்சியுள் ஆழ்ந்திருந்தான். (15)

[முடிசூட்டுவைபவத்திற்கென்று வந்திருந்த அரசர் முதலானவர்களுக்கும், சுக்கிரீவன் முதலான வானரவீரர்களுக்கும், குகன் விபீஷணன் அனுமான் முதலானவர்களுக்கும் தக்கவாறு மரியாதைசெய்து தங்கள் தங்கள் இடங்களுக்குச் செல்லுமாறு]

16. ஐயனு மவரை நீக்கி யடிதொழு துணைவ ரோடும்
வையக முழுதுஞ் செங்கோன் மனுநெறி முறையிற் செல்லச்
செய்யமா மகளு மற்றச் செகதல மகளுஞ் சற்றும்
நையுமா றின்றிக் காத்தா னுனிலப் பொறைக டீர்த்தே.

பத:—ஐயனும்-தலைவனுகிய ஸ்ரீராமனும், அவரை நீக்கி-அந்தத் துணைவர் முதலானவர்களை அனுப்பிவிட்டு, அடி தொழு துணைவரோடும்-தமது திருவடியை வணங்குகின்ற தம்பிமாருடனும் சினேகிதர்களுடனும், வையகம் முழுதும்-பூமிமுழுவதிலும், செங்கோல் மனுநெறிமுறையில் செல்ல—, செய்ய-செவ்விய, மா மகளும்-இலக்குமியும், செக தல மகளும்-பூமிதேவியும், சற்றும்-சிறிதும், நையும் ஆறு இன்றி-வருந்தும் வகையில்லாமல், நானிலம் பொறைகள் தீர்த்து-நான்குவகைப்பட்டபூமியிலே உள்ள குற்றங்களைப்போக்கி, காத்தான்-பாதுகாத்தான்.

பொழி:—தலைவனுகிய ஸ்ரீராமனும் அந்தத் துணைவர் முதலானவர்களை அனுப்பிவிட்டுத் தமது திருவடியை வணங்குகின்ற தம்பிமாருடனும் சினேகிதர்களுடனும் பூமி முழுவதிலும் செங்கோல் மனுநெறிமுறையில் செல்ல, செவ்விய இலக்குமியும் பூமிதேவியும் சிறிதும் வருந்தும் வகையில்லாமல் நான்குவகைப்பட்ட பூமியிலே உள்ள குற்றங்களைப்போக்கிப் பாதுகாத்தான். (16)

17. உம்பரோ டிம்பர் காறு முலகமோ ரேழு மேழும்
எம்பெரு மானென் றேத்தி யிறைஞ்சிநின் றேவல் செய்யத்
தம்பிய ரோடுந் தானுந் தருமமுந் தரணி காத்தான்
அம்பரத் தனந்தர் நீங்கி யயோத்தியில் வந்த வள்ளல்.

பத:—அம்பரத்து அனந்தர் நீங்கி-திருப்பாற்கடலிலே யோகநித்திரை புரிவதைவிட்டு, அயோத்தியில்—, வந்த வள்ளல்-திருவவதரித்த வள்ள

லாகிய ஸ்ரீராமன், உம்பரோடு இம்பர் காறும்-மேலும் கீழுமாகவுள்ள, உலகம் ஓர் ஏழும் ஏழும்-பதினுன்குலோகத்திலுள்ளவர்களும், 'எம்பெருமான்' என்று—, ஏத்தி இறைஞ்சி ஏவல் செய்ய-துதித்து வணங்கிநின்று குற்றேவல்களைச்செய்ய, தம்பியரோடும்-தம்பிமார்களுடனே, தானும்—, தருமமும்-தருமமார்க்கத்தில் நின்று, தரணி-பூமியை, காத்தான்-பாதுகாத்தான்.

பொழி :—திருப்பாற்கடலிலே யோகநித்திரைபுரிவதைவிட்டு அயோத்தியில் திருவவதரித்த வள்ளலாகிய ஸ்ரீராமன் மேலும் கீழுமாகவுள்ள பதினுன்குலோகத்திலுள்ளவர்களும் 'எம்பெருமான்' என்று துதித்து வணங்கிநின்று குற்றேவல்களைச்செய்யத் தம்பிமார்களுடனே தானும் தருமமார்க்கத்தில் நின்று பூமியைப் பாதுகாத்தான். (17)

18. இராவணன் றன்னை வீட்டி யிராமனுய் வந்து தோன்றித்
தராதல முழுதுங் காத்துத் தம்பியுந் தானு மாகப்
பராபர மாகி நின்ற பண்பினைப் பகரு வார்கள்
நராபதி யாகிப் பின்னு நமனையும் வெல்லு வாரே.

பத :—இராமனுய் வந்து தோன்றி—, இராவணன் தன்னை-இராவணனை, வீட்டி-அழித்து, தம்பியும் தானும் ஆக தராதலம் முழுதும் காத்து—, பராபரம் ஆகி நின்ற-பராபரப்பொருளாகிநின்ற, பண்பினை-குணம் நிறைந்த இராமசரித்திரத்தை, பகருவார்கள்-சொல்பவர்கள்—கேட்பவர்கள், நராபதி ஆகி-மன்னவராகி, பின்னும்—, நமனையும்—, வெல்லுவார்-வென்றவர்களாவார்கள்.

பொழி :—இராமனுக வந்து தோன்றி இராவணனை அழித்துத் தம்பியும் தானும்ஆகத் தராதலம் முழுதும் காத்துப் பராபரப்பொருளாகிநின்ற குணம் நிறைந்த இராமசரித்திரத்தைச் சொல்பவர்கள்—கேட்பவர்கள் மன்னவராகிப் பின்னும் நமனையும் வென்றவர்களாவார்கள். (18)

# 3. பெரிய புராணம்.

பெரிய புராணம் செய்தற்கு அரிய செயல்களைச்செய்து பெருமை அடைந்த பெரியோர்களின் பழமையான வரலாறுகளைக்கூறும் நூலாகும். இந்நூலில் கூறப்படும் பெரியோர்கள் சிவனடியார்கள். அவர்களில் தனியடியார் அறுபத்துமூவர்; தொகையடியார் ஒன்பதின்மர். இந்நூலுக்குத் திருத்தொண்டர் புராணம் என்பதும் ஒரு பெயர். இது, சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த திருத்தொண்டத் தொகையையும், நம்பியாண்டார்நம்பி அருளிய திருவந்தாதியையும் மூலமாகக்கொண்டு பாடப்பட்டது; பன்னிரண்டாந்திருமுறையாக விளங்குவது.

சேக்கிழார் என்று சிறப்பிக்கப்படும் அருண்மொழித்தேவர் இதன் ஆசிரியராவர். அவர் பல்லாவரத்திற்குச் சமீபத்திலுள்ள குன்றத்தூரில் பிறந்தவர்; அநபாய சோழனுடைய மந்திரியாக இருந்தவர்; திருநாகேச்சுரரிடம் பேரன்புவாய்ந்தவர்; இவர் தமது அரசன் சைவமதத்தில் மிக்க பற்றுடையவனாக விரும்பி அவனது வேண்டுகோளின்படி இதனைப் பாடியருளினார். தில்லையம்பதியில் நடராஜப்பெருமான் திருவருளால் "உலகெலாம்" என்ற சொற்கள் அசரீரிவாக்காகஎழ, அவையே இந்நூலுக்கு முதற்சீராக அமைந்தன. சேக்கிழார் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டினர்; 'பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டக்' கவிபாடும் பாவலர் தலைவர்.

## (1) கடவுள் வணக்கம்.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

பத:—உலகு எலாம்-அறிஞர்கள்யாவரும், உணர்ந்து-(இவ்வியல்பினர் என) உணர்தற்கும், ஓதற்கு-(அவ்வியல்பை) விளக்கிக்கூறுதற்கும், அரியவன்-அரியவனும், நிலவு உலாவிய-இளம்பிறைதவழும், நீர்மலி-கங்கைநீர்மிக்க, வேணியன்-சடையையுடையவனும், அலகில்-அளவிடமுடியாத, சோதியன்-ஒளிப்பிழம்பான திருமேனியையுடையவனுமாகிய, அம்பலத்து ஆடுவான்-

திருவம்பலத்தே ஆனந்தநிருத்தம் செய்தருளுகின்ற நடராஜப்பெருமானது, மலர் சிலம்பு அடி-மலராநின்ற திருச்சிலம்பணிந்த குஞ்சிதபாதத்தை, வாழ்த்தி-துதித்து, வணங்குவாம்-(யாம்) வணங்குவோம்.

பொழி :—அறிஞர்கள் யாவரும் இவ்வியல்பினரென உணர்தற்கும் அவ்வியல்பை விளக்கிக்கூறுதற்கும் அரியவனும், இளம்பிறைதவழும் கங்கை நீர்மிக்க சடையையுடையவனும், அளவிடமுடியாத ஒளிப்பிழம்பான திருமேனியையுடையவனுமாகிய திருவம்பலத்தே ஆனந்தநிருத்தம் செய் தருளுகின்ற நடராஜப்பெருமானது மலராநின்ற திருச்சிலம்பணிந்த குஞ்சிதபாதத்தைத் துதித்து யாம் வணங்குவோம்.

---

## (2) மனுச்சோழன்.

1. நிலம கட்கழ கார்திரு நீணுதல்
திலக மொப்பது செம்பியர் வாழ்பதி
மலர்ம கட்குவண் டாமரை போன்மலர்ந்
தலகில் சீர்த்திரு வாரூர் விளங்குமால்.

பத :—செம்பியர்-சோழஅரசர்கள், வாழ்-(பரம்பரையாக அரசாட்சி செய்து) வாழ்கின்ற, பதி-நகரமாகி, மலர் மகட்கு-செந்தாமரைமலரில் வாழ்கிற இலக்குமிக்கு (வாழும் இடமான), வள்-வளப்பமுள்ள, தாமரை போல்-செந்தாமரைமலர்போல, மலர்ந்து-மலர்ச்சிபெற்று, அலகு இல்-அள வில்லாத, சீர்-சிறப்பைப்பெற்ற, திருவாரூர்-திருவாரூர் என்னும் பட்டண மானது, நிலம் மகட்கு-பூமிதேவிக்கு, அழகு ஆர்-அழகு மிகுந்த, நீள்-நீண்ட, திரு நுதல்-மேன்மைபொருந்திய நெற்றியிலேயிட்ட, திலகம்-திலகத்தை, ஒப்பது-போன்றதாகி, விளங்கும்—.

பொழி :—சோழ அரசர்கள் பரம்பரையாக அரசாட்சி செய்துவருகின்ற நகரமாகிச் செந்தாமரை மலரில் வாழ்கிற இலக்குமிக்கு வாழும்இடமான வளப்பமுள்ள செந்தாமரைமலர்போல மலர்ச்சிபெற்று அளவில்லாத சிறப் பைப் பெற்ற திருவாரூர் என்னும் பட்டணமானது பூமிதேவிக்கு அழகு மிகுந்த நீண்ட மேன்மைபொருந்திய நெற்றியிலேயிட்ட திலகத்தைப் போன் றதாகி விளங்கும். (1)

2. அன்ன தொன்னக ருக்கர சாயினன்
துன்னும் வெங்கதி ரோன்வழித் தோன்றினன்
மன்னு சீரந பாயன் வழிமுதல்
மின்னு மாமணிப் பூண்மனு வேந்தனே.

பத :—அன்ன-அப்படிப்பட்ட சிறப்பையுடைய, தொல்-பழமையான, நகருக்கு-திருவாரூர் என்னும் நகரத்திற்கு, அரசு ஆயினன்-அரசனாக இருந்தவன், துன்னும்-நெருங்கிய, வெங் கதிரோன்-வெப்பமான கிரணங்களை யுடையனான சூரியனது, வழி-வமிசத்தில், தோன்றினன்-பிறந்தவனும், மன்னு-நிலைபெற்ற, சீர்-சிறப்புக்களையுடைய, அநபாயன்-அநபாயசோழமகா ராஜனது, வழி-வமிசத்திற்கு, முதல்-முதல்வனுமான, மின்னு-ஒளிவீசுகின்ற, மா-சிறந்த, மணி பூண்-இரத்தினாபரணங்களைத் தரித்த, மனுவேந்தன்-மனுச் சோழன்ஆவான்.

பொழி :—அப்படிப்பட்ட சிறப்பையுடைய பழமையான திருவாரூர் என்னும் நகரத்திற்கு அரசனாக இருந்தவன், நெருங்கிய வெப்பமான கிரணங் களையுடையவனான சூரியனது வமிசத்தில் பிறந்தவனும் நிலைபெற்ற சிறப்புக் களையுடைய அநபாய சோழமஹாராஜனது வமிசத்திற்கு முதல்வனுமான ஒளிவீசுகின்ற சிறந்த இரத்தினாபரணங்களைத்தரித்த மனுச்சோழன் ஆவான். (2)

3. மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம்
கண்ணு மாவியு மாம்பெருங் காவலான்
விண்ணு ளார்மகிழ் வெய்திட வேள்விகள்
எண்ணி லாதன மாண வியற்றினான்.

பத :—(அவ்வரசன்), மண்ணில்-பூமியிலே, வாழ்தரு-வாழ்கின்ற, மன்-நிலைபெற்ற, உயிர்கட்கு எலாம்-எல்லாவுயிர்கட்கும், கண்ணும்-கண்ணாகவும், ஆவியும்-உயிராகவும், ஆம்-ஆகின்ற, பெரு காவலான்-சிறந்த காத்தற்றொழிலைக் கைக்கொண்டவன்; (அன்றியும் அவன்), விண்உளார்-வானுலகத்தில் வாழ்பவ ரான தேவர்கள், மகிழ்வு எய்திட-மகிழ்ச்சி யடையும்படி, எண் இலாதன-அளவில்லாத, வேள்விகள்-யாகங்களை, மாண-பெருமைபொருந்தும்படி, இயற்றினான்-செய்தவன்.

பொழி :—அவ்வரசன் பூமியிலே வாழ்கின்ற நிலைபெற்ற எல்லா உயிர் கட்கும் கண்ணாகவும் உயிராகவும் ஆகின்ற சிறந்த காத்தற்றொழிலைக் கைக் கொண்டவன்; அன்றியும் அவன் வானுலகத்தில் வாழ்பவரான தேவர்கள் மகிழ்ச்சியடையும்படி அளவில்லாத யாகங்களைப் பெருமைபொருந்தும்படி செய்தவன். (3)

4. பொங்கு மாமறைப் புற்றிடங் கொண்டவர்
எங்கு மாகி யிருந்தவர் பூசனைக்
கங்கண் வேண்டு நிபந்தமா ராய்ந்துளான்
துங்க வாகமஞ் சொன்ன முறைமையால்.

பத :—(அன்றியும் அவ்வரசன்), எங்கும்-எவ்விடத்திலும், ஆகி பொருந்தி வியாபித்து, இருந்தவர்-இருப்பவரும், பொங்கு-பெருகிய, மா சிறந்த, மறை-வேதரூபியுமாகிய, புற்று இடம் கொண்டவர்-புற்றை(த்தமக்கு இடமாகக்கொண்ட வன்மீகநாதரது, பூசனைக்கு-பூசைக்கு, அங்கண்-அவ்வ போது, வேண்டும்-(செய்வதற்கு) வேண்டிய, நிபந்தம்-படித்தரத்தை, துங்கம் சிறந்த, ஆகமம்-சைவாகமங்கள், சொன்ன-கூறுகின்ற, முறைமையால் முறைமைப்படி, ஆராய்ந்து உளான்-ஆலோசித்துத் திட்டம் செய்தவன்.

பொழி :—அன்றியும் அவ்வரசன் எவ்விடத்திலும் பொருந்தி விய பித்து இருப்பவரும் பெருகிய சிறந்த வேதரூபியுமாகிய புற்றைத் தமக் இடமாகக்கொண்ட வன்மீகநாதரது பூசைக்கு அவ்வப்போது செய்வதற் வேண்டிய படித்தரத்தைச் சிறந்த சைவாகமங்கள் கூறுகின்ற முறைப்ப ஆலோசித்துத் திட்டம் செய்தவன். (4

5. கொற்ற வாழி குவலயஞ் சூழ்ந்திடச்
சுற்று மன்னர் திறைகடை சூழ்ந்திடச்
செற்ற நீக்கிய செம்மையின் மெய்மனுப்
பெற்ற நீதியுந் தன்பெய ராக்கினான்.

பத :—(பின்னும் அந்த மனுச்சோழன்), சுற்றும்-(தனது தேசத்தை சூழ்ந்துள்ள, மன்னர்-(மற்றைத்தேசத்து) அரசர்கள் (கொணர்ந்து செலு திய), திறை-கப்பப்பொருள்கள், கடை-(தனது அரண்மனை) வாயிலி சூழ்ந்திட-நிறைந்திருக்கும்படி, கொற்றம் ஆழி-(தனது) வெற்றிபொருந்தி சக்கரம், குவலயம்-நிலவுலகம் முழுவதும், சூழ்ந்திட-சுற்றிச்செல்ல, செற்ற மாறுபாட்டை, நீக்கிய—, செம்மையின்-செவ்விய குணங்களை யுடையவனா யிருந்தமையால், மெய்-உண்மையாளரான, மனு-ஸ்வாயம்புவமனு, பெற்ற-(நூல்முகமாக உலகத்தார்க்குத்) தந்த, நீதியும்-நீதியையும், தன் பெயர் ஆக்கினான்-தன் பெயரினால் விளங்கச்செய்தான்.

பொழி :—பின்னும் அந்த மனுச்சோழன், தனது தேசத்தைச் சூழ்ந் துள்ள மற்றைத் தேசத்து அரசர்கள் கொணர்ந்து செலுத்திய கப்பப் பொருள்கள் தனது அரண்மனை வாயிலில் நிறைந்திருக்கும்படி தனது வெற்றிபொருந்திய சக்கரம் நிலவுலகம் முழுவதும் சுற்றிச்செல்ல, மாறு பாட்டை நீக்கிய செவ்விய குணங்களையுடையவனாயிருந்தமையால் உண்மை யாளரான ஸ்வாயம்புவமனு நூல்முகமாக உலகத்தார்க்குத்தந்த நீதியையும் தன் பெயரினால் விளங்கச்செய்தான். (5)

6. அறம்பொரு ளின்ப மான வறநெறி வழாமற் புல்லி
மறங்கடிந் தரசர் போற்ற வையகங் காக்கு நாளில்
சிறந்தநற் றவத்தாற் றேவி திருமணி வயிற்றின் மைந்தன்
பிறந்தன னுலகம் போற்றப் பேரிசைக் குருளை யன்னான்.

பத:—அறம்-தருமம், பொருள்-அர்த்தம், இன்பம்-காமம், ஆன-என்று கூறப்பட்டவைகளை, அறம் நெறி-தருமநூல்மார்க்கத்தில், வழாமல்-தவறுமல், புல்லி-(தான்) பின்பற்றி, மறம்-அதருமத்தை, கடிந்து-போக்கி, அரசர் போற்ற-(உலகத்து மற்றை) அரசரெல்லாம் (தன்னைத்) துதிக்கும்படி, வையகம்-நிலவுலகத்தை, காக்கும் நாளில்-(அந்த மனுச்சோழன்) அரசாண்டு வருங்காலத்தில், சிறந்த நல் தவத்தால்-(அவன் செய்துள்ள) சிறந்த நல்ல தவத்தின் பயனுக, தேவி-(அவனுடைய) மனைவியின், மணி திரு வயிற்றில்-அழகிய திருவயிற்றிலே, உலகம் போற்ற-உலகத்தாரெல்லாம் துதிக்கும்படி நற்குண நற்செய்கைகள் நிரம்பி, பேர்-பெரிய, அரி குருளை-சிங்கக்குட்டியை, அன்னுன்-போன்றவனுகி, மைந்தன்-புத்திரன் ஒருவன், பிறந்தனன்-தோன்றினுன்.

பொழி:—தருமம் அர்த்தம் காமம் என்று கூறப்பட்டவைகளைத் தரும நூல் மார்க்கத்தில் தவறுமல் தான் பின்பற்றி அதருமத்தைப் போக்கி உலகத்து மற்றை அரசரெல்லாம் தன்னைத் துதிக்கும்படி நிலவுலகத்தை அந்த மனுச்சோழன் அரசாண்டு வருங்காலத்தில் அவன் செய்துள்ள சிறந்த நல்ல தவத்தின் பயனுக அவனுடைய மனைவியின் அழகிய திருவயிற்றிலே உலகத்தாரெல்லாம் துதிக்கும்படி நற்குண நற்செய்கைகள் நிரம்பிப் பெரிய சிங்கக்குட்டியைப்போன்றவனுகிப் புத்திரன் ஒருவன் தோன்றினுன். (6)

7. தவமுயன் றரிதிற் பெற்ற தனியிளங் குமர னுளும்
சிவமுயன் றடையுந் தெய்வக் கலைபல திருந்த வோதிக்
கவனவெம் புரவி யானை தேர்படைத் தொழில்கள் கற்றுப்
பவமுயன் றதுவும் பேறே யெனவரும் பண்பின் மிக்கான்.

பத:—(மனுச்சோழனுல்), தவம் முயன்று-தவத்தைச்செய்து, அரிதில் பெற்ற-அருமையாகப் பெறப்பட்ட, தனி இளங் குமரன்-ஒப்பற்ற இளமை பொருந்திய இராசகுமாரன், நாளும்-தினந்தோறும், சிவம்-பரமசிவனை, முயன்று-சிந்தித்து, அடையும்-அடைதற்குஉரிய, தெய்வம்-தெய்வத்தன்மையுள்ள, கலை பல-பலசாஸ்திரங்களை, திருந்த-ஐயந்திரிபு இல்லாமல், ஓதி-(நன்கு) கற்றறிந்து, கவனம்-வேகத்தோடு செல்கின்ற, வெம்-விரும்பத்தக்க, புரவி-குதிரையும், யானை-யானையும், தேர்-தேரும், படை-ஆயுதங்களும், (ஆகிய இவற்றின்), தொழில்கள்-தொழில்களை, கற்று-பயின்று, '(இக் குமாரன்), பவம்-மனிதப்பிறப்பை, முயன்றதும்-எடுத்ததும், பேறே-(நமது) பெரும்பாக்கியந்தான்,' என-என்று (உலகினர்) கூறும்படி, வரும்-(இயற்கையாக) அமைந்துள்ள, பண்பில்-நற்குணங்களால், மிக்கான்-சிறந்தவன் ஆனுன்.

பொழி:—மனுச்சோழனுல் தவத்தைச்செய்து அருமையாகப் பெறப் பட்ட ஒப்பற்ற இளமைபொருந்திய இராசகுமாரனுன வீதிவிடங்கன் தினந் தோறும் பரமசிவனைச் சிந்தித்து அடைதற்குரிய தெய்வத்தன்மையுள்ள பல

சாஸ்திரங்களை ஐயம் திரிபு இல்லாமல் நன்கு கற்றறிந்து வேகத்தோடு செல்கின்ற விரும்பத்தக்க குதிரையும் யானையும் தேரும் ஆயுதங்களும் ஆகிய இவற்றின் தொழில்களைப்பயின்று 'இக்குமாரன் மனிதப்பிறப்பை எடுத்ததும் நமது பெரும்பாக்கியந்தான்' என்று உலகினர் கூறும்படி இயற்கையாக அமைந்துள்ள நற்குணங்களால் சிறந்தவன் ஆனான். (7)

8. அளவிறொல் கலைகண் முற்றி யரும்பெறற் றந்தை மிக்க
உளமகிழ் காதல் கூர வோங்கிய குணத்தா னீடி
இளவர சென்னுந் தன்மை யெய்துதற் கணிய னாகி
வளரிளம் பரிதி போன்று வாழுநா ளொருநாண் மைந்தன்.

பத:—மைந்தன்-அரசிளங்குமாரனாகிய வீதிவிடங்கன், அளவு இல்-அளவில்லாத மிகப்பலவான, தொல்-பழமையான, கலைகள்-நூல்களை, முற்றி-முழுவதும் கற்று, பெறல் அரு-பெறுதற்கு அரிய, தந்தை-(தனது) தந்தையாகிய மனுச்சோழன், உளம் மகிழ்-மனம்மகிழ்தற்குக் காரணமான, மிக்க காதல்-மிகுந்த அன்பு, கூர-பெருகும்படி, ஓங்கிய-வளர்ந்துள்ள, குணத்தால்-நற்குணங்களினாலே, நீடி-நிறைந்து, இள அரசு என்னும்-இளவரசனென்று சொல்லத்தக்க, தன்மை-பருவத்தை, எய்துதற்கு-அடைதற்கு, அணியன் ஆகி-சமீபமானவயதையுடையவனாகி, வளர்-(உதயமாகி) வளர்கின்ற, இள பரிதி போன்று-பாலசூரியனையொத்து, வாழும் நாள்-வாழ்கின்ற காலத்தில், ஒரு நாள்-ஒருநாளிலே;—

பொழி:—அரசிளங்குமாரனாகிய வீதிவிடங்கன் அளவில்லாத மிகப் பலவான பழமையான நூல்களை முழுவதும் கற்றுப் பெறுதற்கரிய தனது தந்தையாகிய மனுச்சோழன் மனம் மகிழ்தற்குக் காரணமான மிகுந்த அன்பு பெருகும்படி வளர்ந்துள்ள நற்குணங்களினாலே நிறைந்து இளவரசன் என்று சொல்லத்தக்க பருவத்தை அடைதற்குச் சமீபமான வயதையுடையவனாகி உதயமாகி வளர்கின்ற பாலசூரியனை யொத்து வாழ்கின்ற காலத்தில் ஒரு நாளிலே; (8)

9. திங்கள்வெண் கவிகை மன்னன் றிருவளர் கோயி னின்று
மங்குறோய் மாட வீதி மன்னிளங் குமரர் சூழக்
கொங்கலர் மாலை தாழ்ந்த குங்குமங் குலவு தோளான்
பொங்கிய தானை சூழத் தேர்மிசைப் பொலிந்து போந்தான்.

பத:—கொங்கு-நறுமணம்வீசுகின்ற, அலர்-மலர்கொண்டு தொடுக்கப்பட்ட, மாலை—, தாழ்ந்த-தொங்கி அசையப்பெற்ற, குங்குமம் குலவு-குங்குமக்குழம்பு விளங்குகின்ற, தோளான்-தோள்களையுடைய வீதிவிடங்கன், இள மன் குமரர்-இளமைவாய்ந்த ராஜகுமாரர்கள், சூழ-(தன்னைச்) சூழ்ந்து வரவும், பொங்கிய-மிகுந்த, தானை-சேனைகள், சூழ-சூழ்ந்துவரவும், திங்கள்-பூர்ணசந்திரன்போன்ற, வெள் கவிகை-வெண்கொற்றக்குடையையுடைய,

மன்னன்-மனுச்சோழராசனுடைய, திரு வளர்-செல்வம் பெருகுகின்ற, கோயில்நின்று-அரண்மனையிலிருந்து (புறப்பட்டு), மங்குல் தோய்-மேகங்கள் படிகின்ற மிகவும் உயர்ந்துள்ள, மாடம்-உபரிகையுள்ளவீடுகளை (இருபுறத்திலும்) கொண்டுள்ள, வீதி-வீதியிலே, தேர்மிசை-தேரின்மேலேறி, பொலிந்துபோந்தான்-சிறப்பாகச் சென்றான்.

பொழி :—நறுமணம் வீசுகின்ற மலர்கொண்டு தொடுக்கப்பட்ட மாலை தொங்கி அசையப்பெற்ற குங்குமக்குழம்பு விளங்குகின்ற தோள்களையுடைய வீதிவிடங்கன் இளமைவாய்ந்த ராஜகுமாரர்கள் தன்னைச் சூழ்ந்து வரவும் மிகுந்த சேனைகள் சூழ்ந்து வரவும் பூரணசந்திரன்போன்ற வெண்கொற்றக் குடையையுடைய மனுச்சோழராசனுடைய செல்வம் பெருகுகின்ற அரண்மனையிலிருந்து புறப்பட்டு மேகங்கள் படிகின்ற மிகவும் உயர்ந்துள்ள உபரிகையுள்ள வீடுகளை இருபுறத்திலும் கொண்டுள்ள வீதியிலே தேரின் மேலேறிச் சிறப்பாகச் சென்றான். (9)

10. பரசுவந் திகள்முன் சூதர் மாகத ரொருபாற் பாங்கர்
விரைநறுங் குழலார் சிந்தும் வெள்வளை யொருபான் மிக்க
முரசொடு சங்க மார்ப்ப முழங்கொலி யொருபால் வென்று
அரசிளங் குமரன் போது மணிமணி மாட வீதி.

பத :—வென்றி-வெற்றியையுடைய, அரசு இளங் குமரன்-இளவரசனாகிய வீதிவிடங்கன், போதும்-(தேரேறிச்) செல்லுகின்ற, அணி-அழகிய, மணி-இரத்தினகசிதமான, மாடம்-உபரிகைகளையுடைய, வீதி-தெருவானது, பரசு-துதிபாடுகின்ற, வந்தியர்-வந்தியரும், சூதர்-சூதர்களும், மாகதர்-மாகதர்களும், (என்ற இவர்கள்), முன்-(அவ்வரசகுமாரனுக்கு) முன்புறமாக, ஒரு பால்-ஒருபக்கத்திலும், பாங்கர்-சமீபத்திலே, விரை-வாசனைப்பண்டங்களால், நறு-நறுமணம்வீசுகின்ற, குழலார்-கூந்தலையுடைய மகளிர்களது, சிந்தும்-(மோகங்கொண்டு உடம்புஇளைத்தலாற்கையினின்று) நழுவிவிழுகின்ற, வெள் வளை-வெண்மையான சங்குவளையல்கள், ஒரு பால்-ஒருபக்கத்திலும், மிக்க-மிகுந்த, முரசொடு-முரசத்துடனே, சங்கம்-சங்கமும், ஆர்ப்ப-ஆரவாரித்தலால், முழங்கு-ஒலிக்கின்ற, ஒலி-பேரோசை, ஒரு பால்-ஒருபக்கத்திலுமாக விளங்கியது.

பொழி :—வெற்றியையுடைய இளவரசனாகிய வீதிவிடங்கன் தேரேறிச் செல்லுகின்ற அழகிய இரத்தினகசிதமான உபரிகைகளையுடைய தெருவானது, துதிபாடுகின்ற வந்தியரும் சூதர்களும் மாகதர்களும் என்ற இவர்கள் அவ்வரச குமாரனுக்கு முன்புறமாக ஒருபக்கத்திலும், சமீபத்திலே வாசனைப்பண்டங்களால் நறுமணம் வீசுகின்ற கூந்தலையுடைய மகளிர்களது மோகங்கொண்டு இளைத்தலாற்கையினின்று நழுவிவிழுகின்ற வெண்மையான சங்குவளையல்கள் ஒருபக்கத்திலும், மிகுந்த முரசத்துடனே சங்கமும் ஆரவாரித்தலால் ஒலிக்கின்ற பேரோசை ஒருபக்கத்திலுமாக விளங்கியது. (10)

11. தனிப்பெருந் தருமந் தானோர் தயாவின்றித் தானை மன்னன்
பனிப்பில்சிந்தையினிலுண்மைப்பான்மைசோதித்தாலென்ன
மனித்தர்தன் வரவு காணு வண்ணமோர் வண்ண நல்லான்
புனிற்றிளங் கன்று துள்ளிப் போந்ததம் மறுகி னூடே.

பத:—தனி-ஒப்பில்லாத, பெரு-பெருமைபொருந்திய, தருமம்-தரும தேவதையானது, தான்-தானே, ஓர் தயா இன்றி-சிறிதும் இரக்கமில்லாமல், தானை மன்னன்-சேனைகளையுடைய மனுச்சோழனது, பனிப்பு இல்-(தருமத்தினின்று) சலித்தலில்லாத, சிந்தையினில்-மனத்திலுள்ள, உண்மை பான்மை-உண்மைநிலையை, சோதித்தால் என்ன-சோதிக்கும்படி வந்தாற்போல, ஓர்—, வண்ணம்-அழகிய, நல்-நல்ல, புனிறு-ஈன்றணிமையுள்ள, ஆன் இளங் கன்று-பசுவின் இளங்கன்றானது, தன் வரவு-தனது வருகையை, மனித்தர்-மனிதர் ஒருவரும், காணு வண்ணம்-அறிந்துகொள்ளாதபடி, அ-அந்த, மறுகினூடு-வீதியினிடையிலே, துள்ளி போந்தது-துள்ளி ஓடிவந்தது.

பொழி:—ஒப்பில்லாத பெருமைபொருந்திய தருமதேவதையானது தானே சிறிதும் இரக்கமில்லாமல் சேனைகளையுடைய மனுச்சோழராசனது தருமத்தினின்று சலித்தலில்லாத மனத்திலுள்ள உண்மைநிலையைச் சோதிக்கும்படி வந்தாற்போல ஓர் அழகிய நல்ல ஈன்றணிமையுள்ள பசுவின் இளங்கன்றானது தனது வருகையை மனிதர் ஒருவரும் அறிந்துகொள்ளாதபடி அந்த வீதியினிடையிலே துள்ளி ஓடிவந்தது. (11)

12. அம்புனிற் றாவின் கன்றோ ரபாயத்தி னூடு போகிச்
செம்பொனின் றேர்க்கான் மீது விசையினாற் செல்லப் பட்டங்
கும்பரி னடையக் கண்டங் குருகுதா யலமந் தோடி
வெம்பிடு மலறுஞ் சோரு மெய்ந்நடுக் குற்று வீழும்.

பத:—ஆவின்-பசுவின், அம்-அழகிய, புனிறு கன்று-இளங்கன்று, ஓர்—, அபாயத்தின்ஊடு-அபாயமான இடத்தில், போகி-போய், (அவ்வரச குமாரனது), செம்பொனின்-சிவந்த பொன்மயமான, தேர்க்கால்-தேரின் சக்கரம், மீது-தன்மேலே, விசையினால்-வேகமாக, செல்ல-போக (அதனால்), பட்டு-இறந்து, உம்பரின்-மேலுலகத்தில், அடைய-சேர, கண்டு-(அதனைப்) பார்த்து, உருகு-(மனம்) கசிந்து உருகுகின்ற, தாய்-தாய்ப்பசுவானது, அலமந்து-மனஞ்சுழன்று, அங்கு-(கன்று இறந்துகிடந்த) அந்த இடத்திற்கு, ஓடி-விரைந்துசென்று, (கன்று இறந்த சோகத்தினால்), வெம்பிடும்-மனம் வெதும்பும்; அலறும்-கதறும்; சோரும்-தளர்வடையும்; மெய் நடுக்குஉற்று வீழும்-உடம்பு நடுங்கிக் கீழேவிழும்.

பொழி:—பசுவின் அழகிய இளங்கன்று ஓர் அபாயமானஇடத்தில்போய் அவ்வரசகுமாரனது சிவந்த பொன்மயமான தேர்ச்சக்கரம் தன்மேலே வேகமாகப்போக, அதனால் இறந்து மேலுலகத்தில்சேர அதனைப்பார்த்து

மனம் கசிந்து உருகுகின்ற தாய்ப்பசுவானது மனஞ்சுழன்று கன்று இறந்து கிடந்த அந்த இடத்திற்கு விரைந்துசென்று கன்று இறந்த சோகத்தினல் மனம் வெதும்பும்; கதறும்; தளர்வடையும்; உடம்பு நடுங்கிக் கீழே விழும். (12)

13. மற்றது கண்டு மைந்தன் வந்ததிங் கபாய மென்று
சொற்றடு மாறி நெஞ்சிற் றுயருழந் தறிவ ழிந்து
பெற்றமுங் கன்று மின்றெ னுணர்வெனும் பெருமை மாளச்
செற்றெனவென்செய்கேனென் றுதேரினின் றிழிந்துவீழ்ந்தான்.

பத:—மைந்தன்-(மனுச்சோழனது) குமாரன், அது கண்டு-அதைப் பார்த்து, 'இங்கு-இப்பொழுது, இங்கே, அபாயம்-உயிர்ச்சேதம், வந்தது-நேரிட்டுவிட்டதே,' என்று-என்றுசொல்லி, சொல் தடுமாறி-பேச்சுத் தழுதழுத்து, நெஞ்சில்-மனத்தில், துயர் உழந்து-வருத்தமடைந்து, அறிவு அழிந்து—, (பின்பு சிறிதுதேறி), 'பெற்றமும்-இந்தப்பசுவும், கன்றும்—, இன்று-இன்றைக்கு, என்-எனது, உணர்வு எனும்-அறிவென்கின்ற, பெருமை-பெருங்குணமானது, மாள-ஒழியும்படி, செற்ற-அழித்திட்டன; என் செய்கேன்-(இதற்கு யான்) என்ன செய்வேன்!' என்று-என்று (வருந்திக்) கூறி, தேரினின்று-தேரிலிருந்து, இழிந்து-(தரையில்) இறங்கி, வீழ்ந்தான்-கீழே விழுந்திட்டான்.

பொழி:—மனுச்சோழனது குமாரன், அதைப்பார்த்து 'இப்பொழுது இங்கே உயிர்ச்சேதம் நேரிட்டுவிட்டதே' என்று சொல்லிப் பேச்சுத் தழுதழுத்து மனத்தில் வருத்தமடைந்து அறிவு அழிந்து பின்பு சிறிது தேறி 'இந்தப்பசுவும் கன்றும் இன்றைக்கு எனது அறிவென்கின்ற பெருங்குணமானது ஒழியும்படி அழித்திட்டன; இதற்கு யான் என்ன செய்வேன்!' என்று வருந்திக்கூறித் தேரிலிருந்து தரையில் இறங்கிக் கீழே விழுந்திட்டான்; (13)

14. அலறுபே ராவை நோக்கி யாருயிர் பதைத்துச் சோரும்
நிலமிசைக் கன்றை நோக்கி நெடிதுயிர்த் திரங்கி நிற்கும்
மலர்தலை யுலகங் காக்கு மனுவெனு மெங்கோ மானுக்
குலகிலிப் பழிவந் தெய்தப் பிறந்தவா வொருவ னென்பான்.

பத:—அலறு-(கன்றையிழந்து) கதறுகின்ற, பேர் ஆவை-பெருமை பொருந்திய தாய்ப்பசுவை, நோக்கி-பார்த்து, ஆர் உயிர் பதைத்து-(தனது) அருமையான உயிர் துடித்து, சோரும்-தளர்வான்; நிலம்மிசை-தரையின்மேல் (இறந்துகிடக்கின்ற), கன்றை-(பசுவின்) கன்றை, நோக்கி—, நெடிது உயிர்த்து-பெருமூச்செறிந்து, இரங்கி நிற்கும்-மனம்வருந்தி நிற்பான்; 'மலர்-பரந்த, தலை-இடத்தையுடைய, உலகம்-இந்நிலவுலகத்தை, காக்கும்-பாதுகாக்

கின்ற, மனு எனும்-மனுஎன்கிற, எம் கோமானுக்கு- எமது (தந்தையான) சோழமகாராசனுக்கு, உலகில்-இவ்வுலகத்தில், இ பழி-இந்தப் பெரும்பழி, வந்து—, எய்த-பொருந்துமாறு, ஒருவன்-யாஞெருத்தன், பிறந்த ஆ-பிறந்த விதம், (என்னே!)' என்பான்-என்றுசொல்வான்.

பொழி:—கன்றை இழந்து கதறுகின்ற பெருமைபொருந்திய தாய்ப் பசுவைப்பார்த்துத் தனது அருமையான உயிர் துடித்துத் தளர்வான்; தரையின்மேல் இறந்துகிடக்கின்ற பசுவின்கன்றை நோக்கிப் பெருமூச் செறிந்து மனம் வருந்தி நிற்பான்; 'பரந்த இடத்தையுடைய இந்நிலவுலகத்தைப் பாதுகாக்கின்ற மனு என்கின்ற எமது தந்தையான சோழ மகாராசனுக்கு இவ்வுலகத்தில் இந்தப் பெரும்பழிவந்து பொருந்துமாறு யான் ஒருத்தன் பிறந்தவிதம் என்னே!' என்று சொல்வான். (14)

15. வந்தவிப் பழியை மாற்றும் வகையினை மறைநூல் வாய்மை
அந்தணர் விதித்த வாற்று லாற்றுவ தறமே யாகில்
எந்தையீ தறியா முன்ன மியற்றுவ னென்று மைந்தன்
சிந்தைவெந்துயரந்தீர்ப்பான்றிருமறையவர்முன்சென்றான்.

பத:—மைந்தன்-இராசகுமாரன், 'வந்த-(எதிர்பாராது) நேர்ந்த, இ பழியை- இந்தப்பழியை, மாற்றும்-போக்குதற்குரிய, வகையினை-விதத்தை-பிராயச்சித்தத்தை, மறை நூல்-வேதசாஸ்திரங்களின், வாய்மை-உண்மையை யறிந்த, அந்தணர்-பிராமணர்கள், விதித்த-கட்டளையிட்ட, ஆற்றால்-முறைப் படியே, ஆற்றுவது-செய்வது, அறமே ஆகில்-தருமமாகுமாஞல், எந்தை-எனது தந்தை, ஈது-(யான் செய்த) இச்செயலை, அறியா முன்னம்-தெரிந்து கொள்வதற்குமுன்னமே, இயற்றுவன்-(பிராயச்சித்தஞ்) செய்துகொண்டு குற்றத்தைப் போக்கிக்கொள்வேன்', என்று-என்றுகருதி, சிந்தை-மனத்தி லுள்ள, வெம்-கொடிய, துயரம்-துன்பத்தை, தீர்ப்பான்-நீக்கிக்கொள்ளும்படி, திரு மறையவர்முன்-சிறந்த பிராமணர்களிடத்தில், சென்றான்-போஞன்.

பொழி:—இராசகுமாரன் 'எதிர்பாராது நேர்ந்த இந்தப் பழியைப் போக்குதற்குரிய விதத்தை—பிராயச்சித்தத்தை வேதசாஸ்திரங்களின் உண்மையை அறிந்த பிராமணர்கள் கட்டளையிட்ட முறைப்படியே செய்வது தருமமாகுமாஞல் எனது தந்தை யான்செய்த இச்செயலைத் தெரிந்து கொள்வதற்குமுன்னமே பிராயச்சித்தஞ் செய்துகொண்டு குற்றத்தைப் போக்கிக்கொள்வேன்' என்று கருதி மனத்திலுள்ள கொடிய துன்பத்தை நீக்கிக்கொள்ளும்படி சிறந்த பிராமணர்களிடத்தில் போஞன். (15)

16. தன்னுயிர்க் கன்று வீயத் தளர்ந்தவா தரியா தாகி
முன்னெருப் புயிர்த்து விம்மி முகத்தினிற் கண்ணீர் வார
மன்னுயிர்காக்குஞ்செங்கோன்மனுவின்பொற்கோயில்வாயிற்
பொன்னணிமணியைச்சென்றுகோட்டிஞற்புடைத்ததன்றே.

பத :—தன் உயிர்-தனது உயிர்போன்ற அருமையான, கன்று-கன்றுனது, வீய-(தேர்க்காலில் அகப்பட்டு) இறந்ததனுல், தளர்ந்த-மனம் வருந்திய, ஆ-தாய்ப்பசு, தரியாது ஆகி-(அந்தவிசனத்தைத்) தாங்கமாட்டாமல்,* முன்-முதலில், நெருப்பு உயிர்த்து-நெருப்புப்போல உஷ்ணமாகப் பெருமூச்சுவிட்டு, விம்மி-அழுது, முகத்தினில்-முகத்திலே, கண் நீர்-கண்ணீரானது, வார-பெருகிக்கொண்டிருக்க (பின்பு), மன் உயிர்-நிலைபெற்ற உயிர்களை, காக்கும்-பாதுகாக்கின்ற, செங்கோல்-நீதிநெறிதவருத அரசாட்சியையுடைய, மனுவின்-மனுச்சோழனது, பொன் கோயில்-அழகிய அரண்மனையின், வாயில்-வாயிலிற் கட்டப்பட்டுள்ள, பொன்-பொன்னுல், அணி-அலங்கரிக்கப்பட்ட, மணியை-ஆராய்ச்சிமணியை, சென்று-(அருகிற்) போய், கோட்டினுல்-(தனது) கொம்பினுல், புடைத்தது-அடித்தது.

பொழி :—தனது உயிர்போன்ற அருமையான கன்றுனது தேர்க்காலில் அகப்பட்டு இறந்ததனுல் மனம் வருந்திய தாய்ப்பசு அந்த விசனத்தைத் தாங்கமாட்டாமல் முதலில் நெருப்புப்போல உஷ்ணமாகப் பெருமூச்சுவிட்டு அழுது முகத்திலே கண்ணீரானது பெருகிக்கொண்டிருக்க நிலைபெற்ற உயிர்களைப் பாதுகாக்கின்ற நீதிநெறி தவருத அரசாட்சியையுடைய மனுச்சோழனது அழகிய அரண்மனையின் வாயிலிற் கட்டப்பட்டுள்ள பொன்னுல் அலங்கரிக்கப்பட்ட ஆராய்ச்சிமணியை அருகிற்போய்த் தனது கொம்பினுல் அடித்தது. (16)

17. பழிப்பறைமுழக்கோவார்க்கும்பாவத்தினெலியோவேந்தன்
வழித்திரு மைந்த னுவி கொளவரு மறலி யூர்திக்
கழுத்தணிமணியினுர்ப்போவென்னத்தன்கடைமுன்கேளாத்
தெழித்தெழு மோசை மன்னன் செவிப்புலம் புக்க போது.

பத :—'பழி-குற்றத்தை(ப் பலரும் அறிய)த் தெரிவிக்கின்ற, பறை-பறையின், முழக்கோ-ஓசையோ? ஆர்க்கும்-(உயிர்களைக்) கட்டும் தன்மையையுடைய, பாவத்தின்-பாவத்தின், ஒலியோ-ஓசையோ? வேந்தன்-மனுச்சோழராசனது, வழி-வமிசத்தில்தோன்றிய, திரு மைந்தன்-சிறந்த குமாரனது, ஆவி-உயிரை, கொள-கொண்டுபோவதற்கு, வரும்-வருகிற, மறலி-யமனுடைய, ஊர்தி-வாகனமாகிய எருமைக்கடாவின், கழுத்து-கழுத்திலே, அணி-அணிந்துள்ள, மணியின்-மணியின், ஆர்ப்போ-பேரோசையோ?' என்ன-என்று நினைக்கும்படி, தன் கடை-தனது அரண்மனைவாசலில், முன்-(இதற்கு) முன்னே, கேளா-கேட்டிராத, தெழித்து எழும்-ஆரவாரத்துடன் ஒலிக்கின்ற, ஓசை-(ஆராய்ச்சிமணியின்) ஓசையானது, மன்னன்-மனுச்சோழராசனது, செவி புலம்-காதினிடத்தில், புக்கபோது-புகுந்தசமயத்தில்;

பொழி :—'குற்றத்தைப் பலரும் அறியத் தெரிவிக்கின்ற பறையின் ஓசையோ? உயிர்களைக்கட்டும் தன்மையையுடைய பாவத்தின் ஓசையோ? மனுச்சோழராசனது வமிசத்திலே தோன்றிய சிறந்த குமாரனது உயிரைக்

கொண்டுபோவதற்கு வருகிற யமனுடைய வாகனமாகிய எருமைக்கடாவின் கழுத்திலே அணிந்துள்ள மணியின் பேரோசையோ?' என்று நினைக்கும்படி தனது அரண்மனை வாசலில் இதற்குமுன்னே கேட்டிராத ஆரவாரத்துடன் ஒலிக்கின்ற ஆராய்ச்சிமணியின் ஓசையானது மனுச்சோழராசனது காதினிடத்தில் புகுந்த சமயத்தில்; (17)

18. ஆங்கது கேட்ட வேந்த னரியணை யிழிந்து போந்து
பூங்கொடி வாயி னண்ணக் காவல ரெதிரே போற்றி
ஈங்கிதோர் பசுவந் தெய்தி யிறைவநின் கொற்ற வாயிற்
றூங்கியமணியைக்கோட்டாற்றுளக்கியதென்றுசொன்னார்.

பத:—ஆங்கு-அப்போது, அது கேட்ட-அந்த மணியினோசையைக் கேட்ட, வேந்தன்-மன்னனாகிய மனுச்சோழன், (அதன்காரணத்தை அறிய எண்ணி), அரி அணை-சிங்காசனத்திலிருந்து, இழிந்து போந்து-இறங்கிவந்து, பூ-அழகிய, கொடி-துவசங்கள் கட்டப்பட்டுள்ள, வாயில்-அரண்மனைவாயிலை, நண்ண-சேர, காவலர்-(அங்குள்ள) காவலாளர்கள், எதிரே போற்றி-எதிரே வந்து துதித்து, 'இறைவ-அரசனே, ஈங்கு-இப்போது, இது ஓர்பசு-இந்தப் பசுவொன்று, வந்து எய்தி-வந்தடைந்து, நின்-உனது, கொற்றம்-வெற்றி பொருந்திய, வாயில்-வாசலிலே, தூங்கிய-(கட்டப்பட்டுத்) தொங்குகின்ற, மணியை-ஆராய்ச்சிமணியை, கோட்டால்-(தனது) கொம்பினால், துளக்கியது-அடித்தது', என்று சொன்னார்—.

பொழி:—அப்போது அந்த மணியின் ஓசையைக்கேட்ட மன்னனாகிய மனுச்சோழன் அதன் காரணத்தை அறிய எண்ணிச் சிங்காதனத்திலிருந்து இறங்கிவந்து அழகிய துவசங்கள் கட்டப்பட்டுள்ள அரண்மனைவாயிலைச்சேர, அங்குள்ள காவலாளர்கள் எதிரே வந்து துதித்து "அரசனே, இப்போது இந்தப்பசுவொன்று வந்தடைந்து உனது வெற்றிபொருந்திய வாசலிலே கட்டப்பட்டுத் தொங்குகின்ற ஆராய்ச்சிமணியைத் தனது கொம்பினால் அடித்தது" என்று சொன்னார்கள். (18)

19. மன்னவ னதனைக் கேளா வருந்திய பசுவை நோக்கி
என்னிதற் குற்றதென்பா னமைச்சரை யிகழ்ந்து நோக்க
முன்னுற நிகழ்ந்த வெல்லா மறிந்துளான் முதிர்ந்த கேள்வித்
தொன்னெறியமைச்சன்மன்னன்றாளிணைதொழுதுசொல்வான்.

பத:—மன்னவன்-மனுச்சோழராசன், அதனை-(காவலாளர் சொன்ன) அந்தவார்த்தையை, கேளா-கேட்டு, வருந்திய-துன்பப்படுகின்ற, பசுவை—, நோக்கி-பார்த்தவண்ணம், 'இதற்கு-இந்தப்பசுவுக்கு, என் உற்றது-என்ன துன்பம் நேரிட்டது?' என்பான்-என்று வினவுகின்றவனாய், அமைச்சரை-(தன்னுடைய) மந்திரிகளை, இகழ்ந்து நோக்க—, (அப்போது-அவர்களுள்ளே,) நிகழ்ந்த எல்லாம்-நடந்த செய்திகளையெல்லாம், முன்-முன்னே, உற-

முழுவதும், அறிந்துளான்-அறிந்துள்ளவனும், முதிர்ந்த கேள்வி-தேர்ந்த நூற்கேள்விகளையுடைய, தொல் நெறி-பழமையான தருமநெறியில் நடக்கின்றவனுமாகிய, அமைச்சன்-ஒருமந்திரியானவன், மன்னன்-அவ்வரசனுடைய, தாள் இணை-இரண்டு பாதங்களையும், தொழுது-வணங்கி, சொல்வான்-சொல்பவனானன்.

பொழி :—மனுச்சோழராசன் காவலாளர்கள் சொன்ன அந்த வார்த்தையைக்கேட்டுத் துன்பப்படுகின்ற பசுவைப் பார்த்தவண்ணம் ' இந்தப்பசுவுக்கு என்ன துன்பம் நேரிட்டது? ' என்று வினவுகின்றவனைத் தன்னுடைய மந்திரிகளை இகழ்ந்து பார்க்க, அப்போது நடந்த செய்திகளையெல்லாம் முன்னே முழுவதும் அறிந்துள்ளவனும் தேர்ந்த நூற்கேள்விகளையுடைய பழமையான தருமநெறியில் நடக்கின்றவனுமாகிய ஒரு மந்திரியானவன் அவ்வரசனுடைய இரண்டு பாதங்களையும் வணங்கிச் சொல்பவனானன். (19)

20. வளவநின் புதல்வ னாங்கோர் மணிநெடுந் தேர்மே லேறி
அளவிறேர்த் தானை சூழ வரசுலாந் தெருவிற் போங்கால்
இளையவான் கன்று தேர்க்கா லிடைப்புகுந் திறந்த தாகத்
தளர்வுறு மித்தாய் வந்து விளைத்தததித் தன்மை யென்றான்.

பத :—(அமைச்சன் அரசனைநோக்கி) 'வளவ-சோழராசனே, நின் புதல்வன்-உனது குமாரன், மணி-அழகிய, நெடு-பெரிய, ஓர் தேர்மேல்-ஒரு தேரின்மேல், ஏறி-ஏறிக்கொண்டு, அளவு இல்-அளவில்லாத, தேர் தானை-தேர்களும் சேனைகளும், சூழ-(தன்னைச்) சுற்றிலும் வர, அரசு உலாம்-அரசர்கள்செல்லுகின்ற, தெருவில்-வீதியில், போம்கால்-போகும்பொழுது, இளைய-சிறிய, ஆன்கன்று-பசுவின்கன்று ஒன்று, தேர் கால் இடை-தேர்ச் சக்கரத்தின்நடுவே, புகுந்து-அகப்பட்டுக்கொண்டு, இறந்தது ஆக-இறந்து போய்விட (அதனால்), தளர்வுறும்-வருத்தமடைந்த, இ தாய்-இந்தத் தாய்ப்பசு, வந்து-(இங்கு) வந்து, இ தன்மை விளைத்தது-இவ்வாறு செய்தது,' என்றான்—.

பொழி :—அமைச்சன் அரசனைநோக்கி "சோழராசனே, உனது குமாரன் அழகிய பெரிய ஒரு தேரின்மேல் ஏறிக்கொண்டு அளவில்லாத தேர்களும் சேனைகளும் தன்னைச்சுற்றிலும்வர அரசர்கள் செல்லுகின்ற வீதியில் போகும்பொழுது சிறிய பசுவின் கன்று ஒன்று தேர்ச்சக்கரத்தின் நடுவே அகப்பட்டுக்கொண்டு இறந்துபோய்விட அதனால் வருத்தமடைந்த இந்தத் தாய்ப்பசு இங்குவந்து இவ்வாறு செய்தது" என்றான். (20)

21. அவ்வுரை கேட்ட வேந்த னாவுறு துயர மெய்தி
வெவ்விடந் தலைக்கொண் டாற்போல் வேதனை யகத்து மிக்கிங்
கிவ்வினை விளைந்த வாறென் றிடருறு மிரங்கு மேங்குஞ்
செவ்விதென் செங்கோலென்னுந் தெருமருந் தெளியுந்தேறான்.

பத :—அ உரை-அந்த மந்திரியின் வார்த்தையை, கேட்ட—, வேந்தன்-மனுச்சோழராசன், ஆ-பசு, உறு-அடைந்த, அயரம்-துன்பத்தையொத்த துன்பத்தை, எய்தி-(தான்) அடைந்து, வெம் விடம்-கொடியவிஷம், தலைக்கொண்டால் போல்-தலையிலேறினாற்போல, அகத்து-மனத்தில், வேதனை-வருத்தம், மிக்கு-மிகுந்து, 'இங்கு-இப்பொழுது, இ வினை-இந்தச் செயல், விளைந்த ஆறு-விளைந்தவிதம் (என்னே !),' என்று—, இடர் உறும்-துன்பப்படுவான் ; இரங்கும்-மனமிரங்குவான் ; ஏங்கும்-ஏக்கங்கொள்வான் ; 'என் செங்கோல்-எனது செங்கோல், செவ்விது-மிகவும் அழகிதாயிருந்தது !' என்னும்-என்றுசொல்வான் ; தெருமரும்-மூர்ச்சையடைவான் ; தெளியும்-சிறிது தெளிவடைவான் ; தேருன்-(செய்வது இன்னது என்று தோன்ருது) திகைப்பான்.

பொழி :—அந்த மந்திரியின் வார்த்தையைக் கேட்ட மனுச்சோழராசன் பசு அடைந்த துன்பத்தை ஒத்த துன்பத்தைத் தான் அடைந்து கொடிய விஷம் தலையிலேறினாற்போல மனத்தில் வருத்தம் மிகுந்து 'இப்பொழுது இந்தச் செயல் விளைந்தவிதம் என்னே !' என்று துன்பப்படுவான் ; மனமிரங்குவான் ; ஏக்கங்கொள்வான் ; 'எனது செங்கோல் மிகவும் அழகிதாயிருந்தது !' என்று சொல்வான் ; மூர்ச்சையடைவான் ; சிறிது தெளிவடைவான் ; செய்வது இன்னது என்று தோன்ருது திகைப்பான் ; (21)

22. மன்னுயிர் புரந்து வையம் பொதுக்கடிந் தறத்தி னீடும்
என்னெறி நன்று லென்னு மென்செய்தாற் றீரு மென்னுந்
தன்னிளங் கன்று காணுத் தாய்முகங் கண்டு சோரும்
அந்நிலை யரச னுற்ற துயரமோ ரளவிற் றன்ருல்.

பத :—'மன் உயிர்-(உலகத்து) நிலைபெற்ற உயிர்களை, புரந்து-பாது காத்து, வையம்-பூமிமுழுவதையும், பொது கடிந்து-(பலஅரசர்க்குப்) பொதுவாயிருக்குந்தன்மையினின்று நீக்கி, அறத்தில் நீடும்-தருமவழியில் நிலைத்துநிற்கின்ற, என் நெறி-எனது அரசாட்சி, நன்று-நன்ருயிருந்தது !' என்னும்-என்று சொல்வான் ; 'என் செய்தால்-என்ன பரிகாரஞ்செய்தால் தீரும்-(இந்தப்பசுவின் துயரம்) நீங்கும் ?' என்னும்-என்று சொல்வான் ; தன் இளங் கன்று-தனது இளங்கன்றை, காணு-(உயிருள்ளதாகக்) காணுது வருந்துகின்ற, தாய்-தாய்ப்பசுவின், முகம்-முகத்தை, கண்டு—, சோரும்-வாடுவான் ; அ நிலை-அந்தச்சமயத்தில், அரசன்-மனுச்சோழன், உற்ற-அடைந்த, துயரம்—, ஓர் அளவிற்று அன்று-ஓரளவையுடையதன்று.

பொழி :—'உலகத்து நிலைபெற்ற உயிர்களைப் பாதுகாத்துப் பூமிமுழுவதையும் பல அரசருக்குப் பொதுவாயிருக்குந்தன்மையினின்று நீக்கித் தருமவழியில் நிலைத்துநிற்கின்ற எனது அரசாட்சி நன்ருயிருந்தது !' என்று சொல்லுவான் ; 'என்ன பரிகாரஞ்செய்தால் இந்தப்பசுவின் துயரம் நீங்கும்?'

என்று சொல்வான்; தனது இளங்கன்றை உயிருள்ளதாகக் காணாது வருந்துகின்ற தாய்ப்பசுவின் முகத்தைக்கண்டு வாடுவான்; அந்தச்சமயத்தில் மனுச்சோழன் அடைந்த துயரம் ஓரளவையுடையதன்று. (22)

23. மந்திரிக ளதுகண்டு மன்னவனை யடிவணங்கிச்
சிந்தைதளர்ந் தருளுவது மற்றிதற்குத் தீர்வன்றாற்
கொந்தலர்த்தார் மைந்தனைமுன் கோவதைசெய் தார்க்குமறை
அந்தணர்கள் விதித்தமுறை வழிநிறுத்த லறமென்றார்.

பத:—மந்திரிகள்—, அது-அப்படி அரசன் வருந்துவதை, கண்டு-பார்த்து, மன்னவனை-அரசனை, அடி வணங்கி-பாதத்தில் விழுந்து நமஸ்கரித்து, '(அரசரே), சிந்தை-(உமது) மனம், தளர்ந்தருளுவது-கலங்குவது, இதற்கு-இந்தக் கொலைப்பாவத்திற்கு, தீர்வு அன்று-பரிகாரம் ஆகாது; கொந்து-கொத்தாக, அலர்-மலர்ந்த மலர்கள்தொடுத்த, தார்-மாலையையணிந்த, மைந்தனை-(உமது) புத்திரனை, கோ வதை செய்தார்க்கு-பசுக்கன்றைக் கொலைசெய்தவர்க்கு, மறை அந்தணர்கள்-வேதப் பிராமணர்கள், விதித்த-கட்டளையிட்ட, முறைவழி-முறைமையின்படியே, நிறுத்தல்-நடத்துவிப்பது, முன்-இப்போது செய்யக்கூடிய பிரதானமான, அறம்-தருமமாகும்,' என்றார்-என்று சொன்னார்கள்.

பொழி:—மந்திரிகள் அப்படி அரசன் வருந்துவதைப் பார்த்து அரசனைப் பாதத்தில் விழுந்து நமஸ்கரித்து "அரசே, உமது மனம் கலங்குவது இந்தக் கொலைப் பாவத்திற்குப் பரிகாரம் ஆகாது; கொத்தாக மலர்ந்த மலர்கள் தொடுத்த மாலையை அணிந்த உமது புத்திரனைப் பசுக்கன்றைக் கொலை செய்தவர்க்கு வேதப் பிராமணர்கள் கட்டளையிட்ட முறையின்படியே நடத்துவிப்பது இப்போது செய்யக்கூடிய பிரதானமான தருமமாகும்" என்று சொன்னார்கள். (23)

24. வழக்கென்று நீர்மொழிந்தால் மற்றதுதான் வலிப்பட்டுக்
குழக்கன்றை யிழந்தலறுங் கோவுறுநோய் மருந்தாமோ
இழக்கின்றேன் மைந்தனையென் றெல்லீருஞ் சொல்லியவிச்
சழக்கின்று நானியைந்தாற் றருமந்தான் சலியாதோ.

பத:—(அப்போது மனுச்சோழன் மந்திரிகளைநோக்கிக் கூறுவான்):—'(பிராயச்சித்தஞ் செய்விப்பதே), வழக்கு-முறைமையாகும்', என்று—, நீர் மொழிந்தால்-நீங்கள் கூறினால், அது-அந்தப்பிராயச்சித்தம், குழ கன்றை-(தனது) இளங்கன்றை, இழந்து—, வலிப்பட்டு-துன்புற்று, அலறும்-கதறுகின்ற, கோ-தாய்ப்பசு, உறும்-அடைந்துள்ள, நோய்-வருத்தத்தைப் போக்குதற்கேற்ற, மருந்து ஆமோ-பரிகாரமாகுமோ? ஆகாது; 'மைந்தனை-புத்திரனை, இழக்கின்றேன்-(நான்) இழந்துவிடுவேனே' என்று-என்று எண்ணுவதனால், (அவ்வாறு நான் புத்திரனை இழவாதபடி), எல்லீரும்-நீங்களெல்லோ

ரும், சொல்லிய—, இ சழக்கு-(மைந்தனுக்குப் பிராயச்சித்தஞ் செய்துவைக்க வேண்டுமென்ற) குற்றமான இந்த வார்த்தைக்கு, இன்று-இப்போது, நான் இசைந்தால்-நான் உடன்படுவேனுனல், தருமம்-தருமதேவதை, சலியாதோ-சலித்து (உலகத்தைவிட்டு)ப் போய்விடாதோ?

பொழி:—அப்போது மனுச்சோழன் மந்திரிகளை நோக்கிக் கூறுவான்:—"'பிராயச்சித்தம் செய்விப்பதே முறைமையாகும்' என்று நீங்கள் கூறினுல் அந்தப் பிராயச்சித்தம் தனது இளங்கன்றை இழந்து துன்புற்றுக் கதறுகின்ற தாய்ப்பசு அடைந்துள்ள வருத்தத்தைப் போக்குதற்கேற்ற பரிகாரமாகுமோ? ஆகாது; 'புத்திரனை நான் இழந்துவிடுவேனே' என்று எண்ணுவதனுல், அவ்வாறு நான் புத்திரனை இழவாதபடி நீங்களெல்லோரும் சொல்லிய—மைந்தனுக்குப் பிராயச்சித்தம் செய்துவைக்கவேண்டும் என்ற—குற்றமான இந்த வார்த்தைக்கு இப்போது நான் உடன்படுவேனுனல் தரும தேவதை சலித்து உலகத்தைவிட்டுப் போய்விடாதோ? (24)

25. மாநிலங்கா வலனுவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னுற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ.

பத:—மா நிலம்-பெரியபூமிக்கு, காவலன் ஆவான்-அரசனுயிருப்பவன், மன் உயிர்-நிலைபெற்ற (உலகத்து) உயிர்களை, காக்கும் காலை-பாதுகாக்கின்ற காலத்தில், அதனுக்கு-ஏதேனும் ஒருயிர்க்கு, தன்னுல்-தன்னுலாவது, தன் பரிசனத்தால்-தன்னுடைய பரிசனங்களினுலாவது, ஊனம் மிகு-குற்றம் நிரம்பிய, பகை திறத்தால்-பகைவர்மூலமாகவாவது, கள்வரால்-திருடராலாவது, உயிர்தம்மால்-பிறஉயிர்களாலாவது, ஆன-நேரிட்ட, இடையூறு-துன்பத்திற்குக்காரணமான, பயம் ஐந்தும்-ஐவகைஅச்சங்களையும், தான்-தானே, தீர்த்து-போக்கி, அறம்-தருமத்தை, காப்பான் அல்லனோ-பரிபாலனம் பண்ணுபவனல்லனோ?

பொழி:—பெரிய பூமிக்கு அரசனுயிருப்பவன் நிலைபெற்ற உலகத்து உயிர்களைப் பாதுகாக்கின்ற காலத்தில் ஏதேனும் ஒருயிர்க்குத் தன்னுலாவது தன்னுடைய பரிசனங்களினுலாவது குற்றம்நிரம்பிய பகைவர் மூலமாகவாவது திருடராலாவது பிறஉயிர்களாலாவது நேரிட்ட துன்பத்திற்குக் காரணமான ஐவகை அச்சங்களையும் தானே போக்கித் தருமத்தைப் பரிபாலனம் பண்ணுபவனல்லனோ? (25)

26. என்மகன்செய் பாதகத்துக் கிருந்தவங்கள் செயவிசைந்தே
அன்னியனோ ருயிர்கொன்று லவனைக்கொல் வேனுனற்
றென்மனுநூற்றுடைமனுவாற் றுடைப்புண்டதெனும்வார்த்
மன்னுலகிற்பெறமொழிந்தீர்மந்திரிகள்வழக்கென்றுன். [தை

பத:—என் மகன்-எனது குமாரன், செய்-செய்த, பாதகத்துக்கு-கொலைப்பாவத்திற்கு, இரு தவங்கள்-(கொலைத்தண்டனை விதியாமல்) பெரிய பிராயச்சித்தங்களை, செய்-செய்விக்குமாறு, இசைந்து-உடன்பட்டு, அன்னியன்-பிறனொருவன், ஓர் உயிர்-ஒருபிராணியை, கொன்றால்—, (அதற்குப் பிராயச்சித்தஞ்செய்வியாமல்), அவனை—, கொல்வேன் ஆனால்—, (அது பட்சபாதமாகும்): 'தொல்-பழமையான, மனு-மனுஎன்பவர்செய்த, நூல்-நூலின், தொடை-கட்டுப்பாடு, மனுவால்-இந்த மனுச்சோழனால், துடைப்புண்டது-அழிக்கப்பட்டது' எனும்-என்கின்ற, வார்த்தை-பழிச்சொல்லை, மன் உலகில்-நிலைபெற்ற இவ்வுலகத்தில், பெற-(யான்) அடையும்படி, மொழிந்தீர்-கூறினீர்கள்; (இவ்வாறு கூறுவதோ), மந்திரிகள் வழக்கு-மந்திரிகளுக்கு முறைமை? என்றான்—.

பொழி:—எனது குமாரன் செய்த கொலைப்பாவத்திற்குக் கொலைத்தண்டனை விதியாமல் பெரிய பிராயச்சித்தங்களைச் செய்விக்குமாறு உடன்பட்டுப் பிறன் ஒருவன் ஒரு பிராணியைக் கொன்றால் அதற்குப் பிராயச்சித்தம் செய்வியாமல் அவனைக் கொல்வேனானால் அது பட்சபாதமாகும். 'பழமையான மனு என்பவர் செய்த நூலின் கட்டுப்பாடு இந்த மனுச்சோழனால் அழிக்கப்பட்டது' என்கின்ற பழிச்சொல்லை நிலைபெற்ற இவ்வுலகத்தில் யான் அடையும்படி கூறினீர்கள்; இவ்வாறு கூறுவதோ மந்திரிகளுக்கு முறைமை?" என்றான். (26)

27. என்றரச னிகழ்ந்துரைப்ப வெதிர்நின்ற மதியமைச்சர்
நின்றநெறி யுலகின்க ணிதுபோன்முன் னிகழ்ந்ததாற்
பொன்றுவித்தன் மரபன்று மறைமொழிந்த வறம்புரித
றொன்றுதொடு நெறியன்றோ தொன்னிலங்கா வலவென்றார்.

பத:—என்று-என்று இப்படி, அரசன்—, இகழ்ந்து உரைப்ப-பரிகசித்துப் பேச, (அதுகேட்டு), எதிர் நின்ற-எதிரிலே நின்றுகொண்டிருந்த, மதி அமைச்சர்-அறிவுள்ள மந்திரிகள், (அரசனை நோக்கி), 'தொல்-பழமையான, நிலம்-நிலவுலகத்திற்கு, காவல-அரசனே, நெறி நின்ற-நீதிப்படி நடக்கின்ற, உலகின் கண்-இந்தஉலகத்திலே, இதுபோல்-இதனைப்போல, முன்-முன்பு, நிகழ்ந்ததால்-நடந்திருத்தலினால், (இப்பொழுது), பொன்றுவித்தல்-கொல்வித்தல், மரபு அன்று-பெரியோர்கள் நடத்திக்காட்டிய ஆசாரமாகாது; மறை மொழிந்த-வேதத்திற் கூறியுள்ள, அறம்-தருமத்தை, புரிதல்-செய்வது, தொன்று தொடு-தொன்றுதொட்டு அனுஷ்டித்துவருகிற, நெறி அன்றோ-ஒழுக்கமல்லவோ?' என்றார்-என்று மறுமொழிகூறினார்கள்.

பொழி:—என்றுஇப்படி அரசன்பரிகசித்துப்பேச அதுகேட்டு எதிரிலே நின்றுகொண்டிருந்த அறிவுள்ள மந்திரிகள் அரசனை நோக்கி "பழமையான நிலவுலகத்திற்கு அரசனே, நீதிப்படி நடக்கின்ற இந்த உலகத்திலே இதனைப்

போல முன்பு நடந்திருத்தலினுல் இப்பொழுது கொல்வித்தல் பெரியோர்கள் நடத்திக்காட்டிய ஆசாரமாகாது ; வேதத்திற் கூறியுள்ள தருமத்தைச் செய்வது தொன்றுதொட்டு அனுஷ்டித்துவருகிற ஒழுக்கமல்லவா ?" என்று மறுமொழி கூறினுர்கள். (27)

28. அவ்வண்ணந் தொழுதுரைத்த வமைச்சர்களை முகநோக்கி
மெய்வண்ணந் தெரிந்துணர்ந்த மனுவென்னும் விறல்வேந்தன்
இவ்வண்ணம் பழுதுரைத்தீ ரென்றெரியி னிடைத்தோய்ந்த
செவ்வண்ணக்கமலம்போன்முகம்புலர்ந்துசெயிர்த்துரைப்பான்.

பத :—(நீதியின்), மெய்-உண்மையான, வண்ணம்-நிலைமையை, தெரிந்து உணர்ந்த-ஆராய்ந்து அறிந்த, மனு என்னும்-மனுவென்னும் பெயர் பூண்ட, விறல்-வெற்றிபொருந்திய, வேந்தன்-அரசன், அ வண்ணம்-அவ்வாறு, தொழுது உரைத்த-வணங்கிச்சொன்ன, அமைச்சர்களை-மந்திரிமாரை, முகம் நோக்கி-முகத்தைப்பார்த்து, 'இ வண்ணம்-இவ்வாறு, பழுதுஉரைத்தீர்-தவருக மறுமொழிகூறினீர்கள்,' என்று-என்றுசொல்லி, எரியினிடை-நெருப்பிலே, தோய்ந்த-படிந்த, செவ் வண்ணம்-சிவந்த நிறமுடைய, கமலம்போல்-தாமரைமலர்போல, முகம் புலர்ந்து-முகம்வாடி, செயிர்த்து-கோபித்து, உரைப்பான்-(பின்னும்) கூறுபவனுனன் :

பொழி :—நீதியின் உண்மையான நிலைமையை ஆராய்ந்தறிந்த மனு என்னும் பெயர்பூண்ட வெற்றிபொருந்திய அரசன் அவ்வாறு வணங்கிச் சொன்ன மந்திரிமாரை முகத்தைப்பார்த்து "இவ்வாறு தவருக மறுமொழி கூறினீர்கள்" என்று சொல்லி நெருப்பிலே படிந்த சிவந்த நிறமுடைய தாமரைமலர்போல முகம்வாடிக் கோபித்துப் பின்னும் கூறுபவனுனன் : (28)

29. அவ்வுரையில் வருநெறிக ளவைநிற்க வறநெறியின்
செவ்வியவுண் மைத்திறநீர் சிந்தைசெயா துரைக்கின்றீர்
எவ்வுலகி லெப்பெற்ற மிப்பெற்றித் தாமிடரால்
வெவ்வுயிர்த்துக் கதறிமணி யெறிந்துவிழுந் ததுவிளம்பீர்.

பத :—'அ உரையில்-(நீர் கூறிய) அந்த வேதவாக்கியங்களில், வரும்-காணப்படுகின்ற, நெறிகள் அவை-பிராயச்சித்தவிதிகள், நிற்க-கிடக்கட்டும் : நீர்—, அறம் நெறியின்-தரும மார்க்கத்தின், செவ்விய-நேர்மையான, உண்மை திறம்-மெய்ப்பொருளின் கூறுபாட்டை, சிந்தை செயாது-ஆராய்ந்துபாராமல், உரைக்கின்றீர்—; (இதற்குமுன்), எ உலகில்-எந்தத் தேசத்தில், எ பெற்றம்-எந்தப்பசு, இ பெற்றித்து ஆம்-இப்படிப்பட்ட, இடரால்-துன்பத்தினுல், வெவ் உயிர்த்து-உஷ்ணமாகப் பெருமூச்சுவிட்டு, கதறி-அழுதுகொண்டு, மணி எறிந்து-ஆராய்ச்சிமணியை யடித்து, விழுந்தது-கீழேவிழுந்தது ? விளம்பீர்-சொல்லுங்கள் ;

பொழி :—"நீர்கூறிய அந்த வேதவாக்கியங்களில் காணப்படுகின்ற பிராயச்சித்த விதிகள் கிடக்கட்டும் : நீர் தருமமார்க்கத்தின் நேர்மையான மெய்ப்பொருளின் கூறுபாட்டை ஆராய்ந்துபாராமல் உரைக்கின்றீர் ; இதற்குமுன் எந்தத் தேசத்தில் எந்தப்பசு இப்படிப்பட்ட துன்பத்தினால் உஷ்ணமாகப் பெருமூச்சுவிட்டு அழுதுகொண்டு ஆராய்ச்சிமணியை அடித்துக் கீழே விழுந்தது சொல்லுங்கள் ; (29)

30. போற்றிசைத்துப்புரந்தரன்மால்யன்முதலோர்புகழ்ந்திறைஞ்ச
வீற்றிருந்த பெருமானார் மேவியுறை திருவாரூர்த்
தோற்றமுடை யுயிர்கொன்றா னாதலினாற் றுணிபொருடான்
ஆற்றவுமற் றவற்கொல்லு மதுவேயா மெனநினைமின்.

பத :—'புரந்தரன்-இந்திரன், மால்-திருமால், அயன்-பிரமதேவன், முதலோர்-முதலோர்கள், போற்று இசைத்து-வாழ்த்துக்கூறி, புகழ்ந்து-துதித்து, இறைஞ்ச-வணங்கும்படி, வீற்றிருந்த-(திருக்கைலாசத்தில்) சிறப்பாக எழுந்தருளியுள்ள, பெருமானார்-சிவபெருமான், மேவி உறை-பொருந்தி நித்தியவாசஞ்செய்கின்ற, திருவாரூர்-திருவாரூரிலே, தோற்றம் உடை-பிறத்தலையுடைய, உயிர்-பிராணியை, (என்மகன்) கொன்றான்—; ஆதலினால்-ஆகையால், துணி பொருள் தான்-(அதற்குத் தண்டனையாக நான் இப்போது) துணிந்துள்ள காரியம், ஆற்றவும்-உறுதியாக, அவன்-அந்தக்குமாரனை, கொல்லும் அதுவே ஆம்-கொல்லுவதேயாகும், என-என்று, நினைமின்-நினையுங்கள்'

பொழி :—"இந்திரன், திருமால், பிரமதேவன் முதலோர்கள் வாழ்த்துக்கூறித்துதித்து வணங்கும்படி திருக்கைலாசத்தில் சிறப்பாக எழுந்தருளியுள்ள சிவபெருமான் பொருந்தி நித்தியவாசஞ்செய்கின்ற திருவாரூரிலே பிறத்தலை உடைய பிராணியை என்மகன் கொன்றான் ; ஆகையால் அதற்குத் தண்டனையாக நான் இப்போது துணிந்துள்ள காரியம் உறுதியாக அந்தக் குமாரனைக் கொல்லுவதேயாகும் என்று நினையுங்கள்" (30)

31. எனமொழிந்து மற்றிதனுக் கினியிதுவே செயலிவ்வான்
மனமழியுந் துயரகற்ற மாட்டாதேன் வருந்துமிது
தனதுறுபே றிடர்யானுந் தாங்குவதே கருமமென
அனகனரும் பொருடுணிந்தா னமைச்சருமஞ் சினரகன்றார்.

பத :—என மொழிந்து-என்று கூறி, அனகன்-குற்றமற்ற மனுச்சோழன், 'இதனுக்கு-இங்ஙனம் நேர்ந்துள்ள பாவத்திற்கு, இனி-இப்போது, இதுவே-என்மகனைக் கொலைசெய்வதே, செயல்-தக்கசெயலாகும் ; இ ஆன்-இந்தத் தாய்ப்பசு, மனம் அழியும்-மனம் வருந்துகின்ற, துயர்-துன்பத்தைத், அகற்ற மாட்டாதேன்- நீக்கும்வகை தெரியாதவனான, யானும்-நானும், (என்

புத்திரனையிழந்து), வருந்தும்-வருத்தப்படுதலாகிய, இதுதனது-இந்தப்பசுவினுடைய, உறு பேர் இடர்-மிக்கபெருந்துன்பத்தைப்போன்ற துன்பத்தை, தாங்குவதே-ஏற்றுக்கொள்வதே, தருமம்-நீதிதவறாத தொழிலாகும்', என-என்று, அரும் பொருள்-செய்தற்கு அரிய செய்கையை, துணிந்தான்-(செய்யுமாறு) உறுதிகொண்டான்; (அப்போது,) அமைச்சரும்-(அங்கிருந்த) மந்திரிமார்களும், அஞ்சினர்-அச்சங்கொண்டு, அகன்றார்-விலகிச்சென்றார்கள்.

பொழி:—என்று கூறிக் குற்றமற்ற மனுச்சோழன் 'இங்ஙனம் நேர்ந்துள்ள பாவத்திற்கு இப்போது என் மகனைக் கொலைசெய்வதே தக்க செயலாகும். இந்தத் தாய்ப்பசு மனம் வருந்துகின்ற துன்பத்தை நீக்கும் வகை தெரியாதவனான நானும் என் புத்திரனை இழந்து, வருத்தப்படுவதாகிய இந்தப் பசுவினுடைய மிக்கபெருந்துன்பத்தைப்போன்ற துன்பத்தை ஏற்றுக் கொள்வதே நீதிதவறாத தொழிலாகும்' என்று செய்தற்கு அரிய செய்கையைச் செய்யுமாறு உறுதிகொண்டான்; அப்போது அங்கிருந்த மந்திரிமார்களும் அச்சங்கொண்டு விலகிச்சென்றார்கள். (31)

32· மன்னவன்றன் மைந்தனையங் கழைத்தொருமந் திரிதன்னை
முன்னிவனை யவ்வீதி முரண்டேர்க்கா லூர்கவென
அன்னவனு மதுசெய்யா தகன்றுதன்னா ருயிர்துறப்பத்
தன்னுடைய குலமகனைத் தான்கொண்டு மறுகணைந்தான்.

பத:—மன்னவன்-மனுச்சோழமன்னன், தன் மைந்தனை-தனது குமாரனாகிய வீதிவிடங்கனை, அங்கு—, அழைத்து-வருவித்து; ஒரு மந்திரிதன்னை-ஒருமந்திரியைப் பார்த்து, 'இவனை-இந்த என்புத்திரனை, முன்-முதலில், அ வீதி-(பசுவின்கன்று இறந்த) அவ்வீதியிலே (கிடத்தி), முரண்-வலிமை கொண்ட, தேர் கால்-தேர்ச்சக்கரத்தை, ஊர்க-ஏற்றிக்கொல்லக்கடவாய்' என-என்று கட்டளையிட, அன்னவனும்-அந்த மந்திரியும், அது செய்யாது-அவ்வாறு செய்யாமல், அகன்று-அப்பாற்போய், தன்-தனது, ஆர் உயிர்-அருமையானஉயிரை, துறப்ப-போக்கிக்கொள்ள, (மனுச்சோழன்), தன்னுடைய குலம் மகனை-தனது சிறந்த புத்திரனை, தான்-தானே, கொண்டு-அழைத்துக்கொண்டு, மறுகு-அவ்வீதியில், அணைந்தான்-போய்ச்சேர்ந்தான்.

பொழி:—மனுச்சோழமன்னன் தனது குமாரனாகிய வீதிவிடங்கனை அங்கு வருவித்து ஒரு மந்திரியைப் பார்த்து "இந்த என்புத்திரனை முதலில் பசுவின் கன்று இறந்த அவ்வீதியிலே கிடத்தி வலிமைகொண்ட தேர்ச் சக்கரத்தை ஏற்றிக்கொல்லக் கடவாய்" என்று கட்டளையிட அந்த மந்திரியும் அவ்வாறு செய்யாமல் அப்பாற்போய்த் தனது அருமையான உயிரைப் போக்கிக்கொள்ள மனுச்சோழன் தனது சிறந்த புத்திரனைத் தானே அழைத்துக்கொண்டு அவ்வீதியிற் போய்ச்சேர்ந்தான். (32)

33. ஒருமைந்தன் றன்குலத்துக் குள்ளானென் பதுமுணரான்
றருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் றேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த வரசாட்சி யரிதோமற் றெளிதோதான்.

பத :—மனுவேந்தன்—, தன் குலத்துக்கு-தன்னுடைய வமிசத்திற்கு, ஒரு மைந்தன்-ஒருபுத்திரனே, உள்ளான்-இருக்கின்றான், என்பதும்-என்பதனையும், உணரான்-நினையாமல், தருமம் தன்-தருமத்தினுடைய, வழி-வழியே, செல்கை-செல்லுதல், கடன்-முறைமை, என்று-என்று கருதி, தன் மைந்தன்-தன்னுடைய புத்திரனது, மருமம்-உயிர்நிலையில், தன் தேர் ஆழி-தனது தேர்ச் சக்கரம், உற-அழுந்தும்படி, ஊர்ந்தான்-(தனது தேரை) நடத்தினான்; (ஆதலால்), அருமந்த-தேவாமிருதம்போன்ற பெறுதற்கு அருமையான, அரசாட்சி—, அரிதோ-அருமையானதோ? மற்று-அதற்குமாறாக, எளிதோ-இலேசானதோ? எளிதன்று; அரிதானதே.

பொழி :—மனுவேந்தன் தன்னுடைய வமிசத்திற்கு ஒருபுத்திரனே இருக்கின்றான் என்பதையும் நினையாமல் தருமத்தினுடைய வழியே செல்லுதல் முறைமை என்று கருதித் தன்னுடைய புத்திரனது உயிர்நிலையில் தனது தேர்ச்சக்கரம் அழுந்தும்படி தனது தேரை நடத்தினான்; ஆதலால், தேவாமிருதம்போன்ற பெறுதற்கு அருமையான அரசாட்சி அருமையானதோ? அதற்கு மாறாக இலேசானதோ? எளிதன்று; அரிதானதே. (33)

34. தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண்மழைபொழிந்தார்வானவர்பூமழைசொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே யணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்க டொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான்.

பத :—தண் அளி-குளிர்ந்த அருளோடுகூடிய, வெள் குடை-வெண்கொற்றக்குடையையுடைய, வேந்தன்-மனுச்சோழராசனது, செயல்-செய்கையை, கண்டு-பார்த்து, தரியாது-சகிக்கமாட்டாமல், மண்ணவர்-பூவுலகத்தவர்கள், கண் மழை-கண்ணீராகிய மழையை, பொழிந்தார்-சொரிந்தார்கள்: வானவர்-வானுலகத்துத்தேவர்கள், பூ மழை-மலராகியமழையை, சொரிந்தார்-சொரிந்தார்கள்; (அப்பொழுது), அண்ணல்-பெருமைபொருந்திய, அவன்-அந்தமனுச்சோழனது, கண் எதிரே-கண்ணுக்கு எதிரில், அணி வீதி-அழகிய தெருவிலே, வீதிவிடங்கப்பெருமான்—, மழ விடைமேல்-இளமையுள்ள இடபத்தின்மேல், விண்ணவர்கள் தொழ-தேவர்கள் வணங்கி நிற்க, நின்றான்-காட்சிகொடுத்தருளினான்.

பொழி :—குளிர்ந்த அருளோடுகூடிய வெண்கொற்றக்குடையையுடைய மனுச்சோழராசனது செய்கையைப் பார்த்துச் சகிக்கமாட்டாமல் பூவுலகத்தவர்கள் கண்ணீராகிய மழையைச் சொரிந்தார்கள்: வானுலகத்துத்

தேவர்கள் மலராகிய மழையைச் சொரிந்தார்கள்; அப்பொழுது பெருமை பொருந்திய அந்த மனுச்சோழனது கண்ணுக்கு எதிரில் அழகிய தெருவிலே வீதிவிடங்கப்பெருமான் இளமையுள்ள இடபத்தின்மேலே தேவர்கள் வணங்கிநிற்கக் காட்சிகொடுத்தருளினன். (34)

35. சடைமருங்கி லிளம்பிறையுந் தனிவிழிக்குந் திருநுதலும்
இடமருங்கி லுமையாளு மெம்மருங்கும் பூதகணம்
புடைநெருங்கும் பெருமையுமுன் கண்டரசன் போற்றிசைப்ப
விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற் கருள்கொடுத்தான்.

பத:—சடை மருங்கில்-சடையினிடத்தில், இள பிறையும்-இளம்பிறைச் சந்திரனையும், தனி விழிக்கும்-தனிமையாக விழிக்கின்ற ஒற்றைக்கண்ணை யுடைய, திரு நுதலும்-அழகிய நெற்றியையும், இடம் மருங்கில்-இடப் பக்கத்தில், உமையாளும்-பார்வதீதேவியையும், எ மருங்கும்-எல்லாப்பக்கங்க ளிலும், பூத கணம்-பூதகணங்கள், புடை நெருங்கும்-அருகில் நெருங்கி யிருக்கப்பெற்ற, பெருமையும்-சிறப்பையும், முன் கண்டு-எதிரில் பிரத்தியட்ச மாகத் தரிசித்து, அரசன்-மனுச்சோழராசன், போற்று இசைப்ப-வாழ்த்துக் கூறி நிற்க, விடை மருவும்-ருஷபவாகனத்தின்மேலெழுந்தருளிய, பெருமா னும்-சிவபெருமானும், விறல் வேந்தற்கு-வெற்றிபொருந்திய அந்த மனு வேந்தனுக்கு, அருள் கொடுத்தான்-(அவனது வருத்தமெல்லாம் தீருமாறு) திருவருள் சுரந்தான்.

பொழி:—சடையினிடத்தில் இளம்பிறைச்சந்திரனையும் தனிமையாக விழிக்கின்ற ஒற்றைக்கண்ணையுடைய அழகிய நெற்றியையும் இடப்பக்கத் தில் பார்வதீதேவியையும் எல்லாப்பக்கங்களிலும் பூதகணங்கள் அருகில் நெருங்கி இருக்கப்பெற்ற சிறப்பையும் எதிரில் பிரத்தியட்சமாகத் தரிசித்து மனுச்சோழராசன் வாழ்த்துக்கூறிநிற்க ருஷபவாகனத்தின்மேல்எழுந்தருளிய சிவபெருமானும் வெற்றிபொருந்திய அந்த மனுவேந்தனுக்கு அவனது வருத்தமெல்லாம் தீருமாறு திருவருள் சுரந்தான். (35)

36. அங்கிலையே யுயிர்பிரிந்த வான்கன்று மவ்வரசன்
மன்னுரிமைத் தனிக்கன்று மந்திரியு முடனெழலும்
இன்னபரி சானனென் றறிந்திலன்வேந் தனும்யார்க்கும்
முன்னவனே முன்னின்றான் முடியாத பொருளுளதோ.

பத:—அங்கிலையே-அப்போதே, உயிர் பிரிந்த-உயிர்நீங்கிய, ஆன் கன்றும்-பசுவின்கன்றும், அ அரசன்-அந்த மனுச்சோழனது, மன் உரிமை-அரச உரிமையுடைய, தனி-ஒப்பற்ற, கன்றும்-குமாரனும், மந்திரியும்—, உடன் எழலும்-ஒருசேர உயிர்பெற்று எழுந்தவுடனே, வேந்தனும்-மனுச்சோழராச னும், இன்ன பரிசு ஆனன் என்று அறிந்திலன்-இத்தன்மையனானான் என்று

கூறுதற்கு அறியேன்; யார்க்கும்-எவர்க்கும், முன்னவனே-முற்பட்டவனான முதற்கடவுளே, முன் நின்றால்-எதிரில்வந்து காட்சிகொடுத்தால், முடியாத பொருள்-முடியாத செயலும், உளதோ-உண்டோ? இல்லை.

பொழி:—அப்போதே உயிர் நீங்கிய பசுவின்கன்றும் அந்த மனுச் சோழனது அரசஉரிமையுடைய ஒப்பற்ற குமாரனும் மந்திரியும் ஒருசேர உயிர்பெற்று எழுந்தவுடனே மனுச்சோழராசனும் இத்தன்மையனானேன் என்று கூறுதற்கு அறியேன்; எவர்க்கும் முற்பட்டவனான முதற்கடவுளே எதிரில்வந்து காட்சி கொடுத்தால் முடியாத செயலும் உண்டோ? இல்லை.(36)

37. அடிபணிந்த திருமகனை யாகமுற வெடுத்தணைத்து
நெடிதுமகிழ்ந் தருந்துயர நீங்கினா னிலவேந்தன்
மடிசுரந்து பொழிதீம்பால் வருங்கன்று மகிழ்ந்துண்டு
படிநனைய வரும்பசுவும் பருவரனீங் கியதன்றே.

பத:—நிலம் வேந்தன்-நிலவுலகத்துக்கு அரசனாகிய மனுச்சோழன், அடி பணிந்த-(தன்னுடைய) பாதங்களில் வீழ்ந்துவணங்கிய, திருமகனை-செல்வப்புதல்வனை, ஆகம் உற-மார்பில் நன்றாகப்பொருந்தும்படி, எடுத்து அணைத்து-எடுத்துத்தழுவி, நெடிது மகிழ்ந்து-மிகவும் மகிழ்ச்சிகொண்டு, அரு துயரம்-(தனது) மிக்கதுயரம், நீங்கினான்-நீங்கப்பெற்றான்; வரும் பசுவும்-(அங்கு) வந்துள்ள தாய்ப்பசுவும், படி நனைய-பூமி நனையும்படியாக, மடி-(தனது) மடியிலிருந்து, சுரந்து-சுரப்பெடுத்து, பொழி-சொரிகின்ற, தீம் பால்-இனிய பாலை, வரும் கன்று-பிழைத்தெழுந்து வந்த கன்றானது, மகிழ்ந்து—, உண்டு-ஊட்டியதனால், பருவரல் நீங்கியது-துன்பம் நீங்கப்பெற்றது.

பொழி:—நிலவுலகத்துக்கு அரசனாகிய மனுச்சோழன் தன்னுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கிய செல்வப்புதல்வனை மார்பில் நன்றாகப் பொருந்தும்படி எடுத்துத்தழுவி மிகவும் மகிழ்ச்சிகொண்டு தனது மிக்க துயரம் நீங்கப்பெற்றான்; அங்குவந்துள்ள தாய்ப்பசுவும் பூமி நனையும்படி யாகத் தனது மடியிலிருந்து சுரப்பெடுத்துச் சொரிகின்ற இனிய பாலைப் பிழைத்தெழுந்துவந்த கன்றானது மகிழ்ந்து ஊட்டியதனால் துன்பம் நீங்கப் பெற்றது. (37)

## (3) உ ரு த் தி ர ப சு ப தி யா ர்.

1. நிலத்தி னோங்கிய நிவந்தெழும் பெரும்புன னீத்தம்
மலர்த்த டம்பணை வயல்புகு பொன்னிநன் னாட்டுக்
குலத்தி னோங்கிய குறைவிலா நிறைகுடி குழுமித்
தலத்தின் மேம்படு நலத்தது பெருந்திருத் தலையூர்.

பத:—நிலத்தின்-நிலவுலகத்தில், ஓங்கிய-வளம் பெருகுவதற்கு ஏதுவாகிய, நிவந்து எழும்-மேன்மேலும் பெருகிவருகின்ற, பெரும் புனல் நீத்தம்-மிக்க நீரின் பிரவாகமானது, மலர்-தாமரைமலர்களையுடைய, தடம் பணை வயல்-அகன்ற வயல்களில், புகு-பாய்கின்ற, பொன்னி நல் நாட்டு-பொன்னி என்னும் காவிரிநதி பாயப்பெற்ற நல்ல சோழவளநாட்டிலே, குலத்தின் ஓங்கிய-குலத்தாற்சிறந்த, குறைவு இலா-கல்வி அறிவு ஒழுக்கங்களில் குறைவில்லாத, நிறை-நிறைந்த, குடி குழுமி-குடிமக்கள் நெருங்கி, தலத்தின்-அந்த நாட்டிலுள்ள ஊர்களில், மேம்படு-பெருமைபொருந்திய, நலத்தது-சிறப்பினையுடையது, பெரும்-பெரிய, திருத்தலையூர்-திருத்தலையூர் என்னும் ஊராகும்.

பொழி:—நிலவுலகத்தில் வளம்பெருகுவதற்கு ஏதுவாகிய மேன்மேலும் பெருகிவருகின்ற மிக்க நீரின்பிரவாகமானது, தாமரைமலர்களையுடைய அகன்றவயல்களிற் பாய்கின்ற பொன்னி என்னும் காவிரிநதி பாயப்பெற்ற நல்ல சோழவளநாட்டிலே குலத்தாற் சிறந்த கல்விஅறிவு ஒழுக்கங்களிற் குறைவில்லாத நிறைந்த குடிமக்கள் நெருங்கி, அந்த நாட்டிலுள்ள ஊர்களில் பெருமைபொருந்திய சிறப்பினையுடையது பெரிய திருத்தலையூர் என்னும் ஊராகும். (1)

2. வான ளிப்பன மறையவர் வேள்வியின் வளர்தீ
தேன ளிப்பன நறுமலர் செறிசெழுஞ் சோலை
ஆன ளிப்பன வஞ்சுகந் தாடுவார்க் கவ்வூர்
தான ளிப்பன தருமமு நீதியுஞ் சால்பும்.

பத:—அ ஊர்-அந்த ஊரிலுள்ளவர்கள், தருமமும் நீதியும் சால்பும்-அறம் நீதி நிறைகுணங்கள் என்பவற்றை, அளிப்பன-கொடுக்கின்றார்கள்; மறையவர்-அந்தணர்களுடைய, வேள்வியின் வளர் தீ-யாகங்களில் வளர்க்கப்படும் அக்கினிகள், வான் அளிப்பன-மழையைக்கொடுக்கின்றன; நறுமலர் செழும் சோலை-நறுமணம் கமழும் பூக்கள் நெருங்கிய சோலைகள், தேன் அளிப்பன-தேனைக்கொடுக்கின்றன; உகந்து ஆடுவார்க்கு-விரும்பி நர்த்தனம் செய்தருளும் (அபிஷேகம் கொண்டருளும்) சிவபெருமானுக்கு, ஆன்-பசுக்கள், அஞ்சு அளிப்பன-பஞ்சகவ்யத்தைக் கொடுக்கின்றன.

பொழி:—அந்த ஊரில் உள்ளவர்கள் அறம், நீதி, நிறைகுணங்கள் என்பவற்றைக் கொடுக்கின்றார்கள்; அந்தணர்களுடைய யாகங்களில்

வளர்க்கப்படும் அக்கினிகள் மழையைக் கொடுக்கின்றன; நறுமணங்கமழும் சோலைகள் தேனைக் கொடுக்கின்றன; அடியார்களின்பொருட்டு விரும்பி நர்த்தனம் செய்தருளும் (அபிஷேகம் கொண்டருளும்) சிவபெருமானுக்குப் பசுக்கள் பஞ்சகவ்யத்தைக் கொடுக்கின்றன. (2)

3. அங்கண் மாநக ரதனிடை யருமறை வாய்மைத்
தூங்க வேதியர் குலத்தினிற் றோன்றிய தூயோர்
செங்கண் மால்விடை யார்செழும் பொன்மலை வல்லி
பங்க னாடி மைத்திறம் புரிபசு பதியார்.

பத:— அம் கண் மா நகர் அதன் இடை-அழகிய இடமகன்ற பெருமை பொருந்திய அந்த நகரத்திலே, அருமறை வாய்மை-அருமையான வேதத்திற் கூறிய மெய்மை அமைந்த, தூங்கம் வேதியர் குலத்தினில் தோன்றிய-ஒழுக்கத்தால் உயர்ந்த மறையவர்குலத்தில் உதித்த, தூயோர்-பரிசுத்தமான வரும், செம் கண் மால் விடையார்-சிவந்த கண்களையுடைய திருமாலாகிய இடபத்தை ஊர்ந்தருளும், செழும்பொன் மலை வல்லி பங்கனார்-செழுமை யான இமயமலையின் புத்திரியாகிய கொடிபோன்ற உமாதேவியை இடப் பாகத்திலுடையவருமாகிய சிவபிரானது, அடிமை திறம் புரி-திருத் தொண்டைச்செய்கின்றவரும்ஆகிய, பசுபதியார்-பசுபதியார் என்னும் திருப் பெயரினையுடையவர் ஒருவர் இருந்தார்.

பொழி:—அழகிய இடமகன்ற பெருமைபொருந்திய அந்த நகரத்திலே அருமையான வேதத்திற்கூறிய மெய்மைஅமைந்த ஒழுக்கத்தால் உயர்ந்த மறையவர்குலத்தில் உதித்த பரிசுத்தமானவரும், சிவந்த கண்களையுடைய திருமாலாகிய இடபத்தை ஊர்ந்தவரும் செழுமையான இமயமலையின் புத்திரி யாகிய கொடிபோன்ற உமாதேவியை இடப்பாகத்திலுடையவருமாகிய சிவபெருமானது திருத்தொண்டைச் செய்கின்றவருமாகிய பசுபதியார் என்னும் திருப்பெயரினையுடையவர் ஒருவர் இருந்தார். (3)

4. ஆய வந்தண ரருமறை யுருத்திரங் கொண்டு
மாய னாறி யாமலர்ச் சேவடி வழுத்துந்
தூய வன்பொடு தொடர்பினி லிடையறாச் சுருதி
நேய நெஞ்சின ராகியத் தொழிறலை நின்றார்.

பத:—ஆய அந்தணர்-அந்த வேதியராகிய பசுபதியார், அருமறை-ஓதற் கரிய யஜுர்வேதத்திற் படிக்கப்படுகிற, உருத்திரங்கொண்டு-ஸ்ரீருத்திரம் என்னும் மஹாமந்திரத்தால், மாயனார் அறியா-திருமாலும் தேடி அறியமுடி யாத, மலர் சே அடி-(சிவபெருமானுடைய)மலர்போலும் திருவடிகளை, வழுத் தும்-துதிக்கின்ற, தூய-பரிசுத்தமான, அன்பொடு-பக்தியோடு, தொடர்பினில்-சந்தசில், இடை அறா-மத்தியில் குறை நேராதபடி, சுருதி-சுருதியை, நேயம்-

விரும்பிய, நெஞ்சினர் ஆகி-மனமுடையவராயிருக்கும், அ தொழில் தலை நின்றார்-அந்த ஓதற்றொழிலில் சிறந்து விளங்கினார்.

பொழி :—அந்த வேதியராகிய பசுபதியார் ஓதற்கரிய யஜுர்வேதத்திற் படிக்கப்படுகிற ஸ்ரீ ருத்திரம் என்னும் மஹாமந்திரத்தால் திருமாலும் தேடி அறிய முடியாத சிவபெருமானுடைய மலர்போலும் திருவடிகளைத் துதிக்கின்ற பரிசுத்தமான பக்தியோடு சந்தசில் மத்தியில் குறை நேராதபடி சுருதியை விரும்பிய மனமுடையவராயிருக்கும் அந்த ஓதற்றொழிலில் சிறந்து விளங்கினார். (4)

5. கரையில் கம்பலை புள்ளொலி கறங்கிட மருங்கு
பிரச மென்சுரும் பறைந்திடக் கருவரால் பிறழும்
நிரைநெ டுங்கய நீரிடை நெருப்பெழுந் தனைய
விரைநெ கிழ்ந்தசெங் கமலமென் பொய்கையின் மேவி

6. தெள்ளு தண்புனல் கழுத்தள வாயிடைச் செறிய
உள்ளு றப்புக்கு நின்றுகை யுச்சிமேற் குவித்துத்
தள்ளு வெண்டிரைக் கங்கைநீர் ததும்பிய சடையார்
கொள்ளு மன்பினி லுருத்திரங் குறிப்பொடு பயின்றார்.

பத :—கரையில்-அளவுபடாத, கம்பலை-ஓசையுடன், புள்-பறவைகள், ஒலி-ஒலித்துக்கொண்டு, கறங்கிட-சுற்ற, மருங்கு-பக்கத்தில், பிரசம்-தேனை உறிஞ்சும்பொருட்டு, மென் சுரும்பு-மிருதுவான ஆண்வண்டுகள், அறைந்திட-ஒலிக்க, கரு வரால்-கரிய வரால்மீன்கள், பிறழும்-பிறழ்ந்து செல்லுகின்ற, நிறை நெடும் கயம்-நீர்நிறைந்த நெடியவாவியிலே, நீரிடை நெருப்பு எழுந்தனைய-நீரினிடத்து நெருப்புத் தோன்றினாற்போல, விரை-வாசனையோடு, நெகிழ்ந்த மென் செம் கமலம் பொய்கையின்-மலர்ந்த மென்மையான செந்தாமரை மலர்களையுடைய தடாகத்தில் (சென்று), ஆ இடை-அந்தப் பொய்கையிலுள்ள, தெள்ளு-தெளிந்த, தண் புனல்-குளிர்ந்த நீரானது, கழுத்து அளவு செறிய-தம் கழுத்தளவும் பொருந்தும்படி, உள் உற புக்கு நின்று-அதனுள் இறங்கி நின்று, கை உச்சிமேல் குவித்து-இருகரங்களையும் சிரசின்மேற்கூப்பிக்கொண்டு, வெள் திரை தள்ளு கங்கைநீர் ததும்பிய சடையன்-வெண்மையான அலைகளைவீசுகின்ற கங்கைநீர் நிறைந்து ததும்புகின்ற சடையையுடைய சிவபெருமான், கொள்ளும் அன்பினில்-விரும்பி ஏற்றுக்கொள்ளத்தக்கபக்தியோடு, உருத்திரம்-ஸ்ரீருத்திர மஹாமந்திரத்தை, குறிப்பொடு-கருத்துடன், பயின்றார்-ஓதிவரலானார்.

பொழி :—அளவுபடாத ஓசையுடன் பறவைகள் ஒலித்துக்கொண்டு சுற்ற, பக்கத்தில் தேனை உறிஞ்சும்பொருட்டு மிருதுவான ஆண்வண்டுகள் ஒலிக்க, கரிய வரால்மீன்கள் பிறழ்ந்துசெல்லுகின்ற நீர்நிறைந்த நெடிய

வாவியிலே நீரினிடத்து நெருப்புத்தோன்றினாற்போல வாசனையோடு மலர்ந்த மென்மையான செந்தாமரைமலர்களையுடைய தடாகத்தில் சென்று அந்தப்பொய்கையிலுள்ள தெளிந்த குளிர்ந்தநீரானது தம் கழுத்தளவும் பொருந்தும்படி அதனுள் இறங்கி நின்று இருகரங்களையும் சிரசின்மேற் கூப்பிக்கொண்டு வெண்மையான அலைகளைவீசுகின்ற கங்கைநீர் ததும்புகின்ற சடையையுடைய சிவபெருமான் விரும்பி ஏற்றுக்கொள்ளத்தக்க பக்தியோடு ஸ்ரீருத்திரமஹாமந்திரத்தைக் கருத்துடன் ஓதிவரலானார். (5—6)

7. அருமறைப்பய னாகிய வுருத்திர மதனை
வருமு றைப்பெரும் பகலுமெல் லியும்வழு வாமே
திரும லர்ப்பொருட் டிருந்தவ னனையவர் சிலநாள்
ஒருமை யுய்த்திட வுமையிட மகிழ்ந்தவ ருவந்தார்.

பத:— அரு மறை பயன் ஆகிய உருத்திரம் அதனை-அரிய வேதத்தின் பயனாகிய ஸ்ரீ ருத்திரம் என்னும் மஹாமந்திரத்தை, வரும் முறை-ஓதிவரும் முறைமையில், பெரும் பகலும் எல்லியும்-பெரிய பகற்காலத்திலும் இராக் காலத்திலும், வழுவாமே-தவறாமல், திருமலர் பொருட்டு இருந்தவன் அனையவர்-அழகிய தாமரைமலரின் கர்ணிகையில் வீற்றிருக்கும் நான்முகனை ஒத்த பசுபதியார், சில நாள்—, ஒருமை-ஒருமைப்பாட்டோடு, உய்த்திட-தோத்திரஞ் செய்துவர, உமை இடம் மகிழ்ந்தார்-உமாதேவியை இடப்பாகத் திலே கொண்டருளும் சிவபிரானார், உவந்தார்-மகிழ்ச்சியடைந்தார்.

பொழி:—அரிய வேதத்தின் பயனாகிய ஸ்ரீ ருத்திரம் என்னும் மஹா மந்திரத்தை ஓதிவரும் முறைமையில் பெரிய பகற்காலத்திலும் இராக்காலத்தி லும் தவறாமல் அழகிய தாமரைமலரின் கர்ணிகையில் வீற்றிருக்கும் நான்முகனை ஒத்த பசுபதியார் சில நாள் ஒருமைப்பட்டுத் தோத்திரஞ் செய்து வர உமாதேவியை இடப்பாகத்திலே கொண்டருளும் சிவபிரானார் மகிழ்ச்சியை அடைந்தார். (7)

8. காத லன்பர்த மருந்தவப் பெருமையுங் கலந்த
வேத மந்திர நியதியின் மிகுதியும் விரும்பி
ஆதி நாயக ரமர்ந்தருள் செய்யமற் றவர்தாந்
தீதி லாநிலைச் சிவபுரி யெல்லையிற் சென்றார்.

பத:—காதல் அன்பர் தம்-அன்பினையுடைய பசுபதியாரது, அரும் தவம் பெருமையும்-அரிய தவத்தின் பெருமையையும், கலந்த வேதம் மந்திரம் நியதியின் மிகுதியும்-ஸ்ரீ ருத்திர மந்திரத்தில் ஒன்றுபட்ட நியமத்தின் மிகுதி யையும், விரும்பி—, ஆதி நாயகர்-ஆதியங்கடவுளாகிய சிவபெருமான், அமர்ந்து-திருவுள்ளங்கொண்டு, அருள் செய்ய—, அவர்-அப்பசுபதியார், தீது

இலா-குற்றமில்லாத, நிலை-நிலைத்த, சிவபுரி எல்லையில்-சிவலோகத்தின் எல்லையை, சென்றார்-சென்றடைந்தார்.

பொழி :—அன்பினையுடைய பசுபதியாரது அரிய தவத்தின் பெருமையையும் ஸ்ரீ ருத்திர மந்திரத்தில் ஒன்றுபட்ட நியமத்தின் மிகுதியையும் விரும்பி, ஆதியங்கடவுளாகிய சிவபெருமான் திருவுள்ளங்கொண்டு அருள்செய்ய அப்பசுபதியார் குற்றமில்லாத நிலைத்த சிவலோகத்தின் எல்லையைச் சென்றடைந்தார். (8)

9. நீடு மன்பினி லுருத்திர மோதிய நிலையால்
ஆடு சேவடி யருகுற வணைந்தன ரவர்க்குப்
பாடு பெற்றசீ ருருத்திர பசுபதி யாராங்
கூடு நாமமு நிகழ்ந்தது குவலயம் போற்ற.

பத :—நீடும் அன்பினில் உருத்திரம் ஓதிய நிலையால்-மிக்க பேரன்பால் ஸ்ரீ ருத்திரத்தை ஜபித்த நியமத்தால், ஆடு சே அடி அருகு உற அணைந்தார்-பொன்னம்பலத்தில் ஆனந்தநிருத்தம் செய்தருளும் ஸ்ரீ நடராஜப்பெருமானுடைய செந்தாமரைபோன்ற திருவடிகளுக்குச் சமீபமாகிய சாமீப்ய பதத்தை அடைந்தார்; (அதனால்) அவர்க்கு-அந்தப் பசுபதியார்க்கு, பாடு பெற்ற-மேன்மைபொருந்திய, சீர்-சிறப்பினையுடைய, உருத்திரபசுபதியார்-உருத்திரபசுபதியார் என்கின்ற, கூடும்-பொருத்தமான, நாமமும்-திருப்பெயரும், குவலயம் போற்ற நிகழ்ந்தது-உலகத்தார் துதிக்கும்படி உண்டாயிற்று.

பொழி :—மிக்க பேரன்பால் ஸ்ரீ ருத்திரத்தை ஜபித்த நியமத்தால் பொன்னம்பலத்தில் ஆனந்தநிருத்தம் செய்தருளும் ஸ்ரீ நடராஜப்பெருமானுடைய செந்தாமரைபோன்ற திருவடிகளுக்குச் சமீபமாகிய சாமீப்ய பதத்தை அடைந்தார்; அதனால் அந்தப் பசுபதியார்க்கு மேன்மைபொருந்திய சிறப்பினையுடைய உருத்திரபசுபதியார் என்கின்ற பொருத்தமான திருப்பெயரும் உலகத்தார் துதிக்கும்படி உண்டாயிற்று. (9)

## (4) காரைக்காலம்மையார்.

1. மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில்
ஊனமில்சீர்ப் பெருவணிகர் குடிதுவன்றி யோங்குபதி
கூனல்வளை திரைசுமந்து கொண்டேறி மண்டுகழிக்
கானன்மிசை யுலவுவளம் பெருகுதிருக் காரைக்கால்.

பத :—கூனல்-வளைந்த, வளை-சங்கங்களை, திரை-அலைகள், சுமந்து கொண்டு-ஏந்திக்கொண்டு, ஏறி-(கரையின்மீது) ஏறி, மண்டு-நெருங்கிய, கழி-உப்பங்கழியையடுத்துள்ள, கானல்மிசை-கடற்கரைச் சோலையில், உலவு-உலாவுதற்குஇடமான, வளம் பெருகு-செழிப்புமிகுந்த, திரு காரைக்கால்-அழகிய காரைக்கால்என்பது, மானம் மிகு-பெருமை மிகுந்த, தருமத்தின்—, வழி-வழியிலே, நின்று-உறுதியாக இருந்து, வாய்மையினில்-சத்தியத்தில், ஊனம் இல்-குறைவில்லாத, சீர்-புகழ்படைத்த, பெரு வணிகர்-பெரிய வர்த்தகர்களின், குடி-குலங்கள், துவன்றி-நெருங்கி, ஓங்கு-(அதனால்) சிறப்புப் பெற்ற, பதி-நகரமாகும்.

பொழி :—வளைந்த சங்கங்களை அலைகள் ஏந்திக்கொண்டு கரையின்மீது ஏறி நெருங்கிய உப்பங்கழியை அடுத்துள்ள கடற்கரைச் சோலையில் உலாவுதற்கு இடமான செழிப்புமிகுந்த அழகிய காரைக்கால் என்பது, பெருமை மிகுந்த தருமத்தின் வழியிலே உறுதியாக இருந்து சத்தியத்தில் குறைவில்லாத புகழ்பெற்ற பெரிய வர்த்தகர்களின் குலங்கள் நெருங்கி அதனால் சிறப்புப்பெற்ற நகரமாகும். (1)

2. வங்கமலி கடற்காரைக் காலின்கண் வாழ்வணிகர்
தங்கள்குலத் தலைவனார் தனதத்த னார்தவத்தால்
அங்கவர்பாற் றிருமடந்தை யவதரித்தா ளெனவந்து
பொங்கியபே ரழகுமிகப் புனிதவதி யார்பிறந்தார்.

பத :—வங்கம்-மரக்கலங்கள், மலி-நிறைந்த, கடல்-கடற்கரையிலிருக்கும், காரைக்காலின்கண்-காரைக்கால் என்ற பட்டினத்தில், வாழ்-வசிக்கின்ற, வணிகர் தங்கள்-வர்த்தகர்களுடைய, குலம்-சமூகத்துக்கு, தலைவனார்-தலைவராக விளங்குகின்ற, தனதத்தனார்-தனதத்தர் என்பவர், (முற்பிறப்பிற் செய்த), தவத்தால்-தவத்தின்பயனாக, அவர்பால்-அவரிடத்தில், திருமடந்தை-இலக்குமியே, வந்து-(ஒருபெண்வடிவு கொண்டு) வந்து, அவதரித்தாள்—, என-என்று (கண்டோர்) சொல்லும்படி, பொங்கிய பேர் அழகு மிக-மிக்க பேரழகு விளங்குகின்ற, புனிதவதியார்-புனிதவதி என்ற ஒருபெண், பிறந்தார்-தோன்றினாள்.

பொழி :—மரக்கலங்கள் நிறைந்த கடற்கரையிலிருக்கும் காரைக்கால் என்ற பட்டினத்தில் வசிக்கின்ற வர்த்தகர்களுடைய சமூகத்துக்குத் தலைவ

ராக விளங்குகின்ற தனதத்தர் என்பவர் முற்பிறப்பிற் செய்த தவத்தின் பயனுக அவரிடத்தில் இலக்குமியே ஒரு பெண்வடிவுகொண்டு வந்து அவதரித்தாள் என்று கண்டோர் சொல்லும்படி மிக்க பேரழகு விளங்குகின்ற புனிதவதி என்ற ஒரு பெண் தோன்றினாள். (2)

3. வணிகர்பெருங் குலம்விளங்க வந்துபிறந் தருளியபின்
அணிகிளர்மெல் லடிதளர்வுற் றசையுநடைப் பருவத்தே
பணியணிவார் கழற்கடிமை பழகிவரும் பாங்குபெறத்
தணிவில்பெரு மனக்காத றதும்பவரு மொழிபயின்றார்.

பத :—வணிகர்-வணிகரது, பெரு குலம்-பெருமைபெற்ற வமிசம், விளங்க-விளங்கும்படி, வந்து பிறந்தருளிய பின்-வந்து அவதரித்த பின்பு, (அந்தப் புனிதவதியார்), அணி கிளர்-(சதங்கை முதலிய) ஆபரணங்கள் விளங்குகின்ற, மெல் அடி-மெல்லிய பாதங்கள், தளர்வுஉற்று-சோர்வடைந்து, அசையும்-தள்ளாடிச் செல்லுகின்ற, நடை-நடையைக் கொண்ட, பருவத்தே—, பணி-சர்ப்பங்களை, அணிவார்-ஆபரணமாகப் பூண்பவராகிய சிவபெருமானுடைய, கழற்கு-திருவடிகளிடத்துச் செய்கின்ற, அடிமை-திருத்தொண்டை, பழகிவரும்-பழக்கமாகச்செய்து வரப்போகின்ற, பாங்கு-சிறப்பு, பெற-தோன்றுமாறு, தணிவு இல்-குறைவில்லாத, பெரு மனம் காதல்-மனத்திலுள்ள பேரன்பானது, ததும்ப-வெளிப்பட, வரு-வருகின்ற, மொழி-(குதலைச்) சொல்லை, பயின்றார்-பேசப்பழகலானார்.

பொழி :—வணிகரது பெருமைபெற்ற வமிசம் விளங்கும்படி வந்து அவதரித்தபின்பு அந்தப் புனிதவதியார் சதங்கை முதலிய ஆபரணங்கள் விளங்குகின்ற மெல்லிய பாதங்கள் சோர்வடைந்து தள்ளாடிச் செல்லுகின்ற நடையைக்கொண்ட பருவத்திலேயே சர்ப்பங்களை ஆபரணமாகப் பூண்பவராகிய சிவபெருமானுடைய திருவடிகளிடத்துச் செய்கின்ற திருத்தொண்டைப் பழக்கமாகச் செய்துவரப்போகின்ற சிறப்புத்தோன்றுமாறு குறைவில்லாத மனத்திலுள்ள பேரன்பானது வெளிப்பட வருகின்ற குதலைச் சொல்லைப் பேசப்பழகலானார். (3)

4. பல்பெருநற் கிளையுவப்பப் பயில்பருவச் சிறப்பெல்லாஞ்
செல்வமிகு தந்தையார் திருப்பெருகுஞ் செயல்புரிய
மல்குபெரும் பாராட்டின் வளர்கின்றார் விடையவர்பால்
அல்கியவன் புடனழகின் கொழுந்தெழுவ தெனவளர்வார்.

பத :—பயில் பருவம்-நிகழ்கின்ற பருவங்களிற்செய்யக்கூடிய, சிறப்பு எல்லாம்-கொண்டாட்டங்களையெல்லாம், செல்வம் மிகு தந்தையார்-செல்வத்தினுல்மிக்க தந்தையாரான தனதத்தனுர், பெரு-பெருமைபொருந்திய, நல்-நல்ல, பல் கிளை-பல பந்துக்களும், உவப்ப-மகிழும்படி, திரு பெருகும்-(தமது)

செல்வம் மிகுந்ததற்கு ஏற்ற, செயல்-செயலினல், புரிய-செய்ய, மல்கு-மிகுந்த, பெரு பாராட்டின்-பெருஞ்சிறப்போடு, வளர்கின்ருர்-வளர்கின்றவரான அந்தப்புனிதவதியார், விடையவர்பால்-சிவபெருமானிடத்து, அல்கிய-நிலைத்துநின்ற, அன்புடன் அழகின் கொழுந்து—, எழுவது என-(உருவெடுத்து) மேன்மேல் வளர்வதுபோல, வளர்வார்-வளர்வாராயினர்.

பொழி:—நிகழ்கின்ற பருவங்களிற் செய்யக்கூடிய கொண்டாட்டங்களையெல்லாம் செல்வத்திஞல் மிக்க தந்தையாரான தனதத்தனர் பெருமை பொருந்திய நல்ல பல பந்துக்களும் மகிழும்படி தமது செல்வம் மிகுந்ததற்கு ஏற்ற செயலினல் செய்ய, மிகுந்த பெருஞ்சிறப்போடு வளர்கின்றவரான அந்தப் புனிதவதியார் இடபவாகனத்தையுடைய சிவபெருமானிடத்து நிலைத்துநின்ற அன்புடன் அழகின் கொழுந்து உருவெடுத்து மேல்மேல் வளர்வதுபோல வளர்வாராயினர். (4)

5. நல்லவென வுறுப்புநூ லவருரைக்கு நலநிரம்பி
மல்குபெரு வனப்புமீக் கூரவரு மாட்சியினல்
இல்லிகவாப் பருவத்தி லிவர்கண்மர பினுக்கேற்குந்
தொல்குலத்து வணிகர்மகட் பேசுதற்குத் தொடங்குவார்.

பத:—உறுப்பு நூலவர்-சாமுத்திரிக சாஸ்திரத்தில் வல்லவர், நல்ல(ன) என உரைக்கும்—, நலம்-நல்லிலக்கணம், நிரம்பி-நிறைந்திருக்கப்பெற்று, மல்கு-மிகுந்த, பெரு வனப்பு-பேரழகு, மீக்கூர-மிகவும் அதிகப்பட, வரு-வளர்ந்துவருகின்ற, மாட்சியினல்-சிறப்பினலே, இல் இகவா-வீட்டிலிருந்து வெளியே வரத்தகாத, பருவத்தில்-(யௌவனப்) பருவத்திலே, இவர்கள் மரபினுக்கு ஏற்கும்-இந்தப் (புனிதவதியாருடைய) பெற்ருேர்களின் குலத்துக்கு ஏற்ற (சிறப்புடைய), தொல்-பழமையான, குலத்து வணிகர்-வணிக குலத்தவர்கள், மகள்-பெண்ணின் கலியாணத்தைப்பற்றி, பேசுதற்கு—, தொடங்குவார்-தொடங்கலானர்கள்.

பொழி:—சாமுத்திரக சாஸ்திரத்தில் வல்லவர் நல்லன என உரைக்கும் நல்லிலக்கணம் நிறைந்திருக்கப்பெற்று மிகுந்த பேரழகு மிகவும் அதிகப்பட வளர்ந்துவருகின்ற சிறப்பினலே வீட்டிலிருந்து வெளியே வரத்தகாத யௌவனப் பருவத்திலே இந்தப் புனிதவதியாருடைய பெற்ருேர்களின் குலத்துக்குஏற்ற சிறப்புடைய பழமையான வணிககுலத்தவர்கள் பெண்ணின் கலியாணத்தைப்பற்றிப் பேசுதற்குத் தொடங்கலானர்கள். (5)

6. நீடியசீர்க் கடனகை நிதிபதியென் றுலகின்கட்
பாடுபெறு புகழ்வணிகன் பயந்தகுல மைந்தனுக்குத்
தேடவருந் திருமரபிற் சேயிழையை மகட்பேச
மாடமலி காரைக்கால் வளநகரின் வரவிட்டார்.

பத:—நீடிய-மிக்க, சீர்-சிறப்பினையுடைய, கடல் நாகை-கடற்கரையி லுள்ள நாகபட்டினத்தில், நிதிபதி என்று—, உலகின்கண்-இவ்வுலகிலே, பாடு பெறு-பெருமை பெற்ற, புகழ்-புகழையுடைய, வணிகன்—, பயந்த-பெற்ற, குலம் மைந்தனுக்கு-சிறந்த புத்திரனுக்கு, தேட அரு திரு மரபில்-தேடுதற்கு அருமையான சிறந்த குலத்திற் பிறந்த, சேய் இழையை-அழகிய ஆபரணங்களையணிந்த புனிதவதியாரை, மகள் பேச-(கலியாணம் செய்வதற்கு ஏற்ற) பெண்ணாகப் பேசிவருமாறு, (நிதிபதியின் சுற்றத்தார்) மாடம் மலி-உபரிகைவீடுகள் நிரம்பியுள்ள, காரைக்கால் வளம் நகரில்-காரைக்கால் என்ற வளப்பமுள்ள நகருக்கு, வரவிட்டார்-(சில பெரியோர்களை) அனுப்பினார்.

பொழி:—மிக்க சிறப்பினையுடைய கடற்கரையிலுள்ள நாகபட்டினத்தில் நிதிபதி என்று இவ்வுலகிலே பெருமைபெற்ற புகழையுடைய வணிகன் பெற்ற சிறந்த புத்திரனுக்குத் தேடுதற்கு அருமையான சிறந்த குலத்திற் பிறந்த அழகிய ஆபரணங்களை அணிந்த புனிதவதியாரைக் கலியாணஞ் செய்வதற்கு ஏற்ற பெண்ணாகப் பேசிவருமாறு நிதிபதியின் சுற்றத்தார் உபரிகைவீடுகள் நிரம்பியுள்ள காரைக்கால் என்ற வளப்பமுள்ள நகருக்குச் சில பெரியோர்களை அனுப்பினார். (6)

7. வந்தமூ தறிவோர்கண் மணங்குறித்தம் மனைபுகுந்து
தந்தையாந் தனதத்தன் றனைநேர்ந்து நீபயந்த
பைந்தொடியை நிதிபதிமைந் தன்பரம தத்தனுக்கு
முந்தைமர பினுக்கேற்கு முறைமைமணம் புரிகென்றார்.

பத:—வந்த—, மூது அறிவோர்கள்-பேரறிவினையுடையவர்கள், மணம் குறித்த-விவாகத்துக்குப் (பெண்பேசக்) கருதிய, மனை-(அந்தத் தனதத்தனுடைய) வீட்டிலே, புகுந்து-போய், தந்தை ஆம் தனதத்தன் தனை-(அந்தப் புனிதவதியாரின்) தந்தையாகிய தனதத்தனை, நேர்ந்து-கண்டு, 'நீ—, பயந்த-பெற்றுவளர்த்த, பைந்தொடியை-பசும் பொன்னாற்செய்த வளையலை யணிந்த புனிதவதியாரை, நிதிபதி மைந்தன்-(நாகையிலுள்ள) நிதிபதி வணிகனது குமாரனாகிய, பரமதத்தனுக்கு—, முந்தை மரபினுக்கு-(உனது) பழமையான குலத்திற்கு, ஏற்கும்-ஏற்ற, முறைமை-முறைப்படி, மணம் புரிக-விவாகஞ்செய்து தருவாயாக' என்றார்-என்று கேட்டார்கள்.

பொழி:—வந்த பேரறிவினையுடையவர்கள் விவாகத்திற்குப் பெண் பேசக்கருதிய அந்தத் தனதத்தனுடைய வீட்டிலே போய் அந்தப் புனிதவதியாரின் தந்தையாகிய தனதத்தனைக் கண்டு 'நீ பெற்றுவளர்த்த பசும்பொன்னாற்செய்த வளையலை யணிந்த புனிதவதியாரை நாகையிலுள்ள நிதிபதி வணிகனது குமாரனாகிய பரமதத்தனுக்கு உனது பழமையான குலத்திற்கு ஏற்ற முறைப்படி விவாகம்செய்து தருவாயாக' என்று கேட்டார்கள். (7)

8. மற்றவனு முறைமையினுன் மணமிசைந்து செலவிடச்சென்
றுற்றவர்க ளுரைகேட்ட நிதிபதியு முயர்சிறப்புப்
பெற்றனன்போ லுவந்துதனிப் பெருமகற்குத் திருமலியுஞ்
சுற்றமுடன் களிகூர்ந்து வதுவைவினைத் தொழில்பூண்டான்.

பத:—மற்று-பின்பு, அவனும்-அந்தத் தனதத்தனும், முறைமையினுல்-(தன்) குலமுறைப்படி, மணம் இசைந்து-விவாகஞ்செய்து கொடுக்கச் சம்மதித்து, செல விட-விடைகொடுத்தனுப்ப, சென்று-திரும்பிப்போய், உற்றவர்கள்-(நாகையை) அடைந்தவர்களது, உரை-சொல்லை, கேட்ட நிதிபதியும்—, உயர் சிறப்பு பெற்றனன்போல்-மிக்க செல்வத்தையடைந்தவன் போல, உவந்து-களிப்புற்று, தனி பெரு மகற்கு-ஒப்பற்ற சிறந்த புத்திரனை பரமதத்தனுக்கு, திரு மலியும்-செல்வம் மிகுந்த, சுற்றமுடன்-சுற்றத்தாருடன், களி கூர்ந்து-சந்தோஷம் மிக, வதுவை வினை தொழில்-விவாகத்துக்குச் செய்யவேண்டிய தொழிலை, பூண்டான்-மேற்கொண்டு செய்யத்தொடங்கினுன்.

பொழி:—பின்பு அந்தத் தனதத்தனும் தன் குலமுறைப்படி விவாகஞ் செய்துகொடுக்கச் சம்மதித்து விடைகொடுத்தனுப்பத் திரும்பிப்போய் நாகையை அடைந்தவர்களது சொல்லைக்கேட்ட நிதிபதியும் மிக்க செல்வத்தை யடைந்தவன்போலக் களிப்புற்று ஒப்பற்ற சிறந்த புத்திரனை பரமதத்தனுக்குச் செல்வம் மிகுந்த சுற்றத்தாருடன் சந்தோஷம் மிக விவாகத்துக்குச் செய்யவேண்டிய தொழிலை மேற்கொண்டு செய்யத் தொடங்கினுன். (8)

9. மணமிசைந்த நாளோலை செலவிட்டு மங்கலநாள்
அணையவது வைத்தொழில்க ளானவெலா மமைவித்தே
இணரலங்கன் மைந்தனையு மணவணியி னெழில்விளக்கிப்
பணைமுரச மெழுந்தார்ப்பக் காரைக்காற் பதிபுகுந்தார்.

பத:—மணம் இசைந்த-விவாகஞ் செய்து தருவதாகச் சம்மதித்த, நாள்-தினமே, (விவாகத்துக்கு ஏற்ற நாளையும் நிச்சயித்து), ஓலை செலவிட்டு-(சுற்றத்தார் யாவர்க்கும்) மணவோலையை அனுப்பி, மங்கலம் நாள்-சுபதினம், அணைய-வந்துசேர, வதுவை தொழில்கள் ஆன எலாம்-கலியாணத்திற்குப் பூர்வாங்கமாகச் செய்யவேண்டிய செயல்களை யெல்லாம், அமைவித்து-பொருந்தச்செய்து, இணர்-பூங்கொத்துக்களால் தொடுக்கப்பட்ட, அலங்கல்-மாலையையணிந்த, மைந்தனையும்-பரமதத்தன்என்ற குமாரனையும், மணம் அணியின்-கலியாணக் கோலத்தினுல், எழில் விளக்கி-அழகாக அலங்கரித்து, பணை முரசம்-பருத்த பேரிகைகள், எழுந்து ஆர்ப்ப-மிகுந்து ஒலிக்க, காரைக்கால் பதி-காரைக்கால் என்னும் ஊரை, புகுந்தார்-அடைந்தார்கள்.

பொழி:—விவாகஞ் செய்து தருவதாகச் சம்மதித்ததினமே விவாகத்துக்கு ஏற்ற நாளையும் நிச்சயித்துச் சுற்றத்தார் யாவர்க்கும் மணவோலையை

அனுப்பிச் சுபதினம் வந்துசேரக் கலியாணத்திற்குப் பூர்வாங்கமாகச் செய்ய வேண்டிய செயல்களையெல்லாம் பொருந்தச்செய்து பூங்கொத்துக்களால் தொடுக்கப்பட்ட மாலையையணிந்த பரமதத்தன் என்ற குமாரனையும் கலியாணக் கோலத்தினால் அழகாக அலங்கரித்துப் பருத்த பேரிகைகள் மிகுந்து ஒலிக்கக் காரைக்கால் என்னும் ஊரை அடைந்தார்கள். (9)

10. அளிமிடைதார்த் தனதத்த னணிமாடத் துட்புகுந்து
தெளிதருநூல்விதிவழியேசெயன்முறைமைசெய்தமைத்துத்
தளிரடிமென் னகைமயிலைத் தாதவிழ்தார்க் காளைக்குக்
களிமகிழ்சுற் றம்போற்றக் கலியாணஞ் செய்தார்கள்.

பத:—அளி-வண்டுகள், மிடை-மொய்க்கின்ற, தார்-மாலைசூடிய, தனதத்தன்-தனதத்தனுடைய, அணி மாடத்துள்-அழகிய மாளிகையுள், புகுந்து—, தெளிதரும்-தெளிவாகத் தெரிவிக்கின்ற, நூல்-சாஸ்திரங்களிற் கூறிய, விதி வழியே-முறைப்படியே, செயல் முறைமை-செய்யவேண்டிய விவாகச் சடங்குகளை, அமைத்து செய்து-பொருத்தமாகச்செய்து, தளிர் அடி-தளிர்போன்ற (மெதுவான) கால்களையும், மெல் நகை-புன்சிரிப்பையு முடைய, மயிலை-மயில்போன்றசாயலுள்ள புனிதவதியாரை, தாது அவிழ்-பூந் தாது விரிகின்ற, தார்-மாலையைத்தரித்த, காளைக்கு-காளைபோன்ற பரம தத்தனுக்கு, களி-களிப்பினால், மகிழ்-மகிழ்கின்ற, சுற்றம்-சுற்றத்தார், போற்ற-புகழ, கலியாணம் செய்தார்கள்-விவாகஞ் செய்தார்கள்.

பொழி:—வண்டுகள் மொய்க்கின்ற மாலைசூடிய தனதத்தனுடைய அழகிய மாளிகையுள் புகுந்து தெளிவாகத் தெரிவிக்கின்ற சாஸ்திரங்களிற் கூறிய முறைப்படியே செய்யவேண்டிய விவாகச் சடங்குகளைப் பொருத்த மாகச்செய்து தளிர்போன்ற மெதுவான கால்களையும் புன்சிரிப்பையுமுடைய மயில்போன்ற சாயலுள்ள புனிதவதியாரைப் பூந்தாது விரிகின்ற மாலையைத் தரித்த காளைபோன்ற பரமதத்தனுக்குக் களிப்பினால் மகிழ்கின்ற சுற்றத்தார் புகழ விவாகஞ் செய்தார்கள். (10)

11. மங்கலமா மணவினைகண் முடித்தியல்பின் வைகுநாட்
டங்கள்குடிக் கரும்புதல்வி யாதலினாற் றனதத்தன்
பொங்கொலிநீர் நாகையினிற் போகாமே கணவனுடன்
அங்கணமர்ந் தினிதிருக்க வணிமாட மருங்கமைத்தான்.

பத:—மங்கலம் ஆம்-சுபமாகிய, மணம்வினைகள்-விவாகத்துக்குரிய செயல்களை, முடித்து-செய்துமுடித்து, இயல்பின்-தக்கபடி, வைகும்-தங்கி யிருக்கும், நாள்-நாளில், தனதத்தன்—, தங்கள் குடிக்கு-தங்களது குலத் துக்கு, அரு-பெறுதற்கு அரிய, புதல்வி-(ஒரே) பெண்தான் (இருக்கின்றாள்), ஆதலினால்—, ஒலி பொங்கு-(அலைகளின்) ஓசைமிக்க, நீர்-கடற்கரையிலுள்ள, நாகையினில்—, போகாமே-செல்லாமல், கணவனுடன்-நாயகனான பரமதத்த

னுடன், அங்கண்-அவ்விடத்தில்தானே, அமர்ந்து-பொருந்தி, இனிது இருக்க-மகிழ்ந்து இருக்கும்படி, மருங்கு-(தனது மாளிகைக்குப்) பக்கத்தில், அணி-அழகிய, மாடம்-மாளிகையை, அமைத்தான்-கட்டினன்.

பொழி :—சுபமாகிய விவாகத்துக்குரிய செயல்களைச் செய்து முடித்துத் தக்கபடி தங்கியிருக்கும்நாளில் தனதத்தன் தங்களது குலத்திற்குப் பெறு தற்குஅரிய ஒரே பெண்தான் இருக்கின்முள் ஆதலினல் அலைகளின் ஓசை மிக்க கடற்கரையிலுள்ள நாகையினில் செல்லாமல் நாயகனுன பரமதத்த னுடன் அவ்விடத்தில்தானே பொருந்தி மகிழ்ந்து இருக்கும்படி தனது மாளிகைக்குப்பக்கத்தில் அழகிய மாளிகையைக் கட்டினன். (11)

12. மகட்கொடையின் மகிழ்சிறக்கும் வரம்பிறனங்கொடுத்ததற்பின்
நிகர்ப்பரிய பெருஞ்சிறப்பி னிதிபதிதன் குலமகனுந்
தகைப்பில்பெருங் காதலினுற் றங்குமனை வளம்பெருக்கி
மிகப்புரியுங் கொள்கையினின் மேம்படுதன் மேவினுன்.

பத :—(தனதத்தன்), மகள் கொடையில்-(தன்) மகளை மணஞ் செய்து கொடுக்கும்போது, மகிழ் சிறக்கும்-மகிழ்ச்சியைப் பெருக்குகின்ற, வரம்பு இல்-அளவற்ற, தனம்-திரவியத்தை, கொடுத்ததன்பின்-(சீதனமாகக்) கொடுத்த பிறகும், நிகர்ப்பு அரிய-ஒப்பற்ற, பெரு-மிக்க, சிறப்பின்-சிறப்பினையுடைய, நிதிபதிதன்-நிதிபதியின், குலம் மகனும்-சிறந்த மகனுன பரமதத்தனும், தகைப்பு இல்-அடக்கமுடியாத, பெரு காதலினுல்-மிக்க ஆசையினுல், தங்கும்-தாங்கள் தங்குகின்ற, மனை-வீட்டினை, வளம்-செல்வத்தால், பெருக்கி மிக புரியும் கொள்கையினில்-பெருகிவளரச்செய்யுந் தன்மையினில், மேம்படுதல் மேவினுன்-மேம்பாடுற்முன்.

பொழி :—தனதத்தன் தன் மகளை மணஞ்செய்து கொடுக்கும்போது மகிழ்ச்சியைப் பெருக்குகின்ற அளவற்ற திரவியத்தைச் சீதனமாகக் கொடுத்த பிறகும் ஒப்பற்ற மிக்க சிறப்பினையுடைய நிதிபதியின் சிறந்த மகனுன பரம தத்தனும் அடக்கமுடியாத மிக்க ஆசையினுல் தாங்கள் தங்குகின்ற வீட்டினைச் செல்வத்தால் பெருகி வளரச்செய்யுந் தன்மையினில் மேம்பா டுற்முன். (12)

13. ஆங்கவன்ற னில்வாழ்க்கை யருந்துணையா யமர்கின்ற
பூங்குழலா ரவர்தாமும் பொருவிடையார் திருவடிக்கீழ்
ஓங்கியவன் புறுகாத லொழிவின்றி மிகப்பெருகப்
பாங்கில்வரு மனையறத்தின் பண்புவழா மையிற்பயில்வார்.

பத :—அவன் தன்-அந்தப்பரமதத்தனுடைய, இல் வாழ்க்கை-இல்லறத் துக்கு, அரு-முக்கியமான, துணை ஆய்-துணையாகி, அமர்கின்ற-பொருந்தி யுள்ள, பூ குழலார் அவர் தாமும்-மலர்களையணிந்த கூந்தலையுடைய புனித

வதியாரும், பொரு விடையார்-போர்செய்கின்ற இடபத்தை வாகனமாகக் கொண்ட பரமசிவனது, திருவடிக்கீழ்-திருவடிகளில், ஓங்கிய-மிகுந்த, அன்பு-பக்தியினால், உறு-உண்டாகிய, காதல்-ஆசை, ஒழிவு இன்றி-சிறிதும் நீங்காமல், மிக பெருக-மேன்மேல் வளர்ந்துகொண்டிருக்க, பாங்கில்-சிறப்போடு, வரு-நடந்துவருகின்ற, மனை அறத்தின்-இல்லறத்துக்குவேண்டிய, பண்பு-தன்மைகள், வழாமை-தவறாமல், இல் பயில்வார்-இல்லத்திற் பழகுவாராயினர்.

பொழி :—அந்தப் பரமதத்தனுடைய இல்லறத்துக்கு முக்கியமான துணையாகிப் பொருந்தியுள்ள மலர்களையணிந்த கூந்தலையுடைய புனிதவதியாரும் போர்செய்கின்ற இடபத்தை வாகனமாகக்கொண்ட பரமசிவனது திருவடிகளில் மிகுந்த பக்தியினால் உண்டாகிய ஆசை சிறிதும் நீங்காமல் மேன்மேல் வளர்ந்துகொண்டிருக்கச் சிறப்போடு நடந்துவருகின்ற இல்லறத்திற்கு வேண்டிய தன்மைகள் தவறாமல் இல்லத்திற் பழகுவாராயினர். (13)

14. நம்பரடி யாரணைந்தா னல்லதிரு வமுதளித்துஞ்
செம்பொன்னு நவமணியுஞ் செழுந்துகிலு முதலான
தம்பரிவி னாலவர்க்குத் தகுதியின்வேண் டுவகொடுத்தும்
உம்பர்பிரான் றிருவடிக்கீ ழுணர்வுமிக வொழுகுநாள்.

பத :—நம்பர் அடியார்-சிவபெருமான் திருத்தொண்டர்கள், அணைந்தால்-வந்தால், அவர்க்கு-அவர்கட்கு, (அந்தப்புனிதவதியார்), நல்ல திரு அமுது-இனிய சிறந்த உணவை, அளித்தும்-அன்போடுஉதவியும், செம்பொன்னும்-மாற்றுஉயர்ந்த பொன்னும், நவமணியும்-நவரத்தினங்களும், செழும் துகிலும்-சிறந்த வஸ்திரங்களும், முதல் ஆன-முதலிய பொருள்களுள், தகுதியின்-(அவரவர்க்குத்) தக்கபடி, வேண்டுவ-வேண்டியபொருள்களை, தம் பரிவினால்-தாம் கொண்ட பேரன்பினால், கொடுத்தும்-தானஞ்செய்தும், உம்பர்பிரான்-தேவாதிதேவனான பரமசிவனது, திருவடிக்கீழ்-திருவடிகளில், உணர்வு-பக்திஞானம், மிக-மேன்மேல்வளர, ஒழுகும் நாள்-நடந்துவரும் நாளில் ;—

பொழி :—சிவபெருமான் திருத்தொண்டர்கள் வந்தால் அவர்கட்கு அந்தப் புனிதவதியார் இனிய சிறந்த உணவை அன்போடு அளித்தும் மாற்றுயர்ந்த பொன்னும் நவரத்தினங்களும் சிறந்த வஸ்திரங்களும் முதலிய பொருள்களுள் அவரவர்க்குத் தக்கபடி வேண்டிய பொருள்களைத் தாம் கொண்ட பேரன்பினால் தானம்செய்தும் தேவாதிதேவனான பரமசிவனது திருவடிகளில் பக்திஞானம் மேன்மேல் வளர நடந்துவரும் நாளில் ;— (14)

15. பாங்குடைய நெறியின்கட் பயில்பரம தத்தனுக்கு
மாங்கனிக ளோரிரண்டு வந்தணைந்தார் சிலர்கொடுப்ப
ஆங்கவைதான் முன்வாங்கி யவர்வேண்டுங் குறையளித்தே
ஈங்கிவற்றை யில்லத்துக் கொடுக்கவென வியம்பினான்.

பத :—பாங்கு உடைய-நன்மையையுடைய, நெறியின்கண்-வழியில், பயில்-பழகுகின்ற, பரமதத்தனுக்கு—, வந்து அணைந்தார் சிலர்-வந்தவர்களிற் சிலர், மாங்கனிகள் ஓர்இரண்டு-இரண்டு மாம்பழங்களை, கொடுப்ப-தர, தான்-பரமதத்தன், ஆங்கு-அப்பொழுது, அவை-அந்தமாம்பழங்களை, முன் வாங்கி-முன்னேவாங்கிக்கொண்டு, அவர் வேண்டும் குறை-அவர்கள் வேண்டிவந்த காரியங்களை, அளித்து-முடித்துக் கொடுத்து, 'இவற்றை-இந்த மாங்கனிகளை, ஈங்கு-இப்போது, இல்லத்து-மனைவியினிடத்தில், கொடுக்க-கொடுப்பீராக', என-என்று, இயம்பினன்-சொல்லியனுப்பினன்.

பொழி :—நன்மையையுடைய வழியில் பழகுகின்ற பரமதத்தனுக்கு வந்தவர்களிற் சிலர் இரண்டு மாம்பழங்களைத்தர, பரமதத்தன் அப்பொழுது அந்த மாம்பழங்களை முன்னே வாங்கிக்கொண்டு அவர்கள் வேண்டிவந்த காரியங்களை முடித்துக்கொடுத்து 'இந்த மாங்கனிகளை இப்போது மனைவியினிடத்தில் கொடுப்பீராக' என்று சொல்லியனுப்பினன். (15)

16. கணவன்முன் வரவிடுத்த கனியிரண்டுங் கைக்கொண்டு
மணமலியு மலர்க்கூந்தன் மாதரார் வைத்ததற்பின்
பணவரவம் புனைந்தருளும் பரமனார் திருத்தொண்டர்
உணவின்மிகு வேட்கையினு லொருவர்மனை யுட்புகுந்தார்.

பத :—மணம் மலியும்-நறுமணம் நிறைந்த, மலர்-மலர்களையணிந்த, கூந்தல்-கூந்தலையுடைய, மாதரார்-அழகிய புனிதவதியார், கணவன் வர விடுத்த-கணவன் அனுப்பிய, கனி இரண்டும்-இரண்டு மாங்கனிகளையும், கைக்கொண்டு-பெற்றுக்கொண்டு, வைத்ததன் பின்-(வீட்டினுள்) வைத்த பிறகு, பணம் அரவம்-படம்விரிந்த சர்ப்பங்களை, புனைந்தருளும்-(ஆபரணமாக) அணிந்துள்ள, பரமனார்-சிவபிரானுடைய, திரு தொண்டர்ஒருவர்-சிறந்த அடியவரொருவர், உணவில்-உணவின்மேல், மிகு வேட்கையினால்-மிக்க ஆசைகொண்டு பசியோடு, மனையுள் புகுந்தார்-வீட்டினுள்ளே பிரவேசித்தார்.

பொழி :—நறுமணம் நிறைந்த மலர்களையணிந்த கூந்தலையுடைய அழகிய புனிதவதியார் கணவன் அனுப்பிய இரண்டு மாங்கனிகளையும் பெற்றுக்கொண்டு வீட்டினுள் வைத்தபிறகு படம்விரிந்த சர்ப்பங்களை ஆபரணமாக அணிந்துள்ள சிவபிரானுடைய சிறந்த அடியவரொருவர் உணவின்மேல் மிக்க ஆசைகொண்டு பசியோடு வீட்டினுள்ளே பிரவேசித்தார். (16)

17. வேதங்கண் மொழிந்தபிரான் மெய்த்தொண்டர் நிலைகண்டு
நாதன்ற னடியாரைப் பசிதீர்ப்பே னெனநண்ணிப்
பாதங்கள் விளக்கநீர் முன்னளித்துப் பரிகலம்வைத்
தேதந்தீர் நல்விருந்தா வின்னடிசி லூட்டுவார்.

பத :—வேதங்கள்-வேதங்களை, மொழிந்த-வெளியிட்டருளிய, பிரான்-பரமசிவனுடைய, மெய் தொண்டர்-உண்மையடியார், நிலை-(மிக்கபசியோடிருக்கும்) நிலைமையை, கண்டு-பார்த்து, 'நாதன் தன் அடியாரை-சிவனடியாரான இவரை, பசி தீர்ப்பேன்-பசியினின்று நீக்க உண்பிப்பேன்,' என-என்று, நண்ணி-(அவரை) அடைந்து, முன்-முதலில், பாதங்கள் விளக்க-திருவடிகளைக் கழுவும்படி, நீர் அளித்து-ஜலத்தைக் கொடுத்து, ஏதம் தீர்-குற்றமற்ற, நல் விருந்து ஆ-நல்லவிருந்தினராக(க் கருதி), பரிகலம் வைத்து-உண்கலத்தைப் பரிமாறி, இன் அடிசில் ஊட்டுவார்-இனிய உணவை உண்பிக்கலானார் ;—

பொழி :—வேதங்களை வெளியிட்டருளிய பரமசிவனுடைய உண்மையடியார் மிக்க பசியோடிருக்கும் நிலைமையைப் பார்த்துச் 'சிவனடியாரான இவரைப் பசியினின்று நீக்க உண்பிப்பேன்' என்று அவரை அணுகி முதலில் திருவடிகளைக் கழுவும்படி ஜலத்தைக் கொடுத்துக் குற்றமற்ற நல்ல விருந்தினராகக்கருதி உண்கலத்தைப் பரிமாறி இனிய உணவை உண்பிக்கலானார் ;— (17)

18. கறியமுதங் குதவாதே திருவமுது கைகூட
வெறிமலர்மேற் றிருவனையார் விடையவன்ற னடியாரே
பெறலரிய விருந்தானாற் பேறிதன்மே லில்லையெனும்
அறிவினரா யவரமுது செய்வதனுக் காதரிப்பார்.

19. இல்லாளன் வைக்கவெனத் தம்பக்கன் முன்னிருந்த
நல்லநறு மாங்கனிக ளிரண்டினிலொன் றைக்கொண்டு
வல்விரைந்து வந்தணைந்து படைத்துமன மகிழ்ச்சியினால்
அல்லறீர்ப் பவரடியார் தமையமுது செய்வித்தார்.

பத :—அங்கு-அவ்வேளையில், கறியமுது உதவாது-கறியமுதைப்பரிமாறுதற்குக்கூடாமல், திரு அமுது-அன்னம் மாத்திரம், கைகூட-அமைந்திருக்க, வெறி மலர்மேல்-நறுமணமுள்ள செந்தாமரைமலரில் வீற்றிருக்கின்ற, திரு அனையார்-இலக்குமியையொத்த புனிதவதியார், 'விடையவன் தன்-இடபத்தை வாகனமாகவுடைய சிவபிரானது, அடியாரே-பக்தரே, பெறல் அரிய-பெறுதற்கு அரிய, விருந்துஆனால்-விருந்தினராயமைந்தால், இதன் மேல்-இதைக்காட்டிலும் மிக்க, பேறு-பெறக்கூடிய புருஷார்த்தம், இல்லை—,' எனும்-என்கின்ற, அறிவினர் ஆய்-அறிவையுடையவராகி, அவர்-அந்தச் சிவனடியார், அமுது செய்வதனுக்கு—, ஆதரிப்பார்-விரும்பி, இல்லாளன்-கணவன், முன்-முன்னே, வைக்க என-'வைத்திருக்க' என்று அனுப்பி, தம்பக்கல்-தம்மிடத்தே, இருந்த—, நல்ல-சிறந்த, நறு மாங்கனிகள் இரண்டினில்-நறுமணமுள்ள இரண்டு மாம்பழங்களில், ஒன்றை—, வல் விரைந்து-மிகவிரைந்து, கொண்டு வந்து அணைந்து—, படைத்து-பரிமாறி, அல்லல் தீர்ப்பவர்-பிறவித்துன்பத்தை நீக்குபவரான பரமசிவனது, அடியார்தமை-

தொண்டராகிய விருந்ினரை, மனம் மகிழ்ச்சியிஞல்-மனமகிழ்ச்சியோடு, அமுது செய்வித்தார்-உண்பித்தார்.

பொழி :—அவ்வேளையில் கறியமுதைப் பரிமாறுதற்குக்கூடாமல் அன்னம் மாத்திரம் சமைந்திருக்க நறுமணமுள்ள செந்தாமரைமலரில் வீற்றிருக்கின்ற இலக்குமியையொத்த புனிதவதியார் 'இடபத்தை வாகனமாக வுடைய சிவபிரானது பக்தரே பெறுதற்குஅரிய விருந்தினராயமைந்தால் இதைக்காட்டிலும் பெறக்கூடிய புருஷார்த்தம் இல்லை' என்கின்ற அறிவை யுடையவராகி அந்தச் சிவனடியார் அமுது செய்வதனுக்கு விரும்பி, கணவன் முன்னே 'வைத்திருக்க' என்று அனுப்பித் தம்மிடத்தே இருந்த சிறந்த நறுமணமுள்ள இரண்டு மாம்பழங்களில் ஒன்றை மிக விரைந்து கொண்டு வந்து அணைந்து பரிமாறிப் பிறவித்துன்பத்தை நீக்குபவரான பரமசிவனது தொண்டராகிய விருந்தினரை மனமகிழ்ச்சியோடு உண்பித்தார். (18–19)

20. மூப்புறுமத் தளர்வாலு முதிர்ந்துமுடு கியவேட்கைத்
தீப்பசியி னிலையாலு மயர்ந்தணைந்த திருத்தொண்டர்
வாய்ப்புறுமென் சுவையடிசின் மாங்கனியோ டினிதருந்திப்
பூப்பயின்மென் குழல்மடவார் செயலுவந்து போயினர்.

பத :—மூப்பு உறும்-முதுமையடைந்ததாலான, அ தளர்வாலும்-அந்தத் தளர்ச்சியினாலும், முதிர்ந்து முடுகிய-மிக்கு வளர்ந்த, வேட்கை-(உணவில்) விருப்பமுள்ள, தீ பசியின்-நெருப்பையொத்த பசியின், நிலையாலும்-தன்மையினாலும், அயர்ந்து அணைந்த-தளர்ந்து வந்த, திருத்தொண்டர்-சிவனடியார், மெல் சுவை-இன்சுவை, வாய்ப்பு உறும்-பொருந்திய, அடிசில்-உணவை, மாங்கனியோடு-மாம்பழத்துடனே, இனிது அருந்தி—, பூ பயில்-மலர் நிறைந்த, மெல்-மெல்லிய, குழல்-கூந்தலையுடைய, மடவார்-புனிதவதியாரின், செயல்-செய்கையை, உவந்து-மகிழ்ந்து, போயினர்—.

பொழி :—முதுமையடைந்ததாலான அந்தத் தளர்ச்சியினாலும் மிக்கு வளர்ந்த உணவில் விருப்பமுள்ள நெருப்பையொத்த பசியின் தன்மையினாலும் தளர்ந்துவந்த சிவனடியார் இன்சுவை பொருந்திய உணவை மாம்பழத்தோடு இனிது அருந்தி மலர் நிறைந்த மெல்லிய கூந்தலையுடைய புனிதவதியாரின் செய்கையை மகிழ்ந்து போயினர். (20)

21. மற்றவர்தாம் போயினபின் மனைப்பதியா கியவணிகன்
உற்றபெரும் பகலின்க ணோங்கியபே ரில்லெய்திப்
பொற்புறமுன் னீராடிப் புகுந்தடிசில் புரிந்தயிலக்
கற்புடைய மடவாருங் கடப்பாட்டி லூட்டுவார்.

பத :—அவர்தாம்-அந்த அடியவர், போயின பின்-போனபின்பு, மனை பதி ஆகிய-வீட்டுக்குத் தலைவனான, வணிகன்-பரமதத்தன்என்னும் வைசியன், உற்ற-பொருந்திய, பெரு பகலின்கண்-நடுப்பகலில், ஓங்கிய-உயர்ந்த, பேர்

இல்-பெரிய வீட்டை, எய்தி-அடைந்து, முன்-முதலில், பொற்பு உற-பொலிவையடைய, நீர் ஆடி-ஸ்நானஞ்செய்து, புகுந்து-உணவருந்தும் இடத்துக்குப்போய், அடிசில்-உணவை, புரிந்து அயில-விரும்பியுண்ண, கற்பு உடைய—, மடவாரும்-அந்தப் புனிதவதியாரும், கடப்பாட்டில் ஊட்டுவார்-முறைமைப்படி உண்பிக்கலானார்.

பொழி :—அந்த அடியார் போனபின்பு வீட்டுக்குத்தலைவனான பரமதத்தன் என்னும் வைசியன் பொருந்திய நடுப்பகலில் உயர்ந்த பெரிய வீட்டை அடைந்து முதலில் பொலிவையடைய ஸ்நானஞ்செய்து உணவருந்தும் இடத்திற்குப்போய் உணவை விரும்பியுண்ணக் கற்புடைய அந்தப் புனிதவதியாரும் முறைமைப்படி உண்பிக்கலானார். (21)

22. இன்னடிசில் கறிகளுட னெய்துமுறை யிட்டதற்பின்
மன்னியசீர்க் கணவன்றான் மனையிடைமுன் வைப்பித்த
நன்மதுர மாங்கனியி லிருந்ததனை நறுங்கூந்தல்
அன்னமனை யார்தாமுங் கொடுவந்து கலத்தளித்தார்.

பத :—நறுங் கூந்தல்-மணம்வீசுகின்ற கூந்தலையுடைய, அன்னம் அனையார்தாம்-நடையால் அன்னப்பறவையையொத்த புனிதவதியார், இன் அடிசில்-இனிய அமுதை, கறிகளுடன்-கறிகளுடனே, எய்தும் முறை-பொருந்திய முறைமைப்படி, இட்டதன் பின்-பரிமாறியபின்பு, சீர் மன்னிய கணவன் தான்-சிறப்புப்பொருந்திய கணவனாகிய பரமதத்தன், மனையிடை-வீட்டில், முன் வைப்பித்த-வைத்திருக்கும்படி முன்னேயனுப்பிய, நல் மதுரம் மாங்கனியில்-மிக்க சுவையுள்ள மாங்கனிகள் இரண்டனுள், இருந்ததனையும்-இருந்த ஒருபழத்தையும், கொடு வந்து-கொண்டுவந்து, கலத்து-உண்கலத்தில், அளித்தார்-பரிமாறினார்.

பொழி :—மணம் வீசுகின்ற கூந்தலையுடைய நடையால் அன்னப் பறவையையொத்த புனிதவதியார் இனிய அமுதைக் கறிகளுடனே பொருந்திய முறைமைப்படி பரிமாறிய பின்பு சிறப்புப் பொருந்திய கணவனாகிய பரமதத்தன் வீட்டில் வைத்திருக்கும்படி முன்னே அனுப்பிய நல்ல சுவையுள்ள மாங்கனிகள் இரண்டனுள் இருந்த ஒரு பழத்தையும் கொண்டுவந்து உண்கலத்தில் பரிமாறினார். (22)

23. மனைவியார் தாம்படைத்த மதுரமிக வாய்த்தகனி
தனைநுகர்ந்த தினியசுவை யாராமைத் தார்வணிகன்
இனையதொரு பழமின்னு முளததனை யிடுகவென
அனைத்துதாங் கொண்டுவர வணைவார்போ லங்ககன்றார்.

பத :—மனைவியார்-மனைவியாகிய புனிதவதியார், படைத்த-பரிமாறிய, மதுரம்-இன்சுவை, மிக வாய்த்த-மிகுதியாகப் பொருந்திய, கனிதனை-அந்த மாம்பழத்தை, நுகர்ந்த-புசித்ததனால், ஆராமை-திருப்தியடையாமல், இனிய

சுவை-இனியசுவையை (பின்னும் விரும்பி), தார் வணிகன்-மாலையையணிந்த அவ்வணிகன், 'இனையது-இப்படிப்பட்ட, ஒரு பழம் இன்னும் உளது-, அதனை-அந்தப் பழத்தையும், இடுக-கொண்டுவந்து பரிமாறுக,' என-என்று சொல்ல, தாம்-அவர்தாம், அனையது-அந்தப்பழத்தை, கொண்டு வர—, அணைவார் போல்-போவார்போல, அங்கு-அவ்விடத்தினின்று, அகன்றார்— .

பொழி :—மனைவியாகிய புனிதவதியார் பரிமாறிய இன்சுவை மிகுதியாகப் பொருந்திய அந்த மாம்பழத்தைப் புசித்ததனால் திருப்தியடையாமல் இனிய சுவையைப் பின்னும் விரும்பி மாலையை அணிந்த அவ்வணிகன் 'இப்படிப்பட்ட ஒரு பழம் இன்னும் உளது ; அந்தப் பழத்தையும் கொண்டு வந்து பரிமாறுக' என்று சொல்ல அவர் தாம் அந்தப்பழத்தைக் கொண்டு வரப்போவார்போல அவ்விடத்தினின்று அகன்றார். (23)

24. அம்மருங்கு நின்றயர்வா ரருங்கனிக்கங் கென்செய்வார்
மெய்ம்மறந்து நினைந்துற்ற விடத்துதவும் விடையவர்தா
டம்மனங்கொண் டுணர்தலுமே யவரருளாற் றாழ்குழலார்
கைம்மருங்கு வந்திருந்த ததிமதுரக் கனியொன்று.

பத :—அங்கு-அவ்விடத்தில், அரு கனிக்கு-அருமையான மாங்கனிக்கு, என் செய்வார்-(புனிதவதியார்) என்ன செய்வார்? (ஒன்றுஞ் செய்யமுடியாதவராய்), அ மருங்கு-அந்த இடத்தில்தானே, நின்று-நின்றுகொண்டு, அயர்வார்-வருத்தப்படுபவராய், மெய் மறந்து நினைந்து—, உற்ற இடத்து-ஆபத்துக் காலத்தில், உதவும்—, விடையவர்-ரிஷபவாகனரான சிவபெருமான், தாள்-திருவடிகளை, தம்-தமது, மனம்-மனத்திலே, கொண்டு-அமைத்து, உணர்தலும்-தியானஞ் செய்தவுடனே, அவர் அருளால்—, தாழ் குழலார்-தொங்குகின்ற கூந்தலையுடைய அந்தப் புனிதவதியாரின், கை மருங்கு-கையினிடத்தில், அதிமதுரக்கனி ஒன்று—, வந்து இருந்தது— .

பொழி :—அவ்விடத்தில் அருமையான மாங்கனிக்குப் புனிதவதியார் என்ன செய்வார்? ஒன்றும் செய்யமுடியாதவராய் அந்த இடத்தில்தானே நின்றுகொண்டு வருத்தப்படுபவராய் மெய்ம்மறந்து நினைந்து ஆபத்துக்காலத்தில் உதவும் ரிஷபவாகனரான சிவபெருமான் திருவடிகளைத் தமது மனத்திலே அமைத்துத் தியானஞ்செய்தவுடனே அவர் அருளால் தொங்குகின்ற கூந்தலையுடைய அந்தப் புனிதவதியாரின் கையினிடத்தில் அதிமதுரக்கனி ஒன்று வந்து இருந்தது. (24)

25. மற்றதனைக் கொடுவந்து மகிழ்ந்திடலு மயின்றதனில்
உற்றசுவை யமுதினுமேற் படவுளதா யிடவிதுதான்
முற்றருமாங் கனியன்று மூவுலகிற் பெறற்கரிதாற்
பெற்றதுவே றெங்கென்று பெய்வளையார் தமைக்கேட்டான்.

பத :—மற்று-பின்பு, அதனை—, கொடு வந்து-கொண்டுவந்து, மகிழ்ந்து இடலும்-மகிழ்ச்சியோடு பரிமாறுதலும், (பரமதத்தன்), அயின்று-புசித்து, அதனில்-அந்தமாம்பழத்திலே, உற்ற-பொருந்திய, சுவை-உருசி, அமுதினும்-தேவாமிருதத்தைக் காட்டிலும், மேற்பட உளது ஆயிட-மேம்பட்டதாக, (மனைவியைநோக்கி), ' இது தான்-இப்பழமோ, முன் தரும்-வைத்திருக்குமாறு நான் முன்னேயனுப்பிய, மாங்கனி அன்று—, மூ உலகில்-மூன்று லோகங்களிலும், பெறற்கு அரிது-பெறுதற்கு அருமையானது ; ஆல்-ஆதலால், (நீ இப்பழத்தை), பெற்றது வேறு எங்கு என்று—, பெய் வளையார்தமை-வளையல் களையுடைய (தன்) மனைவியை, கேட்டான்—.

பொழி :—பின்பு அதனைக் கொண்டுவந்து மகிழ்ச்சியோடு பரிமாறுதலும் பரமதத்தன் புசித்து அந்த மாம்பழத்திலே பொருந்திய உருசி தேவாமிருதத்தைக்காட்டிலும் மேம்பட்டதாக மனைவியை நோக்கி "இப்பழமோ வைத்திருக்குமாறு நான் முன்னே அனுப்பிய மாங்கனி அன்று ; மூன்றுலோகங்களிலும் பெறுதற்கு அருமையானது ; ஆதலால் நீ இப்பழத்தைப் பெற்றது வேறு எங்கு?" என்று வளையல்களையுடைய தன் மனைவியைக் கேட்டான். (25)

26. அவ்வுரைகேட் டலுமடவா ரருளுடையா ரளித்தருளுஞ்
செவ்வியபே ரருள்விளம்புந் திறமன்றென் றுரைசெய்யார்
கைவருகற் புடைநெறியாற் கணவனுரை காவாமை
மெய்வழியன் றெனவிளம்பல் விடமாட்டார் விதிர்ப்புறுவார்.

பத :—அ உரை-அந்த வார்த்தையை, கேட்டலும்-கேட்டவுடனே, மடவார்-புனிதவதியார், ' அருள் உடையார்-கருணையாளரான பரமசிவன், அளித்தருளும்-கருணைகொண்டு உதவிய, செவ்விய-சிறந்த, பேர் அருள்-பெருங் கருணை, விளம்பும்-வெளிப்படச் சொல்லுதற்குரிய, திறம் அன்று-தகுதியுடையதன்று,' என்று-என்ற காரணத்தினல், உரை செய்யார்-சொல்ல முடியாதவராகியும், ' கைவரு-பழகிய, கற்புஉடை நெறியால்-கற்புநெறியால், கணவன் உரை-கணவனுடைய வார்த்தையை, காவாமை-(மெய்யான விடைகூறிக்) கௌரவியாதிருத்தல், மெய் வழி அன்று-தருமவழியன்று', என-என்ற காரணத்தால், விளம்பல்-சொல்லுதலை, விடமாட்டார்-விட்டிடமுடியாதவராகியும்நின்று, விதிர்ப்பு உறுவார்-உடல் நடுக்கம் பொருந்தியவராயினர்.

பொழி :—அந்த வார்த்தையைக் கேட்டவுடனே புனிதவதியார் ' கருணையாளரான பரமசிவன் கருணைகொண்டு உதவிய சிறந்த பெருங்கருணை வெளிப்படச்சொல்லுதற்குரிய தகுதியுடையதன்று ' என்ற காரணத்தினல் சொல்லமுடியாதவராகியும், ' பழகிய கற்பு நெறியால் கணவனுடைய வார்த்தையை மெய்யான விடைகூறிக் கௌரவியாதிருத்தல் தருமவழியன்று '

என்ற காரணத்தினல் சொல்லுதலே விடமுடியாதவராகியும் நின்று உடல் நடுக்கம் பொருந்தியவராயினர். (26)

27. செய்தபடி சொல்லுவதே கடனென்னுஞ் சீலத்தான்
மைதழையுங் கண்டர்சே வடிகண்மனத் துறவணங்கி
எய்தவருங் கனியளித்தா ரியாரென்னுங் கணவனுக்கு
மொய்தருபூங் குழன்மடவார் புகுந்தபடி தனைமொழிந்தார்.

பத:—'செய்த படி-(கடவுள் அருள்) செய்த தன்மையை, சொல்லுவதே-(மறையாமற்) சொல்லுவதே, கடன்-முறைமையாம்', என்னும்-என்று துணிந்த, சீலத்தால்-நல்லொழுக்கமுடைமையால், மொய் தரு-நெருங்கிய, பூ குழல்-பூ முடித்த கூந்தலையுடைய, மடவார்-புனிதவதியார், மை தழையும்-கருநிறம்மிக்க, கண்டர்-கழுத்தினராகிய பரமசிவனுடைய, சே அடிகள்-திருவடிகள், மனத்து உற-மனத்தில் தங்கும்படி, வணங்கி-தியானஞ்செய்து, எய்த அரு-கிடைத்தற்குஅரிய, கனி-இந்த மாம்பழத்தை, அளித்தார்-தந்தவர், யார்-யாவர்?' என்னும்-என்று வினவுகின்ற, கணவனுக்கு-கணவனிடத்தில், புகுந்த படிதனை-நிகழ்ந்த விதத்தை, மொழிந்தார்-சொன்னர்.

பொழி:—'கடவுள் அருள்செய்த தன்மையை மறையாமற் சொல்லுவதே முறைமையாம்' என்று துணிந்த நல்லொழுக்கமுடைமையால் நெருங்கிய பூ முடித்த கூந்தலையுடைய புனிதவதியார் கருநிறம்மிக்க கழுத்தினராகிய பரமசிவனுடைய திருவடிகள் மனத்தில் தங்கும்படி தியானஞ்செய்து கிடைத்தற்கரிய இந்த மாம்பழத்தைத்தந்தவர் யாவர்?' என்று வினவுகின்ற கணவனிடத்தில் நிகழ்ந்தவிதத்தைச் சொன்னர். (27)

28. ஈசனருளெனக்கேட்ட வில்லிறைவ னதுதெளியான்
வாசமலர்த் திருவனையார் தமைநோக்கி மற்றிதுதான்
தேசுடைய சடைப்பெருமான் றிருவருளே லின்னமுமோர்
ஆசில்கனி யவனருளா லழைத்தளிப்பா யெனமொழிந்தான்.

பத:—'ஈசன் அருள்-(இந்த மாங்கனி) பரமசிவன் திருவருளால் (கிடைத்தது)', என-என்று சொல்ல, கேட்ட—, இல் இறைவன்-வீட்டுக்குத் தலைவனுகிய பரமதத்தன், அது தெளியான்-அவ்வார்த்தையை (உண்மையென்று) நம்பாதவனுகி, வாசம்-நறுமணமுள்ள, மலர்-தாமரைமலரில் வீற்றிருக்கின்ற, திரு-இலக்குமியை, அனையார் தமை-ஒத்தவரான மனைவியாரை, நோக்கி-பார்த்து, 'இது-இந்தக்கனி, தேசு உடைய-பிரகாசம்பொருந்திய, சடை-சடைமுடியையுடைய, பெருமான்-சிவபெருமான், திரு அருள் எல்-திருவருளால் (கிடைத்தது) என்றால், இன்னமும்—, ஆசு இல்-குற்றமற்ற, ஓர் கனி-ஒரு பழத்தை, அவன் அருளால்-அந்தப் பரமசிவன் திருவருளினல், அழைத்து-வரவழைத்து, அளிப்பாய்-தருவாய்,' என-என்று, மொழிந்தான்-சொன்னன்.

பொழி:—'இந்த மாங்கனி பரமசிவன் திருவருளால் கிடைத்தது' என்று சொல்லக்கேட்ட வீட்டுக்குத்தலைவனுகிய பரமதத்தன் அவ்வார்த்தையை உண்மையென்று நம்பாதவனுகி நறுமணமுள்ள தாமரைமலரில் வீற்றிருக்கின்ற இலக்குமியை ஒத்தவரான மனைவியாரைப்பார்த்து 'இந்தக்கனி பிரகாசம்பொருந்திய சடைமுடியையுடைய சிவபெருமான் திருவருளால் கிடைத்தது என்ருல் இன்னமும் குற்றமற்ற ஒரு பழத்தை அந்தப் பரமசிவன் திருவருளினுல் வரவழைத்துத் தருவாய்' என்று சொன்னுன். (28)

29. பாங்ககன்று மனைவியார் பணியணிவார் தமைப்பரவி
ஈங்கிதளித் தருளீரே லென்னுரைபொய் யாமென்ன
மாங்கனியொன் றருளால்வந் தெய்துதலு மற்றதனை
ஆங்கவன்கைக் கொடுத்தலுமே யதிசயித்து வாங்கினுன்.

பத:—மனைவியார்-(பரமதத்தனது) மனைவியாரான புனிதவதியார், பாங்கு அகன்று-அவ்விடத்தை விட்டுப்போய், பணி அணிவார்தமை-சர்ப்பத்தை ஆபரணமாகப்பூண்ட சிவபிரானை, பரவி-துதித்து, 'ஈங்கு-இப்பொழுது, இது-இந்த மாங்கனியை, அளித்தருளீர் ஏல்-கொடுத்து உதவாமற்போவீரேயானுல், என் உரை-(உமது அடியவளான) என் வார்த்தை, பொய் ஆம்-பொய்யாய் விடும்', என்ன-என்று வேண்ட, அருளால்-(அந்தச் சிவபெருமானுடைய) திருவருளினுலே, மாங்கனி ஒன்று-மற்ருெரு மாம்பழம், வந்து எய்துதலும்-(அவர் கையில்) வந்துசேர்ந்ததும், (அவர்), அதனை—, ஆங்கு-அப்பொழுதே, அவன்-அந்தப்பரமதத்தன், கை-கையில், கொடுத்தலும்—,(அவன்), அதிசயித்து-வியப்படைந்து, வாங்கினுன்-(அந்தப்பழத்தை) வாங்கிக்கொண்டான்.

பொழி:—பரமதத்தனது மனைவியாரான புனிதவதியார் அவ்விடத்தை விட்டுப் போய்ச் சர்ப்பத்தை ஆபரணமாகப்பூண்ட சிவபிரானைத் துதித்து 'இப்பொழுது இந்த மாங்கனியைக் கொடுத்து உதவாமற்போவீரேயானுல் உமது அடியவளான எனது வார்த்தை பொய்யாய்விடும்' என்று வேண்ட அந்தச் சிவபெருமானுடைய திருவருளினுலே மற்ருெரு மாம்பழம் அவர் கையில் வந்துசேர்ந்ததும் அவர் அதனை அப்பொழுதே அந்தப் பரமதத்தன் கையில் கொடுத்தலும் அவன் வியப்படைந்து அந்தப் பழத்தை வாங்கிக் கொண்டான். (29)

30. வணிகனுந் தன்கைப் புக்க மாங்கனி பின்னைக் காணுன்
றணிவரும் பயமேற் கொள்ள வுள்ளமுந் தடுமா றெய்தி
அணிகுழ லவரை வேறோ ரணங்கெனக் கருதி நீங்குந்
துணிவுகொண்டெவர்க்குஞ்சொல்லான்றொடர்வின்றியொழுகுநாளில்.

31. கடன்மிசை வங்க மோட்டிக் கருதிய தேயந் தன்னில்
அடைவுறச் சென்று சேர்ந்தங் களவில்பல் வளங்கண் முற்றி
இடைசில நாட்க ணீங்க மீண்டுமக் கலத்தி லேறிப்
படர்புனற் கன்னி நாட்டோர் பட்டின மருங்கு சேர்ந்தான்.

பத :—வணிகனும்-வணிகனுகிய பரமதத்தனும், தன் கை புக்க-தன் கையிலே வந்த, மாங்கனி-மாம்பழத்தை, பின்னே-பின்பு, காணுன்-காணுத வனுய், தணிவு அரு-தணிக்கமுடியாத, பயம்-அச்சம், மேற்கொள்ள-மிகுதியாக உண்டாக, உள்ளமும்-மனமும், தடுமாறு எய்தி-கலங்கி, அணி குழல்-அழகிய கூந்தலையுடைய, அவரை-அந்தப்புனிதவதியாரை, வேறு-வேருன, ஓர் அணங்கு-தெய்வத்தன்மைகொண்ட ஒரு பெண், என கருதி-என்று நினைத்து, நீங்கும் துணிவு-(அவரை) விட்டுப்பிரிவதென்ற உறுதியை, கொண்டு-மனத் திலேகொண்டு, எவர்க்கும்-எவரிடத்தும், சொல்லான்-சொல்லாமல், தொடர்வு இன்றி-(அவரோடு) சம்பந்தமில்லாமல், ஒழுகும் நாளில்-வாழும் நாட்களில், கடல்மிசை-சமுத்திரத்தில், வங்கம்-மரக்கலத்தை, ஓட்டி-செலுத்தி, கருதிய-(தான்) எண்ணிய, தேயந்தன்னில்-தேசத்தில், அடைவு உற-முறையாக, சென்று சேர்ந்து-போய்ச்சேர்ந்து, அங்கு-அத்தேயத்தில், அளவு இல்-அளவில்லாத, பல் வளங்கள்-மிக்க பொருளை, முற்றி-சம்பா தித்து, இடை-நடுவில், சில நாட்கள் நீங்க மீண்டும்—, அ கலத்தில் ஏறி-அந்த மரக்கலத்திலேயே ஏறி, படர் புனல்-ஓடுகின்ற நீர்வளமுள்ள, கன்னி நாடு-பாண்டியநாட்டில், ஓர் பட்டினம் மருங்கு-ஒரு பட்டினத்தில், சேர்ந் தான்-வந்துசேர்ந்தான்.

பொழி :—வணிகனுகிய பரமதத்தனும் தன் கையிலே வந்த மாம்பழத் தைப் பின்பு காணுதவனுய்த் தணிக்கமுடியாத அச்சம் மிகுதியாக உண்டாக மனமும் கலங்கி அழகிய கூந்தலையுடைய அந்தப் புனிதவதியாரை வேருன தெய்வத்தன்மைகொண்ட ஒரு பெண் என்று நினைத்து அவரை விட்டுப்பிரிவ தென்ற உறுதியை மனத்திலே கொண்டு எவரிடத்தும் சொல்லாமல் அவரோடு சம்பந்தமில்லாமல் வாழும் நாட்களில், சமுத்திரத்தில் மரக் கலத்தைச் செலுத்தித் தான் எண்ணிய தேசத்தில் முறையாகப் போய்ச் சேர்ந்து அத்தேயத்தில் அளவில்லாத மிக்க பொருளைச் சம்பாதித்து நடுவில் சில நாட்கள் நீங்க மீண்டும் அந்த மரக்கலத்திலேயே ஏறி ஓடுகின்ற நீர்வள முள்ள பாண்டியநாட்டில் ஒரு பட்டினத்தில் வந்து சேர்ந்தான். (30–31)

32. அப்பதி தன்னி லேறி யலகில்பல் பொருள்க ளாக்கும்
ஒப்பின்மா நிதிய மெல்லா மொருவழிப் பெருக வுய்த்து
மெய்ப்புகழ் விளங்கு மவ்வூர் விரும்பவோர் வணிகன் பெற்ற
செப்பருங் கன்னி தன்னைத் திருமலி வதுவை செய்தான்.

பத :—அ பதி தன்னில் ஏறி-அந்தப் பட்டினத்தில் குடியேறி, அலகு இல்-அளவில்லாத, பல் பொருள்கள்-பல பண்டங்களால், ஆக்கும்-சம்பாதித்த, ஒப்பு இல்-ஒப்பில்லாத, மா நிதியம் எல்லாம்-மிக்க செல்வம் முழுவதையும், ஒருவழி-ஓரிடத்திலே, பெருக உய்த்து-பெருகும்படி செய்து, மெய் புகழ் விளங்கும்-உண்மையான புகழோடு விளங்குகின்ற, அ ஊர்-அவ்வூரார், விரும்ப-மகிழும்படி, ஓர் வணிகன் பெற்ற-ஒருவைசியன்பெற்ற, செப்ப அரு

கன்னி தன்னை-சொல்லுதற்கு அரிய அழகுவாய்ந்த ஒரு பெண்ணை, திரு மலி-சிறப்பு மிக, வதுவை செய்தான்-கலியாணம் செய்து கொண்டான்.

பொழி:—அந்தப்பட்டினத்தில் குடியேறி அளவில்லாத பல பண்டங்களால் சம்பாதித்த ஒப்பில்லாத மிக்க செல்வம் முழுவதையும் ஓரிடத்தில் பெருகும்படி செய்து உண்மையான புகழோடு விளங்குகின்ற அவ்வூரார் மகிழும்படி ஒரு வைசியன் பெற்ற சொல்லுதற்கு அரிய அழகுவாய்ந்த ஒரு பெண்ணைச் சிறப்புமிகக் கலியாணம் செய்துகொண்டான். (32)

33. முருகலர் சோலை மூதூ ரதன்முதல் வணிக ரோடும்
இருநிதிக் கிழவ னென்ன வெய்திய திருவின் மிக்குப்
பொருகடற் கலங்கள் போக்கும் புகழினான் மனைவி தன்பாற்
பெருகொளிவிளக்குப்போலோர்பெண்கொடியரிதிற்பெற்றான்.

பத:—முருகு அலர்-வாசனை பரவுகின்ற, சோலை-சோலை சூழ்ந்த, முது ஊர் அதன்-பழமையான அவ்வூரிலுள்ள, முதல் வணிகரோடும்-முதன்மை பெற்ற வர்த்தகர்களுடனே (சேர்ந்திருந்து), இருநிதி கிழவன் என்ன-மிக்க திரவியத்திற்குரிய குபேரனைப்போல, எய்திய-(வியாபாரத்தினால்) பெற்ற, திருவின்-செல்வத்தினால், மிக்கு-பெருமை பெற்று, பொரு-(அலைகள்) மோதுகின்ற, கடல்-கடலிலே, கலங்கள் போக்கும்-கப்பல்களைச் செலுத்தி வர்த்தகஞ் செய்கின்ற, புகழினான்-கீர்த்திபெற்ற பரமதத்தன், மனைவிதன்பால்-(தன்) மனைவியினிடத்தில், பெருகு ஒளி-மிக்க ஒளிவீசுகின்ற, விளக்கு போல்-விளக்குப் போன்ற, ஓர் பெண் கொடி-கொடியையொத்த ஒரு பெண் குழந்தையை, அரிதின் பெற்றான்-அருமையாகப் பெற்றான்.

பொழி:—வாசனை பரவுகின்ற சோலை சூழ்ந்த பழமையான அவ்வூரிலுள்ள முதன்மைபெற்ற வர்த்தகர்களுடனே சேர்ந்திருந்து மிக்க திரவியத்திற்குரிய குபேரனைப்போல வியாபாரத்தினால்பெற்ற செல்வத்தினால் பெருமைபெற்று அலைகள்மோதுகின்ற கடலிலே கப்பல்களைச் செலுத்தி வர்த்தகஞ்செய்கின்ற கீர்த்திபெற்ற பரமதத்தன் தன் மனைவியினிடத்தில் மிக்க ஒளிவீசுகின்ற விளக்குப்போன்ற கொடியையொத்த ஒரு பெண் குழந்தையை அருமையாகப் பெற்றான். (33)

34. மடமக டன்னைப் பெற்று மங்கலம் பேணித் தான்முன்
புடனுறை வஞ்சி நீத்த வொருபெரு மனைவி யாரைத்
தொடர்வற நினைந்து தெய்வத் தொழுகுல மென்றே கொண்டு
கடனமைத் தவர்த நாமங் காதல்செய் மகவை யிட்டான்.

பத:—மடம் மகள் தன்னை பெற்று-அழகிய அப்பெண்ணைப் பெற்று, மங்கலம் பேணி-மங்கலகரமானசடங்கைச் செய்து, தான்—, முன்பு-முன்னே, உடன்உறைவு-கூடிவாழ்தலை, அஞ்சி-பயந்து, நீத்த-விட்ட, ஒரு பெரு மனைவி யாரை-ஒப்பற்ற பெருமைபொருந்திய மனைவியாகிய புனிதவதியாருடன்,

தொடர்வுஅற நினைந்து-மனைவி என்ற பற்று நீங்கக்கருதி, தொழு-(யாவரும்) வணங்குகின்ற, தெய்வம் குலம் என்றே-தெய்வஇனத்தைச் சேர்ந்தவர் என்றே, கொண்டு-உறுதியாக நம்பி, காதல் செய்-(தான்) அன்புசெய்கின்ற, மகவை-அந்தப் பெண்குழந்தைக்கு, கடன் அமைத்து-பிரார்த்தனை செய்து கொண்டு, அவர்தம் நாமம்-அந்தப்புனிதவதியாரின் பெயரையே, இட்டான்—.

பொழி :—அழகிய அப் பெண்ணைப்பெற்று மங்கலகரமான சடங்கைச் செய்து தான் முன்னே கூடிவாழ்தலைப் பயந்து விட்ட ஒப்பற்ற பெருமை பொருந்திய மனைவியாகியபுனிதவதியாருடன் மனைவிஎன்றபற்று நீங்கக்கருதி யாவரும் வணங்குகின்ற தெய்வஇனத்தைச்சேர்ந்தவர் என்றே உறுதியாக நம்பித் தான் அன்பு செய்கின்ற அந்தப் பெண்குழந்தைக்குப் பிரார்த்தனை செய்துகொண்டு அந்தப் புனிதவதியாரின் பெயரையே இட்டான். (34)

35. விளைவளம் பெருக்க வங்க மீதுபோம் பரம தத்தன்
வளர்புகழ்ப் பாண்டி நாட்டோர் மாநகர் தன்னின் மன்னி
அளவின்மா நிதிய மாக்கி யமர்ந்தினி திருந்தா னென்று
கிளரொளி மணிக்கொம் பன்னார் கிளைஞர்தாங் கேட்டா ரன்றே.

பத :—'விளை வளம்-உள்ள செல்வத்தை, பெருக்க-பெருக்கும்பொருட்டு, வங்கம்மீது போம்-மரக்கலமேறித் தீபாந்தரஞ்சென்ற, பரமதத்தன்—, வளர் புகழ்-மிக்க கீர்த்தியையுடைய, பாண்டிநாடு-பாண்டியநாட்டில், ஓர் மா நகர் தன்னில்-ஒரு பெரிய பட்டினத்தில், மன்னி-தங்கி, அளவு இல்-அளவிட முடியாத, மா நிதியம்-மிக்க செல்வத்தை, ஆக்கி-வளர்த்துக்கொண்டு, இனிது அமர்ந்து இருந்தான்-இனிமையாக வாழ்கின்றான்,' என்று—, கிளர் ஒளி-விளங்குகின்ற ஒளியையுடைய, மணி கொம்புஅன்னார்-இரத்தினக்கொடி போன்ற புனிதவதியாருடைய, கிளைஞர்-சுற்றத்தார், கேட்டார்-கேள்விப் பட்டார்.

பொழி :—'உள்ள செல்வத்தைப் பெருக்கும்பொருட்டு மரக்கலமேறித் தீபாந்தரஞ் சென்ற பரமதத்தன் மிக்க கீர்த்தியையுடைய பாண்டியநாட்டில் ஒரு பெரிய பட்டினத்தில் தங்கி அளவிடமுடியாத மிக்க செல்வத்தை வளர்த்துக்கொண்டு இனிமையாக வாழ்கின்றான்' என்று விளங்குகின்ற ஒளியையுடைய இரத்தினக்கொடி போன்ற புனிதவதியாருடைய சுற்றத்தார் கேள்விப்பட்டார். (35)

36. மாமணிச் சிவிகை தன்னின் மடநடை மயிலன் னாரைத்
தாமரைத் தவிசில் வைகுந் தனித்திரு வென்ன வேற்றிக்
காமரு கழனி வீழ்த்துக் காதல்செய் சுற்றத் தாருந்
தேமொழி யவருஞ் சூழச் சேணிடைக் கழிந்து சென்றார்.

பத :—காதல் செய் சுற்றத்தாரும்-அன்புகொண்ட உறவினரும், தேன் மொழியவரும்-தேன்போலினிய பேச்சையுடைய மாதர்களும், மடம்-அழகிய,

நடை-நடையையுடைய, மயில் அன்னாரை-மயில்போன்ற சாயலுள்ள புனிதவதியாரை, தாமரை தவிசில்-தாமரைமலராகிய ஆசனத்தில், வைகும்-தங்கியிருக்கின்ற, தனி-ஒப்பற்ற, திரு என்ன-இலக்குமியென்று சொல்லும்படி, மா மணி சிவிகைதன்னில்-சிறந்த இரத்தினங்கள்பதித்த பல்லக்கில், ஏற்றி—, காமரு-அழகுபொருந்திய, கழனி-திரையை, வீழ்த்து-விரித்துமூடி, சூழ-(அப்பல்லக்கைச்) சூழ்ந்துகொண்டு, சேண்இடை-வெகுதூரம், கழிந்து சென்றார்-கடந்து சென்றார்கள்.

பொழி :—அன்புகொண்ட உறவினரும் தேன்போலினிய பேச்சையுடைய மாதர்களும் அழகிய நடையையுடைய மயில்போன்ற சாயலுள்ள புனிதவதியாரைத் தாமரை மலராகிய ஆசனத்தில் தங்கியிருக்கின்ற ஒப்பற்ற இலக்குமி என்று சொல்லும்படி சிறந்த இரத்தினங்கள் பதித்த பல்லக்கில் ஏற்றி அழகுபொருந்திய திரையை விரித்துமூடி அப்பல்லக்கைச் சூழ்ந்து கொண்டு வெகுதூரம் கடந்து சென்றார்கள். (36)

37. சிலபகல் கடந்து சென்று செந்தமிழ்த் திருநா டெய்தி
மலர்புகழ்ப் பரம தத்தன் மாநகர் மருங்கு வந்து
குலமுதன் மனைவி யாரைக் கொண்டுவந் தணைந்த தன்மை
தொலைவில்சீர்க் கணவ னார்க்குச் சொல்லிமுன் செல்ல விட்டார்.

பத :—சில பகல்-சிலநாள், கடந்து சென்று-கடந்துபோய், செந்தமிழ்-செம்மையானதமிழ்வழங்குகின்ற, திரு நாடு-சிறந்த பாண்டியநாட்டை, எய்தி-அடைந்து, மலர் புகழ்-பரவிய கீர்த்தியையுடைய, பரமதத்தன்—, (வசிக்கின்ற), மா நகர் மருங்கு-சிறந்த பட்டினத்தினருகே, வந்து—, குலம் முதல் மனைவியாரை-(அவனுடைய) சிறப்புவாய்ந்த முதல் மனைவியாரை, கொண்டுவந்து-அழைத்துக்கொண்டுவந்து, அணைந்த-சேர்ந்துள்ள, தன்மை-தன்மையை, தொலைவுஇல்-அழிவில்லாத, சீர்-கீர்த்தியையுடைய, கணவனார்க்கு-புனிதவதியாரின் கணவனாகிய அந்தப் பரமதத்தனிடம், சொல்லி-சொல்லுமாறு, முன்-முன்னே, செல்லவிட்டார்-ஆளை அனுப்பினார்கள்.

பொழி :—சிலநாள் கடந்துபோய்ச் செம்மையான தமிழ் வழங்குகின்ற சிறந்த பாண்டியநாட்டை அடைந்து பரவிய கீர்த்தியையுடைய பரமதத்தன் வசிக்கின்ற சிறந்த பட்டினத்தின் அருகே வந்து அவனுடைய சிறப்புவாய்ந்த முதல் மனைவியாரை அழைத்துக்கொண்டுவந்து சேர்ந்துள்ள தன்மையை அழிவில்லாத கீர்த்தியையுடைய புனிதவதியாரின் கணவனாகிய அந்தப் பரமதத்தனிடம் சொல்லுமாறு முன்னே ஆளை அனுப்பினார்கள். (37)

38. வந்தவ ரணைந்த மாற்றங் கேட்டலும் வணிகன் றானுஞ்
சிந்தையி லச்ச மெய்திச் செழுமணம் பின்பு செய்த
பைந்தொடி தனையுங் கொண்டு பயந்தபெண் மகவி னோடு
முந்துறச் செல்வே னென்று மொய்குழ லவர்பால் வந்தான்.

பத :—அவர்-அந்தப் புனிதவதியார், வந்துஅணைந்த-வந்துசேர்ந்தா ரென்ற, மாற்றம்-வார்த்தையை, கேட்டலும்-கேட்டவுடனே, வணிகன் தானும்-பரமதத்தவணிகனும், சிந்தையில்-(தன்) மனத்திலே, அச்சம் எய்தி-அச்சங்கொண்டு, பின்பு-அவரைப் பிரிந்த பின்பு, செழு-(தனது) சிறப்புக்குத் தகுந்தபடி, மணம் செய்த-விவாகஞ் செய்துகொண்ட, பைந்தொடிதனையும்-(இரண்டாவது) மனைவியையும், கொண்டு-அழைத்துக்கொண்டு, பயந்த-(அவ ளிடம்) பெற்ற, பெண் மகவினோடு-பெண்குழந்தையோடும், முந்துற-விரை வாக, செல்வேன் என்று—, மொய்குழலவர்பால்-நெருங்கிய கூந்தலையுடைய அந்தப் புனிதவதியாரிருக்குமிடத்திற்கு, வந்தான்-வந்துசேர்ந்தான்.

பொழி :—அந்தப் புனிதவதியார் வந்துசேர்ந்தார் என்ற வார்த்தையைக் கேட்டவுடனே பரமதத்த வணிகனும் தன்மனத்திலே அச்சங்கொண்டு அவரைப் பிரிந்தபின்பு தனது சிறப்புக்குத் தகுந்தபடி விவாகஞ் செய்து கொண்ட இரண்டாவது மனைவியையும் அழைத்துக்கொண்டு அவளிடம் பெற்ற பெண்குழந்தையோடும் விரைவாகச் செல்வேன் என்று சொல்லிக் கொண்டு நெருங்கிய கூந்தலையுடைய அந்தப் புனிதவதியாரிருக்குமிடத்திற்கு வந்துசேர்ந்தான். (38)

39. தானுமம் மனைவி யோடுந் தளர்நடை மகவி னோடும்
மானிளம் பிணைபோ னின்ற மனைவியா ரடியிற் றாழ்ந்தே
யானும தருளால் வாழ்வே னிவ்விளங் குழவி தானும்
பான்மையா லுமது நாம மென்றுமுன் பணிந்து வீழ்ந்தான்.

பத :—தானும்-பரமதத்தனும், அ மனைவியோடும்-அந்த இரண்டாவது மனைவியோடும், தளர் நடை-இளநடையையுடைய, மகவினோடும்-பெண் குழந்தையோடும், இள மான்பிணை போல் நின்ற-இளமையான பெண்மானைப் போல் நின்ற, மனைவியார்-மனைவியாரான புனிதவதியாருடைய, அடியில்-பாதங்களில், தாழ்ந்து-வணங்கி, 'யான்—, உமது அருளால்—, வாழ்வேன்—, இ-இந்த, இள குழவிதானும்-இளைய பெண்குழந்தையும், பான்மையால்-(உம்மிடத்தில்வைத்த) பக்தியினால், உமது நாமம்-உமது பெயர் (வைக்கப் பெற்றுள்ளது),' என்று-என்றுசொல்லி, முன்-முதலிலே, பணிந்துவீழ்ந்தான்-சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம்செய்தான்.

பொழி :—பரமதத்தனும் அந்த இரண்டாவது மனைவியோடும் இள நடையையுடைய பெண்குழந்தையோடும் இளமையான பெண்மானைப் போல நின்ற மனைவியாரான புனிதவதியாருடைய பாதங்களில் வணங்கி "யான் உமது அருளால் வாழ்வேன்; இந்த இளைய பெண்குழந்தையும் உம்மிடத்தில்வைத்த பக்தியினால் உமது பெயர் வைக்கப்பட்டுள்ளது" என்று சொல்லி முதலிலே சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரஞ் செய்தான். (39)

40. கணவன்றான் வணங்கக் கண்ட காமர்பூங் கொடிய னாரும்
அணைவுறுஞ் சுற்றத் தார்பா லச்சமோ டொதுங்கி நிற்ப
உணர்வுறு கிளைஞர் வெள்கி யுன்றிரு மனைவி தன்னை
மணமலி தாரி னாய்நீ வணங்குவ தென்கொ லென்றார்.

பத:—கணவர் தாம்-(தம்முடைய) கணவனார், வணங்க-(தம்மை) நமஸ்கரிக்க, கண்ட—, காமர்-அழகிய, பூ கொடி அனாரும்-பூங்கொடி போன்ற அந்தப் புனிதவதியாரும், அணைவுறும்-(தம்மோடு) வந்த, சுற்றத்தார்பால்-பந்துக்களிடத்தில், அச்சமொடு-அச்சத்தோடு, ஒதுங்கி நிற்ப-ஒதுங்கிநிற்க, உணர்வு உறு-அறிவுமிக்க, கிளைஞர்-அச்சுற்றத்தார், வெள்கி-கூச்சங்கொண்டு, ‘மணம் மலி-நறுமணம் மிகுந்த, தாரினாய்-மாலையையணிந்தவனே, உன்-உனது, திரு-அழகிய, மனைவிதன்னை-மனைவியை, நீ—, வணங்குவது—, என் கொல்-என்ன காரணம்பற்றி?’ என்றார்-என்று வினவினர்.

பொழி:—தம்முடைய கணவனார் தம்மை வணங்கக்கண்ட அழகிய பூங்கொடிபோன்ற அந்தப் புனிதவதியாரும் தம்மோடு வந்த பந்துக்களிடத்தில் அச்சத்தோடு ஒதுங்கிநிற்க அறிவுமிக்க அச்சுற்றத்தார் கூச்சங்கொண்டு “நறுமணம் மிகுந்த மாலையை அணிந்தவனே, உனது அழகிய மனைவியை நீ வணங்குவது என்ன காரணம்பற்றி?” என்று வினவினர். (40)

41. மற்றவர் தம்மை நோக்கி மானுட மிவர்தா மல்லர்
நற்பெருந் தெய்வ மாத லானறிந் தகன்ற பின்பு
பெற்றவிம் மகவு தன்னைப் பேரிட்டே னாத லாலே
பொற்பதம் பணிந்தே னீரும் போற்றுதல் செய்மி னென்றான்.

பத:—(பரமதத்தன்), அவர் தம்மை-அந்தச் சுற்றத்தார்களை, நோக்கி-பார்த்து, ‘இவர்-இந்தப் புனிதவதியார், மானுடம் அல்லர்-மனிதப்பிறப்பினர் அல்லர்; நல்-சிறந்த, பெரு-பெருமையையுடைய, தெய்வம் ஆதல்-தெய்வப் பிறப்பையுடையவராக இருத்தலை, நான் அறிந்து அகன்ற பின்பு—, பெற்ற-(இரண்டாம் மனைவியினிடத்திற்) பெற்ற, இ மகவு தன்னை-இந்தப் பெண் குழந்தைக்கு, பேர் இட்டேன்-(இவரது) பெயரையேஇட்டேன்; ஆதலாலே—, பொன் பதம்-(இவருடைய) அழகிய திருவடிகளில், பணிந்தேன்-வீழ்ந்து நமஸ்கரித்தேன்; நீரும்-நீங்களும், போற்றுதல் செய்மின்-வணங்கித் துதிசெய்யுங்கள்,’ என்றான்-என்று சொன்னான்.

பொழி:—பரமதத்தன் அந்தச் சுற்றத்தார்களைப் பார்த்து “இந்தப் புனிதவதியார் மனிதப்பிறப்பினர் அல்லர்; சிறந்த பெருமையையுடைய தெய்வப்பிறப்பையுடையவராக இருத்தலை நான் அறிந்து அகன்றபின்பு இரண்டாவது மனைவியினிடத்திற் பெற்ற இந்தப் பெண்குழந்தைக்கு இவரது பெயரையேஇட்டேன்; ஆதலால், இவருடைய அழகிய திருவடி

களில் வீழ்ந்து நமஸ்கரித்தேன்; நீங்களும் வணங்கித் துதிசெய்யுங்கள்" என்று சொன்னான். (41)

42. என்றபின் சுற்றத் தாரு மிதுவென்கொ லென்று நின்றார்
மன்றலங் குழலி னாரும் வணிகன்வாய் மாற்றங் கேளாக்
கொன்றைவார் சடையி னார்தங் குரைகழல் போற்றிச் சிந்தை
ஒன்றிய நோக்கின் மிக்க வுணர்வுகொண் டுரைசெய் கின்றார்.

பத:—என்றபின்-என்று (பரமதத்தன்) சொன்னபிறகு, சுற்றத்தாரும்—, 'இது என்கொல்-இஃது என்னவோ?' என்று—, நின்றார்-(திகைத்து) நின்றார்; மன்றல்-நறுமணமுள்ள, அம்-அழகிய, குழலினாரும்-கூந்தலையுடைய புனிதவதியாரும், வணிகன்-வணிகனாகிய பரமதத்தன், வாய் மாற்றம்-வாயிலிருந்து வந்த வார்த்தையை, கேளா-கேட்டு, கொன்றை-கொன்றைப் பூமாலையைத் தரித்த, வார்-நீண்ட, சடையினார்தம்-சடைமுடியராகிய பரமசிவனுடைய, குரை கழல்-சிலம்புகள் ஒலிக்கப்பெற்ற' திருவடிகளை, போற்றி-துதித்து, சிந்தை-மனம், ஒன்றிய-பொருந்திய, நோக்கின்-நோக்கத்தோடு, மிக்க உணர்வு-பேரறிவை, கொண்டு-பெற்று, உரைசெய்கின்றார்-சொல்லலானார்:

பொழி:—என்று பரமதத்தன் சொன்னபிறகு சுற்றத்தாரும் 'இஃது என்னவோ?' என்று திகைத்து நின்றார்; நறுமணமுள்ள அழகிய கூந்தலையுடைய புனிதவதியாரும் வணிகனாகிய பரமதத்தன் வாயிலிருந்து வந்த வார்த்தையைக் கேட்டுக் கொன்றைப்பூமாலையைத்தரித்த சடைமுடியராகிய பரமசிவனுடைய சிலம்புகள் ஒலிக்கப்பெற்ற திருவடிகளைத் துதித்து மனம் பொருந்திய நோக்கத்தோடு பேரறிவைப்பெற்றுச் சொல்லலானார்: (42)

43. ஈங்கிவன் குறித்த கொள்கை யிதுவினி யிவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங் குன்பால்
ஆங்குநின் றாள்கள் போற்றும் பேய்வடி வடியே னுக்குப்
பாங்குற வேண்டு மென்று பரமனைப் பரவி நின்றார்.

பத:—'ஈங்கு-இப்பொழுது, இவன்-இந்தப்பரமதத்தன், குறித்த-நினைத்த, கொள்கை-நினைவு, இது-என்னை மனைவியாகக் கொள்ளக்கூடாதென்னும் இதுவாகும்; இனி இவனுக்காக—, தாங்கிய-(இத்தனைநாள்) வைத்திருந்த, வனப்பு நின்ற-அழகுவாய்ந்த, தசை பொதி-மாமிசச்சுமையாகிய உடம்பை, இங்கு-இவ்விடத்திலேயே, கழித்து-போக்கி, ஆங்கு-அவ்விடத்தில், உன்பால்-தேவரீரிடத்திலேதானே (நின்று), நின் தாள்கள்-உம்முடைய திருவடிகளை, போற்றும்-துதிக்கின்ற, பேய் வடிவு அடியேனுக்கு—, பாங்கு உற வேண்டும்-சிறப்பாகப் பொருந்தவேண்டும்,' என்று—, பரமனை-பரமசிவனை, பரவிநின்றார்-பிரார்த்தித்து நின்றார்.

பொழி:—"இப்பொழுது இந்தப் பரமதத்தன் நினைத்த நினைவு என்னை மனைவியாகக்கொள்ளக்கூடாது என்னும் இதுவாகும்; இனி இவனுக்காக

இத்தனைநாள் வைத்திருந்த அழகுவாய்ந்த மாமிசச்சுமையாகிய உடம்பை இவ்விடத்திலேயே போக்கி அவ்விடத்தில் தேவரீரிடத்திலேதானே நின்று உம்முடைய திருவடிகளைத் துதிக்கின்ற பேய்வடிவு அடியேனுக்குச் சிறப்பாகப் பொருந்தவேண்டும்" என்று பரமசிவனைப் பிரார்த்தித்து நின்றார். (43)

44. ஆனவப் பொழுது மன்று ளாடுவா ரருளி னாலே
மேனெறி யுணர்வு கூர வேண்டிற்றே பெறுவார் மெய்யில்
ஊனடை வனப்பை யெல்லா முதறியெற் புடம்பே யாகி
வானமு மண்ணு மெல்லாம் வணங்குபேய் வடிவ மானார்.

பத :—ஆன-இவ்வாறுவேண்டின, அப்பொழுது—, மன்றுள்-நடனசபையில், ஆடுவார்-நர்த்தனஞ்செய்கின்ற அந்தப் பரமசிவனுடைய, அருளினால்—, மேல் நெறி-மோட்சத்தைத்தரவல்ல, உணர்வு-தத்துவஞானம், கூர-மிக, வேண்டிற்றே-தாம் விரும்பியதையே, பெறுவார்-அடைபவராகி, வனப்பை அடை-அழகுஅமைந்த, மெய்யில்-உடம்பிலுள்ள, ஊன் எல்லாம்-மாமிசம் முழுவதையும், உதறி என்பு உடம்பே ஆகி—, வானமும்-வானுலகத்தவர்களும், மண்ணும்-மண்ணுலகத்தவர்களுமாகிய, எல்லாம்-எல்லாரும், வணங்கு-வணங்குகின்ற, பேய் வடிவம்-பேய்வடிவத்தை, ஆனார்-பெற்றார்.

பொழி :—இவ்வாறு வேண்டின அப்பொழுது நடனசபையில் நர்த்தனம் செய்கின்ற அந்தப் பரமசிவனுடைய அருளினால் மோட்சத்தைத்தரவல்ல தத்துவஞானம்மிகத் தாம் விரும்பியதையே அடைபவராகி அழகமைந்த உடம்பிலுள்ள மாமிசம் முழுவதையும் உதறி என்புஉடம்பேஆகி வானுலகத்தவர்களும் மண்ணுலகத்தவர்களுமாகிய எல்லாரும் வணங்குகின்ற பேய் வடிவத்தைப் பெற்றார். (44)

45. வடதிசைத் தேச மெல்லா மனத்தினுங் கடிதிற் சென்று
தொடையவி ழிதழி மாலைச் சூலபா ணியனார் மேவும்
படரொளிக் கைலை வெற்பிற் பாங்கணைந் தாங்குக் காலின்
நடையினைத் தவிர்ந்து பார்மேற் றலையினா னடந்து சென்றார்.

பத :—(பேய்வடிவுகொண்ட புனிதவதியார்) வடதிசை தேசம் எல்லாம்-வடநாடு முழுவதையும், மனத்தினும் மனோவேகத்தைக்காட்டிலும், கடிதில்-விரைவாக, சென்று-கடந்து, தொடை-தொடுக்கப்பட்ட, அவிழ்-மலர்ந்த, இதழி-கொன்றைமலராகிய, மாலை-மாலையைச்சூடிய, சூல பாணியனார்-கையிற் சூலத்தைக்கொண்ட சிவபெருமான், மேவும்-எழுந்தருளியிருக்கின்ற, படர்-விரிந்த, ஒளி-பிரகாசத்தையுடைய, கைலை வெற்பின்-திருக்கைலாசமலையின், பாங்கு-பக்கத்தை, அணைந்து-அடைந்து, அங்கு—, காலின் நடையினைத் தவிர்த்து-காலால் நடப்பதை நீக்கி, பார் மேல்-பூமியின்மேல், தலையினால் நடந்து சென்றார்—.

பொழி :—பேய்வடிவுகொண்ட புனிதவதியார் வடநாடு முழுவதையும் மனோவேகத்தைக்காட்டிலும் விரைவாகக்கடந்து தொடுக்கப்பட்ட மலர்ந்த கொன்றை மலராலாகிய மாலையைச்சூடிய கையிற் சூலத்தைக்கொண்ட சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற விரிந்த பிரகாசத்தையுடைய திருக் கைலாசமலையின் பக்கத்தை அடைந்து அங்குக் காலால் நடப்பதை நீக்கிப் பூமியின்மேல் தலையால் நடந்து சென்றார். (45)

46. தலையினா னடந்து சென்று சங்கர னிருந்த வெள்ளி
மலையின்மே லேறும் போது மகிழ்ச்சியா லன்பு பொங்கக்
கலையிளந் திங்கட் கண்ணிக் கண்ணுத லொருபா கத்துச்
சிலைநுத லிமைய வல்லி திருக்கணோக் குற்ற தன்றே.

பத :—தலையினால் நடந்து சென்று—, சங்கரன்—, இருந்த-எழுந்தருளி யிருந்த, வெள்ளிமலையின் மேல்-திருக்கைலாயகிரியின்மேல், மகிழ்ச்சியால்-மனமகிழ்ச்சியினாலே, அன்பு பொங்க-அன்புபெருகாநிற்க, ஏறும்போது—, கலை-(ஒற்றைக்) கலையையுடைய, இள திங்கள்-பிறைச்சந்திரனை, கண்ணி-முடி மாலையாகவுடைய, கண்நுதல்-நெற்றிக்கண்ணனான பரமசிவனது, ஒரு பாகத்து-ஒப்பற்ற வாமபாகத்தில் எழுந்தருளியிருப்பவளும், சிலை-வில்லைப் போன்ற, நுதல்-புருவத்தையுடைய, இமயவல்லி-இமயமலைக்குப் புதல்வி யாய்ப்பிறந்த கொடிபோன்றவளுமான பார்வதிதேவியினுடைய, திருக்கண் நோக்கு-திருக்கண்களின் பார்வை, உற்றது-பொருந்திற்று.

பொழி :—தலையினால் நடந்து சென்று சங்கரன் எழுந்தருளியிருந்த திருக்கைலாயகிரியின்மேல் மகிழ்ச்சியினாலே அன்புபெருக ஏறும்போது ஒற்றைக் கலையையுடைய பிறைச்சந்திரனை முடிமாலையாகவுடைய நெற்றிக் கண்ணனான பரமசிவனது ஒப்பற்ற வாமபாகத்தில் எழுந்தருளியிருப்பவளும் வில்லைப்போன்ற புருவத்தையுடைய இமயமலைக்குப் புதல்வியாய்ப்பிறந்த கொடிபோன்றவளுமான பார்வதிதேவியினுடைய திருக்கண்களின் பார்வை பொருந்திற்று. (46)

47. அம்பிகை திருவுள் ளத்தி னதிசயித் தருளித் தாழ்ந்து
தம்பெரு மானை நோக்கித் தலையினா னடந்திங் கேறும்
எம்பெரு மானோ ரெற்பின் யாக்கையன் பென்னே யென்ன
நம்பெரு மாட்டிக் கங்கு நாயக னருளிச் செய்வான்.

பத :—அம்பிகை-பார்வதிதேவி, திருவுள்ளத்தின்-(தம்) மனத்தில், அதிசயித்தருளி—, தம் பெருமானை நோக்கி—, தாழ்ந்து-வணங்கிநின்று, 'எம்பெருமான் இங்கு தலையினால் நடந்து—, ஏறும்-ஏறிவருகின்ற, ஓர் எற்பின் யாக்கை-ஓர் என்புடம்பையுடையவரது, அன்பு-அன்பின்மகிமை, என்னே-இருந்தபடியென்னே!' என்ன-என்று அதிசயித்து வினவ, அங்கு-

அப்பொழுது, நம் பெருமாட்டிக்கு-நமது பிராட்டியாகிய பார்வதீ தேவியார்க்கு, நாயகன்-சிவபெருமான், அருளிச்செய்வான்-கூறியருளுவானாயினன் :

பொழி :—பார்வதீதேவி தம் மனத்தில் அதிசயித்தருளித் தம் பெருமானை நோக்கி வணங்கி நின்று "எம்பெருமான், இங்குத் தலையினால் நடந்து ஏறிவருகின்ற ஓர் என்புடம்பையுடையவரது அன்பின் மகிமை இருந்தபடி யென்னே!" என்று அதிசயித்து வினவ அப்பொழுது நமது பிராட்டியாகிய பார்வதீதேவியார்க்குச் சிவபெருமான் கூறியருளுவானாயினன் : (47)

48. வருமிவ ளம்மைப் பேணு மம்மைகா ணுமையே மற்றிப்
பெருமைசேர் வடிவும் வேண்டிப் பெற்றன ளென்று பின்னை
அருகுவந் தணைய நோக்கி யம்மையே யென்னுஞ் செம்மை
ஒருமொழி யுலக மெல்லா முய்யவே யருளிச் செய்தார்.

பத :—'உமையே—, வரும்-(இங்கே) வருகின்ற, இவள்—, நம்மை—, பேணும்-துதிக்கின்ற, அம்மைகாண்-அம்மையாவள் : இ-இந்த, பெருமை சேர்-பெருமை பொருந்திய, வடிவும்-(பேய்) வடிவத்தையும், (நம்மை) வேண்டிப் பெற்றனள்—,' என்று-என்றுசொல்லி, பின்னை-பின்பு, (அந்தப் பரமசிவனார்), அருகு-(தமது) சமீபத்தில், வந்து அணைய-(புனிதவதியார்) வந்துசேர, நோக்கி-(அவரை) நோக்கி, உலகம் எல்லாம்—, உய்ய-உய்யும்பொருட்டு, 'அம்மையே' என்னும்—, செம்மை ஒருமொழி-செம்மையாகிய ஒரு திருவார்த்தையை, அருளிச்செய்தார்-சொல்லியழைத்தருளினார்.

பொழி :—"உமையே, இங்கு வருகின்ற இவள் நம்மைத் துதிக்கின்ற அம்மையாவள் : இந்தப் பெருமைபொருந்திய பேய்வடிவத்தையும் நம்மை வேண்டிப் பெற்றனள்" என்று சொல்லிப் பின்பு அந்தப் பரமசிவனார் தமது சமீபத்தில் புனிதவதியார் வந்துசேர அவரை நோக்கி உலகம் எல்லாம் உய்யும் பொருட்டு 'அம்மையே' என்னும் செம்மையாகிய ஒரு திருவார்த்தையைச் சொல்லி அழைத்தருளினார். (48)

49. அங்கண ரம்மை யேயென் றருள்செய வப்பா வென்று
பங்கயச் செம்பொற் பாதம்பணிந்துவீழ்ந் தெழுந்தார் தம்மைச்
சங்கவெண் குழையி னாருந் தாமெதிர் நோக்கி நம்பால்
இங்குவேண் டுவதெ னென்ன விறைஞ்சிநின் றியம்பு கின்றார்.

பத :—அம் கணர்-அழகிய கண்களையுடைய பரமசிவனார், 'அம்மையே' என்று—, அருள்செய-அருள்கொண்டு அழைத்தருள, (அதுகேட்டு), 'அப்பா' என்று—, (சொல்லிக்கொண்டு), செம் பொன்-செம்பொற்கழலையணிந்த, பங்கயம்-தாமரை மலர்போன்ற, பாதம்-திருவடிகளில், வீழ்ந்து பணிந்து—,

எழுந்தார்தம்மை-எழுந்த புனிதவதியாரை, சங்கம் வெண் குழையினுரும்-சங்கத்தாலாகிய வெள்ளிய குழையையுடைய அந்தப் பரமசிவனும், தாம்—, எதிர் நோக்கி—, 'நம்பால்-நம்மிடத்தில், இங்கு-இப்போது, வேண்டுவது என்-வேண்டும்வரம் யாது?' என்ன-என்று வினவ, (புனிதவதியார்), இறைஞ்சி நின்று-வணங்கி நின்று, இயம்புகின்ருர்-சொல்லத்தொடங்கினுர்:

பொழி:—அழகிய கண்களையுடைய பரமசிவனுர் 'அம்மையே' என்று அருள்கொண்டு அழைத்தருள அதுகேட்டு 'அப்பா' என்று சொல்லிக் கொண்டு செம்பொற்கழலையணிந்த தாமரைமலர் போன்ற திருவடிகளில் வீழ்ந்து பணிந்து எழுந்த புனிதவதியாரைச் சங்கத்தாலாகிய வெள்ளிய குழையையுடைய அந்தப் பரமசிவனும் எதிர்நோக்கி "நம்மிடத்தில் இப் போது வேண்டும் வரம் யாது?" என்று வினவ, புனிதவதியார் வணங்கி நின்று சொல்லத் தொடங்கினுர்: (49)

50. இறவாத வின்ப வன்பு வேண்டிப்பின் வேண்டு கின்ருர்
பிறவாமை வேண்டு மீண்டும் பிறப்புண்டே லுன்னை யென்றும்
மறவாமை வேண்டு மின்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ யாடும் போதுன் னடியின்கீ ழிருக்க வென்ருர்.

பத:—'இறவாத-அழியாத, இன்பம்-இன்பத்தை யுண்டாக்குகின்ற, அன்பு-அன்பை, வேண்டி-விரும்பிக்கேட்டு, பின்-பின்பும், வேண்டுகின்ருர்-வேண்டுகின்றவர், 'பிறவாமை-(இனிப்) பிறவாதிருத்தல், வேண்டும்—; (ஒருகால்), மீண்டும்—, பிறப்பு உண்டேல் உன்னை—, என்றும்-எக்காலமும், மறவாமை வேண்டும்—; இன்னும்-இதற்குமேலும், அறவா-தருமமூர்த்தியே, நீ—, ஆடும்போது-திருநடனஞ் செய்யும்போது, உன் அடியின் கீழ்-உனது திருவடியின்கீழே, நான்—, மகிழ்ந்து-சிவானந்தம்மிக்கு, பாடி இருக்கவேண் டும்-உன்னைப் பாடிக்கொண்டிருத்தல் வேண்டும்' என்ருர்-என்று விண்ணப் பஞ் செய்தார்.

பொழி:—அழியாத இன்பத்தையுண்டாக்குகின்ற அன்பை விரும்பிக் கேட்டுப் பின்பும் வேண்டுகின்றவர் "இனிப் பிறவாதிருத்தல் வேண்டும்; ஒருகால் மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னை எக்காலமும் மறவாமை வேண்டும்; இதற்குமேலும் தருமமூர்த்தியே, நீ திருநடனம் செய்யும்போது உனது திருவடியின்கீழ் நான் சிவானந்தம்மிக்கு உன்னைப் பாடிக்கொண்டிருத் தல்வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தார். (50)

51. கூடுமா றருள்கொ டுத்துக் குலவுதென் றிசையி லென்றும்
நீடுவாழ் பழன மூதூர் நிலவிய வாலங் காட்டில்
ஆடுமா நடமு நீகண் டானந்தஞ் சேர்ந்[illegible] போதும்
பாடுவாய் நம்மை யென்ருன் பரவுவார் ப[illegible] நின்ருன்.

பத :—பரவுவார்-(தன்னைத்) துதிக்கும் அடியார்க்கு, பற்று ஆய்-ஆதர வாய், நின்றான்-நிற்கும் சிவபெருமான், கூடும் ஆறு-(புனிதவதியார் வேண்டிய வரம்) கைகூடும்படி, அருள் கொடுத்து—, 'குலவு-விளங்குகின்ற, தென் திசை யில்—, நீடு வாழ்-வெகுகாலமாய்வாழ்கின்ற, பழனம்-வயல்சூழ்ந்த, முதுஊர்-பழைய ஊராகி, நிலவிய-நிலைத்திருக்கின்ற, ஆலங்காட்டில்-திருவாலங்காட்டில் இரத்தினசபையில், என்றும் ஆடும்-எப்போதும் (நாம்) ஆடுகின்ற, மா நடமும்-சிறந்த நடனத்தையும், நீ—, கண்டு-தரிசித்து, ஆனந்தம்சேர்ந்து-பேரானந்தம்அடைந்து, எப்போதும் நம்மை—, பாடுவாய்-பாடிக்கொண்டிருப்பாய்', என்றான்-என்று அருளிச்செய்தான்.

பொழி :—தன்னைத் துதிக்கும் அடியார்க்கு ஆதரவாய்நிற்கும் சிவ பெருமான் புனிதவதியார் வேண்டிய வரம் கைகூடும்படி அருள் கொடுத்து "விளங்குகின்ற தென்திசையில் வெகுகாலமாய் வாழ்கின்ற வயல்சூழ்ந்த பழைய ஊராகி நிலைத்திருக்கின்ற திருவாலங்காட்டில் இரத்தினசபையில் எப்போதும் நாம் ஆடுகின்ற சிறந்த நடனத்தையும் நீ தரிசித்துப் பேரானந்தம் அடைந்து எப்போதும் நம்மைப் பாடிக்கொண்டிருப்பாய்" என்று அருளிச் செய்தான். (51)

[அம்மையார் சிவபெருமானை வணங்கி விடைபெற்றுத் திரு வாலங்காட்டிற்குத் தலையினாலேயே நடந்துசென்றார்; அங்கே கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் எம்பெருமானுடைய திருநடனத்தைத்தரிசித்தார்; பலதிருப்பதிகங்களைப்பாடினார்; சிவானந்தமுற்று அந்தத்திருநடனத்தைத் தரிசனஞ் செய்து கொண்டு இன்றும் அப்பதியிலேயே விளங்கிவருகின்றார்.]

முற்றும்.

PRINTED AT THE "SRI MAHABHARATA PRESS" KUMBAKONAM.